# டொமினிக் ஜீவா



# எழுத்திலிருந்து ஓர் இலக்கியக்குரல்

# ஈழத்திலிருந்து ஓர் இலக்கியக் குரல்

டொமினிக் ஜீவாவின்
கருத்துக்கள், பேட்டிகளைத்
தொகுத்தவர்:

**தெணியான்**

வெளியீடு :

**மல்லிகைப் பந்தல்**

234B, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்

மல்லிகைப் பந்தல் வெளியீடு

@

விலை : ரூபா. 45/-

| | | |
|---|---|---|
| Title | : | Eelathilirunthu Orr Ilakkiya Kural |
| Subject | : | A collection of Authors Interviews & Comments |
| Author | : | Dominic Jeeva |
| No.of Pages | : | 190 |
| Size | : | 12.5 x 18 cm |
| Price | : | Rs. 45/- |
| Published by | : | Mallikai Panthal<br>234 B, K.K.S. Road,<br>Jaffna<br>Sri lanka. |
| In India | : | Kumaran Publishers<br>79, 1st Street,<br>Kumaran Colony,<br>Vadapalani,<br>Chennai - 600 026. |

## சமர்ப்பணம்

இலங்கையில் வாழ்ந்திருந்தபோது
எமது நாட்டு இலக்கியவாதிகளின் இதயங்களில்
தனது சிறப்பியல்புகளைப் பதித்தவரும்
இன்று தமிழகத்தில் ஈழத்து இலக்கிய
உறவுக்கு மெருகூட்டி வருபவருமான
எனது இதயங்கனிந்த நண்பர்
திரு. ஆ. குருசுவாமி அவர்கட்கு

- டொமினிக் ஜீவா

## (ஒரு முன்னுரை)

### இன்றைக்காக உழைக்கும்போதே எதிர் காலத்தை உருவாக்குகின்றேன்.

ஆரோக்கியமான கருத்துக்கள் மக்களிடம் சென்றடைவது சற்றுச் சிரமந்தான். அக் கருத்துக்களின் அடிப்படை வித்துக்கள் மக்கள் மனதில் வேரூன்றி விட்டால் இறுதியில் அது மாபெரும் சக்தியாக உருவெடுத்துவிடும்.

நெருப்புப் பொறியைப் போன்றதே கருத்தும். பெரியதொரு கானகத்தையே ஒரு சிறு அக்கினிக் குஞ்சு பொசுக்கிச் சுட்டெரித்துச் சாம்பாலாக்கி விடுவதுபோல, மாபெரும் சர்வாதி காரங்களை ஒரு சிறு கருத்து இயக்கமே தூள் தூளாக சிதறடிக்கச் செய்யும் வல்லமை வாய்ந்ததாக அமைந்து விடும்.

இந்த அடிப்படையான நோக்கிலேயே எனது ஆரம்பகால இலக்கிய நோக்குகள் அமைந்திருந்தன.

'தேசிய இலக்கியம்' என்ற கோஷத்தை உந்து சக்தியாக முற்போக்கு எழுத்தாளர் இயக்கம் தேசந் தழுவிய கருத்துப் போராட்ட வடிவமாக முன் வைத்த கால கட்டங்களில் எல்லாம் நான் சொந்த முயற்சிகளும் அதிக அக்கறையும் எடுக்க வேண்டிய காலத்தின் நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது. அதன் பயனாக வரலாற்றினால் பணிக்கப்பட்ட சில கடமைகளை எத்தகைய சுணக்கமுமின்றிச் செய்ய என்னை நானே பழக்கப் படுத்திக் கொண்டேன். தொடர்ந்து உழைத்து வந்தேன்.

நமது நாட்டில் இளந் தலைமுறையின் வளரும் சிந்தனைகளை நச்சுப் படுத்தி அசுத்தமாக்கி வந்தது இறக்குமதி இலக்கியங்கள். இவைகளை நச்சு இலக்கியங்கள் என நாம் நாமமிட்டு

இவற்றுக்கெதிராக இயக்கம் நடத்தி வந்தோம். வர்த்தகத் துறைச் சந்தைப் பசிக்கு ஏற்ற வகையில் இறக்குமதியாகும் குப்பைக் கூளங்கள் பெரும் பகுதி எமது நாட்டின் மார்க்கட்டை நம்பியே அச்சிடப் பெற்றன. இந்த இலக்கிய வியாபாரத் திணிப்பினால் நமது நாட்டில் அரும்பு விட்டு வளர்ந்து வரக் கூடிய நல்லி லக்கியங்கள் க்ஷீணித்துப் போகவும், ரஸனை உணர்வு மழுங் கடித்து அழியவும் கூடியதான ஓர் அவல நிலை தேசம் பூராவும் வெகு வேகமாகப் பரவி வந்தது.

இந்த தேச நாசத்தை எதிர்த்துக் கருத்து வித்தியாசம் கொண்டோர் உட்பட அனைத்துப் படைப்பாளிகளும் ஒருங் கிணைந்து போராடப் புறப்பட்டோம்.

இப் போராட்டம் சிக்கல்கள் நிரம்பியதாகவும் சில வேளை களில் கூடுதல் கடுமை நிறைந்ததாகவும் விளங்கியது.

எழுத்து, மேடைப் பேச்சு இவை இரண்டின் மூலமாகவும் தேசிய இலக்கிய விழிப்பை ஏற்படுத்த வேண்டிய கட்டாய தேவை எம்மைப் போன்றவர்களுக்கு ஏற்பட்டது.

இதில் ஒன்றை வெகு தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தேசிய இலக்கிய விழிப்பை நச்சு இலக்கியத்திற்கு எதிராகத் தூண்டி விட்டோமே தவிர, அதை வெறும் தேசிய இலக்கிய வெறியாக உருச் சிதைந்து போகாமலும் பாதுகாக்க வேண்டிய கட்டுப்பாடும் எமக்கிருந்தது. அதைச் செவ்வனே செய்து முடித்தோம்.

நாங்கள் பேச்சு மேடைகளைத்தான் அதிக அதிகமாகப் பயன்படுத்தி நமது கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் சென்றோம். நாட்டின் ஏனைய திசையெங்கும் சென்று வந்தோம்.

இலங்கையில் உள்ள தலை சிறந்த எழுத்தாளர்கள் அனை வருமே மிகச் சிறந்த மேடைப் பேச்சாளர்களாக உருவாகி இருப்பதின் உண்மைக் காரணம் இதுவேதான்.

பெண்களுக்கு வயதுக்கு வந்ததும் ருது சாந்தி - சாமர்த்தியச் சடங்கு - செய்வது நமது ஊர்ப் பழக்கம். இது சில குடும்பங்

களில் மிகக் கோலாகலமான கொண்டாட்டமாகக் கொண்டா டப்படுவது வழக்கம். வயதுக்கு வந்த யுவதிக்கு விழாவெடுத்து மகிழ்ச்சியடைவது மாத்திரம் இதன் தனி நோக்கமாக இருந்து விடுவதில்லை. ஊர் உலகத்திற்கு ஓர் அறிவிப்பாகவும் இது விளம்பரப்படுத்தப் படுகின்றது. நமது வீட்டில் திருமணத்திற்கென ஒரு பெண் தயாராகி விட்டாள் என்பதை மறைமுகமாக அறிவிப்பதற்காகவும் இவ் விழா பயன்படுத்தப்படுகின்றது. இந்த விழாவின் அடிப்படை உள் நோக்கமே ஆரம்பத்தில் இப்படித் தான் இருந்திருக்க வேண்டும். இது நிலமானியச் சமூகப் பழக் கங்களில் ஒன்று.

இப்படியான சமூக நோக்கு நுணுக்கங்களையே இலக்கியத் துறையிலும் நாமும் கையாண்டு மக்களை அணுகி மக்கள் மனதில் எமது கருத்துக்களை விதைக்கத் தொடங்கினோம்.

ஒரு படைப்பாளியின் நூலொன்று வெளி வந்து விட்டால் அதை மையமாக வைத்து வெளியீட்டு விழா, அறிமுக விழா எனப் பொதுக் கூட்டங்களை ஒழுங்கு செய்து அதையே கருத்து மேடை யாகப் பயன்படுத்தினோம். அந்த அளவிற்கு ஆரம்ப காலங்களில் நமது மக்கள் இறக்குமதியாகும் குப்பைச் சரக்குகளில் மயங்கிப் போயிருந்தனர்; நமது திறமைகளை அறியாமல் இருந்தனர். எமது படைப்பாளிகள் படைப்பாளிகளின் அங்கங்களை அறியாமல் இருந்தனர்.

இப்படியான மக்கள் மத்தியில்தான் நாம் இயக்கம் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

மக்கள் மனதில் இடம் பிடிப்பது அத்தனை சிரமமாக இருந்ததின் காரணமாகவே நாம் மேடைகளையும் எமது சொந்த நாவுகளையும் அதிகம் பயன் படுத்தப் பழகிக் கொண்டோம்.

கண்கண்ட விளைவுகள் விரைவில் தென்படத்தொடங்கின.

அந்தக் கால கட்டங்களில் அவ்வப்போது எழுந்த இலக்கியப் பிரச்சினைகளுக்கு ஒப்பு நோக்கித் தெரிவிக்கப்பட்ட கருத்துக் களே பெரும்பாலும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன.

என்னைப் பற்றிய அடிப்படையான விஷயங்களையும் பொது விவகாரங்கள் பற்றியும் பலரும் கேட்டபோது திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இலக்கியத் துறையில் முன்னோடிகள், கல்விமான்கள் பிரபல்யம் பெற்றவர்கள் பலரும் இந்தக் கால கட்டங்களில் தத்தமது கருத்துக்களைச் சொல்லி வந்துள்ளபோதிலும் என்னுடைய கருத்துக்களையே தமிழகத்திலும் இலங்கையிலும் அநேகர் கேட்க விரும்பினர். இதைத்தான் அங்கும் இங்குமுள்ள இலக்கியச் சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் பிரதிபலித்தன. இதற்கான காரணத்தையும் ஆழ்ந்து சிந்திக்கும்போது என்னால் உணர முடிந்தது.

நான் யாழ்ப்பாணப் பட்டினத்திற்கு ஒரு சிறிய கைத் தொழிலாளியாகவே அறிமுகமானேன். பின்னர் அத்தொழிற் கூடத்தில் தொழில் புரிந்துகொண்டே ஆர்வம் காரணமாகவும் தேடுதல் முயற்சி யூடாகவும் அசுரத் தனமான உழைப்பு, ஊக்கம் வாயிலாகவும் நான் ஒரு படைப்பாளியானேன். அதை உள் வாங்கி உழைத்துச் சிரமப்பட்டு ஒரு சஞ்சிகையாளனாகப் பரிணமித்தேன். யாரில் இருந்து வந்தேனோ, யாருக்காக எனது இலக்கியங்களைப் படைத்தேனோ படைக்கின்றேனோ அவர்களில் ஒருவனாகவே இருந்து கொண்டே ஆழமாகச் சிந்தித்துக் கருத்துக்களைக் கூற முற்படுகின்றேன். எந்தவிதமான ஒளிவு மறைவுமின்றி என்னால் தெரிவிக்கப்படும் கருத்துக்களின் தோற்றுவாயே நான் நேசிக்கும் உழைக்கும் வர்க்கந்தான். அதனால் தேசத்தின் உழைப்பவர்களின் ஆத்மாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குரலாக மதிக்கப்படு கின்றேன்; நேசிக்கப்படுகின்றேன்; கருதப்படுகின்றேன்.

கருத்துக்களை உருவாக்குவது மாத்திரம் எனது வேலையாக இருந்து விடவில்லை. அக் கருத்துக்களுக்காகப் பல்வேறு களங் களில் நின்று போராட வேண்டிய தேவையும் எனக்கு ஏற் பட்டதுண்டு. இதனால் ஆரம்பத்தில் அவதூறு படுத்தப்பட்டேன். சிலர் என்னையும் எனது கருத்துக்களையும் தாக்குவதற்கென்றே மிக மலிவான உத்தி முறைகளைக் கையாண்டு பார்த்தனர்; தோல்வி கண்டனர். என்னைப் பயமூட்டுவதோ அவதூறு பொழி

வதோ அவ்வளவு சுலபமான வேலையாக இருந்து விடவில்லை, என்பது அவர்களுக்குப் புரிந்தது.

அந்தளவிற்கு மக்களில் ஒருவனாக மக்களிடம் வேரோடி நின்றேன். அதே மக்கள் என்னை, என்னைவிடத் துல்லியமாகப் புரிந்து வைத்திருந்தனர். தெரிந்து வைத்திருந்தனர்.

இது சம்பந்தமாக உற்சாகம் தரமுடியாத கஷ்டங்கள் சில ஆரம்ப காலத்தில் எனக்கு ஏற்பட்டதுமுண்டு.

என்னைப் போன்றவர்களிடம் எந்த விதமான சிறப்புத் தகுதிகள் எதுவுமே இல்லை என எனது வர்க்கத்தை நெஞ்சார இழிவுபடுத்தப் பட்டுள்ள பரம்பரையில் வந்த சிலர் பிரசாரம் செய்து வந்தனர். என்னைப் போன்றோருடைய சிருஷ்டிகளை இழிசனர் இலக்கியம் எனக் கொச்சைப் படுத்தித் தரம் தாழ்த்தித் தாக்கினர். இப்படியானவர்களை எதிர்த்து இலக்கியப் போராட்டம் நடத்த வேண்டிய இன்னொரு தேவையும் எம்மைப் போன்றவர்களுக்கு ஏற்பட்டது. நான் திடமாக நின்றேன். எதிர் கால நோக்குடன் செயல்படத் தொடங்கினேன். இந்தச் சமுதாயத்தின் முகத்துக்கு நேரேயே சவால் விட என்னை நானே தயார்படுத்திக் கொண்டேன். இப்படியானவர்கள் நினைத்துக் கொண்டிருப்பதை விடவும் வாழ்க்கையைக் கற்றுக் கொள் வதுடன் அதன் நுண்மையான தாத்பரியத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் பணியையும் பண்படுத்தினேன். பயன் படுத்தினேன்.

வாழ்க்கையில் எனக்குரிய இடம் எதுவெனத் தேர்ந்தெடுப் பதிலேயே நீண்ட காலம் செலவிட்டேன்.

ஆயிரம் பந்தையங்களினால் மக்களுடன் வெகு இணக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளவன் நான். எப்பொழுதும் மக்களுடன் உறுதியான மிக மிக நெருக்கமான உறவுகளை வைத்திருந்த காரணத்தால் இலக்கியத்திலும் எனது கருத்துக்கள் எதிரொலித்து நின்றன.

கடந்த கால நமது நாட்டு இலக்கியப் பிரச்சினைகளின்

விசேஷ அம்சங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்ட பின்னணியில்தான் எனது கருத்துக்களை முன் வைத்துப் பார்க்க வேண்டும்.

நான் இந்த நூலில் சொல்லியுள்ள சில கருத்துக்கள் கசப்பாக இருக்கலாம் உண்மை. நோய்க்கான மருந்துகளும் கசப்பானவையே. சில சமயங்களில் கசப்பும் எமது ஆரோக்கியப் பாதுகாப்புக்குப் தேவைப்படுகின்றது. பல போராட்டங்களுக்கு மத்தியில் அநுபவ பூர்வமாக வந்த முடிவுகளின் பெறுபேறே நான் இங்கு வெளியிட்டுள்ள கருத்துக்களாகும்.

மக்களோடு சம்பந்தப்பட்டவை படுபவை அனைத்துமே சுவை நிரம்பியவையாகும். ரஸனை கொண்டவையாகும்.

இலக்கியப் பிரச்சினைகள் மக்களின் ஆத்மாவோடும் சிந்தனைகளோடும் நுண்ணிய உணர்வுகளோடும் வாழ்க்கை அநுபவங்களோடும் சம்பந்தப்பட்டவை. எனவே அவைகள் பல்சுவைகளாகவே மிளிரக் கூடும்.

'கலை இலக்கியப் பரிவர்த்தனை என்பது ஒரு வழிப்பாதையல்ல' என்ற கருத்து மக்களிடமே வேரோடி நின்று, மக்களே இந்தக் கருத்துக்களை வரவேற்கக் கூடிய சூழ்நிலையை பல சிரமங்களுக்கு மத்தியில் இன்று உருவாக்கிவிட்டோம். சுருக்கமாகச் சொன்னால் எம்மைப் புரிந்து கொள்ளாத மக்களைப் புரிந்து கொள்ள வைத்ததுடன் அவர்களை வென்றெடுத்தும் விட்டோம்.

நச்சு இலக்கியத்திற்கு எதிராக நாம் நடத்திய போராட்டங்களை தவறாகப் புரிந்து கொண்ட தமிழகத்தினரில் சிலர் நாம் அவர்களது ஆரோக்கியமான படைப்புக்களுக்குக் கூட எதிரிகள் என்ற தப்பபிப்பிராயம் காரணமாக, நான் தமிழகம் வந்த போது இது பற்றி விரிவாகக் கேட்டனர். நானும் தெளிவாக இதைப் பற்றிக் கூறினேன். நாங்கள் பொது எதிரியை, நச்சு இலக்கியத்தை எதிர்த்தே போரிடுகின்றோம் என்பதை அவர்களுக்கு விளங்கப் படுத்தினேன்.

இன்று நிலைமை தெளிவு பட்டு வருகின்றது. இலக்கிய

நண்பர்கள், ஆரோக்கியமான தமிழ் இலக்கிய வளர்ச்சியை உளமார வரவேற்கும் தோழர்கள் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு இன்று மிக நெருக்கமாக நெருங்கி வந்துள்ளோம். விளங்கிக் கொண்டுள்ளோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நமது கருத்துக்களின் கடந்த காலப் போராட்ட அநுபவங்களைத் தொகுத்து ஒரு நூலாக வெளிக் கொண்டு வருவதில் உண்மையாகவே பெருமகிழ்ச்சியடைகிறேன்.

முற்று முழுதாகச் சகல கருத்துக்களையும் இந்த நூலில் சொல்லி விடவில்லை. நமது தொடர்புகள் வலுக்கும்போது இன்னும் பல கருத்துக்களை வைத்து உங்களுடன் உரையாட விருக்கின்றேன்.

எனது முகத்தை நேரில் தெரிந்திருக்காத காலத்திலும் எனது எழுத்தை விரும்பிச் சுவைத்து என் மீது இலக்கிய அபிமானம் கொண்ட நர்மதா அதிபர் திரு.டி.எஸ். ராமலிங்கம் அவர்களின் வெளியீடாக இந்த நூல் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

ஆரம்பத்தில் இப்படி ஒரு சிந்தனையை எனது மனதில் விதைத்த தோழர் சாந்தன் அவர்களுக்கும் கட்டுரைகளை ஒழுங்கு படுத்திப் படி எடுத்துத் தந்த தோழர் தெணியான் அவர்களுக் கும் எனது நன்றிகள் உரியவை.

எனது கருத்துக்களை வெளியிட்ட சஞ்சிகை, பத்திரிகை களுக்கும் இந்தக் கூட்டத்தில் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

234 B, K.K.S. Road,
JAFFNA-SRI LANKA
7.1.1992

டொமினிக் ஜீவா.

## இரண்டாம் பதிப்புக்கான சிறு குறிப்புரை

இந்த நூலின் முதற் பதிப்பு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 1982ல் வெளிவந்தபோது பலராலும் பேசப்பட்டது. சர்ச்சிக்கப்பட்டது. இந்த நூலின் உள்ளடக்கம் சம்பந்தமாகப் பல்வேறு கருத்துக்கள் ஈழத்து இலக்கிய உலகில் முன் வைக்கப்பட்டன. மொத்தமாகச் சொல்லப்போனால், இந்த நூலுக்கு அந்தக் கட்டத்தில் வந்த விமர்சனங்களே இந்தப் புத்தகத்தைப் பிரபலப் படுத்தியதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்து விட்டது.

முதற்பதிப்புக்கு விரிவான ஒரு முன்னுரையை எழுதியிருந் தேன். இப்போது கூட அது போதும் என்றே கருதுகின்றேன். இருந்தும் புதிய பதிப்புக்கான சிறிய குறிப்பே இதுவாகும்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த நூல் மறுபதிப்பாக வருகின்றது. இந்த இடைக்கால ஆண்டுகளில் எத்தனையோ இலக்கிய மாற்றங்கள் இங்கும் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் ஏற்பட்டு விட்டன.

இந்த நூலின் உள்ளடக்கத்தில் நான் குறிப்பிட்டுக் காட்டிய பல சம்பவங்கள் கால ஓட்டத்தில் சமநிலைப்பட்டு, வேறு பிரச்சினைகள் தோற்றப்பாடு கொண்டு விட்டன. ஈழத்து இலக்கிய வளர்ச்சியை அடுத்து, பல புதிய புதிய அநுபவங்கள் எமக்கு ஏற்பட்டுள்ளன. புதிய பாடங்களைக் கற்றுத் தந்துள்ளன.

ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கான போராட்டப் பாதையைச் செப்பனிட்டுச் செல்ல நாம் கொடுத்துள்ள விலைகளின் பட்டியலே இந்த நூலின் கருத்துக்களாக அமைந்துள்ளன.

பட்டி தொட்டி எங்கும் சென்று மேடையமைத்து நாவால்

இந்த மண்ணை உழுதிருக்கின்றோம். நாம் உழுது பதப்படுத்திய இந்த மண்ணுக்கு எமது பேனாவினால் பசளையிட்டு, உரமிட்டுச் செழுமைப் படுத்தியிருக்கின்றோம். இந்த இலக்கிய வேள்வியை நாம் எப்படிச் செய்து முடித்தோம் என்பதற்கு எழுத்து ஆவண மாகவே இந்த நூலைச் செய்து முடித்தேன்.

நானும் என்னைப் போன்றவர்களும் கட்டுப்பாடும் உறுதியும் தத்துவார்த்தச் செறிவும் மிக்க முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தின் வழி காட்டுதலின் ஊடே, தளம்பாது, தடம் புரளாது எப்படி எப்படியெல்லாம் உழைத்துப் புதுப் பாதை சமைத்தோம் என்பதை இன்றைய இளைய தலைமுறை இலக்கியப் பரம்பரை யினர் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அதற்கெனவே பல தகவல்களைப் புதிய பரம்பரையினர் தெரிந்து வைத்திருக்கக் கனமான தகவல்கள் இந்த நூலில் பரவலாகக் காணப்படுகிறது.

இன்னமும் மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் இருபத்தோராம் நூற்றாண்டு மலரப் போகின்றது. முகிழ்ந்து வரப்போகும் புதிய நூற்றாண்டுக்குத் தந்துதவும் முகமாகவே கடந்த கால எனது கருத்துக்களையும் எண்ணங்களையும் போராட்ட வடிவங்களையும் ஆவணப் படுத்திய இந்த முதற் பதிப்பு நூலை இரண்டாம் பதிப்பாக வெளியிட ஆவன செய்துள்ளேன்.

இந்தப் பதிப்பில் சில புதிய கட்டுரைகளைச் சேர்த்துள்ளேன். இடைப்பட்ட ஆண்டுகளில் பல்வேறு கருத்து வடிவங்களைக் கொண்ட பேட்டிக் கட்டுரைகள் தற்போது கைவசம் இல்லை. யுத்த காலச் சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணத்தில் முடங்கிப் போய்க் கிடக்கின்றன. கையில் தற்சமயம் கிடைக்கக் கூடிய கட்டுரைகளை மாத்திரமே இதில் சேர்த்துள்ளேன்.

புதிய கட்டுரைகளுக்கான பேட்டிகளைக் கண்டு, கேட்டுப் பிரசுரித்த நிருபர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் எனது நன்றிகள்.

கருத்துக்கள் என்றுமே நிரந்தரமானவைகளல்ல. இதில் நான் சொல்லியுள்ள கருத்துக்கள் காலாவதியாகக் கூடப்போய் விடலாம். சில கருத்துக்கள் மாறுபடலாம். சில நீர்த்துப் போய் விடலாம். வேறுபட்ட அனுபவத் தாக்கங்களினால் சற்றும்

எதிர்பார்க்கவே முடியாத வேறு ஒரு கருத்து உருவாகலாம். மனித அனுபவங்கள் மாற மாற, காலம் செல்லச் செல்ல, புதிய புதிய கருத்துக்கள் தோன்றலாம். அப்படி மாற்றத்திற்கு உட்பட மறுக்கும் ஒருபடைப்பாளி வளரவில்லை என்றே இறுதி முடிவுக்கு வந்து விடலாம். விரைவில் காணாமல் போய் விடுவான் என எண்ணி விடலாம்.

ஆனால், அடிப்படைக் கருத்துக்களில் மாறக் கூடாது. சமரசம் கூடச் செய்து கொள்ளக் கூடாது. அடிச் சரடை விட்டு விலக்கக் கூடாது. அப்படிக் கருத்துச் சோரம் போய் விட்டால் காலம் அவர்களைக் குப்பைத் தொட்டிக்குள்தான் தூக்கிக் கடாசிவிடும். பல படைப் பாளிகளின் பிற்கால வாழ்க்கை இந்த அவலக் கூத்தில்தான் போய் முடிந்துள்ளது.

இந்த அநுபவ ஞானத்தைக் கொண்டு என்னை நானே புதுப்பித்துக் கொண்டுள்ளேனே தவிர, அடிப்படைக் கருத்துக் களை என்றுமே ஓரங்கட்டி வைத்து விடவில்லை; சமரசமும் செய்து கொண்டு விடவில்லை. பிறழ்ந்து போய் விடவில்லை.

இதுவரை என்னுடன் கூட ஓடி வந்தவர்கள், என்னுடன் தோழமை கொண்டு உழைத்து வருபவர்கள், என்னைத் தெளி வாகத் தெரிந்து வைத்திருப்பவர்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

இந்த இடைக்காலப் பதினைந்து ஆண்டுகளுக்குள் 'அடே யப்பா!' எத்தனை எத்தனை அநுபவங்கள்!

சென்னையில் மல்லிகைப் பந்தலின் வெளியீடுகளுக்குப் பல வழிகளிலும் உதவிகரமாகவும் ஒத்தாசையாகவும் விளங்கும் குமரன் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தினருக்கு எனது மனமார்ந்த நன்றி உரியது.

*201 1/1, ஸ்ரீகதிரேசன் வீதி*
*கொழும்பு - 13*
*21-5-1997.*

**- டொமினிக் ஜீவா.**

# தமிழ் வளர்க்கும் ஜீவா

**இளவரசு**

**"கண்டதையும் கேட்டதையும் மனதிற்பட்டதையும் கற்பனை மெருகூட்டிச் சிறந்த கதைகளாகப் படைப்பதில் வெற்றி கண்டவர்."**

"நீங்கள் காணும் காட்சிகளிலோ, நிகழ்ச்சிகளிலோ உங்கள் உள்ளம் அளவுக்கு அதிகமாகப் படிந்து அவற்றைச் சுற்றிப் படரத் தொடங்கவேண்டும். ஒன்றைப் பார்த்தாலும், படித்தாலும், கேட்டாலும் அதற்கு பிறகும் அந்த ஒன்றைப் பற்றிப் பலவிதமாக நினைக்கும் வழக்கம் உங்களிடம் இயல்பாகவே அமைந்திருக்க வேண்டும். புதிய மாதிரி நினைவுகளும் சிந்தனைகளும் பகற் கனவுகளும் அடிக்கடி உங்களுக்கு ஏற்படவேண்டும்" என்று பிரபல தென்னிந்தியச் சிறுகதை எழுத்தாளர் ஒருவர் எழுத விரும்புபவர்களுக்கு ஆலோசனை கூறுகிறார். இதனை அனுசரித்து நடந்து வரும் இளம் எழுத்தாளர்கள் மிக விரைவிலே முன்னேறிவிடுகிறார்களென்பது பிரத்தியட்ச உண்மையாகவும் காணப்படுகிறது.

இந்த உண்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர்களில் ஒருவரான திரு.டொமினிக் ஜீவா எழுத்துலகிற் புகுந்த சொற்ப காலத்துக்கிடையிலேயே வாசகர்களின் பாராட்டைச் சம்பாதித்துக் கொண்டதன் இரகசியத்தை அறிய விரும்புவோர், இனி வீணாகத் தம் மண்டையை போட்டு உடைத்துக்கொள்ள வேண்டியதே இல்லை. இலங்கையிலேயுள்ள இளம் தமிழ் எழுத்தாளர்களிற் சிறுகதை எழுதுவோர்தான் அதிகமாகக் காணப்படுகிறார்கள். அவர்களுள் தரமான கதைகளை எழுதும் தகுதி பெற்றவர்கள் எத்தனைபேர் என்பதை விரல்விட்டு எண்ணிவிடலாம். அவ்விதம் எண்ணப்பட வேண்டியவர்கள் யார் யார் என்று சிந்தித்துப் பார்க்கும் ஒருவருக்கு ஜீவாவின் பெயர் ஆரம்பத்திலேயே நினைவுக்கு உதியாதிருக்க முடியாது. கண்டதையும் கேட்டதையும் மனதிற்பட்டதையும் கற்பனை மெருகூட்டிச் சிறந்த கதைகளாகப் படைப்பதில் அவர் எவ்வளவு தூரம் வெற்றிகொண்டுள்ளாரென்பதைத் "தண்ணீரும் கண்ணீரும்" "வெண்புறா" என்ற கதைகள் எடுத்துரைக்கின்றன. ஏழை வீரப்பனையும்

சாதித் திமிர்பிடித்த சாமிநாதனையும் வைத்துக்கொண்டு யாழ்ப் பாணத்திலே தீண்டாமையின் பேரால் நடைபெறும் அட்டூழிய மொன்றை அழகுபடச் சித்திரிக்கின்றது. 'தண்ணீரும் கண்ணீரும்'. உணர்ச்சியோட்டம் நிறைந்த அந்தக் கதையை மிக அசாத்திய மான சிருட்டிகளிலொன்று என்று பாராட்டினால் மிகையாகாது. பாண்டுங் மகாநாட்டுக்குப் பறந்து சென்ற சீனத்துத் தூதுக் கோஷ்டி விமான விபத்திற் சிக்கி மாண்டது பத்திரிகை படிக் கும் ஒவ்வொருவருக்கும் தெரிந்த சம்பவமாகும். அச்சம்பவத்தை எடுத்துக்கொண்டு விமான சேவகி குளோரியா பெர்ரியின் தியாகத்துக்கு மதிப்புக் கொடுத்து உருவாக்கப்பட்ட 'வெண்புறா' இன்னொரு வகையிற் சிறந்ததொன்றாகும்.

சாய்ப்புச் சிப்பந்திகளின் உரிமைக் குரலுக்கு மதிப்புக் கொடுத்தும், ஏழை ரிக்ஷாக்காரனின் வாழ்வைச் சித்திரித்தும் மற்றும் பாட்டாளி வர்க்கத்துக்காகப் பரிந்து பேசியும் எழுதப் பட்ட, "கடவுள் இருந்தால்" "இவர்களும், அவர்களும்" "கொச்சிக் கடையும் கொட்டாஞ் சேனையும்" முதலிய கதைகள் ஜீவாவின் சொந்த இலட்சியங்கள் எவையென்பதை அப்படியே கூறிவிடு கின்றன. அவர் தமது சொந்த அரசியற் கண்ணோட்டத்தோடு எழுதிய, 'சமாதானத்துக்காக' என்பது உலக சமாதானத்தின் பெயரால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின்மீது போர் தொடுக்க முயற்சிக்கிறது. அதிற் கற்பனை வளத்துக்குக் குறைவில்லை.

"இவர்தான் அவர்" "உண்ணாவிரதம்" என்பனவற்றில் நகைச் சுவை மிகுதியுண்டு. உவமான உவமேயங்களைப் புதுமையான வகையிற் கையாளுவது மூலம் தமது கதைகளுக்கு மெருகு கொடுத்து வருகிறார்.

சார்லி சாப்ளின் தமது முத்திரையாகப் பிரம்பைக் கையிற் கொண்டு படங்களில் வருவது போல ஜீவாவின் கதைகளிலும் சுவர்க்கடிகாரம் மணிக்கூடு என்பன காட்சியளிக்கத் தவறு வதில்லை. அப்படியானால் இவரை ஒரு "மணி எழுத்தாளர்" என்று ஏன் சொல்லக்கூடாதென நான் கேட்கின்றேன்! யாழ்ப் பாணத்திற் சாதாரண தொழிலாளி என்ற பெருமையுடன் வாழ்ந்துவரும் ஜீவா, ஒரு மேடைப் பிரசங்கி என்பதையும் அறிந்து இந்நாட்களில் அரசியல் மேடைகளில் அனாவசியமாகக் கொக்கரித்துத் திரியும் சில இளமட்டங்கள் அதிர்ச்சி அடைந்து விடவுங் கூடும்.

"ஈழகேசரி"
06.05.1965.

## நாடறிந்த எழுத்தாளர்

-'தசரதன்'

**"என் தொழில்தான் எனக்குப் பேனாவைத் தூக்கும் திராணியையும் தெம்பையும் தந்தது"**

'தண்ணீரும் கண்ணீரும்' என்ற சிறுகதைத் தொகுதிக்கு ஸ்ரீலங்கா சாஹித்திய மண்டலத்தாரின் சிருஷ்டி இலக்கியப் பரிசை முதன் முதலாகப் பெற்றுக் கொண்ட சிறந்த சிறுகதை எழுத்தாளர் டொமினிக் ஜீவா. இப்போது 'பாதுகை' என்ற இவரின் இரண்டாவது தொகுதியும் வெளிவந்துவிட்டது.

எண்பதற்கு மேற்பட்ட சிறுகதைகளையும் பல கட்டுரைகளையும் எழுதியுள்ள ஜீவா, 'சுதந்திரன்' பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றவர். யாழ்ப்பாண நகர இதயப் பகுதியான புகையிரத நிலையத்தருகே உள்ள இல்லத்தில் பிறந்த இவர் யாழ்ப்பாணப் பட்டினத்தில் பெரியகடைப் பகுதியில் ஒரு சலூனில் தொழில் புரிந்து வருகிறார்.

"என் தொழில்தான் எனக்குப் பேனாவைத் தூக்கும் திரணியையும் தெம்பையும் தந்தது". பெருமையுடன் சொல்லிக் கொள்ளும் டொமினிக் ஜீவா, தொழிலாளியின் குடும்பத்தில் பிறந்து தொழிலாளியாகவே இருந்துகொண்டு ஈழத்து இலக்கியத் துறையில் பல சாதனைகள் செய்தவர்.

சிருஷ்டி இலக்கியத்திற்கான சாஹித்திய மண்டலப் பரிசை முதன் முதலாகப் பெற்றதோடு, இலங்கையில் இரண்டாவது பதிப்பாக வெளிவந்து மூன்றாவது பதிப்பாகவும் வெளிவர விருக்கும் ஒரேயொரு சிறுகதைத் தொகுதி இவருடையது தான். இவரின் மூன்று சிறுகதைகள் டாக்டர் கமில் சுவலபிலால்

செக் மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளது. 'தங்கத் தாமரை' என்ற பெயரில் குழந்தைகளுக்கான சிறுகதைத் தொகுதியை முதன் முதலில் ஈழத்தில் வெளியிட்டவர் இவர்தான்.

சிறந்த பேச்சாளரான இவரது கதைகள் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 'ஞானம்' என்ற சிறுகதையை ஏ.ஜே. கனகரத்தினா மொழிபெயர்த்தார். 'வெண்புறா' என்ற சிறு வர்களுக்கான சிறுகதையை 'மஞ்சரி' மறு பிரசுரம் செய்தது. தொழிலாள வர்க்கத்தினரின் வாழ்க்கைப் போரில் நடைபெறும் அன்றாட நிகழ்ச்சிகளை அவருக்குப் பிறப்புரிமையாகக் கிடைத் துள்ள கலையுணர்ச்சியையும் கலந்து அருமையான சிறுகதை களாகப் படைக்கிறார் ஜீவா.

"காலத்தை வெல்லும் அமர சிருஷ்டியாளர்களாக விளங்க வேண்டும் எல்லாச் சிறுகதைப் படைப்பாளிகளும்" என்பதே ஜீவாவின் கருத்து.

"தினகரன்"

## நான் விரும்பும் எழுத்தாளர்

க.ந.

> "இந்த நாட்டுக்குப் பெருமையும் கௌரவமும் தேடித் தந்தவர். எமக்கென்று ஒரு தேசியம், ஒரு பாரம் பரியம், ஒரு பண்பாடு, ஒரு நாகரிகம் உண்டென அடித்துக் கூறி, அவை மிளிர - ஈழத்து மண் வாசனை கமழ - கதை படைத்தவர்."

இன்று எதற்குத்தான் பஞ்சமென்றாலும், ஈழத்தில் எழுத்தாளர் களுக்கு மாத்திரம் பஞ்சமில்லை. பெயர் சம்பாதிப்பதற்குக் குறுக்குவழி எழுத்தாளர் ஆகிவிடுவது தான் என்ற ஒரே நோக்குடன் இன்று எல்லோருந்தான் எழுதித்தள்ளுகின்றார்கள். ஆனால் இவர்களுக்குள்ளே இலக்கியத்தைப் புரிந்து கொண்டு வாழும் இலக்கியம் படைப்பவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். ஈழத்து எழுத்தாளர்கள் எனப் பெயரளவிலே தேசிய ரீதியில் சொல்லிக் கொண்டாலும், இன்றைய எழுத்தாளர்களை யாழ்ப்பாண எழுத்தாளர், மட்டக்களப்பு எழுத்தாளர், மலையக எழுத்தாளர், கொழும்பு எழுத்தாளர் என்று நான்கு பிரிவுகளாக வகுத்துக் கொள்ளலாம். இந்த எழுத்தாளர்களிற் பலரை இவர் கள் வாழும் சொந்தப் பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பகுதி களில் எல்லோருக்கும் தெரியவராது இவர்களுடைய படைப்புக் களும் தேசிய அடிப்படையில் அமைவதில்லை. பெரும்பாலும் தமிழ்ச் சினிமாக் கதைகளைப்போல, கதை பண்ணும் கைங் கரியங்களைச் செய்து திருப்தியுறுகின்றனர். இந்த எழுத்தாளர் களை ஈழத்து எழுத்தாளர்கள் என்று பெருமைப்படும் அளவுக்கு வெளியுலகம் அறியமாட்டாது.

ஆனால் நான் விரும்பும் எழுத்தாளர் தமிழ் வாசகர்களுக்கு மட்டுமல்ல. ருஷிய, செக்கோசிலவக்கிய, ஆங்கில வாசகர்களுக்கும்

நன்கு அறிமுகமானவர். அண்மையில் ஈழத்திற்கு வந்திருந்த செக் நாட்டுத் தமிழறிஞன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது முதன் முதல் சந்திக்க விரும்பிய எழுத்தாளன் - தினமும் இரு பத்து நான்கு மணி நேரமும் இலக்கியத்தைப் பற்றியே சிந்தித்து - இலக்கியத்தைப் பற்றியே பேசி - இலக்கியத்துக்காகவே செயற்பட்டுக் கொண்டிருக்கும் 'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவாதான்.

ஜீவா ஈழத்து வாசகர்களைக் கவர்ந்தமைக்கான காரணங்கள் ஒன்று இரண்டல்ல, பல உள. இந்த நாட்டுக்குப் பெருமையும் கௌரவமும் தேடித்தந்தவர் அவர். ஈழத்திலும் தரமான படைப் பாளிகள் உண்டு. அவர்களாலும் சிறந்த படைப்புக்களைப் படைக்க இயலும் என்பதனைச் சாதனை மூலம் நிரூபித்துக் காட்டிய மிகச் சிறிய தொகையினரான எழுத்தாளர்களில் ஒருவர். தமிழகத்துக் 'கல்கி'யையும் 'குமுதத்தை'யும் பார்த்து அவற்றைத் தமது துரோணாச்சாரியர்களாகக் கொண்டு இலக் கியம் படைத்த ஈழத்து 'ஏகலைவர்கள்' மத்தியில், எமக்கென்று ஒரு தேசியம், ஒரு பாரம்பரியம், ஒரு பண்பாடு, ஒரு நாகரிகம் உண்டென அடித்துக் கூறி, அவை மிளிர - ஈழத்து மண்வாசனை கமழ - கதை படைத்தவர்.

இன்று தமிழகம் சென்று ஈழத்து எழுத்தாளனுடைய இலக் கியப் பார்வை சரியான திசையில் திரும்பி விட்டதென்றும், தமிழகத்துக் காதல்கதை எழுத்தாளர்கள் தான் ஈழத்து எழுத் தாளனைப் பார்த்து திருந்த வேண்டுமென்றும், ஒரு தமிழ் எழுத்தாளனுக்கு நோபல் பரிசு கிடைக்குமானால் அதைப் பெறும் தகுதியை ஈழத்து எழுத்தாளன்தான் அடைவானென்றும் நெஞ்சு யர்த்திப் பேசுகின்ற துணிச்சலும், ஆற்றலும், தகுதியும் ஜீவாவுக் குத் தான் உண்டு.

ஜீவாவின் படைப்புக்கள் யாவும் சமுதாயப் பிரக்ஞையோடு படைக்கப்பட்டவை. இலங்கைச் சாகித்திய மண்டலத்திற்குள் ஆள் வைத்துப் பரிசைத் தட்டிக் கொண்டு போகும் காலகட்டம் உருவாவதற்கு முன், முதன் முதல் ஆக்க இலக்கிய நூல் ஒன்றுக்குப் பரிசு கிடைத்ததென்றால் அது ஜீவாவின்

"தண்ணீரும் கண்ணீருக்குமே". அவரது மூன்று சிறுகதைத் தொகுதிகளும், யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட மக்களின் ஆத்மாவை மட்டுமல்ல மனித வர்க்கத்தின் ஆத்மாவையே அடிநாதமாகக் கொண்டுள்ளமையைக் கண்டு ரசிக்கலாம்.

ஜீவாவின் படைப்புக்களில் ஒரு தெளிவும் தனித்துவமும் இருப்பதற்கு அவரது கொள்கையும் இலட்சியமுமே காரணங் களாகும். மக்களை மகிழ்விப்பதற்கு எழுதும் ரசனை எழுத் தாளர்களிடம் காணப்படும் குழப்பம், தடுமாற்றம் அவரிடம் இல்லாமையால் அவர் படைப்புக்களில் ஒரு கம்பீரத்தைக் காண முடிகிறது.

இன்று ஜீவா வெறும் எழுத்தாளர் மாத்திரமல்லர். 'மல்லிகை' என்ற சஞ்சிகையின் ஆசிரியருங்கூட. எல்லோருடைய படைப் புக்களையும் வெளியிடத்தகுந்த வசதி 'மல்லிகை'க்கு இல்லையா யினும், ஈழத்து இலக்கியத்துக்குச் சரியான திசை வழிகாட்டும் ஆசிரியத் தலையங்கங்களை ஜீவா அவ்வப்போது எழுதிவரு கின்றார். ஈழத்தைப் பற்றி இழிவாகக் கருதும் 'வியாபார எழுத்தாளர்'களுக்கு தக்க பதில் கொடுப்பதற்கு 'மல்லிகை'யைத் தவிர வேறு சஞ்சிகைகள் இங்கு இல்லை. அண்மையில் தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்து போன பத்திரிகை ஆசிரியர் மணியன் எங்கள் நாவலரைத் தனக்கு தெரியாதெனச் செய்த சொட்டையைக் கேட்டு ஆவேசமுற்றது 'மல்லிகை'; அதன் ஆசிரியர் ஜீவாவின் இதயம். 'மல்லிகை'யின் ஆசிரியத் தலையங் கச் சிறப்பை உணர்ந்து, அதன் இரு ஆசிரியத் தலையங்கங்களை ஈழத்துத் தினசரி ஒன்று மறுபிரசுரம் செய்து கௌரவித்துள்ளது.

ஈழத்தில் வாழும் தரமான எழுத்தாளர்களின் அருமை பெருமையைக்கூட, ஈழத்துப் பத்திரிகைகள் இன்னும் தெளிவாக உணரவில்லை என்றே கூறவேண்டும். தமிழகத்தில் இருந்து இங்கு வரும் வியாபாரிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து முதுகிலே தூக்கி வைத்துக் கூத்தாடுவதற்கும் இவைகள் தவறுவதில்லை. ஆனால் இதே பத்திரிகை உலகில் ஒரு புதுமை! ஈழத்து எழுத்தாளன் ஒருவனது பேட்டியை வாரப்பதிப்பில் இரண்டு வாரங்களாக வெளியிட்டுச் சாதனை புரிந்திருக்கிறது. இந்த

அளவுக்குப் பத்திரிகையின் கவனத்தைக் கவர்ந்த எழுத்தாளர் ஜீவா ஒருவர்தான்; வேறு யாருமில்லை.

ஈழத்தில் இன்று எழுத்தாளர்கள் என்று சொல்லுகின்றவர்கள் பலருக்கு கொம்பிருக்கிறது; ஆமாம் கொம்புதான். இவர்கள் எல்லாரும் பெரிய கொம்பன்கள். ஆனால் இவர்களுக்கு மத்தியில் எல்லோருக்கும் இனியவர்; எளியவர் ஜீவா. பழகு வதற்கு உகந்தவர். மாற்றுக் கருத்துக்களை மதிப்பவர். நான்தான் 'ஜாம்பாவன்' என்ற கர்வம் இல்லாதவர். சில ஆண்டுகளுக்கு முன்னர் இவர் புகழ் கண்டு பொறாமையுற்ற எழுத்துலக மன்னர் சிலரால் சாடப் பட்டவர், தூஷிக்கப்பட்டவர், அன்றும் நிறைகுடமாக நின்று தளம்பாத்தன்மையை ஈழத்து இலக்கிய உலகம் கண்டது. அன்று வசை பாடியவர்கள் இன்று எங் கொழிந்தனரோ தெரியவில்லை! ஆனால் ஜீவாவின் இலக்கியத் திறனை ஏன், இலக்கியத் தொண்டினை மறைக்க மட்டும் அவர்களால் இயலவில்லை. ஜீவாவைப் பற்றிச் சொல்வதற்கு இவை மாத்திரமா? இன்னுமுண்டு. விரிவஞ்சி இங்கு விட்டு விடுகிறேன்.

"செய்தி"

1967

## உரிமைக் குரல்

**நச்சு இலக்கியத்தை எதிர்த்தும் நாசகாரப் போக்கு களைச் சாடியும் ஜீவா தொடுத்துள்ள போரின் கொடியாக, ஈழம் முழுமையும் அறிவொளி பரப்பி வருகிறது, மல்லிகை என்ற மாத இலக்கிய இதழ்.**

"தாமரை" சிறுகதை மலர் முகப்பை அணி செய்வது ஈழத்துச் சிறுகதை மன்னன் டொமினிக் ஜீவாவின் திருவுருப் படம். சிறந்த சிறுகதையாளரான இவர் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ்ப்பாணம் பிரதேசக் கிளையின் முன்னாள் காரியதரிசி, இலங்கைக் கலை இலக்கியப் பெருமன்றத்தின் செயலாளர்.

இவருடைய 'தண்ணீரும் கண்ணீரும்' என்ற சிறுகதைத் தொகுதி 1961-ல் ஸ்ரீலங்கா சாகித்திய அகடமியின் ஆயிரம் ரூபாய் பரிசைப் பெற்றது. படைப்பு இலக்கியத்திற்காக முதன் முதலில் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றவர் இந்த ஈழத்து ஜீவா.

"தண்ணீரும் கண்ணீரும்" "பாதுகை" ஆகிய இவரது சிறுகதைத் தொகுதிகள் தமிழ்ப் புத்தகாலய வெளியீடாக வந்துள்ளன. "சாலையின் திருப்பம்" என்ற மூன்றாவது இலங்கையில் வெளி யாகியுள்ளது. இவரது கதைகளில் பல செக்மொழியிலும் ருஷ்ய மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

நச்சு இலக்கியத்தை எதிர்த்தும் நாசகாரப்போக்குகளைச் சாடி யும் ஜீவா தொடுத்துள்ள போரின் கொடியாக 'மல்லிகை' என்ற இலக்கிய மாத இதழ் சென்ற இரண்டு ஆண்டுகளாக ஈழம் முழுமையும் அறிவொளி பரப்பி வருகிறது. இலங்கை எழுத்தாளர்களின் உரிமைகளைக் காக்க இவர் நடத்தியுள்ள போராட்டங்கள் பலப்பல.

தொழிலாளர் குடும்பத்தில் பிறந்த இவர் ஒரு கத்தோலிக்கக் கிறிஸ்தவர். இன்றும் யாழ்ப்பாணத்திலுள்ள முடிதிருத்தும் நிலையம் ஒன்றில் பணி புரிந்து வருகிறார். 1961ம் ஆண்டில் சென்னைக்கு வந்த ஈழத்து ஜீவாவுக்குத் தமிழகத்து ஜீவா தலைமையில் வரவேற்பு நடத்தியது, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்.

"தாமரை"

ஜூலை 1968.

## சிந்தனையாளர்

**சுய முயற்சியால் ஒரு படிப்பாளியாக, அறிஞனாக, இலக்கியவாதியாக ஆகமுடியுமென்பதை நம்மிடையே நிரூபித்து நிற்பவர்.**

'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவா உச்சி முதல் உள்ளங்கால்வரை ஒரு கம்யூனிஸ்ட்! ஆயினும், கலை இலக்கியம் சம்பந்தப்பட்ட விஷயம் என்று வந்துவிட்டால், கட்சி பேதங் களை மறந்து உற்சாகம் காட்டுபவர். இலக்கிய ஆர்வம் அவருடைய இரத்தத்தோடு ஊறிவிட்ட விஷயம். சாதாரண குடும்பத்தில் பிறந்த ஒரு தொழிலாளி, எந்தப் பல்கலைக் கழகப் படிகளையும் மிதிக்காமலே, தனது சுயமுயற்சியால் ஒரு படிப் பாளியாக, அறிஞனாக, இலக்கிய வாதியாக ஆகமுடியுமென்பதை நம்மிடையே நிரூபித்து நிற்பவர் இவர். சமீபத்தில் கலைக்கப் பட்ட ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்துக்குப் பதிலாக அமைக்க பெற்ற 'இலங்கைக் கலாச்சாரக் கழகத்'தின் இலக்கிய ஆலோசகராக இவர் நியமிக்கப் பெற்றிருப்பது மிகப் பொருத்தம். ஆழ்ந்த சிந்தனையும், கூரிய நோக்கும், இடைவிடாத முயற்சியும் இவரது இயல்புகள். மிக ஆர்வமுள்ள இவருடைய ஆலோசனைகளால் ஈழத்துத் தமிழிலக்கியம் நிச்சயம் பயனடையுமென்று எதிர்பார்க்கலாம்.

"வெள்ளி"

ஜூலை, 1971

# இலங்கையின் தமிழ் இலக்கிய வரலாறு

நா. முகம்மது செரீபு

**அவரைப் பார்த்த மாத்திரத்தில் மாக்சிம் கார்க்கியை நினைவு கூர்ந்தேன். அவர் தோற்றத்தில் மட்டுமல்லாது உள்ளத்தாலும் கார்க்கியைப் போற்றி வருபவர் என்பது அங்கு தொங்கிய கார்க்கியின் படம் உறுதி செய்தது.**

*பகல் மணி பன்னிரண்டு இருக்கும். பலரிடம் கேட்டு வழியறிந்து அந்தச் சந்திற்குள் நுழைந்தேன். தொலைவிலேயே 'மல்லிகை' என்ற போர்டு குறுக்காக இடங்காட்டி நின்றது. சற்று உயரமான படிக்கட்டில் ஏறும்போது மனம் எதை எதையோ எண்ணி மயங்கியது.*

*அவரை நான் இதுவரை சந்தித்ததில்லை. 'தாமரை' இதழ்களில் அவர் படத்தைப் பார்த்ததோடு சரி. நுழைந்தது தான் தாமதம், அவரே வந்து நின்றார். "என்னவேணும்" என்றார்.*

*"நீங்கள்தான் டொமினிக் ஜீவாவா?" என்றேன் தயக்கத்துடன்.*

*"ஆம், நீங்கள் யார்?" என்றார்*

*நான் என்னைப் பற்றிக் கூறினேன்.*

*"இன்று கம்பாஸிடர் வரவில்லை. அது தான் நானே அந்த வேலைகளைச் செய்கின்றேன். வேலை அதிக மிருக்கிறது" என்றார்.*

*நேரந்தெரியாமல் நுழைந்துவிட்டேன் என்று எண்ணுவது போல அவர் முகம் ஆரம்பத்தில் காட்டியது. எனினும் பேசிய பேச்சைக் கூர்ந்து கவனித்தபோது, எவ்வளவு ஆழமான அன்பு கொண்டவர் என்பது தெரிந்தது.*

அவரைப் பார்த்த மாத்திரத்தில் மாக்சிம் கார்க்கியை நினைவு கூர்ந்தேன். அவர் தோற்றத்தில் மட்டுமல்லாது உள்ளத்தாலும் கார்க்கியைப் போற்றி வருபவர் என்பது அங்கு தொங்கிய கார்க்கியின் படம் உறுதி செய்தது. அதன் பக்கத்தில் 'டொமினிக் ஜீவா' வின் படத்தை அலங்கரித்து வெளிவந்த 'தாமரை' இதழ்களின் அட்டைப்படம் இரண்டு கண்ணாடிச் சட்டத்திற்குள் தொங்கிக் கொண்டிருந்தன.

எனது வெளியீடுகளில் சிலவற்றை அவரிடம் கொடுத்தேன். மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்ட அவர் 'மல்லிகை' இதழின் முன்னைய ஆண்டு மலர்கள் பலவற்றைத் தந்து அவைகளைப் பத்திரமாகப் பாதுகாக்கும்படி கேட்டுக்கொண்டார்.

அண்மையில் தமிழகம் வந்து சென்றதை நினைவுகூர்ந்த அவர், மிகக் குறுகிய காலமே அங்கு தங்கியதால் பலரைச் சந்திக்க முடியவில்லை என்று வேதனைப்பட்டார்.

மீரா, சிற்பி, அப்துல் ரகுமான் இப்படிப் பலரைக் கேட்ட அவர், தான் அவர்களை மிகவும் கேட்டதாகக் கூறச் சொன்னார்.

யாழ்ப்பாணத் தமிழை அவர் பேசுகின்றபோது கேட்க இனிமையாகவே இருந்தது. வரும் ஜனவரியில் உலகத் தமிழ் மாநாடு மதுரையில் நடைபெறும்போது பல முற்போக்குத் தமிழ் எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் சந்திக்க விருப்பங் கொண்டுள்ளதைத் தெரிவித்தார்.

'மல்லிகை' தற்போது இலங்கையில் ஒரு பிரதி ஒன்றரை ரூபாய்க்கு விற்கப் படுகிறது. ஓர் இதழுக்கான காகிதமே ஒன்றரை ரூபாய் ஆகிறதாம். அந்நிலையிலும் இதழைக் கொண்டு வருவது எத்தனை சிரமம் என்பன போன்ற விபரங்களைத் தெரிவித்தார். இலக்கிய ஈடுபாடு இல்லையென்றால் இலங்கையில் இருந்து கொண்டு பதினாறு ஆண்டுகளாகத் தொடர்ந்து ஓர் இதழை நடத்திவர முடியுமா? தமிழகத்திற்கு அடுத்துத் தமிழர்கள் அதிகம் வாழும் நாடு இலங்கை தான். அங்கிருந்து வெளிவரும் ஒரே இலக்கிய இதழ் 'மல்லிகை' என்பது எத்தனை சிறப்புக் குரிய செய்தி.

இதற்குள்ளாக என்னைத் தேடி என் நண்பர்கள் அங்கு வந்தார்கள். எனவே ஜீவாவிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டோம்.

வந்த நண்பர்களுக்கு அவரைப்பற்றித் தெரியாது. எனவே "அவர் யார்?" என வினவினார்கள்.

'அவர்தான் இலங்கையின் தமிழ் இலக்கிய வரலாறு" என்றேன்.

உண்மைதானே!

"சமூகநிழல்"

டிசம்பர் 1980.

# ஈழத்து இதயம்

ஈழத்து எழுத்தாளர்களைப் பற்றியும் அவர்களது இலக்கியப் படைப்புகள் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் முன்னரிலும் பார்க்க இப்போது தமிழ் நாட்டில் அதிகரித்துள்ளது; தரமான நம் நாட்டு எழுத்தாளர் சிலருக்கு அங்கு நல்ல மதிப்பிருக்கிறது.

(“பாமா”வுக்கு அளித்த பேட்டி)

தமிழகத்துப் பிரபல எழுத்தாளர்களையும், கலைத்துறை சம்பந்தப்பட்ட முக்கிய பிரமுகர்களையும் சந்தித்து கருத்துப் பரிமாறல் செய்ததுடன், கலை, இலக்கியம் சம்பந்தமான பல கூட்டங்களிலும் சொற்பொழிவாற்றினேன். இந்தக் கூட்டங்களில் பலர் கலந்து கொண்டது ஈழத்துக் கலை, இலக்கிய வளர்ச்சியைப் பற்றி அறிய அங்குள்ளவர்கள் எவ்வளவு தூரம் ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதைப் புலப்படுத்துகிறது.

கேரள, வங்கத்து எழுத்தாளர்களுக்கு உள்ள தனிமதிப்புப் போன்று ஈழத்து எழுத்தாளர் சிலருக்கும் தமிழ் நாட்டில் விசேஷ மதிப்பு இப்போது ஏற்பட்டுள்ளது. இலங்கை எழுத்தாளர் ஓர் அடிப்படையான லட்சியத்தை அடியொற்றிப் போகிறார்கள் என்ற கருத்து கணிசமானவர்கள் மத்தியில் இப்போது நிலவத் தொடங்கியுள்ளது. ஆக்க பூர்வமான இலக்கியச் சிந்தனைகள், விமர்சனங்கள் இலங்கையில் கடந்த பத்து ஆண்டுகளில் பெருமளவில் வளர்ந்து விட்டதை தமிழகத்திலுள்ள பிரபல எழுத்தாளர்கள் என்னிடம் வாய் விட்டே சொன்னார்கள். தமிழ் நாட்டில் ‘இலக்கியம் யாருக்கு?’ என்ற கேள்வி பல கோணங் களில் எழுந்து கொண்டிருக்கிறது. ஆனால் ஈழத்து எழுத்

தாளர்களிடையே பல கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் இலக்கியம் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கே என்ற ஒருமைப்பாட்டைக் காண்கின்றோம்.

தமிழ் நாட்டிலுள்ளவர்கள் இலங்கையை அலட்சியம் செய்கிறார்கள் என்று ஒரேயடியாகச் சொல்லிவிடமுடியாது, இலங்கையைப் பற்றி பூரணமாக அறிந்து கொள்ளாமல் இருக் கிறார்கள். அவர் நம் நாட்டைப். பற்றியும், நம்மவர்களைப் பற்றியும் அறிந்துகொள்ள அவர்களுக்குச் சந்தர்ப்ப மில்லா திருக்கிறார்கள். எங்களுடைய புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், அங்கு கிடைக்காமல் இருப்பதே இதற்கு முக்கிய காரணம். ஆனாலும் இப்போது ஓரளவுக்கு இலங்கையைப் பற்றி அங்குள்ளவர்கள் அறியவும் புரியவும் உணரவும் தொடங்கியி ருக்கிறார்கள். இதனால் ஈழத்து எழுத்தாளர்களின் எழுத்துக் களைப் படிக்க இப்பொழுது பெரிதும் விரும்புகின்றனர்.

இலக்கியக் கூட்டங்கள் பலவற்றில் நான் தெரிவித்த கருத்துக்களை அமைதியாக இருந்து கேட்டார்கள். பல தடவை களில் தமிழ்நாடு ஈழத்துக்குச் செய்யும் குறைகளை நேரடியாகவே சுட்டிக்காட்டினேன். நாவலர் சிலை நிறுவப் படாதது குறித்து வன்மையாகக் கண்டித்துப் பேசினேன். ஈழத்துத் தமிழினத்துக்கு தமிழகம் செய்த பெரிய துரோகம் என்றும், ஈழம் இதனை என்றும் மறக்காது, மன்னிக்காது என்றும் நான் தெரிவித்தேன். தவறு செய்துவிட்டோம் என்பதைப் பலரும் ஒப்புக் கொண்டனர்.

கவிஞர் கண்ணதாசனுடன் நான்கு மணிநேரம் மனம் திறந்து பேசினேன். ஈழத்து எழுத்தாளர்களுக்கு அவரது "கண்ணதாசன்" என்ற மாதப் பத்திரிகையில் போதிய இடம் அளிக்கக் காத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார். கண்ணதாசன் இயந்திரமாக வேலை செய்துகொண்டிருக்கிறார்.

எழுத்தாளர் ஜெயகாந்தனைச் சந்தித்தேன். சமீபத்தில் அவரது கருத்துக்களிலுள்ள முரண்பாடுகளைத் தாக்கி தமிழகப் பத்திரிகை யொன்றில் எனது கட்டுரை வெளிவந்தது. அவரைச் சந்தித்த

போது, கருத்து முரண்பாடுகள் குறித்து காரசாரமாக இருவரும் விவாதித்தோம். கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் அன்பில் ஒருமைப்பாடு கண்டோம். இன்னும் பல பிரபல எழுத்தாளர்களையும் நான் அங்கு சந்தித்தேன்.

நான் பேசிய ஒரு கூட்டத்தில், தலைமை வகித்த பிரபல எழுத்தாளர் திரு. சிதம்பர ரகுநாதன் (திருச்சிற்றம்பலக் கவிராயர்) பின் வருமாறு சொன்னார்.

"ஜீவாவின் கருத்துக்களை நாம் கேட்டதிலிருந்து, அவருடைய இதயமல்ல, ஈழ நன்னாட்டின் உள்ளம்தான் இதுவரை பேசியது. ஈழத்து எழுத்தாளர்கள் பிரச்சினையில் நமக்கும் பங்குண்டு. அடிக்கடி இப்படியான சந்திப்புக்கள் நிகழ்ந்தால் பிரச்சினை தீர வழி பிறக்கும்."

- "ஈழநாடு"

30.5.1969

## பெருமைக்குரியவர்

**"இலக்கியம் மக்கள் சமுதாயத்தின் நல்வாழ்வுக் கென உணர்ந்து கொள்ளும் காலம் வரும்போது எழுத்தாளர்கள் அத்தனைபேரும் ஒன்றிணையும் பொது அமைப்பு உருவாகலாம். கருத்து முரண்பாடு இலக்கிய அடிப்படையில், விமர்சன ரீதியாக அமைய வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்."**

*பேட்டியாளர் : செழியன் பேரின்ப நாயகம்*

*மட்டகளப்பு மத்திய கல்லூரியில் பயிலும் காலமது. ஒரு நாள் கல்லூரியின் விக்டோரியா மண்டப வாசலில் உட்கார்ந்து மட்டக்களப்பு வாவியில் பட்டுத் தெறித்து வீசும் தென்றலை நான் அனுபவித்துக் கொண்டிருந்தேன். அன்று மாலை 'இலக்கியச் சந்திப்பு' ஒன்று ஏற்பாடாகியுள்ளதாகச் செய்தி கிட்டியது. மகிழச்சியான செய்தி. நானும் அன்று மாலை அந்தச் சந்திப்பு நடக்குமிடம் நோக்கிச் செல்லுகிறேன். அன்றுதான், அங்குதான் ஈழத்தின் பிரபல எழுத்தாளர் டொமினிக் ஜீவா எனக்கு அறி முகமானார். கூடியிருந்த எழுத்தாளர்களுக்கு இந்த அறிமுகம் தேவையற்றதாயினும், என் போன்ற இலக்கிய தாகமுள்ள ஒரு கல்லூரி மாணவனுக்கு இந்த அறிமுகம் தேவையானதாக அமைந்தது.*

*ஜீவா ஈழத்து தமிழ் எழுத்தாளர்கள், அவர்களின் எதிர்காலம் பற்றியெல்லாம் பேசினார். ஜீவாவின் பேச்சும் அவர் சிந்தையும் ஈழத்து எழுத்தாளர்களின் வாழ்வில் தோய்ந்திருந்தது கண்டு உள்ளம் பூரித்தேன். அன்று பெரிய இலக்கியச் சண்டை நடந்ததென்றே சொல்வேன்.*

இந்நிகழ்ச்சியை நான் நினைவில் நிறுத்தி நண்பர்களுடன் பேசி மகிழ்வதில் தனி இன்பம் காண்பேன். திடீரென ஒரு நாள் எங்கள் வீட்டு வாசலில் நின்ற தபால் சேவகர் ஒரு தபாலை என்னிடம் நீட்டினார். பெற்று விரித்து பார்த்த போது 'தண்ணீரும் கண்ணீரும்' என்ற சிறுகதைத் தொகுப்பு நூல்! எழுத்தாளர் டொமினிக் ஜீவா அனுப்பி இருந்தார். 'தண்ணீரும் கண்ணீரும்' ஜீவத்துடிப்புள்ள சிறுகதைத் தொகுப்பு என்பேன். பல தடவைகள் கண்ணீரால் சொல்லும் அக்கதைகளைப் படித்துச் சுவைப்பதுடன் ஜீவாவின் எழுத்தாற்றலையும், கற்பனைத்திறனையும் எண்ணிப் பார்ப்பதுண்டு. இந்நூல்தான் பின்னர் சாஹித்திய மண்டலப் பரிசினையும் தட்டிக் கொண்டது.

முதல் தடவையாக இலக்கியக் கருத்தரங்கில் சந்தித்தேன். இரண்டாவது தடவையாக நூலில் சந்தித்தேன். என் உள்ளத்தில் நீங்காத இடம் பிடித்துக் கொண்ட இந்த எழுத்தாளரை நான் யாழ்ப்பாணம் போகும் வேளைகளிலெல்லாம் சுகம் கேட்டுவர மறப்பதில்லை. யாழ் நாடு இத்துணை பெரிய எழுத்தாளனை வைத்திருக்கிறது என்று எனக்கு ஒரு வித பெருமையும் எழுவதுண்டு.

நான் என் அலுவலக மேசையில் குனிந்து நிமிர்ந்து எழுது வதில் சிரத்தையுள்ளவனாக இருக்கிறேன். செய்தி ஒன்றை எழுதுவதில்தான் இத்துணைச் சிரத்தையும்! குனிந்து எழுதிக் கொண்டிருக்கிறேன். திடீரென என் மேசையில் மல்லிகை விழுகிறது, சட்டென்று நிமிர்கிறேன். என் எதிரே ஒருவர் நிற்கிறார். அவர் வேறுயாரு மல்ல, ஈழத்தின் பிரபல எழுத்தாளர் டொமினிக் ஜீவாதான்.

'செழி, உங்களுக்கொரு 'மல்லிகை' என்று முணுமுணுத்து நிற்கிறார். டொமினிக் ஜீவா என் முன்னே போட்டது மல்லிகைப் பூவையல்ல. மல்லிகை மணம் கமழும் சிறந்த கருத்துக் கருவூலங்களை உள்வைத்திருக்கும் அவருடைய 'மல்லிகை' கலை இலக்கிய மாத இதழைத்தான். எழுதிய செய்தியை ஒரு புறம் வைத்து ஜீவாவைப் பார்த்து உட்காரச் சொல்கிறேன். என் எதிரே சிரித்து நிற்பவரும் பார்த்த முகம். 'மல்லிகை' அட்டையை

அலங்கரிக்கும் படமும் பார்த்த முகம் ஆயிரத்து முந்நூற்றுக்கு மேலான தடவைகள் தமிழ் மக்கள் மேடையில் பார்த்த முகம் அட்டையை அலங்கரிப்பவர் வேறுயாருமல்ல; ஈழத்திற்குத் தனிப்புகழ் தேடித்தந்த நாடக மேதை நடிகமணி வைர முத்துவேதான். இவரைக் கலாநிதி வித்தியானந்தன் அவர்கள் சந்தித்த கதையும் உள்ளே புரட்டினால் பார்க்க முடிகிறது.

மல்லிகையின் முகப்பு அட்டையைப் பார்த்துவிட்டு, ஜீவாவின் முகத்தைப் பார்த்தேன். அவரின் முகத்தில் ஈழத்தில் தமிழ் எழுத்தாளர்களின் எதிர்கால சுபீட்சத்தின் எதிரொளி பளிச் சிட்டது.

"ஆடுதல் பாடுதல் சித்திரம் - கவி
யாதியினைய கலைகளில் - உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் - பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவர்"

என்ற கவிதை வரியொன்றும் என் கண்ணில் தைத்தது. இவ்வுணர்வுக்குள் தோய்ந்து நிற்கும் ஜீவா சமீபத்தில் தமிழகம் சென்று வந்தார் என்பதை நான் அறிவேன். இருபது ஆண்டு களாக எழுதியும் பேசியும் வரும் இந்த எழுத்தாளரிடம் பலவற்றைக் கேட்க வேண்டுமென்று எண்ணியிருந்தேன். ஆதலால் "ஜீவா அவர்களே, உங்களிடம் பல கேள்விகளைத் தொடுக்க விரும்புகிறேன். விடையிறுக்க விருப்பந்தானே" என்றேன். "கேள்வியை என் முன்னே நிறுத்துங்களேன்" என்றார்.

■ *ஈழத்தில் சமீபகால இலக்கிய விழிப்புப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? மக்கள் உங்கள் பக்கம் ஆதரவு காட்ட வில்லை. இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?*

இக்கரைக்கு அக்கரை பச்சை என்ற மனோபாவம். தேசிய உணர்வற்ற தன்மை. இந்நாட்டுப் படைப்பாளிகளின் தகுதிகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாத அறியாமை. இச்சூழ்நிலை கொஞ்சம் மாற்றம் பெற்று வருகிறது. இதற்கு உதாரணமாகச் சமீபகாலத்தில் நிறையப் புத்தகங்கள் வெளிவருகின்றன. தவிர, பல நல்ல இரசிகர்களும் இலக்கிய ஆதரவாளர்களும் இதய

பூர்வமான ஒத்துழைப்புத் தருகின்றனர். கூடிய சீக்கிரத்தில் நாம் நல்ல இலக்கிய வளர்ச்சிக்குரிய சூழ்நிலையை எதிர்பார்க்கலாம்.

கூட்டங்களும், சஞ்சிகை வெளியிடுதலும், நூல்வெளியிடுதலும் இணைந்து பிணைந்தால்தான் நமது இலக்கியப் போராட்டம் வெற்றி பெறுமென நினைக்கிறேன். தமிழ் நாட்டிலில்லாத ஒரு புதுமை இலங்கையில் உண்டு. சிறந்த எழுத்தாளன் சிறந்த பேச்சாளனாகவும் இருக்கிறான். பேச்சு, எழுத்து, கவிதை முத்துறையிலும் திறமைசாலிகள் இருக்கிறார்கள். இது புதுமை மட்டுமல்ல, நமக்குப் பெருமையுங்கூட.

இதனால் ஈழத்து எழுத்தாளன் தனித்து எழுத்தில் மட்டுமல்ல, தனது எழுத்துத் திறனைப் பேச்சின் மூலமும் மக்கள் மத்தியில் எடுத்துக் காட்டுகிறான். இப் பேச்சுத் திறனால் நாம் சமீபத்தில் பல இலாபங்களைப் பெற்றிருக்கிறோம். இலட்சக்கணக்கான தமிழ்மக்கள் எழுத்தாளனின் இதயக் குரலைப் புரிந்து கொள் வதற்கும், அவர்களது இலக்கிய நோக்கங்களை அறிந்து கொள் வதற்கும் இப்பேச்சு அரங்குகள் மிக்க உதவி செய்துள்ளன.

■ ஈழத்து இலக்கிய கர்த்தாக்களிடம் துடிப்பும் வேகமும் குறைந்திருக்கின்றன. சோர்ந்த நிலையில் காண்கின்றேன்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் இக்கூற்றை மறுக்கிறேன். ஏனெனில் வாரம் ஒரு தமிழ்ப் புத்தகம் வெளிவருகிறது. சிறுகதை, நாவல், ஓரங்க நாடகம், விஞ்ஞானத் துறை, சரித்திரத்துறை நூல்கள் பல வெளிவருகின்றன. அவை யெல்லாம் மக்கள் அரங்கின் முன் மதிப்புப் பெற்றன. இதுதவிர, வட பிரதேசத்திலுள்ள கல்லூரிகள், நூல் நிலையங்கள், சன சமூக நிலையங்களில் கிழமைதோறும் எழுத்தாளர்கள் தமது கருத்துகளைச் சொல்லி வருகிறார்கள். இதைவிடப் புதுமை என்னவென்றால், முன்னொரு காலத்தில் ஆலயங்களில் 'சின்ன மேளம்' ஒரு முக்கிய நிகழ்ச்சியாக இடம்பெற்றது. ஆனால் இன்றைய சமுதாய மாற்றத்தினால் ஆலயங்களில் நடக்கும் திருவிழாக்களில் முக்கிய நிகழ்ச்சியாகக் கவிஅரங்குகள் நடத்தப் படுகின்றன. இது ஒரு பெரிய இலக்கிய மாற்றம். சமீபத்தில்

நடந்து முடிந்த உள்ளூராட்சி வாரத்தில், உள்ளூராட்சி மன்றங்கள் எழுத்தாளர் நிகழ்ச்சிகளைச் சிறப்பு அம்சமாக்கி நடத்தின. இன்னொன்று புங்குடுதீவுப் பகுதியில் புங்குடுதீவில் பிறந்த எழுத்தாளர்கள் அத்தனை பேரையும் கௌரவித்திருக் கிறார்கள்.

■ *ஈழத்து எழுத்தாளர்கள் சர்ச்சைகளிலிருந்து விடுபட்டு பலம் பொருந்திய அமைப்பொன்றின் கீழ்ச் செயற் பட்டால், பெரும் பலன் கிட்டும் அல்லவா?*

கருத்து முரண்பாட்டினால் எழுத்தாளர்கள் முரண்பட்டுச் சர்ச்சைகள் செய்வதும், தங்கள் ஆக்கங்களைப் படைப்பதும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மிகத் தேவை. அதே சமயம் கருத்து முரண்பாடுகளைத் தனிப்பட்ட விரோத குரோதங்களாக எண்ணிச் செயற்படுவதும் அல்லது தனி மனிதர்களைத் திட்டு வதும் ஈழத்து இலக்கிய முயற்சிகளைக் கெடுத்துவிடும். எழுத்தா ளர்கள் அத்தனைபேரும் பொது அமைப்பில் ஒன்றிணைய வேண்டும் என்பதைப் பொறுத்த வரை, இந்த முரண்பாடுகளை மீறி, அந்தப் பொது அமைப்பு பரஸ்பரம் புரிந்து கொள்ளும் காலகட்டத்திலும், இலக்கியம் மக்கள் சமுதாயத்தின் நல்வாழ் விற்கு என உணர்ந்து கொள்ளும் காலம் வரும்போதும் அந்தப் பொது அமைப்பு உருவாகலாம். கருத்து முரண்பாடு இலக்கிய அடிப்படையில் விமர்சன ரீதியாக அமையவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

■ *நீங்கள் எழுதிய முதல் கதையின் பெயரென்ன? பத்திரி கையில் அது பிரசுரமானபோது என்ன செய்தீர்கள்?*

நான் முதலில் எழுதிய கதையின் பெயர் "எழுத்தாளன்" 'சுதந்திரனில்' பிரசுரமாகியது. இவ்வேளையில் சார்ல்ஸ் டிக்கன்ஸ் அனுபவம் எனது ஞாபகத்திற்கு வருகிறது. சார்ல்ஸ் டிக்கன்ஸின் கதையைப் பிரசுரிப்பதெனத் தீர்மானித்த செய்திகூறும் "போஸ்ட்கார்ட்" ஒன்று அவருக்கு அனுப்பி வைக்கப் பட்டதாம். சார்ல்ஸ் என்ன செய்தார் தெரியுமா? "போஸ்ட்கார்ட்டை"த் தூக்கிக் கொண்டு லண்டன் மாநகரை ஓர் இரவு முழுவதும் ஒரு

நண்பரைத் தேடி இச் செய்தியைச் சொல்ல அலைந்தாராம். நான் இப்படி யாழ்ப்பாண மாநகர் முழுவதும் திரியாவிட்டாலும் நானும் ஓர் எழுத்தாளன் என்பதில் ஏற்பட்ட மகிழ்ச்சியால் அன்றிரவு தூக்கமே வரவில்லை. படுக்கையில் தவித்தேன்.

■ *நீங்கள் வெளியிட்டுள்ள சிறுகதைத் தொகுப்புகள் பற்றி குறிப்புத் தர முடியுமா?*

மூன்று சிறுகதைத் தொகுதிகள் இதுவரை வெளிவந்துள்ளன. "தண்ணீரும் கண்ணீரும்" பதினொரு கதைகளைக் கொண்ட தொகுப்பு. 1960ம் ஆண்டு சாஹித்திய மண்டலப் பரிசில் பெற்ற நூல் அது. 'பாதுகை' பதினொரு கதைகளைக் கொண்டது. மற்றது 'சாலையின் திருப்பம்' பத்துக் கதைகளைத் தொகுத்தது.

என் கதைகளில் பல பிராக்கில் உள்ள செக்கோஸ்லோவாகிய சர்வகலாசாலையில் டாக்டர் கமில் சுவலபில் அவர்களால் செக்மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. இன்னும் பல கதைகள் "தண்ணீரும் கண்ணீரும்" 'பாதுகை' 'சாலையின் திருப்பம்' போன்ற கதைத் தொகுப்புகளிலிருந்து ரஷ்ய மொழியில் பெயர்க்கப் பட்டுள்ளன. இவற்றுள் சில கதைகள் சிறந்த மொழிபெயர்ப் பாளரான நண்பர் ஏ.ஜே. கனகரத்தினாவினால் மொழிபெயர்க் கப்பட்டு 'ஒப்சேவர்' 'சண்டே டைம்ஸ்' இதழ்களில் வெளிவந் துள்ளன.

'வெண்புறா' என்னும் ஒரு கதை 'மஞ்சரி'யில் மறுபிரசுரம் செய்யப்பட்டது. சென்னை 'ஹிந்து' பத்திரிகை இத்தொகுதியைப் பாராட்டி ஒரு நீண்ட விமர்சனம் எழுதியுள்ளது. அழகுசுப் பிரமணியம் அவர்கள் இக்கதைகளில் ஆலோசனைகளும் கூறியுள்ளார். என்னை பாராட்டி நீண்ட கடிதமும் எழுதியுள்ளார்.

■ *ஈழத்தின் பிரபல எழுத்தாளர் அ. ந. கந்தசாமி அவர்களை நீங்கள் முதல் தடவையாக எப்படிச் சந்தித்தீர்கள்?*

சில நண்பர்கள் சேர்ந்து இலக்கிய சர்ச்சையில் ஈடுபட்டி ருந்த காலம். எங்களுக்குள் சர்ச்சை செய்வோம். ஒரு தெளிவான இலக்கிய அல்லது ஆழமான இலக்கிய அறிவோ இல்லாத

காலமது. அக்கால கட்டத்தில்தான் அ. ந. க. எனக்கு அறிமுகமானார். ஏதோ ஓர் ஆவேச உணர்ச்சியில்தான் அப்பொழுது எழுதத் தொடங்கினேன். சமுதாயத்தில் என்னைப் போன்றவர்களுக்குக் கிடைத்த வேதனையான அநுபவங்கள் எங்களுடைய அன்றைய எழுத்துக்கு பசளையாக அமைந்தன. அதிலிருந்து ஓரளவு கற்றுக் கொண்டோம். எழுத்தாளன் என்பவன் வெறும் பேனா பிடிப்பவன் மட்டுமல்ல. சமுதாயப் போராட்டக்காரனுமாவான். எழுத்தாளனுக்குச் சமுதாயக் கடமைகள் உண்டு. அந்த அனுபவம் கற்றுத் தந்த பாடமிது. எனவேதான் என்றும் பாதை தவறாமல், மயக்கமடையாமல், எவ்வித ஊசலாட்டமும் இல்லாமல் நாங்கள் தொடர்ந்து வந்த பாதையில் இன்றும் நடக்கக் கூடியதாக இருக்கிறது.

■ *அ. ந. க. வுடன் மறக்கமுடியாத நிகழ்ச்சி ஒன்றைக் கூற முடியுமா?*

அ. ந. க. வின் ஆரம்பக்காலத் தொடர்புகள் எனக்கொரு அரசியல் அறிமுகமாகவே கிடைத்தன. அவரை எனக்கு அறிமுகப்படுத்தியவர் திரு. ஆர். ஆர். பூபாலசிங்கமாவார். 'கவீந்திரன்' என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதிக் கொண்டிருந்த காலத்தில் இலக்கிய நண்பனாக அறிமுகமானார். எனது வீட்டிற்கு பக்கத்தில் அவர் தங்குவதற்கான ஓர் அறையை எடுத்திருந்தார். அக்காலத்திலேயே நடுநிசிவரைக்கும் இருவரும் இலக்கியச் சண்டை பிடித்திருக்கிறோம். இன்றும் இந்த அற்புத மனிதனை நினைத்துப் பார்க்கிறேன். சரியான இலக்கியப் பாதையைச் செப்பனிட்டுத் தந்தவர் திரு. அ. ந. கந்தசாமிதான்.

நிரம்பவும் உணர்ச்சி வசப்பட்டவர். சாதிக் கொடுமையைச் சாடுவதில் அந்தக் காலத்திலேயே மிக்க வேகம் காட்டியவர். கவிதைகளையும் பேச்சுக்களையும் சாதிக் கொடுமைகளைச் சாடிச் செய்தவர்! வளர்ந்து வரும் எழுத்தாளர் பரம்பரைக்கு உற்சாகமும் ஊக்கமுந் தரத்தக்கவர்களில் முதன்மையாக நின்றவர் அவர்.

நாற்பது நாற்பத்திரண்டாம் ஆண்டுக்குள் உட்பட்ட காலமென நினைக்கிறேன். யாழ்ப்பாணத்தில் தொடங்கிய மறுமலர்ச்சி

இலக்கியக் குழுவில் மிக முக்கிய பங்கெடுத்து உழைத்தவர்களில் அ.ந.க. முக்கியமானவராவர். இந்த அருட்டுணர்வுகள்தான் எம்மைப் போன்ற இளம் உள்ளங்களுக்கும் ஒரு புதிய உணர்வைத் தந்தன. எனவே யாழ்ப்பாணத்தில் பொதுவாக இலக்கிய வளர்ச்சிக்கு அ.ந.க. பெரும் பங்கைச் செலுத்தினார். கடைசியாக நான் அவரைக் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இறப்பதற்குப் பத்துத் தினங்களுக்கு முன்னர் சந்தித்தேன்.

அன்று நான் ஆத்ம சாந்தி பெற்றேன். 'மல்லிகை'யில் அவரது படத்தை அட்டையில் பிரசுரித்து, அதை நான் அவரைச் சந்தித்தபோது கொடுத்தேன். 'மல்லிகை'யில் அவரைப்பற்றி எழுதிய வாசகங்களை என்னைப் படிக்குமாறு சொன்னார். படித்துக் காட்டினேன். இந்த நிகழ்ச்சியை என்னால் மறக்கமுடியாது. மரணப் படுக்கையிலும் 'நான் ஓர் எழுத்தாளன்' என்ற பெருமிதம் அவர் முகத்தில் சுடர்விட்டது.

■ *தமிழக எழுத்தாளர்கள் மத்தியில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் பற்றிய நினைப்பு என்ன என்று கூறுவீர்களா?*

வளர்ந்து வரும் புதிய தலைமுறை எழுத்தாளர்கள் ஈழத்து எழுத்தாளர்களிடம் மிக்க மதிப்பு வைத்திருக்கின்றனர். ஈழத்து எழுத்தாளர்கள் திட்டவட்டமான ஓர் இலக்கியப் பார்வை கொண்டவர்கள் என்பது அவர்களுடைய கணிப்பு. 'சரஸ்வதி' காலத்திலிருந்து இன்றைய 'தாமரை' 'கண்ணதாசன்' சஞ்சிகைகளில் எழுதிவரும் எழுத்தாளர்கள், இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள்.

மற்றொரு சாரார் பிரபல எழுத்தாளர்களாக ஜனரஞ்சகமாகக் கணிக்கப் படுபவர்கள். இவர்களுக்குப் பொதுவாகவே ஈழத்தைப் பற்றி எவ்வித இலக்கிய அக்கறையும் இல்லை. நமது நாட்டைப் பற்றி மட்டுமல்ல, தமது நாட்டில் இருக்கக் கூடிய எழுத்தாளர்களைப் பற்றியே ஒன்றுமே தெரியாதவர்களும் அது பற்றி அக்கறை கொள்ளாதவர்களுமாக இருக்கிறார்கள்.

நாம் எப்படித் தமிழகத்தின் புதிய பரம்பரையைத் தெரிந்து வைத்திருக்கிறோமோ, அதைப்போலவே அந்தப் புதிய பரம்பரையினரும் நமது தகுதிவாய்ந்த படைப்பாளிகள் பற்றித் தெரிந்து வைத்திருக்கின்றனர். இதில் ஒரு சங்கடமிருக்கிறது. தமிழகத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் சஞ்சிகை புத்தக வாய்ப்புக்கள் இங்கிருந்து அவர்களுக்குக் கிடைப்பதில்லை. எனவே சொந்த முயற்சியின் மூலமாவது அவர்களை இனங்கண்டு தொடர்புகளைப் பலப்படுத்துவது இந்த நாட்டு இலக்கிய வளர்ச்சிக்கு இன்றியமையாத தொன்று.

■ *இரு நாடுகளுக்கு மிடையிலான இலக்கிய முயற்சிகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

பலர் உடன்பாடு உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இன்னும் பலர் நமது பிரச்சினை என்ன வென்று புரிந்து கொள்ளாதிருக்கிறார்கள். சிலர் நினைக்கிறார்கள், தமிழகத்துப் பிரபல சஞ்சிகைகளில் ஈழத்து எழுத்தாளர்களுடைய எழுத்துக்கள் வராததினால் கோபம் கொண்டுள்ளார்கள் என்று. இது வெறும் தப்பான அபிப்பிராயம். நான் தமிழகத்தில் இலக்கியக் கூட்டமொன்றில் சொன்னதைப்போல, ஈழத்து எழுத்தாளன் தமிழகத்து சஞ்சிகைகளில் எழுதி, தன்னைத் தரமற்றவனாக்கிக் கொள்ள என்றுமே முனையமாட்டான் என்பதிலிருந்து நாங்கள் தரமான இலக்கியப் போராட்டம் நடத்துகிறோமே தவிர தமிழகத்துச் சஞ்சிகைகளில் இடம் பிடிப்பதற்குக் காவடி தூக்குவதல்ல நமது நோக்கம் என்பது தெளிவு.

■ *ஈழத்து எழுத்தாளர்கள் கையாளும் தமிழ் தமிழகத்துக்குப் புரியாது. அதனால்தான் கதைகளைப் பிரசுரிக்க முடியாதிருக்கிறது என்கிறார்களே? இதைச் சற்று விளக்க முடியுமா?*

புதுமைப் பித்தனின் திருநெல்வேலித் தமிழும், ஜானகிராமனின் தஞ்சாவூர்த் தமிழும், ஜெயகாந்தனின் சென்னை கொச்சைத் தமிழும் இந்த நாட்டு இரசிகனுக்கு அல்லது நமக்குப் புரிகிறது. ஏனெனில் நமக்கு இலக்கியப் பொறுப்பி

ருக்கிறது, ஆனால் நமது தமிழ் அவர்களுக்குப் புரியவில்லையாம். அவர்களுக்குப் 'புரியாததினால்' நமது தேசத்துக்கு மிகப் பெரிய நஷ்டமொன்றும் வந்துவிடப் போவதில்லை.

■ எழுத்தாளர் ஜெயகாந்தன் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

சமீபகால ஜெயகாந்தனுக்காக நான் அனுதாபப்படுகிறேன். பாதை தவறி, சறுக்கிக் கொண்டு, தடம் புரண்டு போகும் அவர், தமது சறுக்கலுக்கே ஒரு தத்துவ முலாம் பூச இன்று முயன்று வருகிறார். அவரது 'ஞானரதம்' மாத இதழை நான் சமீபத்தில் படித்துப் பார்த்தேன். 'விகடனில்' தகழி சிவசங்கரம்பிள்ளையின் பேட்டிக் கட்டுரையையும் நான் ஊன்றிப் படித்தேன். சில மாதங்களுக்கு முன் தமிழகம் சென்றிருந்த பொழுது அவருடன் நேரில் பல பிரச்சினைகள் பற்றிப் பேசியிருக்கிறேன். இவை சகலவற்றையும் தொகுத்துப் பார்க்கும் பொழுது, 'சரஸ்வதி' காலத்து ஜெயகாந்தன் மிக வேகமாகவே தன்னைத் தானே சீரணித்துக் கொண்டு வருகிறார் எனத் தோன்றுகிறது. மக்கள் மத்தியிலிருந்து தோன்றிய ஒரு திறமைசாலியான எழுத்தாளர் ஜெயகாந்தன் இன்று தன்னைப் பிரமுகர் வரிசையில் உயர்த்திக் கொண்டு விட்டார். தொடர்ந்து ஒரு நட்சத்திரப் பதவிக்குத் தன்னைத் தயார்ப்படுத்துகிறாரோ என்ற சந்தேகம் எனக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

எழுத்தாளன் மீனைப் போன்றவன். மக்கள் சமுதாயம் என்பது கடல். மக்கள் சமுதாயத்தின் தொடர்பற்ற எழுத்தாளன் காலகதியில் கடலிலிருந்து கரையில் வீசப்பட்ட மீனைப்போல மக்கி மடிந்து போவது திண்ணம். ஜெயகாந்தனும் மக்கள் சமுதாயத்திலிருந்து தினசரி தன்னைத் தனிமைப் படுத்திக் கொண்டுவருவதைக் கூர்ந்து கவனிக்கலாம். சமீபத்தில் அவரது படைப்புக்களும் மேடைக் கருத்துக்களும் இதைத்தான் நிரூபிக்கின்றன.

"தினகரன்"

22.02.1970

## சாஹித்திய மண்டல உறுப்பினர்

**காலம் வரும். அந்நாளில் இன்று துச்சமாக மதிக்கப்படும் இந்நாட்டுத் தொழிலாள, விவசாய வர்க்கப் புத்திரர்களே இந்த நாட்டின் கலை இலக்கியங்களைச் சிருஷ்டிப்பார்கள்.**

(ஶ்ரீலங்கா சாஹித்திய மண்டல உறுப்பினர் டொமினிக் ஜீவாவை பாமா இராஜகோபால் கண்ட பேட்டி)

*"காலம் வரும். அந்நாளில் இன்று துச்சமாக மதிக்கப்படும் இந்நாட்டுத் தொழிலாள விவசாய வர்க்கப் புத்திரர்களே இந்த நாட்டின் கலை இலக்கியங்களைச் சிருஷ்டிப்பார்கள்" என்று தெளிவாக, வலுவாக, அழுத்தந்திருத்தமாக ஈழத்து இலக்கிய சிருஷ்டிகர்த்தா டொமினிக் ஜீவா கூறிய போதெல்லாம், இடித்து இடித்து எழுதியபோதெல்லாம் நையாண்டி பண்ணிச் சிரித்துப் புலம்பியிருக்கிறார்கள்.*

*ஆனால் ஈழத்து இலக்கியப் புதுப்பாதை வகுக்க கடந்த இருபத்தைந்து ஆண்டு காலம் அவர் உழைத்த ஓயாத உழைப்புக்குப் பலனளிக்கும் காலம் இப்போது ஆரம்பித்து விட்டது.*

*பண்டிதர்களும், பட்டதாரிகளும், உயர் வகுப்பு மக்களும் தான் இந்நாட்டின் இலக்கியத்தை 'எடை' போடும் ஏகபோக உரிமையுள்ளவர்கள் என்ற மரபு முதல் தடவையாக உடைக்கப் பட்டிருக்கிறது.*

*கலையும் இலக்கியமும் யார் கைக்கு மாறவேண்டுமென்று 'முற் போக்கு எழுத்தாளர்கள்' கனவு கண்டார்களோ அந்தக் கனவின் முதல் அத்தியாயம் புறப்பட்டுவிட்டது.*

அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளைத் தொட்டு, கண்ணெதிரே காணும் வாழ்க்கைப் போராட்டங் களைப் படம் பிடித்துக் காட்டி வாழ்க்கையோடு ஒன்றிணைந்த இலக்கியங்களைச் சிருஷ்டித்த படைப்பாளியான பாட்டாளி டொமினிக் ஜீவாவை ஸ்ரீலங்கா சாஹித்திய மண்டலத்தின் தமிழ் இலக்கியக் குழு அங்கத்தவராக 'மக்கள் அரசு' நியமித்துள்ளது, உழைக்கும் வர்க்கத்துக்குக் கிடைத்துள்ள ஒரு மதிப்பு என்று கொள்ளலாம்.

1960ல் 'தண்ணீரும் கண்ணீரும்' என்ற தனது சிறுகதைத் தொகுப்புக்கு சாஹித்ய மண்டலத்தின் பரிசைப் பெற்ற ஜீவா 1970ல் சாஹித்ய மண்டல அங்கத்தவராகவே ஆகிவிட்டார்.

இலக்கிய தாகம் மட்டுமல்ல, இயன்றதைப் பிறந்த மண்ணுக் கும் வாழும் சமூகத்துக்கும் செய்து விடவேண்டும் என்ற விடாப்பிடியான போக்கு ஜீவாவின் நாடித்துடிப்பு! செய்ய முடியாது என்று பலர் சலித்த வேலைகளை ஏன் செய்ய முடியாது என்ற கேள்வியுடன் தொடர்பவர் அவர்.

ஈழத்து இலக்கிய வளர்ச்சி அவர் மூச்சு. மேடையில் ஏறினாலும் கையில் பேனா ஏறினாலும் ஓடும் சொற்கள், இதைச் சுற்றியே ஓடும்.

ஈழத்தில் திறமைசாலிகள் இருக்கிறார்கள் என்று அறிமுகப் படுத்திக் கொண்டிருப்பதில் தன்னை மறந்து இன்பம் காணும் பெருநோக்குக் கொண்டவர் ஜீவா.

கஷ்டத்தையும் நஷ்டத்தையும் பற்றிச் சிந்தித்துப் பார்க்காது ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு உழைக்கிறார். மாதம் ஒரு முறை மலரும் அவரது சஞ்சிகை 'மல்லிகை'யை வெளியே கொண்டு வருவதற்கு அவர் தினமும் அங்கு மிங்குமாக ஓடித் திரிவதையும், மண்டையைப் போட்டு உடைப்பதையும் அவரை அறிந்தவரே அறிவார்கள்.

ஈழத்தில் எழுதும் திறன் படைத்த எல்லோருக்கும் சந்தர்ப்பங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்பது அவரது இதயத்துப் பேராசை.

ஈழத்து கலை இலக்கியப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்த வர்களை ஜீவா மனம் திறந்து பாராட்டுகிறார். 'மல்லிகை' அட்டையில் முகப்புப்படம் போட்டு கௌரவிக்கிறார்.

"இங்கு புதையல் இருக்க நாம் எங்கெல்லாமோ தேடி அலை கிறோமே!" இது ஜீவா அதிகமாக உபயோகிக்கும் வார்த்தைகள். இங்கு இருக்கும் புதையல்களை நாம் சரியாகப் பயன் படுத்த வேண்டும். இது அவர் நோக்கம்.

கால் நடை அல்லது ஒரு பழைய சைக்கிள்-வேகமான போக்குவரத்துக்கும் அவர் பாவிப்பவை இவைதான்.

தனக்கென ஒரு கொள்கையை வைத்துக்கொண்டாலும் மற்றவர்கள் கருத்துக்கு மதிப்புக் கொடுக்கும் உயர்ந்த பண்பு கொண்டவர் ஜீவா. கருத்து முரண்பாடான இடத்தில் கூட சமாதானம் நிலைக்க வேண்டுமென்ற கருத்துடையவர் அவர்!

*பாமா:* *ஸ்ரீலங்கா சாஹித்திய மண்டலத்தில் இனிமேல் மாற்றத்தை எதிர்பார்க்கலாமா?*

*ஜீவா:* நிச்சயமாக! பெரிய மாற்றங்களை எதிர்பார்க்கலாம். கடந்த பல வருடங்களாக சாஹித்திய மண்டலத்துக்கென ஒதுக்கப்பட்டு வந்த பணமெல்லாம் முடக்கப் பட்டு, தகுந்தபடி பயன்படவில்லை. அங்கம் வகித்தவர்கள் 'மிச்சம் பிடித்து' அரசாங்கத்திடம் 'நல்ல பிள்ளை பெயர்' வாங்கப் பார்த்தார்கள். படைப்பாளிகள் யாரோ இருக்க அங்கம் வகித்தவர்கள் படைப்பாளிகள் அல்லாத வேறு யாரோவாக இருந்ததே இதற்கு காரணம். இப்போது படைப்பாளிகளே அங்கத்தவர்களாக இருப்பதால், முன்னர் போல் சிருஷ்டிகர்த்தாக்களுக்கும் அங்கத்தவர்களுக்கு மிடையே இருந்து வந்த உறவற்ற நிலைமை இனிமேல் இருக்காது. அத்துடன் படைப்பாளிகளின் கஷ்ட நஷ்டத்தை உணர்ந்தவர்கள் நாம். புத்தகம் போட்டு அதனால் வந்த கஷ்ட நஷ்டத்தை அனுபவித்தவர்கள் நாம்; ஆகையால் எழுத்தாளர்களுக்கு செய்து கொடுக்கக் கூடிய

வசதிகளை எல்லாம் செய்து கொடுப்பதற்கு முயற்சிப்போம்.

பாமா:சாஹித்திய மண்டல அமைப்பு விதிகளில் மாற்றம் ஏற்படுமா?

ஜீவா: பொது அமைப்பு விதிகளில் மாற்றம் ஏற்படாது. ஆனால் நிறுவன இயக்கத்துக்கு புதிய புதிய உருவம் கொடுத்து சாதனைகள் உருவாக்கப்படும். முன்னைய முழு பரிசு கொடுப்பதற்கு மட்டும் இருந்தது. இந்த பரிசு கொடுப் பனவுகளால் 'பல பரிசு கேடுகள்" ஏற்படுகின்றன. நாம் இந்தப் பரிசு கொடுக்கும் குழுவாக மட்டும் இயங்காமல், படைப்பாளிகளை பலவகையிலும் உற்சாகப்படுத்தும் திட்டங்கள் வகுக்கப்படவுள்ளன. மேலும், எனது இலக்கிய குழுவின் முக்கிய குறிக்கோள்களாவன பின்வருமாறு:

- தேசிய இலக்கிய பாரம்பரியத்தை கட்டி எழுப்புவது
- எழுத்தாளர்களுக்குப் போதிய பொருளாதார வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது.
- பரஸ்பரம் ஒவ்வொரு எழுத்தாளரிடையேயும் உறவை ஏற்படுத்துவது.
- சிங்கள சிருஷ்டிகளைத் தமிழிலும், தமிழ்ச் சிருஷ்டிகளைச் சிங்களத்திலும் பிரசுரமாக்க வாய்ப்பையும் வசதியையும் உருவாக்குவது.

பாமா: எப்படியான இலக்கியங்களைச் சாஹித்திய மண்டலம் வரவேற்கும்.

ஜீவா: நாடு அங்கீகரித்த கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு தேசிய ஒற்றுமையை வளர்ப்பதற்கான இலக் கியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். அதே நேரத்தில் எந்தவித கோஷ்டி மனப்பான்மைக்கும், குறுகிய சில்லறை இலாபங்களைப் பெறக்கூடியதான நோக்கங் களுக்கும் எதிராக நிற்போம். மனித வாழ்க்கைக்கேற்ற எந்த

நல்ல இலக்கியத்தையும் வரவேற்போம். அதே நேரத்தில் இலக்கியத்தின் பெயரால் வருகின்ற எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ள இயலாது. உதாரணமாக சாதி அமைப்பு முறை இருக்கத்தான் வேண்டும் என்றும் அது முற்றாக மனிதகுலம் அங்கீகரித்த கொள்கைதான் என்றும் கூறிக் கொண்டு அதற்கிடையே வரும் இலக்கியத்தை ஏற்றுக் கொள்ள முடியுமா? 'தேன் நிலவு' இலக்கியங்கள் முற்றாக நிராகரிக்கப்படும். அதேவேளையில் சில்லறை அரசியல் நோக்கக் கதைகளும், வகுப்புவாதப் படைப்புக்களும் நிராகரிக்கப்படும்.

பாமா: சாஹித்திய மண்டலத்தில் இப்போது ஏற்பட்டுள்ள மாற்றத்தினால் திருப்தியடைந்துள்ளீர்கள்?

ஜீவா: பெரிய வெற்றியோ, அன்றி முழு வெற்றியோ என்று கூற முடியாது, இது ஒரு சிறிய தாவல், நமது பாதையில் முதல் வெற்றி கிடைத்திருக்கிறது. நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். நாம் ஏதும் தவறு செய்தால், அந்தத் தவறு இலக்கியத்தின் மீதுள்ள பாசத்தினால் செய்வோமே தவிர வேறு எக்காரணத்தினாலும் எந்தத் தவற்றையும் செய்ய மாட்டோம். எழுத்தாளர்களும் மிகவும் விழிப்பாக இருந்து, தமது நன்மைக்காக பயன்படுத்தத் தகுந்த ஆலோசனை களைக் கூறிக்கொண்டிருக்க வேண்டும்.

பாமா: ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றி ஏதாவது சொல்ல முடியுமா?

ஜீவா: எமது எழுத்தாளர்கள் கற்பனாலோக எழுத்தாளர் களில்லை என்பதை சிறிய படைப்புக்களுமே அறிவு றுத்தக் கூடியனவாக இருக்கின்றன. இங்குள்ள எழுத் தாளர்கள் அடிக்கடி சந்தித்து கருத்துப் பரிமாறிக் கொள் வதானால் நல்ல இலக்கியங்களைப் படைக்க முடிகிறது.

பாமா: வேறு என்ன தகவல்களை இப்போது உங்களிடமிருந்து அறிந்து கொள்ளலாம்?

ஜீவா: நல்ல சிங்களச் சிறுகதைகள் 70, 80க்கு மேல் தமிழில்

மொழிபெயர்த்து பிரசுரிக்கப்பட்டுள்ளன. ஆனால் நல்ல தமிழ்ச் சிறுகதைகள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப் படுவதாகத் தெரியவில்லை, இந்தக் குறையை தீர்ப்பதற்குப் பிரபல சிங்களச் சிறுகதை ஆசிரியர்கள் பலருடன் பேசியுள்ளேன். ஆறு சிங்களச் சிறுகதைகள் ஆறு தமிழ் சிறு கதைகள் கொண்ட சிறுகதைத் தொகுப்பு ஒன்று விரைவில் சோஷலிச நாடொன்றில் வெளியிட மக்கள் எழுத்தாளர் குழு துரிதமாக வேலை செய்து கொண்டிருக்கிறது.

பாமா: இந்த சாஹித்திய மண்டல உறுப்பினர் பதவி கிடைத்த பின்னர் ஏற்பட்ட வரவேற்பு பற்றிக் கூறமுடியுமா?

ஜீவா: பொதுவாக என்னைத் தெரிந்தவர்கள் நேர்முகமாகச் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள். கடிதம் தந்தி மூலமும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். சில ஸ்தாபனங்கள் வரவேற்பு வைப்பதற்கு ஒழுங்குகள் செய்து கொண்டிருக்கின்றன. மிக நெருங்கிய நண்பர் ஒருவர் என்னைச் சந்தித்து, "இது யாழ்ப்பாணத்துக்குப் பெருமையடாப்பா" என்றார். ஆனால் இந்தப் புகழ்ச்சி, இகழ்ச்சி அல்ல பெரிது. எதிர்காலக் குறிக்கோள், அதாவது உண்மையான தனித்துவமான இலக்கியத்தை நமது பாரம்பரியத்துக்கு விட்டுச்செல்ல வேண்டும். ஈழத்துத் தமிழ் இலக்கியத்துக்கு தனிப் பாரம்பரியம் உண்டு. இப்படி சொல்வதானால், மற்றைய நாட்டு இலக்கியங்களுக்கு எதிரிகள் என்பதல்ல கருத்து. வருங்காலச் சந்ததி நமது தேசிய இலக்கிய பாரம்பரியத்தை நினைவு கூருமானால் அதுவே என்னைப் போன்றவர் களுக்குப் போதுமானதாகும். கடந்த இருபத்தைந்து ஆண்டுகாலத்தில் நான் ஏதோ என்னாலானதைச் செய்திருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் இந்த நாட்டு மக்களின் அன்பும் ஒத்துழைப்புந்தான். பரிசுகள் எல்லாம் அதற்கு அப்புறந்தான்.

'ஈழநாடு'
12.12.1970

## மக்கள் எழுத்தாளன்

**மனிதகுலத்தின் பரிணாம வளர்ச்சியை, அதன் வர்க்க உறவுகளை, முரண்பாடுகளை கலைஞர்களுக் குத் தெட்டத் தெளிவாக விளங்க வைப்பது சோஷலிஸம். எனவே கலைஞன் எனப்படுபவன் விஞ்ஞான சோஷலிஸ ஆய்வுக் கருத்துக்களைக் கருத்தூன்றிப் படித்தறிய வேண்டும், இல்லையேல் இந்த இருபதாம் நூற்றாண்டில் அவனது சிந்தனை பூரணப்பட்டதாக அமையாது.**

(முற்போக்கு வாலிபர் சங்கங்களின் இலக்கிய உறுப்பினர்களின் மகா நாட்டில் வாசிக்கப்பெற்ற கட்டுரை)

*தான் வாழும் காலத்தின் உணர்ச்சிகளை, சமுதாய நிலைமை களை, அரசியல் மாற்றங்களை, ஏன் அயோக்கியத் தனங்களைக் கூடக் கவனத்திலெடுத்து, நாட்டு மக்களின் அபிலாஷைகளையும் விருப்பு வெறுப்புக்களையும் யதார்த்த ரீதியாக உற்றுப் பார்த்து, அதைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு, அதனுள்ளே புதைந்து போய் கிடக்கும் எதிர்காலச் சுபீட்சத்துக்கான கருவை இனங்கண்டு, அதை வளர்த்து வளம் படுத்தித் தனது தனித்து வப் பார்வையுடன் மெருகூட்டிய படைப்பைத் தனக்குத் தந்துதவிய மக்களுக்கே திருப்பிப் படைப்பதுதான் ஒரு மக்கள் எழுத்தாளனுடைய தொழில். உண்மை எழுத்தாளன் ஒரு தீர்க்க தரிசி. எக்காலத்தின் கருத்துக்கும் தாக்குப் பிடிக்கக்கூடிய உள்ள டக்கமும் உருவமும் கொண்ட சிருஷ்டிகளை உருவாக்கும் கலைஞனே காலக்கிரமத்தில் மறக்கப்படாமல் வாழ்வான்.*

*உண்மையான கலைஞன் என்றால் அவன் வாழ்வின் உண்மை களை ஆழமாக உணர்ந்திருக்க வேண்டும். தான் சித்திரிக்க*

அல்லது படைக்க விரும்பும் விஷயங்களில் மிகுந்த ஈடுபாடும் தகுந்த அறிவும் பெற்றிருக்க வேண்டும். மனித குலத்தின் பரிணாம வளர்ச்சியை, அதன் வர்க்க உறவுகளை, முரண்பாடுகளை கலைஞர்களுக்குத் தெட்டத் தெளிவாக விளங்க வைப்பது சோஷலிஸம். எனவே கலைஞன் எனப்படுபவன் விஞ்ஞான சோஷலிஸ ஆய்வுக் கருத்துக்களைக் கருத்தூன்றிப் படித்தறிய வேண்டும். இல்லையேல் இந்த இருபதாம் நூற்றாண்டில் அவனது சிந்தனை பூரணப்பட்டதாக அமையாது.

கலைக்கொரு நோக்கம் உண்டு. மனிதனின் அறிவையும், இதயத்தையும், வாழ்வையும் செழுமைப் படுத்துவதில் அதற்குப் பெரும் பங்குண்டு. சந்தர்ப்பவாதிகள் இலக்கியப் பாசாங்குக் காரர்கள் மக்களை மாட்டு மந்தைகளாக எண்ணும் ஒரு சில புகழ்தேடிகள் பொழுது போக்குக்காகவே இலக்கியம் என மயக்கமூட்ட முனைந்து செயற்படுகின்றனர். சாதாரண மக்களால் இந்த நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள அரசியல் மாற்றத்தைக் கொச்சைப் படுத்த இலக்கியத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்த முனைந்து வருகின்றனர். முற்போக்கு எழுத்தாளர்களாகிய நாம் மிகமிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். முற்போக்கு என்று சொல்வது வெறும் சொற்றொடர் அல்ல. அது சமுதாய உணர்வை எதார்த்த கோணத்தில் சித்திரித்து, சமூகத்தின் தத்து வார்த்த பரிணாம வளர்ச்சியைச் சுட்டிக் காட்டுவதுடன் தொடர்ந்து முன் செல்லத் தூண்டும் தாரக மந்திரமே. நமது நாட்டில் இலக்கியம் மாத்திரமல்ல, இன்னும் எத்தனையோ பிரச்சினைகள் உள்ளன. ஆகவே இலக்கியப் பிரச்சினையைத் தவிர வேறு எந்தச் சமுதாய அரசியல் சிக்கல்கள் பற்றிப்பேசவோ, எழுதவோ, அல்லது சிந்திக்கவோ மாட்டேனென மறுக்கும் ஓர் எழுத்தாளன் நல்லெண்ணமுள்ளவனாக இருந்தபோதிலும் நடை முறையில், முடிவில் அவன் பிற்போக்கு வாதிகளின் கைக்கருவி யாகவே செயற்படத் தொடங்கிவிடுவான். அதே சமயம் கலைஞன் தனது படைப்பை வெறும் அரசியல் பிரசார சாதனமாக மாற்றிவிடுவதும் சரியானதல்ல. அது கலையைச் சாகடித்துவிடும். எனவே வேறெவர்களையும்விட கலைஞனின் கடமை மிகமிகப் பொறுப்பு வாய்ந்தது; பெறுமதி மிக்கது.

நாட்டில் புதிய மாற்றங்களுக்கிடையில் புதிய பரம்பரையைச் சேர்ந்த இளைஞர்கள் முன்னால் பல கேள்விகள் எழுப்பப் படலாம். முடிவில் இளைஞர்கள் ஒரேயொரு கேள்விக்குத்தான் பதில் சொல்ல வேண்டும். எந்தக் கலை, இலக்கியம் மக்களுக்கு வேண்டும்? என்பதுதான் அந்தக் கேள்வி. எந்தக் கலை அல்லது இலக்கியம் மனிதனின் மனிதத்துத்துவத்தைப் பூரணப்படுத்த வழி செய்கின்றதோ, கொடுமை, அநியாயம், அக்கிரமம், சுரண்டல், வறுமை, அறியாமை போன்ற கொடுங்கோன்மைப் பிடிக ளிலிருந்து விடுபடுவதற்கு நெறிப்படுத்துகின்றதோ, பரிபூரண வாழ்வு வாழ அவனைப் பண்படுத்துகின்றதோ அந்தக் கலையும், இலக்கியமும்தான் இனிமேல் வரக்கூடிய ஒரு சோஷலிஸ சமூக அமைப்பிலும் வாழும், புகழ் பெறும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

போராடும் இரு இலக்கிய சித்தாந்தங்களின் இருவர்க்க சக்திகளின் உண்மையான குணாம்சங்களைக் கணக்கில் எடுக்க மறக்கக் கூடாது. அப்பொழுதுதான் அவற்றைப் பின்னணியாகக் கொண்ட அரசியல், சமூக பொருளாதார நிலைமைகளைப் புரிந்து கொள்ளமுடியும்.

இன்று இந்த நாட்டில் சகலமுமே இரண்டு முகாம்களாகப் பிரிந்து நிற்கத் தொடங்கிவிட்டன. எனவே யார் யார், யார் பக்கம் என்பதைக் கூடிய சீக்கிரத்தில் இளைஞர்களே புரிந்து கொள்வீர்கள். புதிய தேசிய மாற்றங்களை மனதில் கொண்டு நாம் சரியாகவே செயற்படுவோமானால் ஒரு நவ இலங்கையைச் சிருஷ்டிப்பதுடன், ஒரு புதிய கலை இலக்கிய சகாப்தத்தையே உரு வாக்கி விடுவோம் என்பதைக் கவனத்தில் கொள்ளுமாறு சமர்ப்பிக்கின்றேன். ஆனால் மொழி வெறியர்கள் இருபக்கங் களிலும் கூப்பாடு போடுகின்றனர். ஆனால் இந்த வெறியர்கள் எந்தக் காலத்திலுமே மொழிகளுக்குத் தொண்டு செய்தவர்கள் அல்லர். அவதானித்துப் பார்த்தால் ஓர் உண்மையைக் கண்டு கொள்ளலாம். இந்தத் தேசத்தில் சமுதாய மாற்றங்கள் ஏற்படும் போது ஏற்றத் தாழ்வுகளை உடைத்தெறிய முயலும் நேரங் களில்தான், இந்த இனவெறியர்கள் கூப்பாடு போட முன்

வருகின்றனர். போராட்ட ஆயத்தங்கள் செய்கின்றனர். எனவே இவர்கள் கலை, இலக்கியங்களுக்காகக் கண்ணீர் வடித்து, மொழிக்காகவும், கலாசாரத்துக்காகவும் வக்காலத்து வாங்குவதன் அடிப்படை நோக்கமே தங்களது வர்க்க லாபந்தான். இது அரசியல், பொருளாதார, கலாசார ரீதியில் எதுவாக இருந்தாலும், அதை இனிமேல் தாமே அநுபவிக்க இயலாமல் போய்விடுமோ என்ற பயப்பிராந்தியினால்தான் இப்படிக் கூச்சல் போட்டு ஒப்பாரி வைக்கின்றனர்.

நச்சு இலக்கியங்களை இந்த நாட்டிற்குள் வரவிடாமல் ஒதுக்கித் தள்ளவேண்டுமென நாம் இயக்கம் நடத்திய போது, கூப்பாடு போட்டவர்களும் இவர்கள்தான். காரணம், இவர்களது வர்க்க நண்பர்கள்தான் கடல் கடந்தும் இருப்பவர்கள். எனவே இந்த நாட்டு கலைஞனைக் கைவிட்டு விட்டு, எங்கோ உள்ள நமது வர்க்க நண்பர்களுக்காக இவர்களே இங்கு நமக்கு எதிர்ப்புக் காட்டுகின்றனர். எமது கருத்துக்களைத் திரிபுபடுத்தி நமது நாட்டில் வளர்ந்து வரும் தேசிய எழுச்சிக்கு மாசு கற்பிக்கின்றனர்.

இளைஞர்களான முற்போக்கு எண்ணங் கொண்ட இலக்கிய நண்பர்களின் புதிய சிந்தனைதான் இவர்களைத் தனிமைப் படுத்தும் என்று நாங்கள் நம்புகின்றோம். சரியான பசளை நிரம்பிய இடத்திலேயே நாங்கள் திறமான விதைகளை இன்று விதைத்து வருகின்றோம். எனவே வெருண்டு பதகளிப்பவர்கள் நாங்களாக இருக்கமாட்டோம் என்பதே எமது நம்பிக்கை. இந்த எழுச்சியுகத்தில் ஒதுக்கித் தள்ளப்படுபவர்கள் இன, மத, வெறியர்களாகவே இருப்பார்கள் என்பதை முடிவில் காணலாம்.

"தினகரன்"
26.1.71

## பெருமைக்குரியவர்

**திடமான அபிப்பிராயங்களுடன் பிறர் மனம் நோகாமல் நடப்பவர். படாடோபமற்ற இவருடைய ஆசிரியப் பக்குவம் யாருக்கும் எளிதில் வரப் பெறுவது அல்ல.**

பேட்டி: முஸ்தபா

இலங்கையிலிருந்து வந்த உறவினர் மூலம் நண்பர் டொமினிக் ஜீவா 1977ம் ஆண்டு 'மல்லிகை' இதழ்கள் சிலவற்றை அனுப்பி வைத்திருந்தார். டொமினிக் ஜீவா கடந்த பதின்மூன்று ஆண்டு களாக வெளியிடும் முற்போக்கு இலக்கிய மாத ஏடு 'மல்லிகை'. தமிழகத்தில் பழக்கமாகி விட்ட சில பத்திரிகைகள் போல, 'நசுக்கி விடுவோம்' 'ஒழித்து விடுவோம்' என்றெல்லாம் 'மல்லிகை'யில் காண முடியாது. பொறுப்புடன் எழுதப்பட்ட படைப்புகள், பொறுப்புடன் எழுதப்பட்ட கலை - இலக்கிய - சமூக விமர்சனக் கட்டுரைகளே காணப்படும். டொமினிக் ஜீவாவே எழுதும் சிறு பகுதிகள் அடக்கத்துடன் எழுதப் படுபவை. 'பார்க்கலாம்' 'முயலுகிறேன்' 'அப்படி ஓர் எண்ணம் உண்டு' என்றுதான் இருக்கும். இலங்கைத் தமிழ் இலக்கிய உலகில் மிகுந்த செல்வாக்குக் கொண்டவர்களிலிருந்து இன்றே எழுதத் தொடங்கும் இளம் இலக்கியவாதி வரை 'மல்லிகை'யின் பக்கங்களில் இடம் பெறுகின்றனர். அவ்வப்போது சோவியத் கட்டுரைகளை அப்படியே பிரசுரம் செய்து விடுவதுதான் இப்பத்திரிகையின் பலஹீனமான அம்சம். சோவியத் அமைப்புப் பற்றியோ, பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுகள் பற்றியோ, இத்தாலிய சோஷலிஸ்டுகள் பற்றியோ தம் சொந்தக் கணிப்பாகவும் தம் சமூகத்து நிலையுடன் பொருத்திச் சுயமாக எழுதாமல் மொழி பெயர்ப்புக்களையே வெளியிடுவது முற்போக்கும் ஆகாது. 'சுதந்திர' அறிவுவாதி யாவதும் ஆகாது. சுயசிந்தனையிலிருந்து

நழுவி, பிறர் கவசமணியும் நகல் விமரிசனப் போக்கே யாகும். எனினும் திடமான அபிப்பிராயங்களுடன் பிறர் மனம் நோகாமல் நடப்பவர் இந்த டொமினிக் ஜீவா. படாடோபமற்ற இவருடைய ஆசிரியப் பக்குவம் எளிதில் வரப்பெறுவது அல்ல.

தலை சிறந்தவை எனத் தாங்கள் கருதும் தமிழ் நாவல்கள் எவை என்ற ஒரு கேள்விக்கு, ஜானகிராமனின் 'மோகமுள்', பத்மநாபனின் 'பள்ளி கொண்டபுரம்', சுந்தரராம சாமியின் 'ஒரு புளிய மரத்தின் கதை', டி. செல்வராஜின் 'தேனீர்', கணேசலிங் கத்தின் 'நீண்ட பயணம்', மாதவனின் 'மணலும் புனலும்', க.நா.சுவின் 'ஒரு நாள்', ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' என்ற பதில் டொமினிக் ஜீவாவிடமிருந்து அச்சில் வெளிவந்திருக்கிறது. இந்தத் தன்மையை நம் பிரமுகர்கள், விமரிசகர்களிடம் காண முடியுமா? மனமறிய எப்படி இருந்தாலும் வெளியே ஒரு நல்ல வார்த்தை சொல்ல வேண்டுமானால் கட்சி ஆளாக அல்லவா இருக்க வேண்டும். 'சுதந்திர'க்காரர்கள் கூட இப்படித்தானே நடந்து கொள்கிறார்கள்!

கடந்த சில காலமாக இந்த 'மல்லிகை' இதழ்களில் காணப் படும் விவாதம், இலங்கைத் தமிழ் இலக்கிய உலகில் கலாநிதி களின் ஆதிக்கம் அதிகமாகி விட்டது; சில எழுத்தாளர்கள் வேண்டு மென்றே கலாநிதிகளின் பாராட்டுப் பெற எப்பாடும் படத் தயாராகிறார்கள்!

பல்கலைக் கழகப் படிப்புப் படித்து டாக்டர் பட்டம் பெறு பவர்களை இலங்கையில் கலாநிதி என்கிறார்கள். 'தமிழ் நாவல் இலக்கியம்' எழுதிய கைலாசபதி ஒரு கலாநிதிதான். 'தமிழ்ச் சிறு கதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற ஒரு நூல் எழுதிய சிவத்தம்பி ஒரு கலாநிதிதான். மற்றும் தில்லைநாதன், சண்முகதாஸ் என்பவர்களும் கலாநிதிகள் தான். தில்லை நாதன் தற்காலத்துத் தமிழ்ப் படைப்பிலக்கியத்தில் நல்ல ஈடுபாடும் ஆராய்ச்சியும் மேற்கொண்டவர். சண்முகதாஸின் சிறுகதைகள் சிலவற்றை நானே படித்து மகிழ்ந்திருக்கிறேன்.

இந்தக் கலாநிதிகளின் ஆதிக்கம் எந்த நாட்டுக்கும் பொருந்தும். ஒரு வாதத்திற்குச் சொல்லப்போனால் நமது தமிழாராய்ச்சி, பல்கலைக்கழகங்கள், தமிழ்த்துறைகளின் தலைவர்கள் எக்காரணத்தினாலோ சினங் கொண்டு விட்டால்

ஒரு எழுத்தாளனுக்கு எவ்வித Establishment ஏற்பும் பரிசும் கிடைக்க முடியாமல் செய்துவிட முடியும்.

தற்காலப் படைப்பிலக்கியத்தின் மீது உண்மையான நம்பிக்கையும் ஈடுபாடும் கொண்டிருந்தால் அக்கலாநிதிகளின் ஆதிக்கம் கூட சரியான பாதையிலிருந்து மிக அதிகமாகத் திசை மாறிவிடாது. கணையாழியிலேயே அவ்வப் போது இடம் பெறும் சாந்தன் முப்பது வயது நிரம்பாதவர். சிறுகதைத் தொகுப்பு என்று முறையாக ஒரு நூலே வெளிவந்திருக்கிறது. ஆனால் கலாநிதிகள் 'ஆதிக்கம்' செலுத்தும் இலங்கையில் அவர் சாகித்திய அகடமிப் பரிசு பெற்றிருக்கிறார்! நம் நாட்டைப் பொறுத்தவரை இதைக் கற்பனை செய்து பார்க்க முடியுமா? இங்கே ஜானகிராமன், சண்முகசுந்தரத்துக்கே பரிசு கிடையாதே.

Establishment பரிசுகளில் பலவித காரணங்களினால் நிரந்தரத் தன்மையை விட தற்காலிகத் தன்மையே நிறைந்திருக்கிறது. இந்த நிறுவனப் பரிசுகள் பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதே பலவீனத்தின் அறிகுறி என்று தோன்றுகிறது.

ஆனால் இன்னொரு விவாதம் நடந்து வருகிறது. முற்போக்கு என்னும் அணியில் செய்யப்படும் விமர்சனங்களே மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்; படைப்பு இலக்கியமாகவும் பரிணமிக்க வேண்டும். சிவத்தம்பி எழுதிய ஒரு குறிப்பிடத்தக்க கட்டுரையில் சூத்திரம் போல ஒரு வாக்கியம்; இலக்கிய ஆக்கம் என்பது சமூக அழகியல் நிகழ்வு ஆகும். முருகையன், சிவகுமாரன் (இவர் Tamil Writing in Sri Lanka என்ற பொறுப்பு மிக்க நூலை ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார்), பிரேம்ஜி, மேமன் கவி, திருமதி கதிர் காமதாஸ், நெல்லை க. பேரன் போன்றோரின் கருத்துக்களை மல்லிகையில் படிக்கும்போது நம்பிக்கை தோன்றுகிறது.

ஓர் அணி என்னும்போது ஒரு சார்பும் இயல்பாகத் தோன்றிவிடும். ஆனால் தாம் வெளியிட்ட கணிப்புகள் - விமரிசனங்கள் மறுபரிசீலனைக்கு உட்படக் கூடியதே என ஏற்றுக் கொள்ளும் மனப்போக்கு மிகவும் வரவேற்கத் தக்கது.

"கணையாழி"
1.4.1978.

## நெஞ்சத்தில் நெகிழ்வு

**என் குடும்பத்துக்குச் சோறு போட்ட என் குலத் தொழிலை என் முகத்தின் முன்னேயே இழிவாகப் பேசியது கேட்டு என் இளமனம் அன்று நெகிழ்ந்தது. சாதிக் கொடுமையைச் சாடும் வெறி அன்று முதல் என்னுள் வலுப்பெற ஆரம்பித்தது.**

பள்ளிப் பருவத்தில் நான்தான் வகுப்பில் முதல் மாணவன். என் திறமையின் மேல் எனக்கு அப்போதே அளவு கடந்த நம்பிக்கை இருந்தது. ஒருமுறை கரும்பலகையில் ஆசிரியர் ஒரு கணக்கைப் போட்டார். அவர் முடிக்கும் முன்பே நான் எனது நோட்டில் அதே கணக்கைச் செய்தேன். விடை இருவருக்கும் வெவ்வேறாக இருந்தது. ஆனாலும் எனது விடைதான் சரியென்று நிச்சயமாக எனக்குப்பட்டது. எழுந்து சொன்னேன் "நீ வந்து போர்டில் போடு" என்றார் ஆசிரியர். போட்டேன். வெற்றி என் பக்கம் என்று முடிவானதும் மற்ற மாணவர்கள் ஆசிரியரை நோக்கி ஏளனமாகச் சிரித்துவிட்டார்கள். அவருக்கு வந்த கோபத்தில் என் நோட்டுபுத்தகத்தை வாங்கி இரண்டாகக் கிழித்து முகத்தில் வீசியெறிந்து, "நீங்களெல்லாம் ஏன் படிக்க வருகிறீர்கள்? சிரைக்கப்போவது தானே?" என்று கூச்சலிட்டார். என் குடும்பத்துக்குச் சோறுபோட்ட என் குலத்தொழிலை என் முகத்தின் முன்னேயே இழிவாகப் பேசியதைக் கேட்டு என் இளம் மனம் அன்று நெகிழ்ந்தது. சாதிக் கொடுமைகளைச் சாடும் வெறி அன்று முதல் என்னுள் வலுப்பெற ஆரம்பித்தது.

இலங்கையின் புகழ் பெற்ற எழுத்தாளர்கள் அனைவரும் புகழ் பெற்ற பேச்சாளர்களாகவும் இருப்பது ஒரு விசேஷம்.

தமிழ்நாட்டில் பிரசுரமாகும் எல்லா எழுத்துக்களையுமே

நாங்கள் கூர்ந்து படிக்கிறோம். கோவை, மதுரை, சென்னை, முதலிய இடங்களிலிருந்து வெளிவரும் சின்னச்சின்ன ஏடுகளையும்கூட நாங்கள் படிக்காது விடுவதில்லை. நீங்கள் ஒரு மூலையில் தும்மினால்கூட எங்களுக்குக் கேட்டுவிடுகிறது.

அதே சமயம் எனக்கொரு வருத்தமும் உண்டு. இங்கு வெளியாகும் பல கீழ்த்தரமான நசிவு இலக்கியங்கள் இலங்கை மார்க்கெட்டில் நிரம்பி வழிகின்றன. ஆனால் எங்களது ஊர் நல்ல சரக்கை விற்க முடியாமல் போகிறது. எங்கள் நாட்டுக்கு வரும் குப்பைகளைத் தடைசெய்ய வேண்டும் என்று நாங்கள் இடைவிடாமல் போராடிக் கொண்டிருக்கிறோம்.

தமிழகத்தில் அறிமுகமாகியிக்கும் புதிய எழுத்தாளர்களின் வேகத்தையும், ஆற்றலையும் கண்டு நாங்கள் பிரமிக்கின்றோம். இது உண்மை; யாழ்ப்பாணத்திலிருந்தும் மற்றும் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான நண்பர்கள் நான் இங்கே யார் யாரைச் சந்திக்கவேண்டும் என்று ஒரு பட்டியலையே போட்டுத் தந்திருக்கிறார்கள். அதில் அறுபது சதவிகிதம் புதிய எழுத்தாளர்கள்; புதுமை எழுத்தாளர்கள்.

எங்கள் நாட்டிலும் நாங்கள் ஒருவரை யொருவர் கடுமையாக விமர்சித்துக் கொள்ளுகிறோம்; எழுதித் தள்ளுகின்றோம். ஆனாலும் அவற்றையும் மீறிய எழுத்தாள சகோதரர் என்ற பாசம் இதயத்தின் ஆழத்தில் ஊறிக் கிடக்கிறது. நான் கடுமையாக விமர்சிக்கும் சகோதர எழுத்தாளனை எவராவது தாக்க வந்தால் தடுக்கும் முதல் கரம் என்னுடையதாகத்தான் இருக்கும் என்பது சத்தியம்.

*கல்கி*
3.5.78.

# நெஞ்சிலே பட்ட வடு

**ஓர் அன்றில் பறவையினுடைய நெஞ்சில் அம்பு தைத்ததைப் பார்த்து, துடிதுடித்த ஒரு வேடன் (வால்மீகி) மகாகவியானான். சமுதாய அமைப்பின் மூலமாக கேடுகெட்ட ஒரு மனிதன் என் இதயத்தில் பாய்ச்சிய காயத்தால் நான் ஒரு சிறுகதை எழுத்தாளனாக மலர்ந்தேன்; உருவானேன்.**

*சந்திரா சோமுவுடனான சந்திப்பு*

*கேள்வி: நீங்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் குடியேறிய தமிழரா? உங்களுடைய பிறப்பு வளர்ப்புப் பற்றிச் சொல்ல முடியுமா?*

*பதில்: பாரம்பரியம் மிக்க இலங்கைத் தமிழ் வம்சா வழியில் யாழ்ப்பாணத்தில் பிறந்தவன் நான். பிறப்பால் ஒரு பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சவரத்தொழிலாளர் குடும்பத்தில் பிறந்தவன். எட்டாவது வகுப்புவரை படித்தேன். அந்தக் காலத்தில்தான் என்னை வெகுவாகப் பாதித்த அந்த நிகழ்ச்சி நடந்தது.*

*கேள்வி: அந்த நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்ல முடியுமா?*

*பதில்: என்னுடைய இலக்கியத்துறைப் பிரவேசத்துக்கே அந்த நிகழ்ச்சிதான் காரணம். நான் அப்போது தொடக்கப் பள்ளி மாணவன். அந்தப் பிஞ்சுப் பருவத்திலேயே என் இதயத்தில் விழுந்த அடி... அதன் வடு...*

ஆசிரியர் கரும் பலகையில் ஒரு கணக்கொன்றைப் போட்டுக் காண்பித்தார். அந்தக் கணக்கை அவர் போட்ட முறை தவறு

என்பது எனக்குத் தெரிந்தது. நான் என்னுடைய நோட்டில் சரியான முறையில் கணக்கைப் போட்டு விட்டு எழுந்து நின்று ஆசிரியரை நோக்கி, “நீங்கள் போட்ட கணக்குத் தவறு” என்றேன். ஆசிரியர் மிகுந்த கோபத்தோடு, “சரியான கணக்கை நீதான் போடு!”, என்றார். நானும் என்னுடைய நோட்டுப் புத்தகத்தில் இருந்த சரியான கணக்கை கரும்பலகையில் போட்டேன்.

ஆசிரியர் போட்ட கணக்குத் தவறு என்று புரிந்தவுடன் மாணவர்கள் வகுப்பறையே அதிரும்படி சிரித்து விட்டார்கள். அது உயர்ந்த ஜாதி மாணவர்கள் பெரும் பாலாகப் படிக்கின்ற பள்ளி. ஆத்திரம் கொண்ட ஆசிரியர் என்கையிலிருந்து நோட்டுப் புத்தகத்தைப் பிடுங்கி, இரண்டாகக் கிழித்து என் முகத்தில் எறிந்து, “நீங்கள் எல்லாம் ஏண்டா படிக்கவந்தீர்கள், சிரைக்கப் போவதுதானே!” என்று என் பிறப்பை, என்னை வளர்க்க என் தந்தை செய்த தொழிலை சுட்டிக் காட்டிய பொழுது என் இதயத்தில் விழுந்த காயந்தான், கனன்று கனிந்து காலப்போக்கில் இலக்கியமாக என் எழுத்தில் எரிகிறது.

சமுதாயத்தால் புறக்கணிக்கப் பட்டவர்கள்தான் இன்று உலகமெங்கும் முற்போக்கு எழுத்தாளர்களாக, கவிஞர்களாக, பத்திரிகையாளர்களாக, ஆத்ம ஆவேசம் கொண்டு அனற் பிழம்பாய் எரிகிறார்கள். ஒரு நாள் அந்த ஆத்ம தீக்கனலில் - அறிவு ஜுவாலையில், இந்த ஒடுக்கு முறைகள் ஒழிக்கப்படுவது உறுதி.

கேள்வி: தங்களை முதன் முதலில் கவர்ந்த எழுத்தளர் யார்?

பதில்: என்னை ஆளுமை செய்தவர் - வரிக்கு வரி படிக்க வைத்தவர் நாவலாசிரியர் தி. ஜானகிராமன். நாவல் - “மோகமுள்”. நான் படித்த மற்றொரு சிறந்த நாவல் கி. ராஜநாராயணனின் “கோபல்ல கிராமம்”.

கேள்வி: உங்கள் மீது செல்வாக்குச் செலுத்திய சிறுகதை எழுத்தாளரைப் பற்றிச் சொல்லுங்களேன்?

பதில்: ஜெயகாந்தன். அவருடைய ஒவ்வொரு சிறுகதையும்

என்னைக் கவர்ந்ததுதான். அவரது எழுத்துலகப் பிரவேசத்தின் போதே அவரை நான் அறிவேன். எழுத்துலகில் அவரது சிறுகதைகள் அக்கினிப் பிரவேசம் செய்தவை. புதுமைப் பித்தனுக்குப் பிறகு ஜெயகாந்தனின் சிறுகதைகள்தான் வாசகர்களை ஆளுமைப் படுத்தியவை என நான் நினைக்கிறேன்.

கேள்வி: தமிழகத்து எழுத்தாளர்களைச் சந்தித்தீர்களா?

பதில்: நிறைய...நிறைய....ஏராளமானவர்களைச் சந்தித்தேன். குறிப்பாக இளம் எழுத்தாளர்களின் கதைகளை நான் இலங்கையிலேயே எழுத்து எண்ணிப் படித்திருக் கிறேன். அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பும் பெற்றேன். ஒரு புதிய தமிழகம், புதிய பாதையில் நடைபோடத் துவங்கியுள்ளது. அவர்களது எழுத்தைப் படித்த பிறகு நேரில் அவர்களைச் சந்தித்த பிறகுதான் உணர்ந்து கொண்டேன். இந்த இளம் உள்ளங்களின் உணர்ச்சிச் சிறப்பால் நான் மெய் சிலிர்த்துப் போய்விட்டேன்.

கேள்வி: தமிழக சினிமா உலகத்தைப் பற்றி என்ன நினைக் கிறீர்கள்?

பதில்: தமிழக சினிமா உலகமும் புதிய பாதையில் அடி எடுத்து வைத்திருப்பதாகவும், பல இளைஞர்கள் அந்தத் துறையின் எல்லாப் பகுதிகளிலும் பிரவேசித்தி ருப்பதாகவும் என் நண்பர்கள் மூலம் அறிந்தேன். "கிழக்கே போகும் ரயில்" என்ற படம் பார்த்த பிறகு என் நண்பர்கள் எனக்கு உண்மையான தகவல்களே தந்திருக்கிறார்கள் என்பதையும் புரிந்துகொண்டேன்.

கேள்வி: பதின்நான்கு ஆண்டுகளாக 'மல்லிகை' என்ற மாத இதழை நடத்தி வருவதாக அறிகிறேன். ஒரு முற் போக்கு இதழை நடத்துவதில் தங்களுக்கு ஏற்பட்டுள்ள வெற்றி தோல்விகளைப் பற்றிச் சுருக்கமாகக் கூற முடியுமா?

பதில்: ஒரு மாத இதழ் அல்லது வார இதழ் நடத்துவது எவ்வளவு சிரமம் என்பது உங்களுக்குத் தெரியும். அதிலும் ஒரு நோக்கத்தோடு அந்த இதழை நடத்துவது என்பது அதைவிடச் சிரமம். கடந்த பதின் நான்கு ஆண்டுகளில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியதாயிற்று. பத்திரிகை வெளியீட்டின் மூலப் பொருளான காகிதம், அச்சுக்கள், பிளாக்குகள் போன்றவைகளின் விலை உயர்வின் தாக்குதல் ஒருபக்கம், மற்றொரு புறத்தில் இந்தியாவில் ஒரு பத்திரிகை சம்பந்தப்பட்ட பொருளை நாங்கள் மூன்று மடங்கு அதிகம் கொடுத்து வாங்க வேண்டி இருப்பது ஒரு அவல நிலையாகும்.

கேள்வி: இந்தியப் பத்திரிகைகளால் உங்களுக்கு என்ன சிரமங்கள் ஏற்படுகின்றன?

பதில்: தமிழகத்தில் இருந்து வரும் பத்திரிகை விலைக்குத் தான் நாங்கள் எங்களது பத்திரிகைகளின் விலையைப் போட முடியும். நாங்கள் எழுத்துச் சர்ச்சையை விற்கவேண்டி இருப்பதால், தரமான இலக்கியங்கள் எங்கள் நாட்டுக்கு வருவது "மல்லிகை" போன்ற இதழ்களுக்கு நல்லதுதான். ஆனால் உங்கள் நாட்டிலிருந்து தரமற்ற குப்பைகளே மிகவேகமாக எங்கள் நாட்டின்மீது படையெடுக்கின்றன.

உள்ளடக்க முதிர்ச்சிக்குப் பதிலாக வெளி வேடக் கவர்ச்சிகள்தான். மிகப் பயங்கரமாக எங்களது நாட்டில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இதற்கு எதிராக நாங்கள் பலம் பொருந்திய இயக்கங்களை நடத்துகிறோம். இது எங்கள் நாட்டிற்குச் செய்யும் தொண்டு மாத்திரமல்ல, முழுத்தமிழ் இலக்கியமும் ஆரோக்கியமான திசைவழியில் செல்ல வேண்டுமென்ற நல்லெண்ணமும் பின்னணியுமாகும்.

கேள்வி: உங்களுக்கு அரசியல் ஈடுபாடு உண்டா? உங்களுடைய - அரசியல் உறவு நிலை என்ன?

பதில்: எனக்கு அரசியல் ஈடுபாடு உண்டு. உழைப்பாளர் மத்தியில் இருந்துதான் பல முற்போக்கு எழுத்தாளர்கள் தோன்றியிருக்கிறார்கள். அதேநேரத்தில் ஒரு படைப் பாளியைப் பார்த்து கொடி தூக்கி, ஊர்வலம் வா என்று கேட்பதும் அர்த்தமற்றது. அரசியல் ஈடுபாடு உடைய படைப்பாளி, தான் எந்தப் பக்கம் வலுவாகக் காலூன்றி நிற்கின்றான் என்பதை பகிரங்கமாக மக்கள் மத்தியில் தெளிவு படுத்தாது விட்டால், நாளடைவில் மக்கள் அவனை மறந்து விடுவார்கள். என்னைப் பொறுத்தவரை இந்த உலகத்தின் அடித்தளமாகத் திகழும் இயக்கம் எதுவோ அதையேதான் நான் இதயநாதமாகக் கொண்டுள்ளேன்.

கேள்வி : நம் இருநாடுகளிடையேயும் கலை இலக்கியத்துறையில் நட்புறவும் ஒத்துழைப்பும் வளர நாம் என்ன செய்ய வேண்டும்?

பதில் : பரஸ்பரம் கலைஞர்கள் இருநாடுகளுக்கும் சென்று வர வேண்டும். கலை இலக்கியம் ஒருவழிப்பாதையாக இருக்கக்கூடாது. ஆரோக்கியமான இலக்கிய சிந்தனைக் கருத்துக்கள் படிக்கப் படுவதோடு மாத்திரம் நிற்காது, பரஸ்பரம் விவாதம் நடத்துவதும், கலந்துரையாடுவதும் அவசியமாகும். இதன் மூலந்தான் இலக்கியத்தைச் செழுமைப் படுத்த முடியும். இப்படிப் புரிந்து கொள்ளும் சரியான நடைமுறைதான் இரு நாடுகளுக் கும் இன்று அத்தியவசியமாகத் தேவைப்படுகிறது.

கேள்வி: உங்களது 'மல்லிகை' இதழைப் பற்றிச் சொல்லுங் களேன்?

பதில்: இலங்கையின் மிகச் சிறந்த எழுத்தாளர்கள், விமர்ச கர்கள் கடந்த காலங்களில் மல்லிகையில் எழுதிவந் திருக்கிறார்கள். பல மாத இதழ்கள் இலங்கையில் வெளிவருகின்றன. சரியான தத்துவப் பார்வையும் தெளிவான நோக்கும் கொண்ட மல்லிகையின்

பாதையிலே, அதே தெளிவும் நோக்கும் கொண்ட பல முற்போக்கு எழுத்தாளர்கள் அடியொட்டி வருவதனால், மல்லிகை ஒரு தேசிய தாக்கத்தைக் கடந்த பதினான்கு ஆண்டுகளில் இலங்கையில் ஏற்படுத்தியுள்ளது.

கேள்வி: உங்கள் நாட்டைப் பற்றி எங்களது தமிழகப் பத்திரிகைகள் நிறைய எழுதுகின்றனவே?

பதில் : இலங்கையைப் பற்றி தமிழ்நாட்டில் இருந்து வரும் பல தகவல்கள் பொய்யானவை; மோசடியானவை; திட்டமிட்டு எழுதப்படுபவை. இதயமற்றவர்களைத் தவிர, நல்லெண்ணம் படைத்த நண்பர்கள் இலங்கையைப் பற்றிச் சொல்கிற கருத்துக்களை இங்குநான் குறிப்பிடவில்லை. வியாபாரத்துக்கென்று இலங்கையைத் தங்கள் நிரந்தரச் சந்தையாக, மேய்ச்சல் நிலமாக வைத்திருக்கும் ஒரு சிறு கூட்டமான வர்த்தகச் சூதாடிகள்தான், எங்களது நாட்டைப் பற்றித் தப்புத் தவறான கருத்துக்களை எழுதுகிறார்கள். இவர்களது எழுத்தைப் படித்து விட்டு நாங்கள் சிரித்துக் கொள்வதை அந்த “விஷமப் பிரசாரகர்கள்” அறிய மாட்டா விட்டாலும் கூட, எங்களது நாட்டைப் பற்றிச் சரியான கருத்துக்கள் தமிழ் நாட்டில் பரவ முடியாமல் போனது குறித்து நாங்கள் வெட்கப் படுகிறோம்; வேதனைப் படுகிறோம், தமிழுக்கு தமிழா எதிரி! சேச்சே...

கேள்வி: எங்கள் நாட்டிலிருந்து உங்கள் நாட்டிற்கு பத்திரிகை போகும்போது, அங்கிருந்து இங்குவர என்ன தடை?

பதில்: இந்தியாவில் இருந்து கணிசமான மாத, வார, இதழ்கள் மற்றும் சினிமாக்கள் எங்கள் நாட்டிற்கு வருகின்றன. இலங்கையின் தரமான இதழ்களோ, சினிமாக்களோ இந்தியாவிற்கு வரமுடியாததற்கு இந்திய அரசு தடையாக நிற்பதே காரணம். நான் அறிந்தவரையில் சொல்வதானால் இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட மொழி

யில் தமிழும் ஒன்று. இருந்தும் தமிழ்மொழியில், வேறு நாட்டில் இருந்து வருவதை உங்கள் அரசு தடை செய் திருக்கிறது. இதனால் தமிழ்மொழி பேசாதவன் எவனும் பாதிக்கப் படுவதில்லை. பக்கத்து நாட்டில் வாழும் எங்கள் மொழியை அறிந்த நீங்கள்தான் பாதிக்கப் படுகிறீர்கள். இலக்கிய வளர்ச்சிக்கு ஒருவழிப்பாதை கூடாது. இந்தப் போக்கைத் தவிர்க்க தமிழக முற் போக்கு இலக்கிய கர்த்தாக்கள் முன்கை எடுத்துப் போராட வேண்டும். உங்களுடைய எழுத்தை எங்களால் உணர முடிகிற போது, ஈழத்து இலக் கியத்தைப் பற்றி உங்களால் எதுவும் அறிய முடிவ தில்லை. எங்களைப் பற்றிப் பூரணமாக நீங்கள் அறிய முடியாததும் எங்களுக் கொன்றும் இழப்பில்லை. வருங்கால இளம் சந்ததியினர் ஈழத்து இலக்கியங் களைப் படிக்காமல், விரிந்த இலக்கிய அறிவைப் பெற முடியாது, ஆகவே இந்தத் தடை தமிழ் வளர்ச்சிக்கும் உங்களுக்கும்தான் விதிக்கப் படுகின்ற தடையே அல்லாது வேறு என்ன? எங்களைப் புரிந்துகொள்ள நீங்கள்தான் முயலவேண்டும்.

கேள்வி: எழுத்தாளர்களுக் கென்று உங்கள் நாட்டில் சங்கம் உண்டா?

பதில்: ஓ...இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நீண்ட நெடுங்காலமாக செயற்கரிய பணியைச் செய்து வருகிறதே!

கேள்வி: புத்தக வெளியீட்டு நிறுவனம், பதிப்பகங்கள் எப்படி?

பதில்: ஒரு சில நிறுவனங்கள் உண்டு. முற்போக்கு பதிப் பகங்களும் உண்டு. எழுத்தாளர் பதிப்பகமும் இருக் கிறது. இவ்வளவு இருந்தும் பல எழுத்தாளர்கள் தங்களது பிரதிகளை புத்தகவடிவில் கொண்டு வர விலைவாசி ஏற்றங்கள் தடை செய்கின்றன. நான் முன் கேள்விக்குச் சொன்ன பதிலின்படி அடக்க விலையின்

அதீத தாக்கம் எங்களுடைய படைப்புகள் புத்தக வடிவு பெறுவதைத் தடை செய்கிறது.

கேள்வி: புதுக்கவிதை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: யார்தான், என்னதான் வழிமறித்தாலும் அலட்சியம் செய்தாலும் புதுக்கவிதைகள் ஓர் இலக்கிய வெளிப் பாட்டு ஊடகம் என நான் நினைக்கிறேன்.

கேள்வி: உழைக்கும் மக்களின் போர்ப்படையை ஒன்று திரட்ட முயலும் 'மக்கள் செய்தி'க்கு உழைப்பாளி வர்க்கத்தின் தலை சிறந்த கலை இலக்கியப் படைப்பாளியாகிய தாங்கள் அளிக்கும் செய்தி என்ன?

பதில்: எந்த இலட்சியத்துக்காக 'மக்கள் செய்தி' போன்ற பத்திரிகைகள் உழைக்கின்றவோ அதுவே மிகப் பெரிய செய்தியாகும். இங்கே மக்கள் செய்தி செய்யும் ஆக்கபூர்வமான வேலைகளைத்தான், நாங்களும் அங்கே செய்ய முயலுகிறோம்.

"மக்கள் செய்தி"
**26.8.1978.**

## ஞானோதயம்

**சமூகக் கொடுமைகளுக்கு வெறும் சாதிய உணர்வு காரணம் அல்ல என்பதை உணர்ந்தோம். மார்க்சீய கொள்கையை ஆதாரமாகக் கொண்டு இலங்கையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உருவானது. நாங்கள் புதுமைப்பித்தன் வழியிலே வந்தவர்கள். எங்களுக்கு வழிகாட்டிகள் அண்ணாத்துரையோ, கருணாநிதியோ அல்லர்.**

*(தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சென்னை மாவட்டக்குழு சார்பில், அதன் செயலர் டி. முத்துசாமி தலைமையில் 23.8.78 அன்று மத்திய நூலகக் கட்டடத்திலே அளிக்கப்பட்ட வரவேற்பின்போது ஆற்றிய உரை.)*

திருப்பூர் மாநாட்டிற்கு வரவேண்டிய நான் விமானத்தில் இடம் கிடைக்காமல் இரண்டு நாட்கள் தாமதித்து வர வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டேன். இது என் வாழ்க்கையில் வேதனைப் படக்கூடியதான துக்கமாக அமைந்தது).

1969ல் சென்னைக்கு வந்திருந்த நான் பல ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் வந்து, இன்று தாய்த்திரு நாட்டுக்குத் திரும்புகிறேன்.

சிறுவயதில் ஆசிரியர் ஒருவர் என்னைப் பார்த்து, "என்னத் துக்கெடா படிக்க வாறீங்கள்...போய்ச் சிரையுங்கடா" என்று ஏசியபோது எழுந்த உணர்வு "ஏன் சிரைக்கக் கூடாது?" என்பதுதான். என் தந்தை செய்த தொழிலை நான் செய்வது எப்படிக் கேவலமாகும் என்று பாடசாலையை விட்டு வெளியேறினேன். அன்று முதல் சிரைக்கத் தயாரானேன். சிலுவை அணிந்தும் கூட கொடிய சமூகத்தின் சாதித்திமிர் என்னை அந்த

நிலைக்குக் கேவலப் படுத்தியது. அதை எதிர்த்துத்தான் நான் டொமினிக் ஜீவா ஆனேன். நான் மாத்திரமல்ல, இன்று இலங்கையின் பிரபல எழுத்தாளர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்ட சமூகத்திலிருந்து வந்தவர்கள்தான்.

1948ல் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட தோழர் ப. ஜீவானந்தத்தை நான் இலங்கையில் சந்தித்தேன். அப்போது அவரால் நாங்கள் நெறிப்படுத்தப் பட்டோம். சமூகக் கொடுமை களுக்கு வெறும் சாதிய உணர்வு காரணமல்ல என்பதை உணர்ந்தோம். மார்க்சீய கொள்கையை ஆதாரமாகக் கொண்டு இலங்கையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உருவானது.

இலங்கையின் எழுத்தாளர்கள் அனைவரும் சிறந்த பேச்சாளர்கள். யாழ்ப்பாணத்தில் விடிய விடிய நடக்கும் கவியரங்கம் சிறப்பு நிகழ்ச்சி ஆகியது.

அன்று "சரஸ்வதி" இதழ் எங்களுக்குக் களம் அமைத்துத் தரக்கூடிய தோழமைத் துணையாக தமிழகத்தில் விளங்கியது. நாங்கள் தடுக்கி விழாமல் சோரம் போகாமல் நல்ல சூழ்நிலை யில் நெறிப்படுத்தப் பட்டோம். இதனால் மொழி வெறியர்களை வென்றெடுக்க முடிந்தது.

நாங்கள் புதுமைப்பித்தன் வழியிலே வந்தவர்கள். எங்களுக்கு வழிகாட்டிகள் அண்ணாத்துரையோ, கருணாநிதியோ அல்லர். சிங்களத்திலிருந்தும், மலேசிய மொழியிலிருந்தும் நவீனத்தை எடுத்துக்கொண்டு தமிழோடு சேர்த்து பொதுத் தமிழ்ச் சிந்தனையை உருவாக்கி வருகின்றோம்.

அன்று இலங்கையர்கோன், சம்பந்தன், வைத்திலிங்கம் முதலானவர்கள் சிறுகதை எழுத்தாளராக இருந்தார்கள். அதுவும் அங்கிருந்து "கலைமகளுக்கு" எழுதிக் கொண்டிருந்தார்கள்.

இலங்கை இலக்கியம் பற்றி தமிழகத்திற்கும், தமிழகத்தின் இலக்கியம் பற்றி இலங்கைக்கும் தெரியவேண்டும். தமிழகத்தின் இளைய தலைமுறையின் சிற்றேடுகளைப் படிக்கிறோம். இலங்கை யில் உள்ள எங்கள் இளைய தலைமுறையினர் இங்கே உள்ள

எழுத்தாளர்கள் பலரைக் கண்டிப்பாகச் சந்தித்து வர வேண்டும் என்று பட்டியல் போட்டுக் கொடுத்துள்ளார்கள். அதில் அறுபது சதம் இளைஞர்களின் பெயர்களே. அங்குள்ள அன்றைய இளைய தலைமுறை எழுத்தாளர்களை ஜீவா எப்படி நெறிப்ப டுத்தினாரோ அது போல் இன்று இளைய தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளர்களை நெறிப்படுத்த வேண்டிய கடமை எமக்குண்டு.

ஈழத்திலிருந்து அற்புதமான நாவல்களை இளைய தலைமுறை யினர் படைத்துள்ளனர். அறுபது நாவல்களுக்கும் மேல் இருக்கும். "காட்டாறு" "அவர்களுக்கு வயது வந்து விட்டது" போன்ற நாவல்கள் அற்புதமானவை.

புதுக்கவிதை என்று சொல்கின்றபோது தமிழகத்தில் வானம் பாடிகளைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இங்குள்ளதைப் போல் அல்ல, புதுக்கவிதைத் தொகுப்புக்கள் ஏராளமாக இலங்கையில் வெளிவந்துள்ளன.

அங்கே "கலை கலைக்காகவே" என்ற கோஷ்டி இல்லை. எதிரியை உண்டாக்கிக் கொள்வதும் நண்பனை எதிரிமுகாமில் தள்ளிவிடுவதும் சுலபம். அதுவன்றி அணைத்துக் கொண்டு செல்வது மிகவும் சிரமம். இதனை இன்று நாங்கள் நன்றாகத் தெரிந்து கொண்டுள்ளோம். எழுத்தாளர்களுக்கு இடையே அங்கே ஆக்க பூர்வமான நட்பு உண்டு. வளரும் தலைமுறையை நெறிப்படுத்தும் கடமையுடன் செயற்படுவோம்.

காடு மலை கடல் கடந்து நின்றாலும் எழுத்தாளனை இணைத்து வைப்பது அவனுடைய பேனா. அவனுடைய எழுத்து அவனுடைய சிந்தனை உள்ளார்ந்த பிணைப்புடன் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவோம்.

- "ஜனசக்தி."

## கலை, இலக்கியப் பரிவர்த்தனை ஒரு வழிப் பாதை அல்ல.

**ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிலும் சுத்தமான தமிழ் இருக்க வேண்டும்" என்று கூறும் தமிழ் தீவிர வாதிகளுக்கும் தமிழுடன் ஆங்கிலத்தைக் கலந்து பேசும் ஆங்கில மோகம் படைத்தவர்களுக்கும் நான் எதிரானவன். இந்த இருசாராருமே தமிழ் மொழிக்கு ஊறு செய்கிறார்கள்.**

**பேட்டியாளர் என்.வி. சங்கரன்**

“இளமைத் துடிப்போடு காணப்படும் ஜீவாவுக்கு இப்பொழுது ஐம்பது வயதாகின்றது. இலங்கையில் தமிழ் நூலுக்கு முதலாவது சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர். ‘மல்லிகை’ என்ற பதின்நான்கு வருடங்களாக நடைபெறும் மாதாந்த சஞ்சிகையின் ஆசிரியராகவும் பிரசுர கர்த்தாவாகவும் அவர் விளங்குகின்றார். எளிமையாக ஆனால் பெருமையோடு சிகை அலங்கரிப்பாளராக வாழ்க்கையை ஆரம்பித்தவரான ஜீவா, பின்னர் முற்போக்கு இலக்கியத்துக்காக உழைப்பதையே தமது பணியாக ஏற்றுக் கொண்டு விட்டார். அவர் ஒரு நம்பிக்கையுள்ள இடதுசாரி. அவர் வெகுகாலத்துக்குப் பிறகே இம்முறை தமிழ் நாட்டுக்கு வந்திருக்கிறார். இனிமேல் அடிக்கடி தமிழ் நாட்டுக்கு வந்து போகத் திட்டமிட்டிருக்கிறார். தமிழ்நாட்டிலுள்ள ஆக்க எழுத்தாளர்களுடன் அடிக்கடி கருத்துப் பரிமாற்றங்களை வைத்துக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று கருதுகிறார்.”

இலங்கை இந்தியத் தமிழர்களுக்கிடையில் கலை, கலா சார உறவுகள் ஏன் ஒருவழிப் பாதையாக இருக்கவேண்டும்? இந்தியாவில் வெளியாகும் தமிழ்ச் சஞ்சிகைகளும், தமிழ் செய்திப் பத்திரிகைகளும் இலங்கைக்கு அனுப்பப்படும் அதே

சமயம், இலங்கையில் வெளியிடப்படும் தமிழ்ச் சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் இந்தியாவுக்கு அனுப்பப்பட முடியாமல் இருக்கிறது. தமிழ் தேசிய மொழிகளில் ஒன்றாக இருப்பதால் இலங்கையில் இருந்தோ மலேஷியாவிலிருந்தோ வர்த்தகரீதியில் பிரசுரங்களைத் தருவிப்பதை இந்திய மத்திய அரசும் தமிழ் நாடு மாநில அரசும் தடை செய்துள்ளன. இந்த விஷயத்தில் நாங்கள் அல்ல நஷ்டமடைபவர்கள். இந்தியாவில் எமது சஞ்சிகைகளை விற்க முடியாமல் இருக்கலாம், ஆனால் வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைகூட அறிய முடியாத கிணற்றுத் தவளைகளாகவே இந்தியத்தமிழர்கள் இருந்துவிடுவார் கள். இதே சமயம் இந்தியாவில் இலக்கியத்துறையில் என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ளக் கூடிய நிலையிலும் எமது வாழ்க்கையைச் சரியான வழியில் சீர் அமைத்துக் கொள் ளும் நிலையிலும் நாம் இருக்கின்றோம்.

இந்திய நாட்டிலுள்ள பெரிய, சிறிய, வளர்கின்ற எழுத்தாளர் அனைவரையும் நாம் கவனித்துக் கொண்டு தான் வருகின்றோம். நீங்கள் உயர்த்தி வைத்துக் கொண்டுள்ள சில எழுத்தாளர்களை நாங்கள் ஒப்புக் கொள்வதில்லை. அதே சமயம் நீங்கள் அங்கீகரிக்க மறுக்கும் திறமையுள்ள சில இளம் எழுத்தாளர்களை நாம் பாராட்டி வரவேற்கின்றோம்.

இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களுக்குள்ள பிரச்சினைகள் என்னவெனில், ஐம்பதுகளில் எமக்கென்று சஞ்சிகைகள் இல்லா திருந்தது ஒரு பிரச்சினைதான். ஆக்க இலக்கியங்களை வெளியிட்டு வந்த தினசரிப் பத்திரிகைகளின் வாரமலர்களும் உங்கள் நாட்டுப் பிரபல பத்திரிகைகளையே முன்மாதிரியாகப் பின்பற்றி வந்தன. பேராசிரியர் கைலாசபதி தினகரன் பத்திரிகை யில் ஆசிரியராகப் பொறுப் பேற்றதன் பின்னர்தான் ஒரு மாற்றம் ஏற்பட்டது. உங்கள் பிரபல சஞ்சிகைகள் காட்டியது போல் சமூகம் இருக்கவில்லை யென்பதை எமது வாசகர்களும் மெதுவாக உணர ஆரம்பித்தார்கள். எமது நாட்டில் இலக்கியம் சமுதாயத்திலிருந்து ஒதுங்கிவிடுவதில்லை. அதனால் சமூக மாற்றங்கள் இலக்கியத்திலும் பிரதிபலித்தன.

தற்காலத்தில் மிதமிஞ்சிய அச்சகச் செலவுகள்தான் எழுத்

தாளர்களை எதிர்நோக்கும் பெரும் பிரச்சினை. ஆக்க எழுத் தாளர்களால் சஞ்சிகைகளை நடத்தக்கூடிய விதத்தில் ஒருமுகப் பட்டுச் செயல்பட முடியாது என்ற கொள்கையை பதின் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நான் உடைத்தெறிந்தேன். ஆனால் எமது பத்திரிகை விற்பனைச் சந்தை மிகவும் மட்டுப் படுத்தப் பட்டிருப்பதாலும் அச்சுக் கூலிகள் அதிகரித்திருப்பதுமே ஒரு பிரச்சினையாக எழுந்துள்ளது.

பெரும்பாலான எமது முற்போக்கு எழுத்தாளர்கள் வர்த்தக ரீதியான பிரசுரகர்த்தர்களிடம் போவதில்லை. தங்கள் ஆக்கங் களை தாங்களே வெளியிடுகின்றார்கள்.

தமிழ் நாட்டின் ஜனரஞ்சக பத்திரிகைகள் எங்கள் நாட்டில் ஒருவகையில் வர்த்தகரீதியிலும் கலாசார ரீதியிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. அச்சுச் செலவு அதிகரித்திருப்பதால் எமது சஞ்சிகைகள் உங்கள் சஞ்சிகைகளைவிட அதிக விலைக்கு விற்கப் படுகின்றன. அதே சமயம் உங்கள் நாட்டிலிருந்து வரும் சில ஜனரஞ்ச சஞ்சிகைகளும் படங்களும் எமது நாட்டுக்கு ஆரோக்கியமாக இல்லை.

இலங்கைத் தமிழ் மொழியின் நிலைபற்றிச் சொல்லுவதானால், "ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிலும் சுத்தமான தமிழ் இருக்க வேண்டும்" என்று கூறும் தமிழ்த் தீவிரவாதிகளுக்கும் தமிழுடன் ஆங்கிலத்தைக் கலந்து பேசும் ஆங்கில மோகம் படைத்தவர் களுக்கும் நான் எதிரானவன். இந்த இரு சாராருமே தமிழ் மொழிக்கு ஊறுசெய்கிறார்கள். பஸ், கார், சைக்கிள் போன்ற வேற்று மொழிப் பொதுச் சொற்களைத் தமிழில் பயன்படுத்து வதை நான் ஆதரிக்கிறேன். இச் சொற்களுக்குப் பதிலாக பேருந்து, துவிச்சக்கரவண்டி போன்ற சொற்கள் பயன் படுவதை நான் விரும்பவில்லை.

எமது நாட்டில் உயர் கல்வி நிலை வளர தமிழ்மொழியிலேயே கல்வி போதிக்கப் படுகின்றது. சில இடங்களில் மருத்துவம் தமிழ் மொழியிலே போதிக்கப் படுகின்றது. பாடப் புத்தகங்களை எழுதுவதில் ஆரம்பத்தில் கஷ்டங்கள் இருந்திருக்கலாம். ஆனால் அவைகளை நாம் சமாளித்து விட்டோம்.

"இந்தியன் எக்ஸ்பிரஸ்" 28.8.1978.

## தோழமையாளன்

**இலங்கைக் கல்வி முறைக்கும் தமிழகக் கல்வி முறைக்கும் ஓர் அடிப்படை வேறுபாடு உண்டு. உயர் கல்வி உட்பட அனைத்தும் தாய் மொழியிலேயே போதிக்கப் படுகிறது இலங்கையில். இதனால் தமிழின் தரமும் கல்வியின் தரமும் உயர்ந்த நிலையில் இருக்கின்றன.**

'சிகரம்' செந்தில்நாதனுக்கு அளித்த செவ்வி

*செ.நா:* *தமிழகப் பத்திரிகைகளுக்கும் இலங்கைப் பத்திரிகை களுக்கும், தமிழக எழுத்தாளர்களுக்கும் இலங்கை எழுத்தாளர்களுக்கும் இடையே உங்களுக்கு வேறுபாடு தெரிகிறதா?*

ஜீவா: குறிப்பாகச் சில வேறுபாடுகள் தெரிகின்றன. தமிழ கத்தில் புஷ்பா தங்கத்துரை, குமாரி பிரேம லதா, சாண்டில்யன், மணியன் போன்ற எழுத்தாளர்கள் இருப்பதுபோல் இலங்கையில் அந்த ரகப் பிரபல எழுத்தாளர்கள் இல்லை. குமுதம், சாவி, இதயம் போன்ற கவர்ச்சிப் பத்திரிகைகள் எதுவும் ஈழத் தமிழர்களால் நடத்தப்படவுமில்லை. இலங்கை வாசகர்களின் தரம் பொதுவாக உயர்ந்திருக்கிறது. அதனால் எழுத்தாளர்கள் தரமும் பொதுவாக உயர்ந்திருக்கிறது என்றே சொல்லலாம். இலங்கைக் கல்வி முறைக்கும் தமிழகக் கல்வி முறைக்கும் ஓர் அடிப்படை வேறுபாடு உண்டு. உயர் கல்வி உட்பட அனைத்தும் தாய் மொழியிலேயே போதிக்கப்படுகிறது இலங்கையில். இதனால் தமிழின் தரமும் கல்வியின் தரமும் உயர்ந்த நிலையில் இருக்கின்றன.

செ.நா: நீங்கள் சொல்வது உண்மைதான். அறிவியல் பொருளியல் துறையில் ஈழத்தமிழர்கள் பல சிறந்த நூல்களை எழுதியிருப்பதை நான் அறிவேன். பல வகையில் இலங்கை தமிழகத்துக்கு முன்னோடியாக இருக்கிறது. நாவல் துறையிலும் கணேசலிங்கன் ஓர் சாதனை நிகழ்த்தி இருக்கிறார் என்று எண்ணுகிறோம். அவர் நாவலைப்பற்றிப் பல விமர்சனங்கள் உண்டு. என்றாலும் தமிழகத்தில் முற்போக்கு நாவல்கள் தொடர்ந்து வெளிவராத கால கட்டத்தில் அவர் அடுத்தடுத்து எழுதியது இங்குள்ளவர்களுக்கு உத்வேகம் தந்தது. கணேசலிங்கனின் நாவல்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ஜீவா: நான் இலங்கையிலேயே இருப்பதால் எனக்கு உண்மை நிலைமை தெரியும். கணேசலிங்கன் எதார்த்தம் என்று எதைத் தன் நாவல்களில் சித்திரிக்கிறாரோ அது இலங்கையில் இல்லாதது. அவரின் எதார்த்தம் இலங்கையில் எதார்த்தம் அல்ல.

செ.நா: தமிழகப் பத்திரிகைகள் உங்கள் நாட்டுக்கு வர முடிகிறது. ஆனால் உங்கள் நாட்டுப் பத்திரிகைகள் எங்கள் நாட்டிற்கு வர முடியவில்லை. இது பற்றி நீங்கள் எழுதிய கட்டுரையையும் படித்தேன். இது சம்பந்தமாக நாங்களும் இங்கே நடவடிக்கை எடுக்கிறோம். மேற்கொண்டு நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்?

ஜீவா: நாங்கள் போராடப் போகிறோம். எங்கள் நாட்டுப் பத்திரிகைகள் இங்கேவர முடியாதென்றால் உங்கள் நாட்டுப் பத்திரிகைகள் மட்டும் ஏன் எங்கள் நாட்டில் அனுமதிக்கப்பட வேண்டும்? இது என்ன ஒருவழிப் பாதை? நாங்கள் இந்த அநீதிக்கு எதிராகக் மிகக் கடுமையாகப் போராடப் போகிறோம். ஏற்கனவே இலங்கை அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறோம். உங்கள் மத்திய அமைச்சர் வாஜ்பாயி

இலங்கை வரப்போகிறார். அப்போது அவரிடம் இப் பிரச்சினையைக் கிளப்புவோம்.

செ.நா: தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், தமிழ் நாடு கலை இலக்கிய பெருமன்றம் இரண்டுமே நச்சிலக் கியங்களுக்கு எதிராகவும், முற்போக்குகளுக்கு ஆதரவா கவும் இருக்கின்றன. ஆனால் முற்போக்குக் கருத்தை நடைமுறைப் படுத்தும்போது இரண்டிற்கும் வேறு பாடும், மோதலும் ஏற்படுகிறது. இதர எழுத்தாளர்கள் படைப்புக்கள், அவர்கள் பிரதிபலிக்கும் போக்குகள் இவற்றை அணுகுவதில் இரண்டு அமைப்பிற்கும் முரண்பாடு இருக்கிறது. எடுத்துக்காட்டாக ஜெய காந்தனின் சமீபகாலப் படைப்புக்கள். இந்த நிலை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஜீவா: தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றம் ஆகிய இந்த அமைப்புகள் பற்றி அவற்றின் வேறுபாடு பற்றி இந்தப் பேட்டியில் நான் பகிரங்கமாக விவாதிக்க விரும்பவில்லை. இலங்கையிலிருந்து வரும் நாங்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்ந்த எழுத்தாளர்கள் என்றோ, மார்க்சிஸ்ட் கட்சி சார்ந்த எழுத்தாளர்கள் என்றோ பார்க்கவில்லை. இலக்கியம் சம்பந்தமான பொதுப் பிரச்சினைகளில் அனைவரும் ஐக்கியமாகவும், தோழமை பூர்வமாகவும் சேர்ந்து செயற்படவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். தமிழகத்தில் ஏற்படும் மாற்றம் ஈழத்துக்கும் ஆதர்சமாக இருக்கும் என்று நம்புகிறோம்.

செ.நா: சில சமூகப் பொறுப்பில்லாத பச்சை நச்சிலக்கிய வாதி களை நம்மால் சிரமமில்லாமல் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது. ஆனால் அந்த ரகத்தில் சேராத எழுத்தாளர்கள் சிலர் இருக்கின்றனர். இவர்கள் சமுதாய உணர்வோடு எழுதுகிறார்கள். தேசிய வாதி களாக இருக்கின்றார்கள். காந்தியத்தீர்வு கூறுகின்றார்

கள். தாங்கள் அறிந்த வகையில் சில சமூக நிலைகளை யும் அம்பலப்படுத்துகிறார்கள். உதாரணமாக அகிலன், 'தீபம்' பார்த்தசாரதி போன்றவர்கள். இவர்களை முற்போக்காளர் எப்படிப் பார்க்க வேண்டும்.

ஜீவா: இலங்கையைப் பொறுத்தவரை காந்தீயப் பிரச்சினை என்பது கிடையாது. ஆனால் அது உங்களுக்கு இருக்கிறது. அகிலன், நா.பா. போன்ற தேசிய எழுத் தாளர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு எழுத்தாளர்களாக எழுதியிருக்கின்றனர். இது ஒரு நல்ல அம்சம். இருந்தாலும் தத்துவார்த்த ரீதியாக இவர்கள் நம்மவர் கள் அல்லர். இவர்களைப் பற்றி நாம் தீர்மானிப்பது மட்டுமல்ல, அவர்களே தாங்கள் செய்ய வேண்டியது என்ன என்பதைத் தீர்மானிக்க வேண்டிய கட்டம் வரலாம். இப்போது வளர்ந்து வரும் இளைய தலை முறை எழுத்தாளர்களையெல்லாம் பார்க்கும்போது, இந்தக் காந்தியுக எழுத்தாளர்கள் இனிமேல் பென்ஷன் பெற்ற எழுத்தாளர்களாகவே கருதப்படுவார்கள்.

செ.நா: ஈழத்தில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் எப்படி இருக்கிறது?

ஜீவா: எங்கள் நாட்டில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பரந்த ஓர் அமைப்பாகவே இருக்கிறது. அதிதீவிரவாதி களும் எங்கள் சங்கத்தில் இருக்கிறார்கள். இருந்தும், நாங்கள் அனைவரும் இணைந்தே செயற்படுகின்றோம். எழுத்தாளர் சங்கங்கள் கட்சியின் கிளைபோலச் செயற்படக் கூடாது என்று நாங்கள் கருதுகிறோம்.

செ.நா: ஜீவா அவர்களே, 'சிகரம்' சார்பிலும் தமிழக முற் போக்கு எழுத்தாளர்கள் சார்பிலும் உங்களுக்கு நன்றி யையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"சிகரம்"
செப்டம்பர், 1978

## தேசியக் குரல்

**டி.எஸ். ரவீந்திரதாஸ்.**

**கவர்ச்சி என்பது இலக்கியத்தின் ஓர் அம்சமாக முதலில் கருதினார்கள். இப்போதோ கவர்ச்சி மட்டும் தான் இலக்கியம், அல்லது இலக்கியம் என்றாலே கவர்ச்சி என்ற concept க்கு வாசகர்களில் பலர் வந்து விடுகிறார்கள். இலக்கியத் தரத்திற்காகவும், செழுமைக்காகவும் அர்ப்பணிக்கப்பட்டு வரும் நீண்ட நாள் பணி வீணாகி வருகிறது.**

இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு வருகை தந்திருந்த 'மல்லிகை' மாத இதழின் ஆசிரியருடன் தற்கால கலை இலக் கியப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. முன்னெப்போதைக் காட்டிலும் இப்போது பத்திரிகைகளின் படை எடுப்பானது புற்றீசல்போல் பெருகி வரு கின்றன. எண்ணிக்கையை மட்டுமே மையமாகக் கொண்ட இந்த வியாபார இதழ்கள் மனித பலவீனங்களைப் பயன்படுத்தும் உத்திகளால் விற்றும் விடுகின்றன. ஆபாசம், அருவருப்பு, இரட்டைத் தொனி தெறிக்கும் வாசகங்கள், கிசுகிசுக்கள், செக்ஸைப் பிரதானப் படுத்தும் சித்திரங்கள் போன்ற வகை யறாக்களின் மூலம் தமது பத்திரிகைகளை விற்றுவிட இவை எத்தனிக்கின்றன. இதற்குக் காரணம் பெரும் பத்திரிகைகளுக் கிடையே தோன்றும் வியாபாரப் போட்டிதான். இந்த வியாபாரப் போட்டி இலங்கையில் எப்படியிருக்கிறது? அதன் விளைவுகள் எவ்வாறு இருக்கின்றன? என்று கேட்டபோது

'தமிழ் நாட்டைவிட இலங்கையிலேயே தமிழ் நாட்டு வியாபாரச் சஞ்சிகைகளின் இந்த வியாபாரப் போட்டி அதிகம்.

இலங்கையிலேயே வெளியாகும் சிறு ஏடுகளை முழுமையாகச் சிதைக்க விற்பனையாளர்களே முயல்கிறார்கள். 'மல்லிகை'யின் இதழ்களை ஒரு கடையில் விற்பனைக்குக் கொடுத்து அடுத்த மாதம் சென்றபோது அந்தக் கட்டைப் பிரிக்காமலே திருப்பிக் கொடுத்துவிட்டார் கடைக்காரர். இத்தகைய போட்டிப் பத்திரிகைகளால் இலங்கையின் தேசிய இலக்கியமே பாதிக்கப் படுகிறது. இதன் விளைவாகக் கவர்ச்சி என்பது இலக்கியத்தின் ஓர் அம்சமாக முதலில் கருதப்பட்டது. இப்போதோ கவர்ச்சி மட்டும்தான் இலக்கியம், அல்லது இலக்கியம் என்றாலே கவர்ச்சி என்ற conceptக்கு வாசகர்களில் பலர் வந்து விடுகிறார்கள். இலக்கியத்துக்காகவும், செழுமைக்காகவும் அர்ப் பணிக்கப்பட்டுவரும் எங்களின் நீண்ட நாள் பணி வீணாகி வரு கிறது. பெரும் பத்திரிகை குவிப்பிற்கு எங்களால் ஈடுகொடுக்க முடியவில்லை என்பது உண்மைதான் என்றாலும் மக்களின் இலக்கிய ரசனையை உயர்த்தவும், படைப்புகளை தரத்தில் உயர்ந்ததாக நெறிப்படுத்தவும் நாங்கள் பேரியக்கம் நடத்தி வருகிறோம். அதில் வெற்றி பெறுவோம் என்றும் நம்புகிறோம்' என்று உறுதியாகச் சொன்னார்.

'இருதேசங்களுக்கிடையே இருந்து வரும் இலக்கிய உறவு' குறித்துக் கேட்டபோது டொமினிக் ஜீவா குறைபட்டுக் கொண்டார்.

இலங்கை இலக்கியம் பற்றித் தமிழகத்திற்கு துப்புரவாகத் தெரியாமல் இருக்கிறது. ஆனால் எங்களுக்குத் தமிழக இலக் கியம் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உண்டு. அறிந்து கொள்ளவும் செய்கிறோம். தமிழ் நாட்டின் எங்கோ ஒரு மூலையில் எப்போதோ வெளியிடப்படும் சிற்றேடாக இருந்தாலும் அதைப் பெற்றுப் படிக்கிறோம். தமிழ் நாட்டில் இப்போது தான் இலங்கை இலக்கியம் பற்றிய ஆர்வம் தோன்றியிருக்கிறது. எனவே பரிவர்த்தனைத் தொடர்பு மேலும் தேவை.

தமிழ்நாட்டிலிருந்து இறக்குமதியாகும் பத்திரிகைகளில் இலங்கை வாசகர்களின் ரசனையை அறிய விரும்பி, அவர்கள் எத்தகைய அம்சங்களை விரும்புகின்றார்கள் என்று கேட்டேன்.

பொழுதுபோக்கான அம்சங்கள், துணுக்குகள், சினிமாச் செய்திகள் போன்றவைகளைப் பெருவாரியான வாசகர்கள் விரும்புகிறார்கள். அதே நேரத்தில் இலக்கியத் தரமான சர்ச்சைகள் அடிப்படையான பிரச்சினைகள், வளர்ச்சிகள், புதுக் கவிதைகள், விமர்சனங்கள் போன்றவற்றில் ஈடுபாடு காட்டும் வாசகர்களும் இருக்கிறார்கள். இந்த ஈடுபாட்டுக்குக் காரணம் சிற்றேடுகளேயாகும்.

இலங்கையில் வெளியாகும் தமிழ் இதழ்கள் பற்றியும் ஜீவா குறிப்பிட்டார். அங்கே நான்கு தமிழ்த் தினசரிகள் வெளிவருகின்றன. ஞாயிற்றுக் கிழமைகளில் இலக்கிய மலராக வெளிவருகின்றன. எட்டு, மாதஇதழ்கள் இருக்கின்றன. இதில் குறிப்பிடத் தக்க அம்சம் நகைச் சுவைக்கென்றே "சிரித்திரன்" என்ற பத்திரிகை வருகிறதெனப் பெருமையுடன் சொன்னார். ஆனால் சினிமாவுக்கென்று தனியாக ஒரு பத்திரிகையும் வெளிவருவதில்லை.

புதுக் கவிதைகள் இலங்கையில் எந்த அளவிற்கு வரவேற்பும் வளர்ச்சியும் பெற்றுள்ளன என்பதை அறிய விரும்பிய போது, புதுக்கவிதையின் படைப்புகளும், அதன் மீது வாசகர்களின் ரசனையும் புதியவேகத்தோடு வளர்ந்து வருகிறது என்றார். தீவிர இடதுசாரிக் கருத்துக்களைத் திணிப்பதுதான் நோக்கம் என்ற மயக்கத்தில் சிக்கிச் சுலோகம்போல் புதுக்கவிதை என்ற பெயரில் எழுதும் யாந்திரீகமான தன்மை இப்போது மறைந்து வருகிறது. புதுக்கவிதைக் கென்றே சிற்றேடுகள் சிலவும், தொகுதிகள் பலவும் வெளிவந்துள்ளன.

நாவல், சிறுகதை என்ற இரண்டு இலக்கிய வடிவங்களில் எந்த வடிவம் இலங்கையில் சாதனையை ஏற்படுத்தியது என்ற கேள்விக்கு இப்போதைய சாதனை நாவல்தான் என்றார். இப்போது பல நாவல்களை வெளியிட்டுள்ள 'வீரகேசரி'யை நினைவுகூர்ந்தார். ஆரம்பகாலத்தில் சாதனையை ஏற்படுத்தியது சிறுகதைதான். நாவலாசிரியர்களும் சிறுகதைத் துறையிலிருந்து தான் உருவானார்கள். இப்போது நேரடியாகவே நாவலுக்கு வந்து விடுகிறார்களா. சில நிறுவனங்கள் புதிய எழுத்தாளர்களின் முதல்

படைப்புகளையே வெளியிட்டு அறிமுகப்படுத்துகின்றன. தற்போது பெண் நாவலாசிரியைகள் மட்டும் இருபது பேர் உருவாகியிருக்கிறார்கள். நாவல் நூற்றாண்டு விழாவைச் சென்ற ஆண்டிலேயே நாங்கள் கொண்டாடி விட்டோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமே இதைக் கொண்டாடியது. பல கருத்தரங்கு களை நடத்தியிருக்கிறோம். 'மல்லிகை' சிறப்பிதழை வெளி யிட்டுள்ளோம். இலங்கையின் ஆரம்பகாலத்து நாவலாசிரியர் இடைக்காடர் பற்றிய மல்லிகையின் 15வது ஆண்டு மலரில் டாக்டர் கைலாசபதி ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார் என்பதைச் சுட்டிக்காட்டினார்.

வட்டார வழக்கு இலக்கியங்கள் மிகவும் ஆழமாகப் போகும்போது மொழிவழக்குப் பலருக்குப் புரியாமல் போவதுண்டு. இலங்கையின் வாசர்களாகிய உங்களுக்கும் அம்மா திரிப் புரியாமல் போவதுண்டா? என்று கேட்டபோது, அப்படி இல்லை என்றும் அவ்வாறு நினைப்பதற்குக் கூட இடமில்லை என்றும் சொன்னார். ஆ. மாதவன் எழுதிய 'மணலும் புனலும்' எங்களுக்குப் புரிகிறது. பொன்னீலனின் 'கரிசல்' எங்களுக்குப் புரிகிறது. இத்தகைய நாவல்கள் செந்தமிழில் எழுதியிருந்தால் ரசனையிருந்திருக்காது. அப்பிரதேச மக்களின் வாழ்க்கை, குணநலம், மொழிவளம் போன்றவைகளைத் தெரிந்து கொண்டி ருக்க முடியாது. தமிழ் நாட்டின் பல்வேறு வட்டார மொழி களில் வழக்கு மொழிகளில் வெளியாகும் நாவல்களை எங்களால் புரிந்து கொள்ள முடிவதற்குக்காரணம் எங்களின் தொடர்ச்சி யான பயிற்சியும், ஆர்வமும்தான் என்று சொல்லி ஓர் உதாரணத்தை முன்வைக்கிறார்.

'பம்மாத்து' என்ற வார்த்தையே இலங்கைத் தமிழில் இருந்தது இல்லை. புதுமைப்பித்தன் அடிக்கடி கையாளும் வார்த்தை அது. இன்று அது இலங்கை தமிழர்களிடையே புழங்கி வருகிறது. இதே போல் ஆர்வமும் தொடர்ச்சியான பயிற்சியும் இருந்தால் தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கும் எங்களது தமிழ் புரிந்து விடும்.

இலங்கை ஓர் அந்நியதேசம். இந்தியப் பெருங்கடலில் தனித்திருக்கும் ஒரு தீவு. பல நூறு ஆண்டுகளுக்கு முன் சென்ற

தமிழர்கள் இலங்கைப் பிரஜைகளாகி, இன்று அந்த மண்ணின் புத்திரர்களாகியுள்ளார்கள். சிங்களம் போன்ற மொழிகள் அங்கே பேசப்படுகின்றன. பல சொற்களும், தொனியும் சிங்கள மொழியைத் தழுவியிருக்கின்றன. இந்த நிலை வளர்ந்து நாளடைவில் சிங்களச் சொற்களின் ஆதிக்கம் மேலோங்கி, பல்வேறு கலப்புகளின் காரணமாகத் தமிழ் மொழியே மறைந்து போகும் அல்லது மறந்து போகும் ஆபத்து உண்டா என்று ஒரு சந்தேகத்தைக் கிளப்பினேன். அத்தகைய ஆபத்துக்கு இடமே இல்லை என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார் ஜீவா. தமிழ் நாட்டைச் சுற்றி ஆந்திரா, கேரளம், கர்நாடகம், ஆகிய மாநிலங்களும் அதன் மொழிகளும் இருக்கின்றன. ஆந்திராவின் எல்லையிலுள்ள தெலுங்கினால் கேரள எல்லையிலுள்ள மலையாளத்தால் கர்நாடக எல்லையிலுள்ள கன்னடத்தால் தமிழ் பாதிக்கப் பட்டிருக்கிறதா? அப்படித்தான் இலங்கையிலும்! இன்னும் ஒரு நல்ல அம்சம் என்னவென்றால் நீதிமன்ற மொழியாகவும், ஆட்சிமொழியாகவும், கல்வி மொழியாகவுங்கூட தமிழ் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. எனவே தமிழ் மேலும் செழுமைப் படுமே தவிர அழியாது என்றார் ஆணித்தரமாக.

தமது எழுத்துப் பணியைப் பற்றியும் அவர் குறிப்பிட்ட போது, தமது இலக்கிய வாழ்க்கைக்கு 30வயது என்றார். 20ம் வயதில் எழுதத் துவங்கினாராம். தமிழ் நாட்டின் 'சரஸ்வதி' இவரை அறிமுகப்பட்டுத்தியதாகவும், 'தாமரை' இவரது படைப்புகளுக்குக் களம் அமைத்துத் தந்ததாகவும் நன்றியுடன் நினைவு கூர்கிறார். 15 ஆண்டுகளாக 'மல்லிகை'யை நடத்தி வருகிறார். 'மல்லிகை' போன்ற தரமான சிற்றேடுகளை நடத்துவதென்பது தமிழ்நாட்டைவிட இலங்கையில் கடினம் என்கிறார். தமிழகத்திலிருந்து லட்சக்கணக்கில் குவியும் எண்ணற்ற பத்திரிகைகளின் வியாபாரப் போட்டிக்கு முன்னால் நின்று ஒரு பத்திரிகையை 15 ஆண்டுகளாக நடத்திவருவது நம்பமுடியாத சாதனை என்பதை ஒப்புக் கொண்டு அதற்காகப் பெருமிதமும் அடைகிறார்.

தமிழ்நாட்டைவிட இரட்டிப்பு விலையுள்ள காகிதச் சிக்கல்; அஞ்சல் தலை சிக்கல்; வியாபார நோக்கத்தால் ஊக்குவிக்கப்

பட்டுள்ள ரசனைச் சிக்கல். இத்தனையும் போதாதென்று அரசு விளம்பரத்துறையில் புறக்கணிப்பு. 15 ஆண்டுகளாகத் தமது பத்திரிகை தொடர்ந்து வெளிவந்தும் அரசு விளம்பரங்கள் இதுவரை கிடைக்கவில்லை என்று சொல்கிறபோது விளம்பரத் தாலேயேஅல்லது விளம்பரக்காசுக்காகவே பத்திரிகை நடத்தும் தமிழக அநுபவங்களைச் சற்று நாம் நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

ஆயினும் தனிப்பட்ட மனிதர்கள், வியாபாரிகள், வாசகர்கள் போன்றோர் பத்திரிகையுடன் தமக்கு எவ்வளவு கருத்து வேறுபாடு இருந்த போதும் பத்திரிகையைச் சாகடிக்க விடமாட்டார்கள். எப் படியாகிலும் அதைப் பிழைக்கச் செய்யவும் உயிரோடு வாழச் செய்யவும் தம்மால் முடிந்த அத்தனை வழிகளிலும் பொருளாதார உதவிகளைச் செய்து வருகிறார்கள்.

ஒற்றுமை உணர்வு, மொழிப்பற்று, இலக்கிய தாகம், படிக்கும் ஆர்வம் போன்றவைதான் இவ்வுதவிகளின் காரணிகள் என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ளுகிறார். இலங்கைத் தமிழ் இலக்கியம் தரமான ரசனையையும், அமரத்துவமான படைப்பு களையும் மேலும் உருவாக்கும் என்று தமது மக்களின் சார்பில் உறுதி கூறுகிறார்.

"தீபம்"
நவம்பர் 1979.

## டொமினிக் ஜீவாவுடன் ஒருமணி நேரம்

**சீரழிந்துபோன ஏகாதிபத்திய சமூக அமைப்பை உடைத்தெறிவதில் எவன் ஒருவன் தன் சிறிய அளவிலான பங்கையேனும் தன் இலக்கியப் படைப்பின் மூலம் தருகிறானோ, அவனை நாங்கள் எங்களுடன் சேர்த்துக் கொள்கிறோம்-ஒரு எழுத்தாளன் என்று அங்கீகரிக்கின்றோம்.**

*இலங்கையின் பிரபல எழுத்தாளரும், 'மல்லிகை' ஆசிரியருமான திரு. டொமினிக் ஜீவாவை நானும் நண்பர் பார்த்திபனும் பேட்டி கண்டோம். மிகவும் அமைதியான தோற்றமளிக்கும் அவருக்குள் ஒரு எரிமலை குமுறிக்கொண்டிருப்பதையும் இந்த சமூகத்தின் மேல் கொண்ட ஒரு கோபம் சுவாலையாய் வீசிக்கொண்டிருப்பதையும் எங்களால் உணர முடிந்தது. ஒரு சவரத்தொழிலாளியின் மகன் எனத் தன்னைப் பெருமிதத்துடன் அறிமுகப்படுத்திக் கொள்ளும் இவர்பள்ளியில் படிக்கும்பொழுது வாத்தியாரின் தவறைச் சுட்டிக்காட்டியதால், "செரைக்கப் போறது தானேடா" என்று மேல் ஜாதி வாத்தியார் திட்டியதை சவாலாக ஏற்றுக்கொண்டு பேனா பிடித்ததாகக் கூறும் இவர்-நமக்கொரு புல்லரிக்கும் அனுபவம். மேலே படியுங்கள்.*

*-கலாமணி*

*கலா:* *தாங்கள் இலக்கிய ஈடுபாடு கொள்ளத் தூண்டு கோலாக இருந்தது எது? எத்தனை வருடமாக எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்?*

*ஜீவா:* *1948ல் இருந்து தான் எழுதிக் கொண்டிருக்கிறேன். சுமார்*

25 வருடங்களாக இலங்கையில் அப்பொழுதிருந்த சமூகக்கொடுமைகளும் அடக்குமுறைகளும் என்னை நேரடியாகப் பாதித்து என்னை பேனா பிடிப்பவனாக்கியது. நான் எழுத ஆரம்பித்த காலத்தில் தோழர் ப. ஜீவானந்தம் தமது தலைமறைவு வாழ்க்கையின் போது இலங்கை வந்திருந்தார். நானும் என்போன்ற சில இளைஞர்களும் அவரைத் தற்செயலாகச் சந்தித்தோம். அவர்தான் எங்களுக்குச் சரியான பாதையைக் காண்பித்தார். எங்களை நெறிப்படுத்தி வழிப்படுத்தினார்.

கலா: மல்லிகை இதழை எத்தனை ஆண்டுகளாக நடத்திக் கொண்டு வருகிறீர்கள்?

ஜீவா: சுமார் 14 ஆண்டுகளாக.

கலா: இங்கே உள்ளதைப் போல் உங்கள் நாட்டிலும் இலக்கிய அமைப்புகள் உண்டா?

ஜீவா: 14 வருடங்களுக்கு முன்பு இலங்கையின் முற்போக்கு எழுத்தாளர்கள், கலைஞர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து 'முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' என்னும் அமைப்பை ஏற்படுத்தினோம். இதுவரைக்கும் பிரம்மாண்டமான மூன்று அகில இலங்கை மாநாடுகளை நடத்தியிருக்கிறோம்.

கலா: "commit' செய்துகொண்டு எழுதுவதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஜீவா: சார்புநிலை இருக்க வேணடுமென்ற அவசியமில்லை. ஆனால் எழுத்தாளனுக்கு, கலைஞனுக்கு ஒரு விரிந்து பரந்த வாழ்க்கையின் பூரணமான அம்சங்களையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கிற ஒரு உலகக் கண்ணோட்டம், ஒரு தத்துவப்பார்வை, நோக்கு வேண்டும் என்று நினைக்கிறேன். அப்படி இல்லாமல் ஒரு சார்பு நிலையை ஏற்படுத்திக் கொண்டு எழுதினால் நாம் மற்றவர்களால் தனிமைப் படுத்தப்படக் கூடிய அபாயம் நேரிடும். ஒரு முழுமையான கலைஞன் என்பவன் வாழ்க்கையின் முழுமையையும்

தரிசிக்க வேண்டும்.

கலா: கார்க்கி இருந்த அப்படிப்பட்ட ஒரு தத்துவ நோக்கின் காரணமாக மேற்கத்திய நாடுகளில் அவருக்கு டால்ஸ் டாயைப் போன்று, செகாவைப் போன்று செல்வாக்கு இல்லாமற் போய்விட்டதே...?

ஜீவா: கார்க்கி ஒரு குறிப்பிட்ட தத்துவ நோக்குடையவர் எனினும் அவருடைய செல்வாக்கு டால்ஸ்டாய்க்கோ, செகாவுக்கோ குறைந்ததல்லவென்று நினைக்கிறேன். டால்ஸ்டாயும், செகாவும் மேதைகளென்று மதிக்கப்பட்டார்களே ஒழிய நசுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட பெருவாரியான மக்களால் நேசிக்கப்படவில்லை. கார்க்கியை மக்கள் நேசித்தார்கள். அவரைத் தங்களில் ஒருவராகக் கருதி அன்பு செலுத் தினார்கள்.

கலா: முற்போக்கு எழுத்தாளர்கள் மற்றவர்கள் மாதிரித் தரமான இலக்கியம் படைக்கும் திறனற்றவர்கள் என்னும் ஒரு அபிப்பிராயம் நிலவுகிறதே.....?

ஜீவா: இங்கு எப்படியோ, ஆனால் இலங்கையில் தரமான இலக்கியப் படைப்பைத் தருகிறவர்கள் முற்போக்கு எழுத்தாளர்களே. கலை இலக்கியத்துறையில் தலைமை தாங்கி நடத்துவதும் முற்போக்கு எழுத்தாளர்கள் தான். மற்ற எழுத்தாளர்களும்கூட தங்களுடைய படைப்புகளுக்கு முற்போக்கு எழுத்தாளர்களின் அங்கீகாரம் இருந்தால்தான் மக்களிடம் வெற்றி பெற முடியும் என்று எதிர்பார்க்கும் நிலைமையை நாங்கள் அங்கே ஏற்படுத்தி இருக்கிறோம்.

கலா: தமிழ்நாட்டைவிட இலங்கையில் முற்போக்கு இலக்கிய இயக்கங்கள் அதிகமான வலுவும் வீச்சும் பெற்றிருப் பதற்கான பொருளாதாரக் காரணங்கள் ஏதும் இருப் பதாகக் கருதுகிறீர்களா...?

ஜீவா: இலங்கை ஒரு சிறிய நாடாக இருப்பதால் எங்களுக்குச் செய்தித் தொடர்பு எளிதாக இருக்கிறது. உயர்மட்டக்கல்வி

தாய்மொழியில் கற்பிக்கப்படுகிறது. இளைஞர்களில் அதி கம்பேர் படித்தவர்களாயிருக்கிறார்கள். சுமார் இருபது ஆண்டுகளாக இலக்கிய இயக்கங்களை முற்போக்கு எழுத்தாளர்களே தலைமை தாங்கி நடத்தி வருகிறார்கள். அங்குள்ள பிற்போக்கு சக்திகள் அரசியலில் காட்டிய அளவுக்கு இலக்கியத்தில் ஆர்வம் காட்டவில்லை. எனவே முற்போக்கு இலக்கிய இயக்கங்கள் வளர, அங்கே நல்ல வாய்ப்புக்கள் இருக்கின்றன.

கலா: இந்த வளர்ச்சிக்கு ஸ்தாபனம் எந்த அளவுக்கு உதவி யிருப்பதாக நினைக்கிறீர்கள்?

ஜீவா: தமிழில் முற்போக்கு எழுத்தாளர் சங்கமும், சிங்களத்தில் மக்கள் எழுத்தாளர் முன்னணியும் கணிசமான எழுத் தாளர்களை உள்ளடக்கிய ஸ்தாபனங்களாக இயங்கி, தத்துவார்த்த நோக்குகளில் வழிகாட்டுகிறது.

கலா: சமீப காலங்களில் தமிழ் நாட்டில் பேசப்படுகிற சர்ரிய லிஸம், எக்ஸிஸ்டென்ஷியலிஸம் மாதிரி அங்கேயும் ஏதாவது இயக்கங்கள் தோன்றியுள்ளனவா?

ஜீவா: அவை எப்போதோ தோன்றி எப்போதோ நசித்துப் போய் விட்டன. "கலை கலைக்காகவே" என்று பேசியவர்களால் தான் இப்படிப்பட்ட விஷயங்கள் பேசப்பட்டன. இப் போதெல்லாம் அங்கே இவைகள் அங்கீகரிக்கப் படவில்லை.

கலா: எக்ஸிஸ்டென்ஷியலிஸத்தின் பிதாமகர் என்று சொல்லப் படும், சார்த்ரே மார்க்ஸிஸமும் எக்ஸிஸ்டென்ஷியலிஸமும் முரண்பட்டவையல்ல என்று சொல்லியிருப்பதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஜீவா: இப்படிப்பட்ட விஷயங்கள் பல்வேறு நேரங்களில் பல் வேறு தனிநபர்களால் பேசப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை எல்லாம் அவர்களுடைய காலங்களிலேயே அழிந்து ஒழிந்து விட்டன. மார்க்ஸிஸத்தை ஏற்றுக்கொண்டவன் ஒரு சோஷலிஸ்ட் ரியலிஸ்டாகத் தான் இருக்க முடியும்.

நாங்கள் கார்க்கியின் சோஷலிஸ யதார்த்த வாதத்தைத் தான் பின்பற்றுகிறோம்.

கலா: சாத்ரேயும் கூட தன்னை ஒரு கம்யூனிஸ்ட் என்று சொல்லிக்கொள்கிறாரே?

ஜீவா: வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு தனிநபர்கள் தங்களைக் கம்யூனிஸ்டுகளோடு அடையாளம் காண முயன்று வந்திருக்கிறார்கள். அவர்கள் போலிகள்.

கலா: தமிழ் நாட்டின் இன்றைய இலக்கிய நிலைமை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஜீவா: தமிழ் நாட்டை நாங்கள் நீண்ட நாட்கள் படித்துக் கொண்டு வருகிறோம். இளையதலைமுறையினரால் நடத் தப்படுகிற சிறுசிறு சஞ்சிகைகளின் மூலம் நாங்கள் தமிழ் நாட்டின் ஆன்மாவைத் தெரிந்து கொள்கிறோம். சில படைப்புகள் அற்புதமாக இருக்கின்றன. கவிதை, புதுக்க விதை, மொழி இவற்றின் வீச்சு ரொம்ப நன்றாக இருக் கிறது. அதே நேரத்தில் சில படைப்புகளில் அதீத கற்பனாவாதமும் அதீத இடது சாரித் தனமும் இருக்கிறது. ஆனாலும் இவர்கள் சமூகத்தை மாற்ற வேண்டும் என்ற துடிப்போடு பேனாவை எடுத்துள்ளனர். போராட்ட உணர்வுகளைப் பிரதிபலிக்கும் போக்கு இவர்களுடைய எழுத்துக்களில் காணப்படுகிறது. குறிப்பாக பொன்னீலன், பா. செயப்பிரகாசம், கி. ராஜநாராயணன், ஜெயந்தன், சிற்பி, நவபாரதி, புவியரசு, மீரா, மேத்தா, டி. செல்வராஜ், அக்னிபுத்திரன், கு. சின்னப்பபாரதி, பரிணாமன், லிங்கன் இவர்களுடைய படைப்புகளில் சிந்தனை நெருக்கமும் அதில் ஒரு தோழமையும் இருக்கிறது. பொன்னீலனின் "கரிசலும்" லிங்கனின் 'ஒரு பெண் ஊருணியில் குளிக் கிறாள்' என்னும் சிறுகதையும் மிக சிறந்த படைப்புகள். அவை என்னை வெகுவாகக் கவர்ந்தன.

கலா: உங்கள் நாட்டின் இலக்கிய வளர்ச்சியில் விமர்சனம் ஆற்றியிருக்கும் பங்கு என்ன?

ஜீவா: தமிழகத்தைவிட இலங்கையில் விமர்சனம் காத்திரமாக வளர்ந்திருக்கிறது என்பேன். காரணம், அங்குள்ள பல்கலைக் கழகக் கலாநிதிகளின் பங்கு குறிப்பிடத்தக்கது. இவர்கள் கலாநிதிகளாகி விமர்சனத்துறைக்கு வந்தவர் களல்ல. மாணவர்களாயிருக்கும் போதே முற்போக்கு இலக்கிய இயக்கங்களால் ஆகர்ஷிக்கப்பட்டு கட்டங் கட்டமாகத் தங்களோடு இலக்கிய இயக்கங்களையும் வளர்த்து வந்துள்ளார்கள். கலாநிதி கைலாசபதி, கலாநிதி சிவத்தம்பி, கலாநிதி சண்முகதாஸ், தில்லைநாதன், ஏ.கே. கனகரத்னா போன்ற பல்கலைக்கழக விமர்சகர்கள் இன்று ஈழத்தில் மிகவும் மதிக்கத் தக்கவர்களாயிருக் கிறார்கள். இவர்கள் வெறும் ரசனை உணர்வு விமர்சகர் கள் அல்ல. ஒரு தெளிந்த பார்வையும் விஸ்தாரமான இலக்கிய ஆளுமையும் இலக்கியப் பரிச்சயமும் கொண்ட இவர்களது விமர்சனங்கள் பல்வேறு மட்டத்தினராலும் இன்று மதிக்கப்படுகின்றது.

கலா: சில எழுத்தாளர்கள் விமர்சன எதிர்ப்பாளர்களாயிருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஜீவா: விமர்சன எதிர்ப்பு அவைக்குவாத ஒன்று. இந்த விமர்சன எதிர்ப்பு கையாலாகாதவர்களிடமிருந்து வருகிறதே ஒழிய ஆண்மையுள்ள படைப்பாளி எவனிடமிருந்தும் வருவதில்லை.

கலா: முற்போக்கு இலக்கியப் படைப்புகளும் கூடத்தான் மக்களிடம் போய்ச் சேருவதில்லை. இதற்குப் படைப் பாளிகள் எந்த அளவுக்குப் பொறுப்பானவர்கள்? மக்களிடம் கொண்டு போய்ச் சேர்ப்பதும் அவர்களுடைய கடமை என்கிறீர்களா?

ஜீவா: மக்களிடம் போக வேண்டுமென்றால் மக்கள் அறிவுடை யவர்களாக, கல்வி கற்றவர்களாக ஆகவேண்டியதுதான். ஒருவன் யாருக்காக எழுதுகிறான் என்பதே கேள்வி. இன்று சோஷலிஸ நாடுகளில் இந்த நிலைகளைக் கடந்து வந்து விட்டார்கள். எழுத்தாளன், அவனுடைய பேனா, கருத்து,

சிந்தனையாற்றல் இவற்றிற்கு மட்டுமேதான் பொறுப் பானவன். மக்களிடம் கொண்டு போய்ச் சேர்ப்பது அரசு அல்லது அரசியல் வாதியின் கடமை.

கலா: ஆனாலும் மக்கள் அனைவரையும் பங்கு கொள்ள வைக்கிற ஒரு வெகுஜனக் கலைவடிவம் ஒன்றை உருவாக்குவதும் அவசியம் இல்லையா?

ஜீவா: இது மிகவும் முக்கியமான பிரச்சினைதான். இன்றுள்ள நிலைமையில் சினிமாதான் ஒரு வெகுஜனக் கலையாகும். அதனை நாம் பயன் படுத்திக் கொள்ளத் தவறிவிட்டோம். துரதிர்ஷ்ட வசமாக தகாதவர்கள் அதனைப் பயன்படுத்திக் கொண்டு விட்டார்கள்.

கலா: புதுக் கவிதை பற்றி...?

ஜீவா: புதுக் கவிதை இன்று அந்தஸ்து பெற்று விட்டது. இலங்கையில் இன்று அது மிகவும் பிரபல மடைந்து விட்டது. 'மல்லிகை' தொடர்ந்து புதுக்கவிதைகளை வெளி யிட்டுக் கொண்டு வருகிறது. வானம் பாடிக் கவிஞர்கள் இந்தப் புதுக்கவிதை வடிவத்தை மிகவும் செவ்வையாகக் கையாண்டு வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

கலா: ஒரு பொது நோக்குடன் இலக்கியத்தை அணுக வேண்டும் என்று சொல்கிற நீங்கள் எந்தெந்த பொதுவான அம்சங் களில் ஒரு இலக்கிய அணிச் சேர்க்கையை உருவாக்கலாம் என்கிறீர்கள்?

ஜீவா: சீரழிந்துபோன ஏகாதிபத்திய சமூக அமைப்பை உடைத் தெறிவதில் எவன் ஒருவன் தன் சிறிய அளவிலான பங்கையேனும் தன் இலக்கியப் படைப்பின் மூலம் தருகிறானோ அவனை நாங்கள் எங்களுடன் சேர்த்துக் கொள்கிறோம். ஒரு எழுத்தாளன் என்று அங்கீகரிக் கிறோம். அந்தந்த கால கட்டங்களுக்கு ஏற்ப படைக் கப்படும் படைப்பைக் கொண்டே நாங்கள் ஒருவனை அடையாளம் கண்டு கொள்கிறோம். இன்றைய நிலையில் இதுதான் சரியான கணிப்பாகும். இப்படிப்பட்ட நேச சக்தி

களையெல்லாம் நாங்கள் ஓர் அணிக்குள் கொண்டு வருகிறோம். எல்லாம் அணுகு முறையைப் பொறுத்த விஷயம். ஜனநாயகப் பார்வையுடன் எழுதுகிறவர்களுக்கும் நமக்கும் இடையிலுள்ள ஒன்றுபட்ட கருத்தை வலியுறுத்தி ஒரு அணியை நம்மால் கட்ட முடியும்.

கலா: எழுதுவதைத் தவிர வேறு எந்தெந்த வடிவங்களில் நீங்கள் மக்களிடம் போகிறீர்கள்?

ஜீவா: இலங்கையில் முற்போக்கு எழுத்தாளர்கள் அனைவரும் சிறந்த பேச்சாளர்களாகவும் இருக்கிறோம். எழுத்துத் தொடர்பைவிட பேச்சுத் தொடர்பே அதிகமாக இருக்கிறது. எல்லா மட்டத்திலும் குறிப்பாக ஆலயத் திருவிழாக்களில் கவிஞர்களின் கவியரங்கு விடிய விடிய நடைபெறும். சிறிய நாடாக இருப்பதால் இந்தக் கவிஞர்கள் மக்களிடம் பரவலான முறையில் விளம்பரமாகி விடுகின்றனர். மக்களிலும் அதிக சதவிகிதத்தினர் படிப்பறிவுள்ளவர்களாய் இருப்பது ஒரு சாதகமான அம்சமாகும். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் எழுத்தாளர்கள் மக்களை அணுகவும் மக்கள் எழுத்தாளர்களை அணுகவும் உதவிகரமாயிருக்கின்றன.

கலா: இன்றைய நிலையில் இலக்கியத்தில் இளைஞர்களின் பணி மேலும் ஆக்கபூர்வமாக இருக்க அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறீர்கள்?

ஜீவா: இன்றைய நிலையில் இலக்கிய வளர்ச்சிக்கு இளைஞர்களின் பங்கு ரொம்ப முக்கியமானது. அவர்களிடம் தான் எழுச்சி ரொம்ப அதிகமாக இருக்கிறது, அதே நேரத்தில் முதிர்ச்சியின்மையும் காணப்படுகிறது. படைப்பாற்றல் உள்ள இளைஞர்கள் ஸ்தாபன ரீதியாக ஒன்று திரளவேண்டும். சிதறிப்போய் திரிபுகளாக, உதிரிகளாக மாறிவிடக் கூடாது. மக்களைப் படிக்க வேண்டும். அதன்மூலம் அவர்கள் படைப்பாற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

'சகாப்தம்.'

## இங்கும் அங்கும்

**தமிழ் சர்வதேசமொழி ஆகும். இன்றைக்குத் தமிழ் சர்வதேச சிறப்பு அற்றிருக்கலாம். ஆனால் அதற்கு சர்வதேசத் தன்மை, வலிமை, சிறப்பு என்பன இருக்கின்றன. ஆயிரம் ஆயிரமாண்டுகள் செழுமைப்பட்டு வந்த தொன்மையான மொழி, தமிழ்ச் சுரங்கத்தில் பெருமதிப்பு வாய்ந்த வைரங் களும், வைடூரியங்களும் நிறைந்திருக்கின்றன.**

***(கவிஞர் செல்லியன் தலைமையில் 9.10.79 அன்று, தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் கோவைக் கிளை அளித்த வரவேற்பின்போது கூறிய கருத்துக்கள்).***

இரண்டொருமுறை தமிழகம் வந்துங்கூட எனக்கு மிக அருகாமையில் இருக்கும் கோவைக்கு வர இயலவில்லை, விரும்பவுமில்லை. காரணம், வானம்பாடியை நீங்கள் எல்லோரும் சேர்ந்து கொலை செய்து விட்டீர்கள். ஒரு குழந்தை இறந்து விட்டால் மறு குழந்தையைப் பெற்றுக் கொள்ளலாம்! ஆனால் ஒரு இலக்கிய அமைப்பு இறந்து விட்டால் அதை மீண்டும் பெற்றெடுப்பது இயலாத ஒன்றாகும்.

சில பெரியார்கள் இந்தியைத் தேசிய மொழி என்றும் கூறுகிறார்கள். அடுத்த தேசிய மொழி தெலுங்கு என்று கூட சென்னையில் பேசக் கேட்டேன். நமது தேசிய சிந்தனையை வங்க மொழியிலிருந்து பெற்றோம். இயக்க இலக்கியத்தை மலையாள மொழியிலிருந்து பெற்றோம். திரைப்படத் துறையில் புதுமைகளைக் கன்னட மொழியிலிருந்து பெறுகிறோம். நல்ல இலக்கியச் சிந்தனையை மராட்டிய மொழியிலிருந்து பெற்றோம்.

அத்தனை மொழிகளும் இந்திய தேசிய மொழிகளாகும். ஆனால்...தமிழ்? அது சர்வதேச மொழியாகும். அவ்வாறு

கூறுவதில் நான் பெருமையடைகின்றேன். இன்றைக்குத் தமிழ் சர்வதேசச் சிறப்பு அற்றிருக்கலாம். ஆனால் அதற்குச் சர்வதேசத் தன்மை, வலிமை, சிறப்பு என்பன இருக்கின்றன.

சர்வதேசச் சிறப்புடைய மொழியைப் பேசும் நாம் அதற்குரிய தன்மையைப் பெற்றிருக்கிறோமா? பாரதி தமிழகத்தில் பிறந்தான். ஆனால் அவன் தமிழன் மட்டுமல்லன்; அவன் உலகத்துக்குச் சொந்தமானவன்.

நாம், நாம் என்று தனித்துப் பேசி, தனிமைப் படுத்திக் கொண்டு நாற்றமெடுத்துப் போய்க் கிடக்கின்றோம். உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடத்துகின்றோம். தமிழ் சுதந்திரமானது. ஆயிரம் ஆயிரமாண்டுகள் செழுமைப் பட்டு வந்த தொன்மை யான மொழி. தமிழ்ச் சுரங்கத்தில் பெருமதிப்பு வாய்ந்த வைரங்களும் வைடூரியங்களும் நிறைந்திருக்கின்றன. அவை தோண்டி எடுக்க எடுக்க குறையாதவைகளாக மின்னுகின்றன. எனவேதான் ஈழத்து எழுத்தாளர்களாகிய நாங்கள் உலகச் சிந்தனையை ஏற்றுள்ளோம். எங்களுக்கு ஒரு துணிவு இருக்கிறது, வர்க்கப் பார்வையிருக்கிறது.

நான் மணியாச்சிப் புகைவண்டி நிலையத்தில் இறங்கியதும் எனது கால் அணியைக் கழற்றி விட்டு, அந்த மண்ணை எடுத்து நெற்றியில் பூசிக் கொண்டேன்; தண்ணீரை அள்ளி புனித நீராகக் குடித்து மகிழ்ந்தேன். ஏன்? அந்த மண்ணில் வாஞ்சிநா தன் தோன்றினான்; செயற்கரிய தியாகத்தைச் செய்தான்; அவனது தேச விடுதலையுணர்வை நான் மதிக்கிறேன்; வணக்கம் செய்கிறேன்.

இங்கு பலரும் இன்று புகழிற்காகவே வாழ்ந்து கொண்டி ருக்கிறீர்கள். நாங்கள் எதிர்காலச் சந்ததிகளுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இங்கு ஓர் எழுத்தாளனுக்கு முதல் வகுப்பு பிரயாண ஏற்பாடும், தங்குவதற்கு ஐந்து நட்சத்திர ஹோட்டல் வசதியும் செய்து தரவேண்டியுள்ளது. எழுத்தாளர்கள் ஒரு பெரிய பந்தாவுடன் நடந்துகொள்கிறார்கள். அவர்கள் கூட்டங்களுக்குக் காலதாமதமாக வருவதில் பெருமிதம் அடைகிறார்கள். போலித் தன்மை நிறைந்த வாழ்வை நீங்கள் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். இன்று வேடதாரிகளாகி விட்டீர்கள். நாங்கள் கடமையை

உணர்ந்து செயலாற்றுகிறோம். எங்களில் எவருக்கும் போலித் தன்மை கிடையாது. வேடம் போட்டுப் பழகத் தெரியாது. நாங்கள் புகழை விரும்பாதவர்கள். குறிப்பாக எங்களிடம் பந்தா கிடையாது.

இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எங்கள் நாட்டிலும் ஆங்கில மோகம் இருக்கிறது. மேல்தட்டு மனிதர் களாகவுள்ள சிங்களவர்களும், தமிழர்களும் ஆங்கிலத்தை விரும்புகிறார்கள். பாட்டாளி மக்களாகிய நாங்கள் எங்கள் தாய்மொழிகளான தமிழையும் சிங்களத்தையும் விரும்புகிறோம். நாங்கள் ஆங்கிலத்தன்மையை விரும்பாதவர்கள்.

நாங்கள் தமிழ் வேண்டுமென்று கூறியவர்கள். நாங்கள் சமூகப் பற்றுடையவர்கள். இந்தச் சமுதாயம் வாழ வேண்டும், வளரவேண்டும் என்று எண்ணுபவர்கள்; அதற்காக உழைத்துக் கொண்டிருப்பவர்கள். நாங்கள் வெறும் பேனா பிடித்தெழுதும் எழுத்தாளர்கள் அல்லர். தேவைப் பட்டால், எழுதுகோலை உடைத்தெறிந்துவிட்டு, தெருவில் நடக்கத் தயாராக இருக்கும் துணிவு மனவலிமை எங்களுக்குண்டு. நாங்கள் சமுதாய விஞ்ஞான வளர்ச்சிக் கண்ணோட்டத்தோடு பிரச்சினைகளைப் பார்க்கிறோம்.

எங்கள் நாட்டில் கலாநிதிகளின் இலக்கிய ஆட்சி நடந்து கொண்டு வந்தது. இந்தக் கலாநிதி ஆதிக்கத்தை விளக்கி 'மல்லிகை'யில் 15 கட்டுரைகள் எழுதப்பட்டன. எழுதியவர்கள் எவரும் கலாநிதிகள் அல்லர், உயர் நிலைப் பள்ளி வரை படித் தவர்கள்; பீடி சுருட்டும் தொழிலாளி; கல்லுடைக்கும் தொழிலாளி போன்றவர்களே. ஆனால் அவர்களுக்கு இலக்கிய வேட்கையும் உயர்ந்த சிந்தனையும் இருக்கிறது. கடைசியில் நான் ஒரு பத்திரிகை ஆசிரியனாக அல்ல ஒரு எழுத்தாளனாக, எனது கருத்தைத் தொகுத்து கலாநிதிகள் என்ற திமிர்பிடித்தவர்கள், அவர்கள் விமர்சகர்களே தவிர, படைப்பாளர்கள் அல்லர் என்று தாக்கி எழுதினேன். இவ்வளவும் நடந்து முடிந்த பின்னரும் அந்தக் கலாநிதிகள் எனது 'மல்லிகை'யில் தொடர்ந்து எழுதிக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு இருக்கின்ற மனவலிமையும் மனப்

பக்குவமுந்தான் இத்தகைய விமர்சனங்களைத் தாங்கிக் கொண்டு தொடர்ந்து எழுதுவதற்குரிய காரணமாகும்.

ஆனால் தமிழகத்தில் நிலைமை நேர்மாறானது. தமிழகக் கலா நிதிகளுக்கு விமர்சனத்தைத் தாங்கிக் கொள்ளும் மனவலிமை கிடையாது. இது வளர்ச்சியைப் பாழ்படுத்தும். தேங்கிய குட்டை களாகி நாற்றமெடுக்கும்.

பேச்சும் நடப்பும் முரண்படக்கூடாது. எழுத்தாளனுக்கு இதய சுத்தி வேண்டும். போலித்தனமான இலக்கியப் போக்கு வேண்டவே வேண்டாம். அந்தப் போலித்தனம் அரசியலோடு நின்று விடட்டும்.

இங்கு எழுத்தாளர்களைக் கூப்பிட்டு, எழுதிய கதையில் சில பகுதிகளைத் திருத்தவும், முடிவை மாற்றவும் சொல்லுகிற பத்திரிகை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அதன்படி நடக்கிற எழுத்தாளர்களும் இருக்கிறார்கள். எங்கள் நாட்டில் இந்தப் போக்கு இல்லை. இங்கு பந்தா இருக்கிறது. எங்களில் பந்தா இல்லை.

என்னைச் சிறந்த எழுத்தாளன் என்று கூறினீர்கள். அது காதில் பூ வைப்பது போன்றதாகும். என்னை விட மிகவும் திறமையாக இலக்கியங்களைப் படைக்கும் எழுத்தாளர்கள் ஈழத்தில் நிறையப்பேர் இருக்கிறார்கள். இதைக் கூறுகின்ற மனவலிமை எனக்கு இருக்கிறது. இவ்வாறு கூறுவதில் பெருமை யும் அடைகிறேன். இது வளர்ச்சியைக் குறிக்கும். ஆனால் இங்குள்ளவர்களுக்கு இந்த மனவலிமை கிடையாது. இங்கு ஒவ்வொருவரும் பெரிய எழுத்தாளராக எண்ணிக் கொண்டிருக் கிறார்கள்.

என்னை எதிர்க்கக் கூடிய பிற்போக்கு வாதிக்குக்கூட எங்கள் நாட்டில் ஆத்ம சுத்தி இருக்கிறது. ஆத்ம சுத்தியுடைய எவரை யும் நான் மதிக்கத் தயாராக இருக்கிறேன். என்னால் இந்துமதியை, சிவசங்கரியை எவ்வாறு மதிக்க முடியும்?

இந்தச் சமுதாயத்தைப் பற்றி நினைக்காத அவர்களின் தொடர்பு எனக்கு வேண்டாம்; ஆயிரம் கும்பிடு போட்டு விட்டு ஒதுங்கிக் கொள்ள விரும்புகிறேன். மனிதனைப் பற்றிக் கவலைப் படுகின்ற எழுத்தாளர் எவராக இருந்தாலும் அவரது வீடு தேடி,

கதவைத் தட்டி அவர் அடிபணியத் தயாராக உள்ளேன்.

எங்கள் புதுக்கவிதை மிகவும் முன்னேறி இருக்கிறது. அதற்கு வழிகாட்டியாக இருந்த இந்த மண்ணில் தோன்றிய "வானம்பாடி"யைச் சாகடித்துவிட்டீர்கள். அதன் கழுத்தைத் திருகிக் கொன்று விட்டீர்கள். உங்களை மன்னிக்கவே முடியாது. நான் அடுத்தமுறை கோவைக்கு வரவேண்டுமென்று நீங்கள் விரும்பினால் வானம்பாடியைப் பறக்கவிடுங்கள்; புத்துயிர் அளித்துத் தாருங்கள். வானம்பாடியின் மறைவுக்கு நீங்கள் ஒவ்வொருவரும் புவியரசு, மேத்தா, சிற்பி, ஞானி, சக்திக்கனல் ஆகியோர் பொறுப்பேற்க வேண்டும்.

இங்கிருந்து எங்கள் நாட்டிற்கு சாவி, குமுதம், தினமணிக் கதிர், இதயம், குங்குமம் போன்ற குப்பைகள் வந்து குவிகின்றன. எங்களது வளர்ச்சிக்குத் தடையாக இவைகள் இருக்கின்றன. பெண்களை விளம்பரப் பொருள்களாக்கி விற்கிறார்கள். பக்கத்துக்குப் பக்கம் சினிமாக்காரி! சினிமாக்காரிகள் மூக்கு, விழி, மார்பகம் போன்ற அங்கங்களைப் போட்டுப் பக்கங்களை நிரப்புகிறார்கள்.

சென்னை விமான நிலையத்தில் இறங்கும் என்னையும், ஐந்து ஸ்டார் விடுதியில் தங்கியிருக்கும் குபேரனையும் தொடர்பு படுத்தித்தான் கதைகள் எழுதப்படுகின்றன. இந்த நாட்டில் அவதியுறும் மனிதனைப் பற்றிய கதைகளை எங்களால் படிக்க முடியவில்லை. இத்தகைய கதைப்பின்னல்களைத் தயவுசெய்து நிறுத்திவிட்டு மனித இனத்தைப் பற்றிச் சிந்திக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

விடுதலை பெற்று முப்பத்திரண்டு ஆண்டுகள் கழித்துக் கூட மனித இனத்தைப் பற்றிச் சிந்திக்காத சினிமாக்கள் தான் வளர்ந்திருக்கின்றன. ஐந்தாம் தர சிரிப்புக்களைத் தாங்கி மூன்று மணிநேரம் மனிதனைச் சிரிக்க வைக்கும் நாடகங்களை எழுதிக் கொண்டிருக்கிறார்கள்: இதைப்பற்றி நீங்கள் வேதனைப் படவோ, வெட்கப்படவோ இல்லை.

நாடகத்தில் நாங்கள் முன்னேறி வருகிறோம். நாடகக்காரனும் பார்வையாளனும் இணைகிற அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக் கிறோம். எங்களிடம் ஐந்தாம் தரமான நகைச்சுவைகள் இல்லை.

சாதனையை எழுப்பக் கூடிய தன்மை வளர்ந்து இருக்கிறது.

இன்றைக்குச் சென்னை இலக்கியம் நச்சு இலக்கியமாக்கப் பட்டிருக்கிறது. ஓசியில் இலக்கியத்தைப் படிக்கும் தன்மை இங்கு வளர்ந்துபோயிருக்கிறது. எங்கள் நாட்டு அமைச்சர் என்னிடம் "ஏன் மல்லிகை எனக்குக் கிடைப்பதில்லை" என்று கேட்டார். "நீங்கள் மல்லிகையின் சந்தாதாரர் இல்லை" என்று பதில் கூறினேன். தயவு செய்து எந்தப் பத்திரிகையையும் எவருக்கும் இலவசமாக அனுப்பாதீர்கள். பணம் கொடுத்து வாங்குவதற்கு வசதியில்லாதவர்களுக்கு வேண்டுமானால் கொடுங்கள்.

ஈழத்து எழுத்தாளர்கள் மார்க்சீயத்தின் அடிப்படைத் தன்மையை ஏற்று இலக்கியம் படைக்கிறார்கள். அவர்களைத்தான் மக்கள் போற்றுகிறார்கள். அத்தகைய எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு ஈழத்து மக்களிடம் வரவேற்பு இருக்கிறது.

நாமெல்லாம் சோஷலிசப் பயணம் செய்து கொண்டிருக் கிறோம். நமக்கு எதிர்ப்புகளும் தடைகளும் அதிகம். எங்களுக்கு நிறைய அனுபவம் இருக்கிறது. பணக்காரர்கள் தங்கள் வீட்டுப் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு கட்சியில் சேர்த்து விடுகிறார்கள். எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர்களின் நலம் பாதுகாக்கப்படும். நாங்கள் அவர்களை இனங்கண்டு வைத்துள்ளோம். நீங்களும் அவர்களை இனங்கண்டு கொள்ள வேண்டும்.

பிற்போக்கு எழுத்தாளன், சமய சந்தர்ப்பவாத எழுத்தாளன் இருவரில் சமுதாயத்துக்கு தீமை பயக்கக் கூடியவன் யாரென்றால், பிற்போக்கு எழுத்தாளன் ஆத்மசுத்தியுடையவன். அவன் நாளை திருந்தலாம். ஆனால் சமய சந்தர்ப்பவாத எழுத்தாளர்கள்தான் பிற்போக்கு எழுத்தாளர்களை விடச் சமுதாயத்துக்கு அதிகப்படி யான தீமை பயப்பவர்கள். சமய சந்தர்ப்பவாத எழுத்தாளர் களுக்கு உதாரணமாக தீபம் நா. பார்த்தசாரதி போன்றவர்களைக் கூறலாம். இவர்கள் சிலநேரங்களில் அதிதீவிரம் பேசுவார்கள். சமய சந்தர்ப்பவாதமும் அதிதீவிரவாதமும் ஒருதாய் பெற்றெடுத்த இரட்டைக் குழந்தைகள்.

"ஜீவா"

டிசம்பர் - 1979

## சரஸ்வதி மைந்தன்

**ஏகபோக பத்திரிகை ஆதிக்கமிக்க ஒரு தேசத்தில் ஆரோக்கியமான இலக்கிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி விடமுடியாது. இலக்கியச் சிற்றேடுகளின் பரவலும் தாக்கமுமே புதிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.**

பேட்டி கண்டோர்

***வைகறைவாணன் - அரணமுறுவல்***

உலக நாடுகளில் எல்லாம் தமிழர்கள் வாழுகிறார்கள். தமிழ் இலக்கியத்தின் பரப்பு உலக முழுவதும் விரிந்து கிடக்கிறது. உலகத் தமிழ் இலக்கியம் உலக இலக்கியத் தரத்திற்கும் முற் போக்கு உணர்வுகளுக்கும் முன்கையெடுத்து வருகின்ற நாடாக இலங்கை இன்றைக்கு இருக்கிறது. இந்தச் சின்னஞ் சிறு இலங்கையில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக "மல்லிகை" இலக்கியத் திங்களிதழை ஒரு சாதனையாகவே டொமினிக் ஜீவா நடத்தி வருகின்றார்.

தமிழின் இலக்கியச் சிற்றேடுகளில் புகழ் பெற்றிருந்த '*சரஸ்வதி*' பத்திரிகை மூலம் தமிழகத்தில் ஒரு படைப்பாளியாக அறிமுகமாகி தாமரை இதழிலும் தொடர்ந்து எழுதி படைப் பாளியாகவும், பத்திரிகையாளராகவும் விளங்குகின்ற டொமினிக் ஜீவாவை சிகரத்திற்காகப் பேட்டி காணச் சென்றோம், தமிழகத்திலிருந்து ஒரு வித்தியாசமான தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் இலங்கை தமிழ் தேசிய இனத்தின் மொழி, கலாச்சார வளத்தை அவர் மூலம் அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

இலங்கையின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் மொழி வளத்

தோடு இலங்கைப் படைப்புகள் வெளிவந்த தொடக்க காலத்தில் தமிழகத்தில் சிலர் இலங்கைப் படைப்புகளைப் படித்துப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் அடிக்குறிப்புகள் எழுதவேண்டும், அப்பொழுதுதான் இலங்கைப் படைப்புகளைப் புரிந்துகொள்ள முடியும் என்று பேசிய பொழுது, உங்களுடைய திருநெல்வேலி பாஷையை, தஞ்சாவூர் பாஷையை, சென்னை பாஷையை எங்களால் புரிந்து கொள்ள முடியும் என்று நீங்கள் நினைக்கும் போது எங்களுடைய இலங்கை பாஷையை உங்களால் புரிந்து கொள்ள முடியாதா? நான்கு கோடி தமிழர்கள் என்ற பெரும் பான்மையினரின் கலாச்சாரமே ஆதிக்கம் செலுத்த வேண்டு மென்றால் அதை வன்மையாக எதிர்ப்போம் என்று ஒரு காலத்தில் முழங்கியதை நினைவு கூர்கிறார்.

ஆனால் இன்றைக்கு தமிழகம்தான் இலங்கையின் இலக்கிய வளத்தை எதிர்பார்த்து இருப்பது எங்கள் நினைவுக்கு வரத்தவறவில்லை. பேட்டி கண்டோர்.

கேள்வி: உங்களுடைய முதல் படைப்பு எந்தப் பத்திரிக்கையில் வெளிவந்தது? அப்போது உங்களுடைய மனநிலை எப் படி இருந்தது?

பதில்: "முப்பது ஆண்டுகளுக்கு முன் முதல் சிறுகதை "சுதந் திரன்" பத்திரிகையிலே வந்தது. அதை அச்சில் பார்த் தவுடன் எனக்கு எல்லையில்லாத பூரிப்பு ஏற்பட்டது. என்னைப் போன்றவர்களாலும் எழுத முடியும், அது அச்சிலும் வெளிவரும் என்பதை உணர்ந்தபோது எனக்குள்ளே ஒரு இயல்பான தன்னம்பிக்கை ஏற்பட்டது.

கேள்வி: முற்போக்கு எழுத்தாளராக மாறியதின் காரணம் என்ன?

பதில் : முக்கியமாக இலங்கையில் இருக்கின்ற சமுதாய தாக் கங்கள் என்னுடைய சொந்த வாழ்க்கயைப் பாதித்தது. தேசம் முழுவதும் பல சிக்கலான பிரச்சினைகள் தோன்றி என் நெஞ்சத்தை உறுத்தக் கூடியதாக

அமைந்தது. இப்படியான சீரழிவுகளைத் தீர்க்கும் மார்க்கத்தைத் தேடியது மனம். ஒரு புதிய தீர்வை நோக்கி உந்தித் தள்ளியது. ஒரு புதிய சமுதாய அமைப்பின் மூலம் தான் இப்பிரச்சினைகளுக்கு விடிவு காணமுடியுமென நான் மனதார நம்பினேன். என்னைப் போன்ற நம்பிக்கையுள்ள பல இலக்கிய நெஞ்சங்கள் என்னை நெருங்கியிருந்தன. எனவே இயல்பாகவே முற்போக்கு இலக்கிய அணியில் என்னையும் ஒரு அங்கத்தவனாக இணைத்துக் கொண்டேன்.

கேள்வி: *முற்போக்கு இலக்கியம், விமர்சனம் இலங்கையில் வளர்ந்த அளவிற்கு தமிழகத்தில் வளரவில்லையே? இதற்கு இரண்டு நாடுகளிலும் உள்ள சமூகப் பின்னணி என்ன?*

பதில்: இலங்கையில் கல்வி வளர்ச்சி மிகப்பரவலானது. நீண்ட கால இலவச கல்வித்திட்டம் அமைந்ததும் ஒரு காரணம். அத்துடன் உயர் கல்விக்குச் சுய பாஷைத் திட்டம் வகுக்கப்பட்டதும், கிராமங்களில் இருக்கக் கூடிய பின் தங்கிய சமூகப் பகுதியினர், விவசாய குடும்பத்தினர் உயர் கல்வி பெறக்கூடிய வாய்ப்பு ஏற் பட்டதும் ஈழத்து முற்போக்கு இலக்கிய வளர்ச்சிக்கு ஒருவகைக் காரணமாக அமைந்தது. மற்றும் சுதந்திரத் திற்குப் பின் பல பிரச்சினைகளுக்கு எங்கள் நாடு முகங் கொடுக்க வேண்டியிருந்தது. பிரச்சினைகளும் நமக்குப் பல பாடங்களைக் கற்றுத் தந்தன. ஆகவே இந்த அனைத்துச் சமூகத் தாக்கங்களும் அந்தச் சமூகத்தில் உருவான படைப்பாளிகளையும் பாதித்தது. ஆகையால் தான் ஈழத்து எழுத்தாளர்கள் படைப்புத் துறையில் மிக்க வீரியத்துடன் காட்சி தருகின்றனர்.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஏகபோக பத்திரிகை ஆதிக்கமும், சினிமா சலசலப்பும், சுலபமான இன வுணர்வுக் கோஷத்தினால் தூண்டப்பட்ட மன எழுச் சியும் உண்மையான மக்கள் இலக்கிய வளர்ச்சியைப்

பாதித்திருக்கலாம் என நினைக்கிறேன்.

அதே சமயம் தமிழகத்தில் முற்றும் முழுதாக முற்போக்கு இலக்கியத் தாக்கமே இல்லையெனச் சொல்லிவிட முடியாது. பல இளம் தலைமுறை சிந்தனையாளர்களின், படைப்பாளிகளின் சிருஷ்டி களை படிக்கும்போது அவர்களுக்கும் எங்களுக்கும் மிக நெருக்கமான உறவு உள்ளது என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தொடர்ந்து நமது இருதேசத்தின் ஆரோக்கியமான இலக்கிய அணிகள் பரஸ்பரம் உடன்பட்டு செயல் பட்டால் இரண்டு நாட்டு இலக்கியங்களுக்குமே நல்ல எதிர்காலமுண்டு என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

கேள்வி: ஜானகிராமன், கணேசலிங்கன் ஆகிய இருவருடைய நாவல்களையும் சிறந்த நாவல்கள் என்று எப்படி உங் களால் கூறமுடிகிறது?

பதில்: கலை ஆக்கம், நுட்பமான கதை வடிவம், சொல் நயம், அழகியல் ஆகிய பண்புகள் ஜானகிராமன் நாவல்களில் இருக்கின்றன. இதற்காகவே சிறந்த நாவல்கள் என்கிறேன்.

கணேசலிங்கன் சமகாலப் பிரச்சினைகளை சமூகப் பிரச்சினைகளை அப்படியே படம் பிடித்து அதற்கான தீர்வுமார்க்கத்தையும் சொல்லுகின்ற உள்ளடக்கத்தை தருகிறார். இதற்காக கணேசலிங்கன் நாவல்களைப் படிக்கிறேன்.

கேள்வி: அப்படியென்றால் முற்போக்கு கலைஞர்களால் உருவ அழகியலோடு எழுத முடியாது என்கிறீர்களா?

பதில்: இல்லை; உருவம், உள்ளடக்கம் இரண்டும் இணைத்துப் படைக்கும், எழுத்தாளனோ கலைஞனோ இல்லை யென்று சொல்லவில்லை. முற்போக்குப் படை

வரிசையில் இரண்டும் இணைந்த படைப்புகளைத் தரக்கூடிய பா. செயப் பிரகாசம், பொன்னீலன் முதலியோர் இருக்கிறார்கள். இவர்களுடைய படைப் புக்கள் அற்புதமாகும்.

வெறும் உள்ளடக்கம் என்பது மலட்டுத் தன்மையே உண்டாக்கும். வெறும் உருவம் என்பதும் பிற்போக்குத் தனத்தில் போய் முடியும். இரண்டும் இணைந்த புதிய கலைஞர்கள், சாதனையாளர்கள் வரவேண்டும்.

கேள்வி: பழந்தமிழ் இலக்கியங்களை ஜீவா எந்தக் கண்ணோட் டத்தோடு பார்த்தார்? நீங்கள் எந்தக் கண்ணோட்டத் தோடு பார்க்கிறீர்கள்?

பதில்: எங்களுக்குப் பழந்தமிழ் இலக்கியங்களை சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தோடு அணுகிக் காட்டிய முன்னோடி ஜீவாதான். நமது நாட்டிலுள்ள பிரபல மார்க்சிய விமர்சகர்களுக்கு இன்று மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்கிற்கும் அவர்களுடைய புதிய பார்வைக்கும் காலாக அமைந்தவர் ஜீவா.

நமக்குப் பழந்தமிழ் இலக்கியங்களில் ஈடுபாடே இல்லையென்று குற்றம் சாட்டுவது வழக்கம். ஆனால் இன்று இந்தக் குற்றச்சாட்டு அர்த்தமற்றுப் போய் விட்டது. காரணம் நாமே இந்த விஞ்ஞான வெளிச் சத்தில் பழைய இலக்கியங்களை விமர்சனப் பூர்வ மாகப் பார்க்கத் துவங்கியுள்ளோம். நமது வலிமையான கருத்துக்கு முன்னால் பழமையை பழமைக்காகவே நேசிக்கும் பலர் தாக்குப் பிடிக்காமல் திணறுகின்றனர்.

பழையது புதியது என்பதல்ல முக்கியம். சகல படைப்புகளுக்குமே சமூக விஞ்ஞான விமர்சனம் அத்தியாவசியம் எனக் கருதுகிறேன்.

கேள்வி: 'கலாநிதிகள்' ஆதிக்கம் பற்றி மல்லிகையில் விவாதம் வந்ததே அது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் கலாநிதிப் பட்டம் பெற்ற விமர்சகர்கள் அறிவு ஜீவிகள். சமுதாய அந்தஸ்து உள்ளவர்கள். அவர்கள் தாங்கள் சொல்வதைப் படைப்பாளிகள் கேட்க வேண்டும் என்ற சட்டாம்பிள்ளைத் தனத்தோடு இருந்தார்கள். அதை படைப்பாளிகள் கலாநிதிகளின் பெயரைச் சொல்லியே மல்லிகையில் விமர்சனம் செய்தார்கள். நானும் பத்திரிகையின் ஆசிரியன் என்ற முறையில் என்னுடைய கருத்தைப் பகிரங்கமாகவே எழுதினேன். படைப் பாளிக்குப் பின்னேதான் விமர்சகர்கள் வரவேண்டும் - மாட்டுக்குப் பின்னே வண்டியைப் பூட்டுவது போல. படைப்பாளிதான் முன்னவன்.

ஆக இப்படி விமர்சனம் வந்ததால் எந்தக் கலாநிதியும் மல்லிகையில் எழுதுவதை நிறுத்தவில்லை. விவாதத்திற் குப் பதிலும் எழுதினார்கள். அதற்குப் பிறகும் எழுதி னார்கள். அப்படியொரு ஆரோக்கியமான நிலைமை இலங்கையில் உள்ளதை எண்ணிப் பெருமிதம் அடை கிறேன். அத்தகையதொரு விவாதம் தமிழகத்திலும் நடைபெற வேண்டும். அப்படி நடந்தால் மல்லிகைக்கு கிடைத்த பெருமையாகக் கருதுவேன்.

கேள்வி: இலங்கையில் படைப்பிலக்கியம் வளர்ந்த அளவிற்கு விமர்சனம் வளர்ந்துள்ளதா? கலைகளின் வளர்ச்சி எப்படியுள்ளது.

பதில்: இலங்கையில் படைப்பிலக்கியம் வளர்ந்த அளவிற்குக் கூட விமர்சனம் வளரவில்லை. தாக்கமிக்க விமர்சகர் கள் கூட தமிழகப் படைப்புகளில் உள்ள நுட்பத்தை விமர்சித்தார்களே தவிர எங்கள் நாடடு இலக்கியத்தை விமர்சனம் செய்வில்லை.

ஆக இந்த அளவு விமர்சணம் வளர்ந்த அளவிற்குக் கூட கலைகள் வளரவில்லை.

சினிமாவின் ஆதிக்கம்தான் கலை வளர்ச்சியைப்

பாதித்துள்ளது என்றாலும் அண்மைக் காலத்தில் நாட்டியம், நாடகம் குறிப்பிட்ட அளவிற்கு அரும்பத் தொடங்கியுள்ளது நம்பிக்கைக் குரியதாக இருக்கிறது.

கேள்வி: இளம் எழுத்தாளர்கள் முற்போக்கு அணியில் அரும்பி, வளர்ந்த பின்னர் பலர் மாறுவதற்குக் காரணம்?

பதில்: இலக்கிய உலகில் மட்டும் நடப்பதல்ல, வலிமை மிக்க ஸ்தாபனம் வழி நடத்தாது போனால் ஒரு இளைய சமுதாயமே திசைமாறிப் போவது அரசியலிலும் உண்டு.

இலக்கியவாதிகளின் பயணம் நீண்ட காலம் நிகழக் கூடியது. ஆகவே ஆரம்பத்தில் இருந்த அனைவரும் இறுதிவரை இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. இலக்கியம் என்பது கோஷம் போடுவதோ, ஊர்வலம் நடத்துவதோ அல்ல.

ஊசலாட்ட மனம் படைத்தவர்கள் தங்கள் நிலை களிலிருந்து மாறித் தங்களைத் தாங்களே வெளிப் படுத்திக்கொள்வதால் நம்முடைய வேலையை சுலபப் படுத்தி விடுகிறது. இது தேவையும் கூட.

கேள்வி: இந்தியாவில் வாழும் தமிழ்த் தேசிய இனத்திற்கும் இலங்கையில் வாழும் தமிழ்த் தேசிய இனத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

பதில்: இலங்கையிலுள்ளவர்கள் இலங்கையின் தமிழ்த் தேசிய இன மக்கள். இரு நாட்டு மக்களுக்கும் தமிழ் ஒரே தாய் மொழியாக இருந்தாலும் கூட, மொழி, கலாச்சாரம், உணவு, வாழ்க்கை நடை முறைகள், இலங்கைக்கே உரிய தனித்துவத்தோடு இருக்கின்றன. தமிழகத்தி லிருந்து வேறு பட்டவைகூட. பிரிட்டனில் இங்கிலீஷ் பேசுபவர்களும், ஆஸ்திரேலியாவில் இங்கிலீஷ் பேசுபவர்களும் எப்படி வேறுபட்டவர்களோ, அப்படித்தான் இலங்கைத் தமிழர்களும் இந்தியத் தமிழர்களும்.

எங்களுடைய பிரச்சினைகள் வேறானவை, வித்தியாசமானவை.

கேள்வி: இலக்கியவாதி, பத்திரிகையாளர் என்ற முறையில் தமிழக வாசகர்கள், பத்திரிகையாளர்களுக்கு நீங்கள் வழங்கும் செய்தி?

பதில்: ஏகபோக பத்திரிகை ஆதிக்கமிக்க ஒரு தேசத்தில் ஆரோக்கியமான இலக்கிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி விட முடியாது. இலக்கியச் சிற்றேடுகளின் பரவலும் தாக்கமுமே புதிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும். வசதியானவர்கள் வாய்ப்புள்ளவர்கள், நல்லவர்கள், சிந்தனையாளர்கள் இலக்கியச் சிற்றேடுகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது அவசியம். இன்று பல ஏடுகள் வருகின்றன என்றாலும் 'மணிக்கொடி' நம்முடைய நினைவில் பதித்த சுவடு ஆழமானது. ஆட்சியாளர்களும் இதற்கு உதவவேண்டும். பத்திரிகை ஏக போகத்தை உடைக்க வேண்டும்.

இலக்கியச் சிற்றேடுகள் வளர வழி வகை காண வேண்டும்.

எங்களுடைய மொழி, மதம், பழக்க வழக்கங்கள் வித்தியாசமானவை. நாங்கள் தமிழகத்திற்கு வருகிறோம். ஆனால் தமிழகத்தில் உள்ள இலக்கிய வாதிகள் - சிந்தனையாளர்கள், விமர்சகர்கள் இலங்கைக்கு வருவதில்லை. இவர்கள் அங்கு வரவேண்டும். நாங்கள் ஒருவேளை எங்கள் கருத்துக்களையே பொதுக் கருத்தாக வைக்கலாம். எனவே நீங்களும் வந்து எங்கள் நிலைகளை அளவிட்டு எங்களைப் புரிந்து கொள்ள வேண்டும், உறவு பரஸ்பரமாக வளரவேண்டும். என்று தமிழக வாசகர்கள், பத்திரிகையாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

"சிகரம்"
அக்டோபர், 1970

## அடிப்படையில் ஒற்றுமை

**இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மத்தியில் எவ்வளவு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அடிப்படையில் ஒரு சமுதாயப் பிரச்சினையை வைத்துத்தான் எழுதுகிறார்கள். வாழ்க்கைக்குச் சம்பந்தமில்லாததை எழுதும் வழக்கம் எங்கள் மத்தியில் கிடையாது.**

**பேட்டி: 'சிகரம்' ஆசிரியர் ச. செந்தில்நாதன்**

இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களுக்கும் தமிழக எழுத்தாளர் களுக்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. இங்கே தமிழ் நாட்டில் பொழுதுபோக்கு எழுத்தாளர்கள் என்று, காசு சம்பாதிக்கும் எழுத்தாளர்கள் இருப்பதுபோல, இலங்கையிலும் பொழுதுபோக்கு எழுத்தாளர்கள் என்று பெரும்பாலும் யாரும் கிடையாது. இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மத்தியில் எவ்வளவு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அடிப்படையில் ஒரு சமுதாயப் பிரச்சினையை வைத்துத்தான் எழுதுகிறார்கள். வாழ்க்கைக்குச் சம்பந்தமில்லாததை எழுதும் வழக்கம் எங்கள் மத்தியில் கிடையாது.

இலங்கையிலிருந்து மொத்தம் நான்கு தமிழ் நாளிதழ்கள் வெளிவருகின்றன. இந்த எல்லா இதழ்களும் எழுத்தாளர்களுக்கு மிக முக்கியத்துவம் தருகின்றன. பிரதமரின் பேச்சு முதல் பக்கத்தில் நான்கு காலத்தில் வெளிவந்தால் எழுத்தாளர்களின் கருத்துரைகளும் அதே முதல் பக்கத்தில் வெளியாகும்.

வீரகேசரி, தினகரன், ஈழநாடு, தினபதி ஆகிய நான்கு நாளிதழ்களும் வார இதழ் போடுகின்றன. (இவை அல்லாமல்), வேறு சிறிய பத்திரிகைகளும் இலங்கையில் வெளியாகின்றன.) இந்தப் பத்திரிகைகள் முதலாளித்துவப் பத்திரிகைகளாக இருந்த

போதிலும், முற்போக்கு எழுத்தாளர்களின் படைப்புக்களையே போடவேண்டிய நிலையில் இருக்கின்றன.

இலங்கையில் பொழுது போக்காக எழுதும் வியாபார எழுத்தாளர்கள் இல்லாததால், அங்கு எழுத்தாளர் மத்தியில் பெரிய போராட்டம் எதுவும் கிடையாது. ஆனால் தமிழகத்தில் இருந்து வருகின்ற வியாபாரப் பத்திரிகைகளின் வியாபாரப் போக்கையும், அவைகள் வளர்த்து வரும் இரசனையும் நச்சிலக்கியப் போக்கையும், எதிர்த்துப் போராட வேண்டிய அவசியம் எங்களுக்கு இருந்தது, இருக்கின்றது. வாசகர்களை நேரடியாகச் சந்தித்து நாங்கள் விளக்கினோம். இதனால் வாசகர் எழுத்தாளர் உறவு வலுவடைந்தது. மேலும் எழுத்தாளர்கள் எல்லோரும் நல்ல பேச்சாளர்களாகவும் இருப்பதால் எங்கள் முயற்சிக்குப் பெரிதும் உதவியது. இதுவுமல்லாமல் முற்போக்கு இயக்கத்துக்கான அத்தி வாரம் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரே போடப்பட்டு விட்டது. அரசியல் நிலைமைகளால் அரசியல் வாதிகள் பிளவு பட்டபோதிலும் எழுத்தாளர் அணி பிளவுபடவில்லை. நாங்கள் தமிழகத்துக்கு வரும்போதுகூட முற்போக்கு எழுத்தாளர்கள் என்று பொதுவாகத்தான் பார்க்கிறோமேதவிர, கட்சி அடிப்படை யில் பிரித்துப்பார்பதில்லை.

இலங்கையில் சிங்களவர் மத்தியிலும் ஒரு முற்போக்கு இலக்கிய அமைப்பு இருக்கிறது, அதன் பெயர் "மக்கள் எழுத்தாளர் முன்னணி". தமிழர் சிங்களவர் மத்தியில் இருக்கும் இரு அமைப்புகளுக்கு மிடையேயும் நல்லுறவு தொடர்ந்து இருக்கிறது.

இலங்கையிலிருக்கும் தமிழ்ப் பத்திரிகைகள் எல்லாம் தமிழர்களுக்கே சொந்தம் என்று எண்ண வேண்டாம். 'தினகரன்', 'தினபதி' போன்ற நாளேடுகள் சிங்கள முதலாளிகளுக்குச் சொந்தமானவை.

நான் ஒவ்வொரு ஆண்டும் தமிழகம் வர திட்டமிட்டிருக் கிறேன். இது நமது பண்பாட்டுப் பரிவர்த்தனை மேலும் வளர உதவுமல்லவா?

"தீக்கதிர்"
13.10.1979

# இணைப்புப் பாலம்

**நான் எழுத்தாளன் என்பதோடு மட்டும் நின்று விடாமல், பொதுவுடமை இயக்கத்தின் பக்கம் நிற்பவன் என்ற முறையில் மக்களுடன் அவர்களுள் ஒருவனாய் கலந்து பழகுகிறேன். அவர்களின் அன்றாடப் போராட்டங்களை வாழ்க்கைப் பிரச் சினை களை என்னால் நன்றாகத் தெரிந்துகொள்ள முடிகிறது.**

*(கடந்த பதினைந்து ஆண்டுகளாக இலங்கையில் ' இலக்கியப் பல்கலைக்கழக'மாக வெளி வந்து கொண்டு இருக்கும் இதழ் மல்லிகை. அதன் ஆசிரியர் டொமினிக் ஜீவாவையும், அவருடன் இரண்டறக் கலந்துவிட்ட 'மல்லிகை'யையும் தாமரை வாசகர்கள் நன்கு அறிந்தவர்களே. ......அவரை இலக்கியப் பற்றுமிக்க எழுத்தாளர் 'சுரா' கண்ட பேட்டி இது.)*

*சுரா:* உலகிலுள்ள எந்த மொழியில் எடுத்துக் கொண்டாலும், காலப்போக்கில் இலக்கியத்துறையில் ஏதோ ஒருவகை யான மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமிருக்கின்றன. அவ்வகையில் தமிழ் நாட்டில் தோன்றிய தமிழ் இலக்கியங்களிலும், படிப்படியாக ஏற்பட்ட இம் மாற்றத்தை நம்மால் காண முடியும். உதாரணமாக சங்க காலத்தில் தோன்றிய நூல்கள் மாதிரி இல்லை. சங்க மருவிய காலத்தில் தோன்றிய நூல்கள். இரு கால கட்டத்தில் தோன்றியவைகளும் உருவ அமைப்பில் மட்டுமின்றி, உள்ளடக்கத்திலும் கூட பெரிதும் மாறு பட்டிருந்தன. அதற்குப் பின் கூறுவதானால் சுதந்திரத் துக்கு முன் இருந்த இலக்கியம் சுசந்திரப் போராட்ட காலத்தில் தோன்றிய நூல்கள் என்று கூறலாம்.

ஒவ்வொரு கால கட்டத்தில் தோன்றிய நூல்களும், அந்தக் கால கட்டத்திற்கேற்ப உரிய சிறப்பு அம்சங் களை சமுதாய பாதிப்புக்களைத் தாங்கி வந்திருந்தன, வருகின்றன. இதே மாதிரியான மாற்றங்கள் இலங்கைத் தமிழ் இலக்கியத்திலும் ஏற்பட்டிருக்கின்றன. அது எவ் வகையில் நிகழ்ந்தது என்று கொஞ்சம் கூறுகிறீர்களா?

டொ.ஜீ: ஏனைய உலக இலக்கியங்களின் மாதிரியான ஒரு மாற்றம் எங்களது இலங்கையில் இருந்து வரும் இலக்கியத்திலும் உண்டாகித் தானிருக்கிறது. உதாரண மாகச் சொல்ல வேண்டுமென்றால் 1948க்குப் பின் தோன்றிய இலக்கியப் படைப்புக்களை மூன்று காலகட்டங்களுக்குள் அடைக்கலாம். இலங்கை சுதந்திரக் குடியரசு ஆனது 1948ம் ஆண்டு என்றால் 1948ம் ஆண்டை ஒட்டித்தோன்றிய இலக்கிய பாரம் பரியத்தை சுதந்திரகால கட்டத்தில் பிறந்தவை எனலாம். அப்போது தோன்றிய படைப்புகளில் எல்லாம் சுதந்திரம் குறித்த சிந்தனைகள், கோஷங்கள், எண்ணங்கள் எல்லா நூல்களிலும் வியாபித்திருக்கும்.

1956க்குப் பின் உள்ள கால கட்டத்தை அதாவது 1970 வரை உள்ள கால அளவை மிகவும் குறிப்பிடத்தகுந்த ஒரு கால கட்டம் எனலாம். இந்தக் கால கட்டத்தில் தான் பண்டாரநாயகாவின் ஆட்சி இலங்கையில் ஸ்தா பிக்கப் பட்டது. தேசிய மறு மலர்ச்சியை உண்டாக்கிய காலகட்டம் இது எனலாம். முற்போக்கு இலக்கியப் படைப்புக்கள் இந்த கால கட்டத்தின்போது வெகு வாகத் தோன்றின. ஏற்கெனவே பிரபலம் பெற்றிருந்த பெரிய எழுத்தாளர்கள் தவிர, எழுச்சி மிக்க இளைஞர்களும் முற்போக்குச் சிந்தனைகளுடன் எழுத முன் வந்தனர். மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற வேண்டும் என்ற ஆதங்கத்துடன் உத்வேகத்துடன் எழுதப்பட்ட பல படைப்புக்கள் அப்போது வெளியாகின.

'இளைஞர் முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' என்ற ஒரு அமைப்பு அப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டது. எழுச்சி கொண்ட பல எழுத்தாளர்களும் அவ்வமைப்பில் அங்கத்தினர்களாய் இருந்தனர்.

சமுதாய நோக்குடன் எழுதப்பட்ட படைப்புக்களுடன் மார்க்ஸீயக் கண்ணோட்டத்துடன் எழுதப்பட்ட பல படைப்புக்களும் வெளிவந்தன. பரிசோதனை முயற்சியில் அமைந்த இலக்கிய ஆக்கங்களும் அப்போது உருவாகின.

சுரா: வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம்தான் தமிழில் வெளிவந்த முதல் நாவல் என்று இதுவரை ஒப்புக் கொள்ளப்பட்டு வந்தது. ஆனால் இப்போது இலங்கையில் அதற்கு முன்பே தமிழ் நாவல் இலக்கியம் உருவாகி விட்டதாகவும், அதுவே தமிழில் தோன்றிய முதல் நாவல் என்று ஒரு புதுப் பிரச்சினையைக் கிளப்பி விட்டிருக்கிறார்களே!

டொ.ஜீ: இந்த வாதத்தை நான் ஒப்புக் கொள்வதற்கில்லை. தமிழ் நாட்டில் 'பிரதாப முதலியார் சரித்திரம்' தோன்றிய பின்புதான் இலங்கையில் நாவல் வெளிவந்தது. ஆதலால் 'பிரதாப முதலியார் சரித்திரம்' தான் தமிழில் தோன்றிய முதல் நாவல்.

சுரா: இலங்கையின் நாவல் இலக்கியத்தின் வளர்ச்சி பற்றி சிறிது கூறுங்களேன்.

டொ.ஜீ: இலங்கையில் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் நாவல்கள் வெளிவந்திருக்கின்றன ஆண்கள் தவிர, பெண்கள் பலரும் நல்ல நாவல் எழுத முன் வந்திருக்கின்றனர்.

இப்போது எங்கள் நாவல் இலக்கியம் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை உடையதாக இருந்தாலும், ஆரம்ப காலத்தில் அவ்வாறில்லை. இங்கு நிலவியது

போலவே அங்கும் நாவல் இலக்கியம் தோன்றிய காலத்தின் ஆரம்பத்தில் துப்பறியும் நாவல்களும், தழுவல்களும்தான் வெளி வந்து கொண்டிருந்தன.

பிறகு படிப்படியாக தமிழகத்தின் பாதிப்பு இலங்கையில் தோன்றிய படைப்புக்களில் தென்பட ஆரம்பித்தது. இப் பாதிப்பை அங்கு உண்டாக்கியவை இங்கிருந்து வந்த பத்திரிகைகள்தாம்.

தமிழகத்தின் பாதிப்புப்படி கதை எழுதிக் கொண்டிருந்ததோடு, தமிழகத்தில் வந்து கொண்டிருந்த 'கலைமகள்' போன்ற பத்திரிகைகளில் இலங்கையைச் சேர்ந்த எழுத்தாளர்கள் எழுத ஆரம்பித்தார்கள். அவர்களுடைய படைப்புக்களில் உயர்ந்த சிந்தனைகளோ, சீரிய கருத்துக்களோ, ஆக்க பூர்வமானதோ ஒன்றும் இராது. மாறாக, இங்கிருந்தவர்கள் எழுதிக் கொண்டிருந்த மாதிரியே மெரினாவையும், சினிமா தியேட்டரில் நடைபெறும் காதல் பற்றியும்தான் அவர்களும் எழுதிக் கொண்டிருந்தார்கள்.

இந்நிலை படிப்படியாக மாறி 'சுய சிந்தனை'யுடன் அவர்களும் 1956க்குப் பின் எழுத ஆரம்பித்தார்கள். சமுதாயத்தில் நிலவிக் கொண்டிருந்த சில சூழ்நிலைகள்தான் அவர்களை இவ்வாறு எழுதத் தூண்டியது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், அவர்கள் சில நிர்ப்பந்தங்களால் தூண்டப்பட்டு சமுதாயக் கண்ணோட்டத்துடன் எழுத ஆரம்பித்தார்கள். இந்தக் காலகட்டத்தில் தோன்றிய படைப்புக்களில் தேவையற்ற கற்பனா வாதத்தையோ சமுதாயத்துக்குக் கொஞ்சமும் பயன்படாத வரட்டுத்தனத்தையோ, கொஞ்சமும் காண முடியாது. மாறாக மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள், சமுதாய முன்னேற்றம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொருவரும் எழுத ஆரம்பித்தனர்.

அன்று ஆரம்பித்த அந்த இயக்கம் இன்றும் ஓயவில்லை. இன்றும் இலங்கையில் தோன்றும் படைப்புக்களில் இலங்கையில் வாழும் மக்கள், அவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகள், போராட்டங்கள், முரண்பாடுகள் போன்றவற்றை முழுமையாகக் காணமுடியும். 'நிதர்சன உலகின் நிலைக் கண்ணாடியே இலக்கியம்' என்ற வாசகம் இலங்கையில் இன்று தோன்றிக் கொண்டிருக்கும் ஆக்கங்களுக்கு மிகவும் பொருந்தும்.

இதில் வியக்கத்தக்கது என்னவென்றால், இவ்வாறு சமுதாயக் கண்ணோட்டத்துடன் எழுதும் ஒவ்வொரு இலங்கை எழுத்தாளனும் மக்கள் மத்தியில் பெரிதும் மதிக்கப்படுகிறான், விரும்பப் படுகிறான். ஆனால் தமிழ் நாட்டிலோ நிலைமை தலைகீழாக இருக்கிறது. இங்கு வாழ்க்கை என்பதே என்னவென்று அறிந்து கொள்ளாத, செயற்கைத் தன்மையுடன் சமுதாயச் சீரழிவிற்கு அடிகோலும் படைப்புக்களை எழுதித் தள்ளிக் கொண்டிருப்பவர்கள்தான் "பெரிய எழுத்தாளர்கள்" என்ற கிரீடத்தை வைத்துக்கொண்டு திரிகிறார்கள். இந்தக் கொடுமையை எங்கு போய் முறையிடுவதோ தெரியவில்லை.

அப்படிப் பார்க்கப் போனால் இலங்கையின் நாவல்கள், இலங்கை மக்களின் ரசிப்புத்தன்மை இரண்டுமே நன்றாக வளர்ந்து விட்டிருக்கின்றன என்று துணிந்து கூறலாம்.

அடிப்படையில் அங்குள்ள எழுத்தாளர்களிடம் ஆயிரம் வித்தியாசங்கள் இருந்தாலும், பொதுப் பிரச்சினை என்று வரும்போது அங்குள்ள எழுத்தாளர்கள் ஒன்றுபட்டு நிற்கிறார்கள்.

சுரா: இலங்கையில் நாடக வளர்ச்சி எப்படி இருக்கிறது? இங்குள்ளது போன்று தொழில் முறை நாடகங்களும் வெளிவருகின்றனவா?

டொ.ஜீ: இலங்கையில் நாடக இலக்கியம் கணிசமான அளவு வளர்ந்திருக்கிறது என்றுதான் கூறவேண்டும். அங்குள்ள நாடகங்களில் சினிமாவின் தாக்கத்தைக் காண முடியாது. நாடகத்திற்கே உரிய தனித்துவத்தை ஒவ்வொரு நாடகத்திலும் நம்மால் காண முடியும்.

சிங்கள நாடக வளர்ச்சி எங்கள் நாடகங்களையும் பாதிக்கிறது. நவீன முறையையும், நாட்டுக் கூத்து முறை யையும் இணைத்த புதிய முறையில் நாடகங்கள் பல வெளிவந்திருக்கின்றன. 'கந்தன் கருணை' 'பொறுத்தது போதும்' 'கூடி விளையாடு பாப்பா' போன்ற நாடகங் களில் சமுதாயப் பிரச்சினை முழுமையாகப் பின்னப் பட்டிருந்தது. அங்குள்ள ஒவ்வொரு நாடகத்திலும் சமுதாயக் கண்ணோட்டம் இருக்கும். அவ்வகையில் அமைந்த நாடகங்களைச் செய்யவேண்டும் என்ற உத்வேகம் எழுந்து, அவ் உத்வேகத்திற்கு வடிகாலாக ஆரம்பித்ததே 'மல்லிகை' 'மல்லிகை'யின் ஆசிரியராக இருந்ததோடு நில்லாமல், அதன் படைப்பாளியாகவும் நான் இருக்கிறேன். கடந்த பதினைந்து ஆண்டுகளாக 'மல்லிகை'யின் ஒவ்வொரு இதழிலும் நான் எழுதி வருகிறேன்.

அடிப்படையான அரசியல் முரண்பாடுகள் கொண்டோர்கள் கூட 'மல்லிகை'யில் தங்கள் படைப் புக்களை எழுதிக் கொண்டுதான் இருக்கிறார்கள். 'மல்லிகை'யில் வெளிவரும் ஒவ்வொரு படைப்புமே சமுதாயக் - கண்ணோட்டமுடையதாகவும், முற்போக்கு சிந்தனையுடைய்தாகவும் இருக்கும் என்பதை நான் கூறித்தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதில்லை.

இதில் பல அறிஞர்களும் எழுதுகின்றனர். சுருக்க மாகச் சொல்ல வேண்டுமானால், 'மல்லிகை' ஒரு 'இலக்கியப் பல்கலைக் கழக' மாக இலங்கையில் திகழ்ந்து கொண்டிருக்கிறது எனலாம். இதில் எழுதிய

பலர் இன்று மிகப் பெரிய எழுத்தாளர்கள் என மக்களால் மதிக்கப்படுகின்றனர்.

இலங்கையில் வெளிவரும் ஒரே இலக்கியப் பத்திரிகை 'மல்லிகை' தான். இங்கிருந்து வெளி வரும் குமுதம், குங்குமம், சாவி, இதயம் பேசுகிறது போன்ற வர்த்தகப் பத்திரிகைகளால் மல்லிகைக்கு ஏற்படும் பாதிப்பு கொஞ்சம் நஞ்சமல்ல. கவர்ச்சியான அட்டைப் படங்களையும், ஆபாசப் படங்களையும், உப்பு சப்பற்ற செயற்கைத்தன்மை வாய்ந்த கதைகளையும் தாங்கிக் கொண்டே வெளிவரும் இப்பத்திரிகைகளால் 'மல்லிகை' போன்ற ஒரு இதழுக்கு எந்த அளவிற்குத் தாக்கம் ஏற்பட்டிருக்கும் என்பதை நீங்களே நினைத்துப் பாருங்கள். என்றாலும் 'மல்லிகை' க்கு என்றே உள்ள வாசகர் குழு கடந்த பதினைந்து ஆண்டுகளாகவே இருந்துதான் வருகிறது. அத்தகைய தரம் வாய்ந்த வாசகர்களின் துணை கொண்டுதான் 'மல்லிகை'யை வெற்றிகரமாக நடத்தி வர முடிந்திருக்கிறது.

இத்தகைய பலரின் உதவியுடன்தான் இதழை சிறப்புடன் கொண்டுவர முடிந்திருக்கிறது. பலரும் கேட்கின்றனர், இதழுக்கு ஏன் 'குமுதம்' மாதிரி அட்டைப் படம் போடக் கூடாதென்று. நீரினுள் இறங்கினால் தானே நீச்சல் என்றால் என்னவென்று தெரியும்? என்றாலும் தரமான படைப்புக்களைத் தவிர வேறு எதையும் 'மல்லிகை'யில் வெளியிடுவதில்லை என்ற இலட்சியத்துடன் பத்திரிகையை நடத்திக் கொண்டிருக்கிறேன்.

நான் எழுத்தாளன் என்பதோடு மட்டும் நின்று விடாமல், பொதுவுடைமை இயக்கத்தின் பக்கம் நிற்பவன் என்ற முறையில் மக்களுடன் அவர்களுடன் ஒருவனாய் கலந்து வாழ்க்கைப் பிரச்சினைகளை என்னால் நன்றாகத் தெரிந்துகொள்ள முடிகிறது. எங்களுடைய இலக்கிய நேர்மையில் எங்களுக்குக் கொஞ்சமும்

சந்தேகம் இல்லை. எங்களுடைய அரசியல் தன்மையை மறைத்துக் கொள்ளாமல், மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளை சமுதாயக் கண்ணோட்டத்துடன் அணுகிறோம். இங்குள்ள சில எழுத்தாளர்கள் மாதிரி நாங்கள் மக்களிடமிருந்து பெற்று மக்களுக்கே கொடுப்பதால்தான் மக்களும் விரும்பி ரசிக்கிறார்கள்.

அங்குள்ள நாடக உருவமே தமிழ் மொழிக்குப் புதுமையானது என்றுகூடச் சொல்லலாம். ஆரம்ப காலத்தில் நாடகம் நடத்துவ தென்றால் மிகப் பெரிய ஒரு பிரச்சனையாக இருந்தது. இப் போது நாடகங்களை ரசிப்பதற்கென்றே ஒரு கூட்டம் இருப்ப தால், நாடகங்களை நடத்துவதில் அப்படியொன்றும் கஷ்ட மில்லை. நாடகங்கள் பொதுவாகப் பொது மண்டபங்களில்தான் நடத்தப்படுகின்றன.

நாடகத்தைக் கொண்டே வாழக்கை நடத்துவோர் அங்கு இல்லை. தங்கள் வாழ்க்கையின் ஒரு அம்சமாகவே அங்குள்ள நாடகக் கலைஞர்கள் கருதுகின்றனர். பொது வாழ்க்கையில் அவர்கள் அலுவலர்களாகவோ, பேராசிரியர்களாகவோ, ஆசிரியர்களாகவோ, வர்த்தகர்களாகவோ இருக்கின்றனர். ஓய்வு நேரங்களில் நாடகங்களில் நடிக்கின்றனர்.

வருடத்திற்கு சந்தா எட்டு ரூபாய், பத்து ரூபாய் திரட்டு கின்றனர். இப்படி வருடத்திற்கு பத்து நாடங்கள் வரை போடப்படுவதுண்டு. இப்படிப்பட்ட நாடகங்கள் நடத்தும் குழுக்கள் இலங்கையில் பல இருக்கின்றன. நாடகங்கள் வாயிலாக மக்களுக்கு உபயோகமான சிலவற்றைக் கூற விழைகிறார்கள்.

இங்குள்ள மாதிரி வெறும் பொழுதுபோக்கு ஒன்றையே எண்ணத்திற் கொண்டு அங்கு நாடகங்கள் தயாரிக்கப் படுவ தில்லை. ஜோக்குகளை அடித்தும் மக்களை ஏமாற்றுவதில்லை. சமுதாயக் கண்ணோட்டத் துடனையே நாடகத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் அமைக்கின்றனர்.

அங்குள்ள நாடக எழுத்தாளர்களின் படைப்புகள் தவிர இங்குள்ள எழுத்தாளர்களின் சிறந்த படைப்புக்களும் நாடகங்

களாக நடிக்கப்படுவதுண்டு. உதாரணமாக இந்திரா பார்த்த சாரதியின் 'மழை' "பசி' ஆகியவை நாடகங்களாக அங்கு நடிக்கப் பட்டிருக்கின்றன.

சுரா : பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளுக்கிடையில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக 'மல்லிகை' இதழை மிகவும் வெற்றி கரமாக நடத்திவருகிறீர்கள்: அதிலும் தரமான பல எழுத்தாளர்களை 'மல்லிகை' உருவாக்கி விட்டி ருக்கிறது என்பதை அறியும் போது உண்மையிலேயே மிகவும் பெருமையாய் இருக்கிறது. நீங்கள் நடந்துவந்த இந்தப் பாதையில் எத்தனையோ சுவையான அனுப வங்களைச் சந்தித்திருப்பீர்கள் எவ்வளவோ இக் கட்டான சூழ்நிலைகள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் உண்டாகியிருக்கலாம். அதுபற்றி கொஞ்சம் கூறுகிறீர் களா.

டொ.ஜீ: வர்த்தக ரீதியாக தமிழகத்திலிருந்து வந்து கொண்டி ருந்த முதலாளித்துவப் பத்திரிக்கைகள் சமுதாயத்தை மிகவும் கெடுத்துக் கொண்டிருந்தன. வாசகர்களுடைய மனத்தை அழிவை நோக்கித் திசை திருப்பிக் கொண்டிருந்தன.

இதை முறியடிக்க வேண்டும், மக்கள் மனதில் ஊறிக் கிடக்கும் அறியாமையை அகற்ற வேண்டும். மக்கள் தம் எண்ணத்தைத் தூய்மையாக்க வேண்டும், சமுதாய மாற்றத்திற்குத் தன்னாலானதைத் தனியே பிரிந்து நிற்காமல், அவர்களுள் ஒருவனாய் நிற்கிறோம். அது கொண்டுதான் உருப்படியாக எதாவது சாதிக்க முடிகிறது. உதாரணமாகக் கூற வேண்டுமானால் எழுத்தாளர்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து நின்றால்தான் 'யாழ்பாண பல்கலைக் கழகம்' என்ற ஒரு புதிய பல்கலைக் கழகத்தையே உருவாக்க முடிந்தது. எத்திக்கும் தமிழ் முழங்கும் ஒரே பல்கலைக் கழகம் இன்று உலகிலேயே அது ஒன்றாகத்தான் இருக்கமுடியும். அந்த அளவிற்கு கூரிய வாளை விட பேனா முனை அதிக பலம் மிக்கது என்கிற மாதிரி எழுத்தாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நின்றால் அந்த உலகில் சாதிக்க முடியாதது

ஒன்றுமில்லை என்பதை நிரூபித்துக் காட்டினோம்.

எத்தனைக் கஷ்டங்கள் வந்தாலும் அவை அனைத்தையும் முறியடித்து 'மல்லிகை' என்றும் வெளிவரும். தரமான ஆக்கங்களை பலவற்றையும் தாங்கி வரும்.

சுரா: இங்கிருந்து வெளிவரும் பல பத்திரிக்கைகளும் அங்கு கிடைக்கும் போது, அங்கு வெளியாகும் பத்திரிகைகளும் நூல்களும் இங்கு கிடைப்பதில்லையே! நீங்கள் இதற்கான முயற்சிகளைச் செய்து பார்க்கலாமே?

டொ.ஜீ: எத்தனையோமுறை அணுகிப் பார்த்தாகி விட்டது. ஆனால், இதற்கொரு முடிவு காணத்தான் முடியவில்லை. இதற்கு முக்கியமான தடைக்கல்லாக நிற்பது தபால் சலுகையின்மை. தபால் சலுகை இல்லாததால் எடைக்குத் தக்கவாறு முத்திரை ஒட்டி இதழை அனுப்பி வைப்பதென்பது, சாத்தியமில்லாத ஒன்று.

சந்தா வசூலித்து இதழ் அனுப்பி வைப்பதாக இருந்தாலும், இரண்டு மடங்காவது சந்தா வாங்கினால்தான், முத்திரை ஒட்டி இதழ் அனுப்பி வைக்க முடியும். என்றாலும் இதற்கான முயற்சிகளை செய்து கொண்டுதான் இருக்கிறோம்.

இதற்கொரு முடிவு ஏற்படும் பட்சத்தில் இரு நாட்டு மக்களுமே கருத்து பரிவர்த்தனை செய்து கொள்ளும் வழிவகை ஏற்படும்.

சுரா: புத்தக வெளியீட்டு முறை இலங்கையில் எப்படி இருக்கிறது?

டொ.ஜீ: எழுத்தாளர்கள் பலர் ஒன்று சேர்ந்து 'எழுத்தாளர் கூட்டுறவு பதிப்பகம்' என்ற பெயரில் பதிப்பகம் ஒன்றை நிறுவியிருக்கிறோம். அதில் பல புத்தகங்களை வெளியிட்டிருக்கிறோம். இது தவிர, 'வீரகேசரி பதிப்பகம்' இதுவரை சுமார் எழுபது புத்தகங்களை வெளியிட்டிருக்கிறது.

தமிழகத்தில் இப்போது மாதத்திற்கு ஒரு ரூபாய் வீதம் நாவல் போடப்படுவதால், இலங்கையில் புத்தகம் வெளியிடுவது பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறது இதனால் புத்தகம் வெளியிடுவதில் சிறிது தடை ஏற்பட்டிருக்கிறது என்று கூட கூறலாம்.

சுரா: 'மல்லிகை' தவிர அங்கு வேறு என்ன பத்திரிக்கைகள் வெளிவருகின்றன? பத்திரிக்கைகளில் எழுதும் எழுத்தாளர்களுக்குப் பணம் கொடுப்பதுண்டா?

டொ.ஜீ: 'சிரித்திரன்' 'சுடர்' 'கதம்பம்' போன்ற பல பத்திரிக்கைகளும் அங்கு பதிப்பிக்கப் படுகின்றன. இவற்றில் இலக்கியத்திற்கென்றே நடத்தப்படுகின்ற இதழ் 'மல்லிகை' ஒன்றுதான்.

பத்திரிகையை நடத்துவதென்பதே மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கும் போது, எழுத்தாளர்களுக்கு எப்படி நாங்கள் பணம் கொடுக்க முடியும்? மேலும், அங்கு எழுத்தையே தொழிலாகக் கொண்டவர் யாருமில்லை. பொழுது போக்கிற்காகவும், ஆத்ம திருப்திக்காகவும் மட்டுமே அவர்கள் எழுதுகிறார்கள்.

சுரா: உங்களுடைய இலக்கிய ஜீவிதம் குறித்து ............

டொ.ஜீ: என்னுடைய 'பாதுகை', 'தண்ணீரும் கண்ணீரும்' 'சாலையின் திருப்பத்தில்' என்ற நூல்கள் இது வரை வெளிவந்திருக்கின்றன. 1961 ஆம் ஆண்டுக்கான இலங்கை சாஹித்திய மண்டலத்தின் தமிழ் சிருஷ்டி இலக்கியத்திற்கான (fiction) பரிசு 'தண்ணீரும் கண்ணீரும்' படைப்புக்குக் கிடைத்தது.

சுரா: இலக்கிய விமர்சனத்துறை இலங்கையில் எந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறது?

டொ.ஜீ: பொதுவாக எங்கள் எழுத்தாளர் எந்த விதமான விமர்சனத்தையும் தாங்கிக் கொள்ளும் மனவலிமை பெற்றவர்களாகவே இருக்கிறார்கள். விமர்சனம் செய்வோரும் எழுத்தாளர்களின் படைப்பைத் தான் விமர்சனம் செய்வார்களேயொழிய, அவனின் தனிப்பட்ட வாழ்க்கையை அல்ல.

விமர்சனத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல், விமர்சனம் செய்தவன் மேல் சேற்றை அள்ளிப் பூசும் வழக்கம் அங்கு காண முடியாத ஒன்று. இங்கு மிகச் சிறந்த இலக்கிய விமர்சகர்கள் என்று மதிக்கப்படும் டாக்டர் கைலாசபதியும், சிவத் தம்பியும் இலங்கையைச் சேர்ந்தவர்கள்; அதிலும் 'மல்லிகை'யில் எழுதிய வர்கள் என்பதை நினைத்து மிகவும் பெருமைப் படுகிறேன்.

'தாமரை'

டிசம்பர் 1979.

## அக்கறை இல்லை

**"மல்லிகை"யை வீதி வீதியாகத் திரிந்து விற்று வருகிறேன். அதற்காக நான் பெருமைப்படுகிறேன். அன்று பாரதி-ஜீவா இலக்கியத்திற்காகத் தங்களை எப்படி அற்ப்பணித்தார்களோ அந்த உணர்வு எனக்கும் ஏற்படும்.**

**குமரி அனந்தன் சந்தித்தபோது......**

**தொகுப்பு: மனோபாரதி-ப்ரியன்**

ஜீவா: எங்கள் இலங்கைக்குச் சென்று வந்திருக்கிறீர்களே, யாழ்ப்பாணத்தில் இலக்கியவாதிகள் யாரையெல்லாம் சந்தித்தீர்கள்?

குமரி: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் திரு.கைலாசபதி, திரு.வித்தியானந்தன் மற்றும் பல பத்திரிகையாளர்களைச் சந்தித்தேன். உங்கள் நெருங்கிய நண்பர் பிரேம்ஜியையும் சந்தித்து உங்களைப் பற்றி விசாரித்தேன்.

ஜீவா: ரொம்ப மகிழ்ச்சி, நான் அவதானித்ததைச் சொல்ல விரும்புகின்றேன். முப்பது வருடங்களாக நான் எழுத்துத் துறையில் ஈடுபட்டு வருகிறேன். கடந்த பதினாறு வருடங்களாக 'மல்லிகை' நடத்தி முழுநேரப் பத்திரிகை யாளனாக அச்சடித்து, வீதி வீதியாக திரிந்து விற்று வருகிறேன். அதற்காக நான் பெருமைப் படுகிறேன். அன்று பாரதி ஜீவா இலக்கியத்துக்காகத் தங்களை எப்படி அர்ப்பணித்தார்களோ அந்த உணர்வு எனக்கும் ஏற்படும். நாங்கள் இராவணனுக்கும் அப்பன் காலத்து

இலங்கைத் தமிழர்கள். இந்தியாவில் வேறு எந்த மொழி களுக்கும் இல்லாத பெருமை தமிழுக்கு உண்டு, தமிழ் இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் பரவி இருக்கும் சர்வதேச மொழி. இந்தியத் தமிழர்களுக்கு தமிழ் மொழி பேசும் தமிழர்களாகிய எங்களைப் பற்றி அக்கறை இல்லை. எங்களை இன்றுவரை புரிந்து கொள்ளவும் இல்லை. சிறு உதாரணம்; முதன் முதலாக உலகத் தமிழ் மாநாடு நடத்துவதற்கு முன்னோடியாக விளங்கிய இலங்கை நெடுந்தீவைச் சேர்ந்த தனிநாயகம் அடிகள் செப்டம்பர் 3ஆம் தேதி இலங்கையில் மறைந்தார். அவர் மறைந்த போது நான் சென்னையில்தான் இருந்தேன். இன்று வரை அவர் மறைந்த செய்தியை ஒரு தமிழ்ப் பத்திரிகைகூட வெளியிடவில்லை.

*குமரி:* உங்கள் மனக்குறை நியாயமான மனக்குறைதான். உண் மையிலேயே வருத்தப்பட வேண்டிய விஷயம் தான் இது. தனிநாயகம் அடிகள் மறைந்த செய்தியை யாழ்ப்பாணத்தில் நான் கேள்விப்பட்டதும் என்னு டைய இரங்கலைத் தெரிவித்தேன். அத்துடன் அங்குள்ள கிறிஸ்தவசபை மத குருக்களைச் சந்தித்து அவர்களிடமும் இரங்கலைத் தெரிவித்தேன். மதுரையில் நடைபெற இருக்கும் உலகத் தமிழ் மாநாட்டில் தனி நாயகம் அடிகளார் அவர்களுக்கு நிரந்தர நினைவுச் சின்னம் ஏற்படுத்த முயற்சி செய்வோம் என்றும் உறுதி கூறி வந்தேன்.

*ஜீவா:* இதை ஒரு குற்றச் சாட்டாக நான் கூறவில்லை தமிழன் என்ற உரிமையோடு கேட்கிறேன். நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த பேராசிரியர் நா.வானமாமலை எழுதியுள்ள நாட்டுப் பாடல்கள் புத்தகத்திற்காக, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் சார்பில் "டாக்டர்" பட்டம் 13ம் தேதி கொடுத்து இருக்கிறார்கள். நாங்கள் தமிழ்நாட்டு எழுத்தாளர்களைப் பாராட்டிக் கௌர

விப்பதுபோல • ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களை இந்தியத் தமிழர்கள் கௌரவிப்பதில்லையே என்ற ஆதங்கம் இன்றல்ல, கடந்த பதினைந்து ஆண்டுகளாக எங்களுக்கு இருந்து வருகிறது. இருநாடுகளுக்கும், இரு நாடுகளில் வசிக்கும் தமிழர்களுக்கும் இடையே இலக்கியப் பரிவர்த்தனை இருக்க வேண்டும் என்பதே என்னுடைய விருப்பம். இதுபற்றி மத்திய, மாநில அரசிடம் நீங்கள் தொடர்பு கொண்டு வழி செய்ய வேண்டும்.

குமரி: நானும் இந்த உணர்வோடுதான் இலங்கையிலிருந்து திரும்பி வந்திருக்கிறேன். நான் இலங்கைக்குச் சென்று வந்தது இதுவே முதல் தடவை, நான் அங்குள்ளவர் களின் இலக்கிய ஆர்வத்தைத் தெரிந்து கொள்ளவே சென்று வந்தேன். என்னிடம் நீங்கள் இப்போது கேட்டது போலவே எல்லாரும் கேட்டார்கள். இலக்கிய கலாசாரப் பரிவர்த்தனை இல்லாததுதான் இதற்குக் காரணம். எனவே பரிவர்த்தனைக்கும் இடையேயுள்ள தடையை நீக்கிவிட்டால் சரியாகிவிடும். நாம் முதன் முதலாகச் செய்ய வேண்டிய காரியம் "இலங்கை இந்திய நட்புறவுக் கழகம்" ஒன்றை ஏற்படுத்த வேண்டும். தவிர நட்புறவு விழாக்களை நடத்துவதன் மூலமும் இரு நாடுகளுக்கும் இடையே இலக்கியப் பரிவர்த்தனையை நல்லமுறையில் வளர்க்க முடியும். உதாரணமாக அங்கே 'பாரதி விழா' கொண்டாடுவது போல, இங்கே, "தனிநாயகம் அடிகளுக்கு விழா" கொண்டாட வேண்டும். இதைப்பற்றி நானும் தமிழக முதல்வர் திரு.எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களைச் சந்தித்துப் பேசவிருக்கிறேன். மற்றும் ஆர்வம் மிகுந்த பெரியோர்களையும் கலந்து பேசி ஆவன செய்ய முயலுகிறேன்.

"இதயம் பேசுகிறது"
05.10.80

## இலங்கையின் இலக்கியப் போக்குகள்

**ஒரு சாதாரண தொழிலாளி வீட்டில் பிறந்த என்னை இன்று ஒரு அங்கீகாரம் பெற்ற எழுத்தாளனாக, கௌரவ மிக்க இலக்கியவாதியாக உருவாக்கியதே சோவியத் சிந்தனைதான்.**

*(கேட்டு எழுதியவர் "ஃபிடல்")*

இலங்கையில் ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார, அரசியல் வளர்ச்சிப்போக்குகள், இளம் தலைமுறையினரின் சிந்தனையைக் கிளறிவிட்டுள்ளன. இதன் தாக்கத்தை இலக்கிய உலகிலும் காண முடிகிறது.

இலங்கைத் தமிழர்கள் இதுகாறும் தம்மை இந்திய வம்சா வழியினர் என்றும், இந்தியத் தாய்நாட்டின் புதல்வர்கள் என்றும் நம்பிக் கொண்டிருந்த நிலை தற்போது மாறியுள்ளது. இலங்கை தான் தமது தாயகம் என்கின்ற உணர்வு அவர்கள் மத்தியில் மேலோங்கி வருகிறது.

இலங்கை இந்தியர்கள். என்று அழைக்கப்பட்டு வந்த அம்மக்கள் இப்போது இலங்கை மலையகத்தமிழர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இலங்கையின் கிழக்கு பகுதியிலும் வடக்கு பகுதியிலும் உள்ள தமிழரிலிருந்து நடை, உடை, பாவனைகளாலும், இதர பழக்க வழங்கங்களாலும் வேறுபட்டி ருந்த போதிலும் தாம் மலையகத்தமிழர்கள் என்கின்ற பொதுவான எண்ணம் இப்போது ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்கள் மத்தியில் தாம் ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்னும் உணர்வு மேலும் விரிவடைந்துள்ளது. தமது தேசிய இலக்கியத்தை, வெளியீடுகள், கருத்தரங்குகள், சஞ்சிகைகள் மூலம் வெளிப்படுத்துவதில் இலங்கைத் தமிழர்கள்

பேரார்வம் கொண்டுள்ளனர். இந்த வளர்ச்சி புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது.

இலங்கையில் மற்றுமொரு ஆரோக்கியமான வாய்ப்பு என்னவென்றால், எழுத்தாளர்கள் இடையே எத்தகைய கருத் தோட்டங்கள் இருந்த போதிலும், மார்க்சீய லட்சியப் பாதையைத் தாங்கிப்பிடித்து நடைபோடும் எழுத்தாளர்களையே மக்கள் அங்கீகரித்து வருகின்றனர். இலங்கை எழுத்தாளர்களில் பலர், இவ்வாறு மார்க்சீயத்தினை ஏற்று மக்களின் அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளனர். இது ஏதோ தற்செயலாக ஏற்பட்ட நிகழ்ச்சியாக கருதுவது உண்மையாகாது.

கடந்த 25 ஆண்டு காலமாக, குறிப்பாக இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்தியுள்ள இயக்கங்களே இதற்கு அடிப்படையான காரணமாகும்.

பழம் பெரும் பேராசிரியர்கள் முதல் இளம் எழுத்தாளர் வரை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் அங்கத்தினர்களாக உள்ளனர். இதுவரை பெரிய அளவில் நான்கு மகா நாடுகளையும், எண்ணற்ற கருத்துக்களையும், விமர்சனக் கூட்டங்களையும், முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்தி முடித்துள்ளது.

சகல தேசங்களிலிருந்து கிளம்பி வருகின்ற நச்சு இலக்கியங்களுக்கு எதிராகக் கடுமையான போராட்டத்தை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்தி வருகின்றது.

ஏழு வருடகாலம் நடைபெற்ற திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் ஆட்சி, நச்சு இலக்கியங்கள் இலங்கைக்குள் புகாமல் தடைவிதித்திருந்தது. ஆனால் தற்போது, ஆட்சி பீடத்திலுள்ளவர்களின் சுதந்திர வர்த்தக வலயக் கொள்கையின் ஆசியோடு சர்வதேச ஏகாதிபத்திய சாக்கடை இலக்கியங்கள் எமது நாட்டில் ஊற்றெடுக்கத் தொடங்கிவிட்டன.

இலங்கை இலக்கிய உலகில் இன்னொரு போக்கையும் காண முடிகிறது, பெரும்பாலான இலக்கியவாதிகள் மார்க்சீய சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளது உண்மையாக இருந்த போதிலும், இதற்கு நேர் எதிரான சக்திகளும் எங்கள் நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

தத்துவ ரீதியாக முகங்கொடுக்க முடியாத இந்தச்சக்திகள் தனிநபர்கள் மீது தாக்குதல் தொடுக்கின்றன. தம்மை 'நவசோஷலிஸ்டுகள்' என்று அழைத்துக்கொள்ளும் இவர்கள் தமிழகத்திலுள்ள வக்கரித்துப்போன மார்க்சீய எதிர்ப்பாளர்களின் கருத்துக்ளையே வாந்தி எடுக்கிறார்கள். தாங்கள் தான் உண்மையான மார்க்சீயவாதிகள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் இவர்கள், மார்க்சீய விரோதிகளே!

அதே நேரத்தில் எம்மைப் போன்ற எழுத்தாளர்கள் அடிக்கடி தமிழகத்திற்கு வருகை தருவதாலும், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தைப் போன்ற நிறுவனங்கள் எம்மைப் போன்றவர்களின் படைப்புக்களைப் புத்தக வடிவில் தமிழக மக்கள் மத்தியில் பரப்புவதாலும் இலங்கை எழுத்துலகைப் பற்றி தமிழக மக்கள் புரிந்துகொள்ளமுடிகிறது.

தமிழகத்தில் எந்த நச்சு இலக்கியங்களை எதிர்த்து நீங்கள் போர்க்கொடி உயர்த்தியிருக்கிறீர்களோ அதேபோன்ற நச்சு இலக்கியங்களுக்கு எதிராகத்தான் இலங்கையில் நாங்கள் போராடி வருகிறோம். தமிழக இலங்கை எழுத்தாளர்கள் மத்தியில் புதியதோர் உறவை, இணைப்பை இது ஏற்படுத்தியுள்ளது. இது ஒரு ஆரோக்கியமான வளர்ச்சிப் போக்காகும்.

இங்கே நான் மற்றொரு விஷயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பிற இந்திய மொழிகளைப்போல் அல்லாமல் தமிழ் மொழியானது பல தேசங்களில் பேசப்படுகின்ற மொழியாகும். ஆனால் தமிழகத்திலுள்ளவர்கள் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இன்னபிற தேசங்களில் உள்ள தமிழ் இலக்கிய கர்த்தாக்கள் ஆற்றிவரும் இலக்கியப் பணியைப் பற்றி உரிய கவனம் செலுத்தவில்லை என்றே கருதுகிறேன்.

கடந்த 10 வருடகாலத்தில் 780 தமிழ் நூல்கள் இலங்கையில் மட்டுமே வெளிவந்துள்ளன. அதுமட்டுமின்றி கடந்த 5 வருட காலத்தில் இலங்கைப் படைப்பாளிகளின் சுமார் 20 நூல்கள் சென்னையிலிருந்து பதிப்பிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் உள்ள இலக்கியப் பண்டிதர்கள் இதைப்பற்றிப் போதிய அக்கறை செலுத்துவதில்லை.

மேலும் உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டிற்கு வித்திட்ட மூலவர் தனிநாயக அடிகள், யாழ்ப்பாணம் நெடுந்தீவில் கடந்த செப்டம்பர் 3ஆம் நாள் மறைந்தார். இதைப் பற்றி தமிழ் நாளேடுகள் எந்தவிதமான செய்தியையும் பிரசுரிக்க வில்லை. வானொலி மட்டுமே இந்தச் செய்தியை ஒலி பரப்பியது. அதே நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் செப்டம்பர் 13ஆம் நாள் பேராசிரியர் நா. வானமாமலை அவர்களுக்கு டாக்டர் விருதை தேகாந்திரமாக அளித்துக் கௌரவித்தது.

மேற்கண்ட இரண்டு விஷயங்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். ஏன் இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இவ்வளவு பெரிய இடைவெளி? இது தேவைதானா?

இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையே கலாச்சாரப்பரிவர்த் தனையின் அங்கமாக, இலங்கை எழுத்தாளர்கள் தமிழகத்துக்கு வருவது போல, தமிழக எழுத்தாளர்கள் இலங்கைக்கு வருகை தர வேண்டும். விருந்தோம்பல் பண்பில் சீரியவர்களான இலங்கை மக்கள் இவர்களை வரவேற்பார்கள்.

தமிழகத்திலிருந்து, ஆனந்த விகடன், குமுதம் போன்ற ஏடுகள் இலங்கைக்கு வந்து குவிகின்றன. ஆனால் இலங்கையிலிருந்து வெளிவரும் 'மல்லிகை' 'சுடர்' 'சமர்' 'சிரித்திரன்' 'அலை' 'கதம்பம்' போன்ற ஏடுகள் தமிழகம் வருவதற்கு இந்திய அரசு அனுமதிப்பதில்லை. இது குறித்து உங்கள் மாநில அரசும் மத்திய அரசை வற்புறுத்துவதாகத் தெரியவில்லை.

16வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது 'மல்லிகை'. பெரும் அறிஞர்கள் முதல் சாதாரண சுருட்டுத்தொழிலாளர்கள் வரை 'மல்லிகை'யின் வாசகர்கள். சக்திவாய்ந்த எழுத்தாளர் களான கைலாசபதி, சிவத்தம்பி, முருகையன், சாந்தன், முருக பூபதி, திக்குவல்லை, கமால், தெணியான், துரைமனோகரன் போன்றோர் 'மல்லிகை'யில் இடம்பெற்று வரும் படைப்பாளர்கள்.

இன்று இலங்கைப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பயிலும் மாணாக்கர்கள் கூட தமது ஆராய்ச்சிக்காக 'மல்லிகை' பழைய பிரதிகளைத் தேடுகிறார்கள் என்றால் பாருங்களேன்!

'மல்லிகை'யின் வரலாறு ஒரு போராட்ட வரலாறாகும். ஈழத்தின் நல்லிலக்கியப் போராட்ட வரலாற்றிலிருந்து 'மல்லிகை'யின் வரலாற்றைப் பிரித்துப் பார்ப்பது என்பது இயலாத காரியமாகும்.

'மல்லிகை' தோன்றிய நாளிலிருந்து இன்று வரை 'மல்லிகை' பிரதிகளை அச்சடித்து எடுத்துச் சென்று பேருந்து நிலையங்கள், கல்லூரிகள், பள்ளிகள், அரசாங்க அலுவலகங்கள் ஆகியவற்றில் நின்று நானே விற்றுவருகிறேன். இவ்வாறு செய்வதன் மூலம் 'மல் லிகை'யின் நேச சக்திகளை மாதா மாதம் என்னால் நேரிலேயே சந்திக்க முடிகிறது.

இன்று இலங்கையில் இலக்கிய சர்ச்சைகள், விவாதங்கள், கருத்தரங்குகள், கல்லூரியின் தேர்வு வினாத்தாள்கள் ஆகிய வற்றில் 'மல்லிகை'யின் பெயர் அடிபடுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. நம்மை எதிர்பவர்கள் கூட 'மல்லிகை'யின் ஆத்ம விஸ்வாசத்தில் அப்பழுக்கு காண்பதில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

அதே சமயம், நவ சோஷலிஸ்டுகள் என்று தம்மை அழைத் துக்கொள்ளும் ஒரு கூட்டம் என்னையும் 'மல்லிகை'யையும் சோவியத்தின் ஏஜண்டுகள் என்று குற்றம் சாட்டுகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டை பரிபூரணமாகப் பெருமையுடன் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

காரணம், ஒரு சாதாரண தொழிலாளி வீட்டில் பிறந்த என்னை இன்று ஒரு அங்கீகாரம் பெற்ற எழுத்தாளனாக, கௌரவமிக்க இலக்கிய வாதியாக உருவாக்கியதே சோவியத் சிந்தனைதான். எனவே என்னை மனிதனாக்கிய ஒரு மாபெரும் சக்திக்கு நான் சேவகன் என்று என் எதிரிகள் குற்றம் சாட்டு வதன் மூலம் என்னைப் பெருமைப்படுத்துவதோடு மட்டு மல்லாமல் எனக்குத் தனி கௌரவமே தந்து விடுகிறார்கள். அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறிக்கொள்கிறேன்.

"தாமரை"
அக்டோபர், 1980.

## எனக்கிருக்கும் ஆதங்கம்

**நான் யாழ்ப்பாணத்தில் பிறந்தவன். சாதாரண தொழி லாளியாக வாழ்க்கையை ஆரம்பித்து எழுத்தாளனாக ஆனவன். சமூக அமைப்பும் சாதிக் கொடுமைகளும் என் சிந்தனையைத் திசை திருப்பின; என் பேனாவைக் கூர்மையாக்கின. இடது சாரித்தலைவர்களின் அனுசரணை என் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருந்தது.**

*"சாவி"யுடன் ஒரு சந்திப்பு*

*"ஒரு எழுத்தாளன் எழுத்தை மட்டும் நம்பியே பிழைக்க முடியும் என்ற நிலை இலங்கையில் உருவாகி விட்டதா?"*

இல்லை. எழுதுபவர்கள் பிழைப்புக்காக எழுதுகிறவர்களு மல்லர். தங்களது இலக்கிய தாகத்தைத் தணித்துக் கொள்ளவே எழுதுகிறார்கள். எழுதுவது ஒரு சமூகக் கடமையாகவே அங்கே கருதப்படுகிறது. எழுத்து ஒரு ஜீவ உணர்வாக அங்கே வெளிப்படுகிறது. அதில் ஒரு சத்தியம் இருக்கிறது.

*"புதுமைப்பித்தனும், தி. ஜானகிராமனும், ஜெயகாந்தனும், சுஜாதாவும் இலங்கை வாசகர்களுக்கு அறிமுகமாகியிருக்கும் அளவுக்கு உங்கள் நாட்டுத் தமிழ் எழுத்தாளர்கள் - ஒரு டொமினிக் ஜீவா தவிர - எங்களுக்கு அதிகமாகப் பரிச்சய மாகாததன் காரணம் என்ன?"*

இலக்கியத்தைத் தேடிப் படித்து அறிந்து கொள்ளும் ஆர்வம் இல்லாததுதான். உங்களுக்குத் தெரியுமா? கோவையில் "வானம் பாடி" என்ற சிற்றேடு இந்தவாரம் வெளிவந்தால், அதைப்பற்றிய பெரிய இலக்கிய சர்ச்சையே அடுத்த வாரம் இலங்கையில்

நடக்கிறது. தமிழ்நாட்டின் சின்னஞ்சிறிய மூலை முடுக்கில் இருந்து வெளிப்படும் இலக்கிய முனகல்கள்கூட எங்கள் காது களுக்குத் தெளிவாய்க்கேட்கின்றன. நீங்கள் பெரிய இனம், கலை, இலக்கிய, சமூக வாழ்க்கையில் பல மகாபுருஷர்கள் அவதரித்த நாடு இது. பாரதியும் கம்பனும் வள்ளுவரும் பிறந்த வீடு. எனவே எல்லாம் இங்கே ஏற்கனவே இருக்கிறது என்ற மனோபாவத்தால் தேடல் முயற்சி இங்கே முடங்கிப் போய் இருப்பதாக நான் கருதுகிறேன். நாங்கள் அப்படி அல்ல. புதிது புதிதாக அறிந்து கொள்ள வேண்டும் என்ற அறிவுப் பசி எங்களுக்கு அதிகமாக இருக்கிறது. ஏதோ நான் அடிக்கடி இங்கே வருவதாலும், பல மட்டங்களில் இங்கிருக்கும் படைப்பாளிகள் எனக்குப் பழக்க மானவர்கள் என்பதாலும், எனது 'மல்லிகை' இதழுக்கு ஒரு வாசகர் கூட்டம் இங்கே இருப்பதாலும் நான் கொஞ்சம் அறிமுகமான இலங்கை எழுத்தாளன். ஆனால் என்னை விடச் சிறந்த எழுத்தாளர்கள் இலங்கையில் உண்டு. அவர்கள் இன்னும் வெளிச்சத்துக்கு வரவில்லையே என்பதுதான் எனக்கிருக்கும் ஆதங்கம். என்னை மாத்திரம் வளர்த்துக் கொள்வது என் எழுத்தின் நோக்கமல்ல. தனிமரம் தோப்பாகாது என்பது எனக்குத் தெரியும்.

"ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு பற்றி...."

இந்த மாநாடுகளில் பலவித எண்ணங்கள், மதிப்பீடுகள் வரத்தான் செய்யும். நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன், ஒரே யொரு முக்கிய காரணத்துக்காக. தனித்தனி மனிதர்களாகத் தமிழகம் வந்து போகும் நாங்கள் ஒருமுறையாவது ஒரு குழுவாக நவீன எழுத்தாளர்களும், நவீன விமர்சகர்களும் வந்து பழக ஒரு வாய்ப்பை மாநாடு தந்தது. பேராளர்களாக வந்த நாங்கள் இந்த ஒரு சந்திப்புக் குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

"தமிழ் வளர்ச்சிக்கு இந்த மாநாடு ஏதேனும் உதவி செய்ததாக உங்களால் கருதமுடிகிறதா?"

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு என்று பல பெரிய வண்ணப் 'போஸ்டர்களை'ப் பார்த்து, ஆர்வத்துடன் நாங்கள்

வந்தோம். ஆனால் இங்கே வந்ததும் ஆராய்ச்சி மறைந்து போய் வெறும் தமிழ் மாநாட்டை மட்டுமே மதுரை நடத்தியதைக் கண்டோம். நாங்கள் எதிர்பார்த்தது ஆராய்ச்சியைத்தானே தவிர, வெறுமனே நன்றி பாராட்டும் பிரசங்கங்கள் அல்ல. மாநாட்டு மேடையை விட மதுரை மாநகர தெருக்கள் எங்களுக்கு உபயோகமாக இருந்தன. வீதிகளில், தேநீர்ச் சாலைகளில், தங்கும் அறைகளில் எல்லாம் நாங்கள் பல்வேறு தமிழ் அறிஞர்களைச் சந்தித்தோம். தமிழ் பற்றி உரக்கச் சிந்தித்தோம். ஆராய்ச்சிகளைப் பரிமாறிக் கொண்டோம். அந்த விதத்தில் இந்த மாநாடு பயன் பட்டதாகவே எனக்குப் படுகிறது.

'ஆனந்தவிகடன் பரிசும், அப்பரிசு பின்னர் மறுக்கப்பட்டது பற்றி..."

தயவுசெய்து இதுபற்றி நான் சொல்வதைக் கவனமாக எழுதிக்கொண்டு பிரசுரியுங்கள். சர்ச்சையைக் கிளப்பும் கருத்தாக இது இருக்கலாம். இருந்தாலும் எனக்கு இதைச் சொல்ல ஒரு கடமை இருப்பதாக நினைக்கிறேன். விகடன் ஒரு ஆலமரம். அதன்மேல் எனக்கு என்றும் மதிப்புண்டு. நடந்து முடிந்த இந்த நிகழ்ச்சி மிகவும் துக்ககரமானது. விகடனின் வருத்தத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் இந்தச் சம்பவம் நடைபெறாமலே தடுத்திருக்க முடியும் என்றே நான் நம்புகிறேன்.

"எப்படி...?"

இவர்கள் நடத்தியது தமிழ் நாவல் போட்டியே தவிர, தமிழக நாவல் போட்டி அல்ல. அப்படி இருக்கும்போது உலகில் தமிழ் எங்கெங்கு பேசப்படுகிறதோ அங்கிருந்து எல்லாம் படைப்புக்கள் வரும் என்று ஒரு எதிர்பார்ப்பு இருந்திருக்கும். ஆனால் நடுவர் குழுவில் இந்தப் பகுதியைச் சார்ந்தவர்கள் மட்டுமே இருந்தனர்.

"சரி, இலங்கையிலிருந்து ஒரு நாவல், தென் ஆப்பிரிக்கா விலிருந்து ஒரு நாவல் வருகிறது என்பதற்காக அந்த நாட்டைச் சேர்ந்த ஒரு நடுவரையும் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது எப்படிச் சரியானதாகும்?"

நான் அப்படிச் சொல்லவில்லை! பிற நாட்டு நாவல்களைப் பற்றியும் நாவலாசிரியர்களைப் பற்றியும் ஒரு அடிப்படை அறிவு இத்தகைய போட்டியில் முடிவெடுக்கும் நடுவர் குழுவுக்கு வேண்டும். இருந்திருந்தால் இந்தத் தவறை அப்போதே கண்டு பிடித்திருக்கமுடியும்.

"உலகத்தில் வெளியாகும் அவ்வளவு தமிழ் நாவல்களையும் படித்தவர்கள்தான் ஒரு நாவல் போட்டிக்கு நடுவர்களாக முடியும் என்றால் போட்டியே நடத்த முடியாதே!"

அருள். சுப்பிரமணியம் அப்படியொன்றும் 'அட்ரஸ்' இல்லா தவரல்ல. 'விகடன்' போலவே அங்கே 'வீரகேசரி'யும் ஐம்பதாண்டு கண்ட பத்திரிகை. அதன் பிரசுரமாக வெளிவந்ததுதான் இந்த நாவல்.

"சாவி"

08.02.81.

## சாதனையாளர்

அந்தக் காலத்திலிருந்த பிரதேச அரசியல் கட்சி களோ, தமிழ்த் தேசியக் கட்சிகளோ இந்தக் கொடிய சமூக ஒடுக்கு முறைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க முற்படவில்லை. இதை ஒரு சமூகப் பிரச்சினையாகக் கருதி, இந்தக் கொடிய தீண்டா மையை ஒழிக்க வேண்டும் என்ற உணர்வு அவர் களுக்கு இருக்கவில்லை. ஆனால் அந்தக் காலத் திலிருந்து இடதுசாரிச் சக்திகள் இதற்கு முழுமூச்சாக எதிர்ப்புத் தெரிவித்தன. அத்தோடு இடதுசாரித் தலை வர்களது தனிப்பட்ட வாழ்க்கையும், தீண்டாமைக்கு எதிராக அவர்கள் அனுஷ்டித்தபோக்கும் எங்களை அவர்கள்பால் ஆகர்ஷிக்கச் செய்தன.

### *ஈழத்து இலக்கியத்துறையில்*

### *அன்றும் இன்றும்:*

### *சிங்கைத்திவாகரன்*

*ஈழத்து இலக்கியத்துறையில் ஒரு காலத்தில், வசதி படைத்த மேல்தட்டு வர்க்கத்தினரும், சமூக, அரசியல் செல்வாக்குள்ள வர்களும், பல்கலைக்கழகப்பிரமுகர்களும்தான் ஈடுபடமுடியும் என்ற நிலையை மாற்றி அமைத்தவர்களின் வரிசையில் டொமினிக் ஜீவாவும் முக்கியமானவர். தம்மை ஒரு சாமானியர் என்று அழைத்துக் கொள்ளும் இவர் காலங் காலமாகச் சமூக ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாகிவந்த சாதாரண பாட்டாளி வர்க்கத்திலிருந்து இலக்கியத்துறைக்கு வந்து பெருஞ் சாதனைகள் புரிந்தவர்.*

சமூக அந்தஸ்துக்காக-சமூக மட்டத்திலே தனது புகழை நிலை நிறுத்த வேண்டும் என்பதற்காக-எழுதுகின்ற இலக்கியவாதியை விட, தான் வாழும் சமூகத்தின் பிரதிநிதியாக-அதன் குரலாக இருந்து எழுதுகின்ற இலக்கியவாதி மிக உயர்ந்தவன் என்பதை ஜீவாவில் கண்டு கொள்ளலாம். அவர் தந்த பதில்கள்....

கேள்வி: உங்களுக்கு எழுத வேண்டுமென்ற ஆர்வம் எப்படி ஏற் பட்டது?

பதில்: இளமையிலேயே இருந்த அரசியல் ஆர்வம் ஓரளவு இதற்குக் காரணமாக இருந்தாலும், முக்கியமாக சமூக ஒடுக்கு முறைகளும் அதனால் இழைக்கப்பட்ட அநீதி களும்தான் என்னை முழுமூச்சாக எழுத்துத் துறையில் இறங்க வைத்ததெனலாம் அதாவது எனது கால கட்டத்திற்கு முன்பிருந்த இலக்கிய வாதிகள் யாரும் இந்த அநீதிகளுக்கோ அல்லது ஒடுக்கு முறைகளுக்கோ எதிராகக் குரல் கொடுக்கவில்லை. பிற்காலத்தில் இவை பற்றி எழுத முற்பட்டவர்கள்கூட இதை ஒரு மனிதாபி மானத்தோடு நோக்கி, சமூகப் பிரச்சினையாக உணர்ந்து எழுதவில்லை. நான் இந்த ஒடுக்கு முறை களுக்கு உள்ளான ஒரு சமூகத்திலிருந்து வந்தவன். அத்தோடு அதிகம் படித்தவனுமல்ல, ஆரம்ப காலத்தி லிருந்தே உலகு தழுவிய ஒரு தத்துவத்தை நோக்கமாக கொண்டவன். இவைகளே எனது ஆரம்ப நிலைகள்.

கேள்வி: ஆரம்ப காலகட்டத்தில் 'சுதந்திரன்' பத்திரிகையிலும், அதன் அணியிலும் சேர்ந்து எழுதிய நீங்கள் ஏன் பின்னால் தீவிர இடதுசாரி அணிக்குள் சென்றீர்கள்?

பதில்: அந்தக் காலத்திலிருந்த பிரதேச அரசியல் கட்சிகளோ, தமிழ்த் தேசியக் கட்சிகளோ இந்தக் கொடிய சமூக ஒடுக்கு முறைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க முற் படவில்லை. இதையொரு சமூகப் பிரச்சினையாகக் கருதி, இந்தக் கொடிய தீண்டாமையை ஒழிக்க வேண்டு மென்ற உணர்வு அவர்களுக்கு இருக்கவில்லை. ஆனால்

அந்தக் காலத்திலிருந்து இடதுசாரிச் சக்திகள் இதற்கு முழுமூச்சாக எதிர்ப்புத் தெரிவித்தன. அத்தோடு இடது சாரித் தலைவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையும், தீண்டாமைக்கு எதிராக அவர்கள் அனுஷ்டித்த போக்கும் எங்களை அவர்கள்பால் ஆகர்ஷிக்கச் செய்தன. அவர்களது அரசியல் தத்துவங்களைப் படித்த பின்னர், வெறும் தாழ்த்தப்பட்ட பிரச்சினையை மட்டுமல்லாமல் சமூக மட்டத்திலே இருந்து பல்வேறு சமூகக் கொடுமைகளையும் உணரக் கூடியதாக இருந்தது. ஏழைகள் திட்டமிட்டு வஞ்சிக்கப்பட்டார் கள். வசதி படைத்தவர்கள் பெரிய மனிதர்களாக உலா வினார்கள். அவர்களுக்கு அரசியல் செல்வாக்கும், பெரிய உயர்தர உத்தியோகங்களும் இருந்தன. இதை ஆழமாக நோக்கி, சிந்தித்து உணர்ந்தபோது எங்களுக் குப் பரந்து பட்ட ஒரு அறிவும் பார்வையும் ஏற்பட்டது.

கேள்வி: சாமானியராக எழுத்துலகிற்கு வந்த நீங்கள் புதிய இடதுசாரிக் கருத்துக்களை இலக்கியத்தில் புகுத்த முனைந்தபோது, உங்களுக்கு அந்தக் காலத்தில் இதற்கு எதிர்ப்பு இருக்கவில்லையா? பத்திரிகைகள் உங்களுக்குப் போதிய களம் அமைத்துத் தந்தனவா?

பதில்: அந்தக் காலத்தில் எங்களுடைய இலக்கிய முயற்சிகளை 'இழிசனர் வழக்கு' என்று சொல்லிப் பழைமை பேணி கள் கேலி செய்யவே செய்தனர். நாங்களெல்லோரும் முற்போக்கு எழுத்தாளர் என்ற ஓர் அணியிலே திரண்டு இதற்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தினோம். ஆனால் எங்களுடைய போராட்டம் எந்தவொரு தனி எழுத்தாளனுக்கும் எதிரானதல்ல. அரசாங்க ஆதிக்க முள்ள பிற்போக்கு இலக்கிய கும்பலுக்கும், முற்போக்கு எழுத்தாளர்களுக்கும் இடையிலே நடந்த போராட்டமே அது. மற்றையது, எங்களது சிந்தனையும் தமிழுக்குப் புதியவொரு சிந்தனையாகவே இருந்தது. தமிழ் மக்க

ளும் இந்தக்கால கட்டத்திலே இத்தகைய நவீன சிந்தனைக்கு உட்படத் தலைப்பட்டார்கள். எனவே எங்களை எதிர்த்தவர்களும் வெகுஜனமட்டத்திலே எங்கள் கருத்துக்களை நிராகரிக்க முடியாதவர்களாகவே இருந்தார்கள். பத்திரிகைகளும் எனக்குக் களம் அமைத்துத் தந்தன. அத்தோடு ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி ஆகியோரைப் பிரபலப் படுத்திய 'சரஸ்வதி' என்ற பிரபல தமிழகப் பத்திரிகையில் நான் தொடர்ந்து எழுதி வந்துள்ளேன். அந்தத் தமிழகப் பிரபலமும் ஈழத்தில் எனக்குக் களம் கிடைப்பதற்கு ஒரு காரணமாக அமைந்தது. அத்துடன் நாங்கள் வெறும் எழுத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. ஊரூராகச் சென்று இலக்கியப் பிரச்சினைகள், உண்மையில் வெறும் இலக்கியப் பிரச்சினைகளல்ல, சமூகப் பிரச்சினைகள்தான்மக்கள் பிரச்சினைகள்தான் இலக்கியங்களுக்கூடாகச் சொல்லப்படுகின்றன என்பதை மக்கள் முன் வைத்துப் பிரசாரம் செய்தோம். இதனால் எங்கள் கருத்துக்கள் மக்கள் மன்றத்தில் நன்றாகவே வேரோடி இருந்தன. எங்களுக்கு மக்கள் மத்தியில் வளர்ந்து வந்த செல்வாக்குத்தான் பிரபல பத்திரிகைகள் எங்களுக்கு இடந்தர வேண்டிய நிர்ப்பந்தத்தையும் ஏறப்டுத்தின. அத்தோடு காலங்காலமாக 'மௌண்ட்ரோட்'டையும், 'மெரினாபீச்'சையும் படித்து படித்து மந்தித்துப் போயிருந்த ஈழத்து வாசகர்களுக்கு எங்களுடைய கதைக்கருத்துக்கள் புதுமையாகவும் எங்களுடைய மண்ணுடன் ஊறிப்போனவையாகயும் இருந்தன. இது நாங்கள் மக்கள் மத்தியில் வேரூன்ற மற்றொரு காரணமாகும்.

கேள்வி: தனியாகச் சொந்தத்தில் ஒரு பத்திரிகை நடத்த வேண்டுமென்ற எண்ணம் ஏன் உங்களுக்கு ஏற்பட்டது?

பதில்: எனது முழுக்கருத்தையும் சொல்லவேண்டும்; ஒரு தேசியமே எழும்ப வேண்டும்; எமது சக்திகள் எல்லாம்

ஒன்று திரள வேண்டும் என்கிற எண்ணம் எனக்கு உருவாகியது. தனிமரம் ஒருநாளும் தோப்பாகி விடாதல்லவா? வரதர் போன்ற பல்வேறு எழுத்தாளர் கள் பத்திரிகை நடத்தித் தோல்வி கண்டபோது ஏன் அதை நான் படிப்பினையாக எடுத்துக்கொண்டு ஒரு பத்திரிகையை வெற்றிகரமாக நடத்தமுடியாது என்று எண்ணினேன். அந்த எண்ணத்திலேதான் 'மல்லிகை' பிறந்தது. மல்லிகையை அச்சிட்டவுடன் நான் செய்த முதற்காரியம், 'ஆனந்த விகடன்' ஸ்தாபகர் வாசனின் முன் மாதிரியைப் பின்பற்றி எவ்வித கூச்சமுமில்லாமல் தெருவில் இறங்கி அதை விற்க முற்பட்டதுதான். மல்லிகையின் வளர்ச்சிக்கு இது முக்கியமான காரணம்.

கேள்வி: நீங்கள் அடிக்கடி தமிழகம் சென்று வருகின்றீர்கள். அங்கு எமது இலக்கியத்திற்காகக் குரல் கொடுக் கின்றீர்கள். இந்த வகையில் தமிழக வாசகர்களைப் பற்றிக்கொஞ்சம் சொல்வீர்களா?

பதில்: நாங்கள் நினைக்கின்ற தமிழகத்து வாசகர்களை விட எங்களை விரும்புகின்ற வாசகர்கள் ஏராளம். ஆனால் எங்களுடைய கருத்துக்கள் அவர்களை முழுமையாகச் சென்றடையவில்லை. வியாபார இலக்கியத்தைப் படித்து அவர்களில் அநேகர் இன்று வெதும்பிப்போய் இருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த பலர் ஈழத்து இலக்கியம் நல்ல ஆரோக்கியமான வழியில் வளர்ந்து வருவதை உண்மையாகப் பாராட்டியுள்ளார்கள். அது ஒரு பெரிய தேசம். ஒரு சிலர் அங்கு போய்க் கருத்துச் சொல்வதால் மாத்திரம் முழுத்தேசத்தினது கருத்துக்களையும் புரிந்துகொள்ள முடியாது. நான் தமிழகத்துக்குப் பலதடவைகள் தொடர்ந்து சென்ற தாலும், அங்கு பல்வேறு கருத்துக்களைச் சொன்ன தாலும், என்னையும் எங்கள் நாட்டையும் புரிந்து கொண்ட ஏராளமான வாசகர்கள் அடிக்கடி கடிதம் எழுதுகிறார்கள். இலங்கை பற்றி அறிய வேண்டுமென்ற

அவா, ஈழத்துப் படைப்பிலக்கியங்கள் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம், வேறெந்தக் கட்டத்தையும் விட இப்போது அதிகமாக இருக்கிறது.

கேள்வி: தமிழகத்துச் சஞ்சிகைகளின் தங்குதடையற்ற வருகையோடு நமது பிரசுரங்களெல்லாம் அடைபட்டுப் போய் விட்டனவே! இதற்கு என்ன செய்யலாம்?

பதில்: சினிமாத்துறையில் கூட்டு முயற்சியில் ஈடுபடுவது போல கூட்டு முயற்சியில் ஈழத்துப் பிரசுரகர்த்தர்களும் கூட்டுச் சேர்ந்து இலக்கியங்களைப் பிரசுரிக்க முன்வர வேண்டும். இது இரண்டு நாட்டு அரசாங்கங்களுக்குமிடையிலான பிரச்சினை. சுமுகமான முறையில் பேசி இம் முயற்சியில் ஈடுபடுவதே நல்லது.

"ஈழநாடு"

17.5.1981

## தாரகமந்திரம்

"நானில்லாமல் கட்சியிருக்கும்
கட்சியில்லாமல் நானில்லை"

### தோழர் கல்யாணசுந்தரத்துக்கு ஒரு கடிதம்

**8**.6.69ல் உங்களுக்கு மணிவிழா நடந்த அழைப்பிதழ் 10.6.69ல் தான் கிடைத்தது. மெத்த மனக்குறை எனக்கு - 26.5.69-ல் திருச்சியில் இருந்து எனது தாயகம் திரும்பிய எனக்கு ஒரு பத்துப் பன்னிரண்டு நாட்கள் தாமதித்து உங்கள் மணி விழாவைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்பதுதான் என் மனக்குறை.

நான் வயதில் சிறியவன். ஆனால் புனிதமான இலக்கியப் பேனாவைப் பிடிப்பவன். அப் புனிதமான பேனாவால் வாழ்த்தி எழுதுகின்றேன். உங்களைப் போன்றவர்கள் வெறும் தமிழகத்தின் சொத்து மாத்திரமல்ல; மனுக்குலத்தின் பொதுச் செல்வம் நீங்கள்!

கடல் கடந்து, தேசங்கடந்து வந்த என்னைப் போன்ற ஒரு சாதாரண எழுத்தாளனுக்கு நீங்கள் காட்டிய பெருமதிப்பை எண்ணியெண்ணி என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை. சம்பிரதாய வாழ்த்துக்களுக்கு அப்பால் நம்மைப் போன்றவர்களை ஒருங்கிணைக்கின்றதே ஓர் உறவு அந்த மகத்தான தோழமை சார்ந்த வர்க்க உறவின் ஓர் அங்கமாக என்னை மதித்து நீங்கள் காட்டிய பரிவைப் பற்றி இங்குள்ள தோழர்களுக்குச் சொல்லிச் சொல்லி மகிழ்ச்சியடைகின்றேன்.

உங்களைப் போன்ற பண்பாளர்களை உருவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சியில் நானும் ஓர் அங்கத்தவன் என்ற முறையில்

எனக்கும் பெருமிதமுண்டு. உங்களைப்போன்ற ஒருவனாக என்னை ஆக்கிக்கொள்ள என்றென்றும் முயன்று வருவேன். உங்களது சந்திப்பு எனக்கு அந்த வல்லமையைத் தரும் என்றே நம்புகின்றேன். எனது பேனாவுக்கும் ஒரு புதிய வேகத்தைத் தரட்டும்.

"நானில்லாமல் கட்சி இருக்கும்; கட்சியில்லாமல் நானில்லை" என்ற வாசகத்தைப் படித்தேன். இது திசை தப்பிச் சிந்திக்க முனையும் சகலருக்கும் ஒரு பொதுக் குரலாக அமையும் என எண்ணுகின்றேன். என்னைப் போன்றவர்களுக்கும் இது ஒரு தாரகமந்திரமாக இருக்கட்டும்.

உங்களது நெடும் பயணப் பாதையில் எனது இலக்கியப் பயணமும் தடம் புரளாமல் செல்ல நீங்களும் என்னை வாழ்த் துங்கள். எப்போதோ ஒரு காலத்தில் எனக்கு அது உதவும்.

தமிழக தலைமைக் குழுவைச் சேர்ந்தவர்கள் பலர் என்னைக் கௌரவிக்கும் முறையில் எனது வரவேற்புக் கூட்டத்தில் கலந்து கொண்டமைக்காகத் தனித்தனியாக அவர்கள் ஒவ்வொருவருக்கும் எனது நன்றியறிதலைத் தயவு செய்து தெரிவியுங்கள். குறிப் பாகத் தோழர் முருகேசன் அவர்களை நான் விசாரித்ததாகவும் அவரை என்றென்றும் நினைவில் வைத்திருப்பேன் எனவும் கூறுங்கள்.

"தாமரை" இதழ் நமது இலக்கியக் கேடயம். அவ்விதழைப் புது வேகத்துடனும் புதுப் பொலிவுடனும் நடத்தத் தகுந்த ஆலோசனைகளைக் கூறுங்கள். தமிழகத்தின் இலக்கியப் பரப்பில் மிகப்பெரிய தாக்கத்தையும் மாறுதல்களையும் தாமரை நிச்சயம் ஏற்படுத்தும். தாமரை தமிழகத்தில் மாத்திரமல்ல ஈழத்து இலக்கியப் போராட்டத்திற்கும் மிகப் பயன்படும் கூர்மையுள்ள போராயுதமாகும். எனவே தாமரையை மிகமிக அவதானத்துடன் கவனித்து வருகிறோம். கம்யூனிஸ்ட் கட்சி தாமரையை இன்னும் செழுமைப் படுத்தும் என்றே என்னைப் போன்ற ஈழத்து இலக்கியத் தோழர்கள் நம்புகின்றனர்.

"ஜனசக்தி"
06.07.1969

## ஆர்வலர்

**ஒருதலைப் பட்ச இலக்கிய பாலம் அமைக்கப் பட்டதாக இதுவரை நாம் தெரிவித்த குற்றச்சாட்டை ஒழிக்க இப்பொழுது வழி பிறந்திருக்கிறது. இச் சந்தர்ப்பத்தை நம்மவர்கள் சரியாகப் பயன்படுத்தி, ஆர்வமுடன் அவர்கள் எதிர்பார்க்கும் நமது நல்ல படைப்புக்களைத் தமிழகத்தில் சரியான முறையில் அறிமுகப்படுத்தி ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சியை ஏற்படுத்த முயற்சித்தாக வேண்டும்.**

இலங்கைத் தமிழர்கள் பற்றியும், இலங்கையில் வெளியிடப் படும் தமிழ்ச் சஞ்சிகைகள், படைப்புகள் குறித்தும் அறிந்து கொள்வதில் தமிழக எழுத்தாளர்கள் மட்டுமல்ல தமிழகத்தின் சாதாரண பிரஜைகளும் இப்பொழுது மிகவும் ஆர்வங்காட்டிக் கொண்டிருக்கின்றனர். ஏதோ ஒருவகையில் இலக்கிய தொடர்பு கொண்டு இலங்கைத் தமிழர்களின் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளத் துடிக்கும் அவர்களை நல்ல முறையில் நமது படைப்பாளிகள் அணுகிக் கொள்ள வேண்டும்.

ஒருதலைப்பட்ச இலக்கிய பாலம் அமைக்கப்பட்டதாக இது வரை நாம் தெரிவித்த குற்றச்சாட்டை ஒழிக்க இப்பொழுது வழி பிறந்திருக்கிறது. இச்சந்தர்ப்பத்தை நம்மவர்கள் சரியாகப் பயன் படுத்தி, ஆர்வமுடன் அவர்கள் எதிர்பார்க்கும் நமது நல்ல படைப்புக்களைத் தமிழகத்தில் சரியான முறையில் அறிமுகப் படுத்தி ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சியை ஏற்படுத்த முயற்சித்தாக வேண்டும்.

தமிழகத்தில் மூன்று வாரங்கள் தங்கி இருந்தேன். பல பகுதிகளிலும் பத்துக்கும் அதிகமான இலக்கியக் கூட்டங்களில்

கலந்து கொண்டேன்: 'மல்லிகை'யின் பதினேழாவது ஆண்டுமலர் சென்னையில் அறிமுகப்படுத்தப்பட்டு, தொ.மு.சி. ரகுநாதன் தலைமையில் அறிமுக விழாவும் நடைபெற்றது. இலங்கையின் இலக்கிய மாத சஞ்சிகையொன்று சென்னையில் அறிமுகப் படுத்தப்பட்டு, விழா நடைபெற்றது இதுவே முதல் தடவை.

கடந்த காலத்தைவிட இன்று எம்மவர்க்கு அங்கு நல்ல சூழ் நிலை பிறந்திருக்கிறது. இதற்குச் சில தமிழகத்துச் சஞ்சிகை களின் அண்மைக்கால அரவணைப்பும் காரணம் என்று கூறலாம். இதனைவிட, தமிழகத்துச் சாதாரண மக்களும் நம்மவரைத் தெரிந்து கொள்வதில் இப்போது அதிக அக்கறை செலுத்து கின்றனர். இளைய தலைமுறை பற்றி நிறைய அறிந்து கொள்ள அவர்கள் விரும்புகின்றனர். இங்குள்ள பிரச்சினைகளின் உண்மை யான வடிவத்தைத் தெரிந்து கொள்வதில் அக்கறை கொண்டி ருக்கின்றனர். சமூக மாற்றங்கள், சூழ்நிலைகள் பற்றி எல்லாம் அதிகம் தெரிந்து கொள்ள ஆசைப்படுகின்றனர். இந்த நாட்டங்களை நிறைவேற்றி கடந்த காலக் குறைபாட்டை நிரப்புவதற்கு இப்பொழுது நமக்கு நேரம் வந்து விட்டது.

நான் சென்ற இடங்களில் எல்லாம் இலங்கைத் தமிழர்கள் பற்றி விரிவாகக் கேட்டனர். பல சந்தர்ப்பங்களில் பெரும் சர்ச்சைகளைக் கூடக் கிளப்பி விட்டனர்.

எழுத்தாள நண்பர்களை பொறுத்த வரையில் தனித்தனியாக ஒவ்வொரு ஈழத்துப் படைப்பாளி குறித்தும் விபரம் கேட்டனர். புதிய பரம்பரை பற்றியும் தெரிந்து கொள்ளுவதற்கு ஆசைப் பட்டனர். இது மட்டும் அன்றி, இலங்கை வந்திருந்த தமிழக எழுத்தாள நண்பர்களும் இது விஷயத்தில் கூடிய அக்கறை செலுத்தி புதியதொரு வேகத்தை அங்கு ஏற்படுத்தியுள்ளனர். ஈழத்துப் படைப்பாளிகள் இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி உறவை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

'ஈழநாடு'

19.10.1981.

## நெஞ்சுக்கு நெருக்கமான தமிழகத்து இலக்கிய நண்பர்களுக்கு ஒருபகிரங்கக்கடிதம்.

**அழுக்குத்தனமான பண்டங்களின் விற்பனைச் சந்தைக் கடையாக நமது நாடு மாறக்கூடாது என்ற உந்துதல்தான் நம்மைப் பொறுத்தவரை நமது முக்கியமான குறிக்கோளாக இருந்து வருகின்றது.**

தமிழகத்து இலக்கிய நண்பர்களான உங்களுக்கு ஓரளவு எங்களைப் புரிந்தும் எங்களது அடிப்படைப் பிரச்சினைகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாத சகல நல்லெண்ணம் உள்ள வர்களுக்கு - எமது பிரச்சினையின் அடி ஆதாரத்தைத் தொட்டுக் காட்டி நீண்ட கடிதமொன்று எழுதவேண்டுமென பல காலமாக நான் யோசித்து வந்திருக்கின்றேன்.

அது இன்றுதான் நிறைவேறுகின்றது.

கடந்த சில வருடங்களாக உங்கள் நாட்டிலிருந்து வெளி வரும் வர்த்தகச் சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் கணிச மானவைகளைத் தடுத்து வைத்திருந்தது எமது நாடு என்ற பகிரங்க உண்மை உங்களுக்கெல்லாம் தெரியும்.

அதே சமயம் பிரபலமான பல சஞ்சிகைகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்ததையும் நீங்கள் அறிவீர்கள்.

சினிமாச் சாக்கடைச் சஞ்சிகைகளையும், ஆபாச, கற்பனாவாத அபின் உள்ளடக்கச் சஞ்சிகைகளையும் தடுக்க ஏதோ தானடித்த மூப்பாக சென்ற அரசாங்கம் நடைமுறைப்படுத்தியது

என்பதல்ல காரணம். இந்த நாட்டை நேசிக்கும் சகல கருத்து வட்டத்தையும் சேர்ந்த படைப்பாளிகளின் இடைவிடாத இயக்கங்களின் மூலமாகவே இந்தத் தடுப்பு நடவடிக்கை சாத்தியப்பட்டது.

இதனால் நமக்குத் தேவையான ஆரோக்கியமான பல தரமான சஞ்சிகைகள் நமக்குக் கிடைப்பதற்கு வழியற்றுப் போய் விட்டது என்ற உண்மையை ஒப்புக்கொள்ளும் அதே சமயம், இந்த நாடு சர்வதேசக் குப்பைத் தொட்டியல்ல என்பதையும் எம்மால் உலகுக்கு அறிவிக்க முடிந்தது; இந்தச் செயலினால், இந்தக் கட்டுப்பாட்டை அறவே விரும்பாத வெறும் பேப்பர் வியாபாரக் கூட்டம் இரண்டு பக்கங்களிலும் கண்டனக் குரல் எழுப்பியதை நாம் அவதானிக்கத் தவறவில்லை.

இந்தக் கண்டனம் கலை இலக்கியத்தின் மேல் ஏற்பட்ட பாசத்தினாலோ அல்லது இலங்கை இந்திய நட்புறவை மேலும் செழுமைப்படுத்த வேண்டுமென்ற அவாவினாலோ ஏற்பட்டதல்ல என்பதும் எமக்குத் தெரியும். இன்று பணம் பண்ணக் கூடிய ஒரு தொழிலாக இந்தச் சஞ்சிகை, பத்திரிகை இறக்குமதித் துறை இருப்பதினாலேயே இவர்கள் துடியாய்த் துடிக்கிறார்கள். இது அல்லாமல் வேறு துறைகளில் இதைவிடச் சுலபமாகப் பணம் சம்பாதிக்கலாம் என இந்த வியாபாரிகள் நம்பினால் அவர் களுக்கு உடனடியாகவே இந்தப் பந்த பாசங்கள் அற்றுப்போய் விடும் என்பதும் எமக்குத் தெரியும்.

இந்த நாட்டுப் படைப்பாளிகள் தமிழகத்துக் கலை கலாசாரப் பரம்பரைக்குச் சத்துராதிகள் என்றும், தமிழகத்து மக்களுக்கு நாம் ஜென்மப் பகைவர்கள் எனவும் கதையொன்று கட்டிப் பரப்பி விட்டுள்ளனர். சிலர். இதையொட்டி தமிழகத்து நண்பர்கள் ஒரு சிலர் எனக்கு நேரிடையாகவே கடிதம் கூட எழுதித் தமது சந்தேகத்தைக் கேட்டுள்ளனர்.

அதற்குப் பதில் இதுதான்: நாங்கள் வானத்திலிருந்து குதித்தவர்களல்ல. பாரதி, புதுமைப்பித்தன் பரம்பரையைப் பின் பற்றிச் சிந்திக்க, எழுதப் பழகியவர்கள் நாங்கள். தமிழகத்துக்கு

நாங்கள் எத்தனையோ வழிகளில் கடமைப்பட்டுள்ளதை ஒளிவு மறைவு இல்லாமல் பகிரங்கமாக ஒப்புக் கொள்ளுகிறோம்.

பிரச்சினை அதுவல்ல.

'கலை இலக்கியப் பரிவர்த்தனை என்பது ஒருவழிப் பாதையல்ல!' என்ற தலையங்கத்தைப் பல வருடங்களுக்கு முன்னர் மல்லிகையில் எழுதியதை இங்கு உங்களுக்குக்காகச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

அழுக்குத் தனமான பண்டங்களின் விற்பனைச் சந்தைக் கடையாக நமது நாடு மாறக்கூடாது என்ற உந்துதல்தான் நம்மைப் பொறுத்தவரை நமது முக்கியமான குறிக்கோளாக இருந்து வருகின்றது.

இதைத்தான் நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

மிக நெருக்கமான உறவு படைத்தவர்களுக்கு எழுதும் கடிதமானதால் எனது நெஞ்சின் அடி ஆழத்தில் புதைந்து கிடக்கும் ஒரு சந்தேகத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் வெளியரங்கமாகச் சொல்ல என நினைக்கின்றேன்.

பெரிய தேசம் என்ற அகம்பாவமும், பெரிய தமிழ் இனம் என்ற கர்வமும் உங்களின் உணர்வுகளை உங்களை அறியாமலேயே பாதிக்கின்றதோ எனச் சந்தேகப்படுகின்றேன், நான். காரணம் மலேஷியாவில் நடைபெறும் தமிழ் முயற்சிகள் பற்றி அறியும் அக்கறையோ அல்லது மிக அருகாமையில் வாழும் இலங்கை மக்களினது தமிழ் இலக்கிய நன் முயற்சிகள் பற்றித் தெரிந்து வைத்திருக்க விரும்பாத சோம்பேறித் தனத்தையோ மிக நுட்பமாக அவதானித்துப் பார்த்துப் பழக்கப் பட்டுவிட்ட எனக்குக் கடைசியில் இந்த முடிவுக்குத்தான் வரமுடிகின்றது.. எனது இந்தக் கருத்துக்கள் தவறானவைகளாகக்கூட இருக்கலாம்.

எனது இந்த மன ஆழச் சந்தேகத்தை எதிர்காலத்தில் தீர்த்து வைக்கும் பொறுப்பு உங்களைச் சார்ந்தது ,என நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

உங்களது நேரான நடவடிக்கைகள்தான் எங்களுக்கு நேரடியாகத் தேவை. அதிலிருந்துதான் நாங்கள் உங்களைப் புரிந்து கொள்ள முடியும். அதைக் கூடியவரை செயலில் காட்ட முனையுங்கள்.

உதாரணமாக ஒன்று சொல்வதானால் இலட்சக் கணக்கான ரூபாய்களுக்கு பெறுமதியான தமிழ்ச் சஞ்சிகைகள், புத்தகங்கள், சினிமாப்படங்களை எமது நாடு இறக்குமதி செய்கின்றது உங்களது நாட்டிலிருந்து.

அதே சமயம் ஒரு சில ஆயிரம் ரூபாய்களுக்குக் கூட எங்களது நாட்டிலிருந்து சஞ்சிகைகளையோ புத்தகங்களையோ சினிமாப் படங்களையோ உங்களது நாடு இதுவரை தருவிக்க முயலவில்லையே, ஏன்?

இதைக் கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்; உண்மை விளங்கும்.

உண்மையாகத்தான் கேட்கிறேன். நமது நாடு கலை இலக்கியப் பாலைவனம் என்ற முடிவுக்கே நீங்களும் உங்களது அரசாங்கமும் வந்து விட்டீர்களா?

அப்படியானால் உங்களது வார்த்தகர்களினது நிரந்தரச் சந்தைக் கடையாக நமது நாட்டை வைத்திருக்கும் குறுகிய திட்டத்துக்கு நீங்களும் உடந்தைகள் தானா?

இதெல்லாம் தவறான கணிப்பீடு என நீங்கள் வாதிட முனையலாம். நமது நாட்டிலிருந்து ஒரு சில பத்து ரூபாய் களுக்குக் கூட நீங்கள் உண்மையாக விரும்பும் சஞ்சிகைகளை, புத்தகங்களை இங்கிருந்து தருவிக்க முடியாமல் திண்டாடுகிறீர்களே, இந்தத் திண்டாட்டத்தின் மூலவேர் என்ன? நமது நாட்டுக்கு அந்நியச் செலாவணி வருவதென்றால் இந்த நாட்டு அரசாங்கம் அதை வரவேற்குமே தவிர, ஒருபோதும் தடைசெய்ய முனையாது. அப்படியானால் எந்த அரசாங்கம் தடை செய்துள்ளது என்பதையாவது சற்று ஆழமாகச் சிந்திக்க முனைந்தீர்களா?

வாதப்படி பார்த்தால் அங்கிருந்து எல்லாக் குப்பை கூளமும் இங்கு தடையின்றி வரவேண்டும். இங்கிருந்து ஒரு சில நல்லவை கள் அங்கு வந்திறங்குவதற்குத் தடையென்றால் யார், யார்மீது தடை விதித்துள்ளார்கள் என்பதையும் நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நாம் பல ஆண்டுகளாக இதைத் தெளிவாக இந்த நாட்டுத் தரமான ரஸிகர்களுக்குச் சொல்லி வந்ததன் கடந்த கால விளைவுதான் ஒரு சில கட்டுப்பாடுகள்.

இன்று அது வாய்ப்பாகத் தளர்த்தப்பட்டு விட்டதையும், உங்களது நாட்டுச் சாக்கடைச் சேறுகள் இங்கு கடை பரப்பி வருவதையும் பார்க்கும்போது நல்ல நெஞ்சங்கள் வெந்து வெந்து துடிக்கின்றனவே.

தமிழகத்துக்கு அடிக்கடி சென்று வரும் பல நண்பர்கள் என்னைச் சந்திப்பதுண்டு. அவர்கள் சொல்லும் முக்கிய குறை பாடு'மல்லிகை'யைப் பற்றி, எல்லா எழுத்தாளருக்கும் தெரியுது. ஆனால் தொடர்ந்து அது கிடைக்க மாட்டேனென்கிறதே என உங்களில் பலர் அங்கலாய்க்கின்றீர்களாம்.

வெறும் பைசா, ரூபாய்க் கணக்காக இதை நான் சொல்ல வில்லை. ஒரு மல்லிகை இதழ் உங்களுக்கு அனுப்ப அஞ்சல் செலவு 80 சதமாகின்றது. மலருக்கு மூன்று மடங்கு.

மிகச் சாதாரண பொருளாதார அத்திவாரமுள்ள மல்லிகை யால் இதைத் தொடர்ந்து தாங்க முடியுமா? ஒருவர் இருவர் என்றால் பரவாயில்லை. 100, 200 ரஸிகர்களுக்கென்றால் பிரச்சினையின் பூதாகாரத்தைப் புரிந்து கொள்ளலாம் நீங்கள்.

ஏன் அதற்குத் தேவையான சந்தாப் பணத்தைப் பெற்றுக் கொள்வதுதானே என நீங்கள் வாதிடலாம்.

நான் சஞ்சிகை ஆரம்பித்து பதினான்கு வருடங்கள் ஆகப்போகின்றன.

இதுவரைக்கும் ஒரேயோரு சந்தா கூட உங்களது வங்கி

மூலமோ அஞ்சல் மூலமோ எனக்கு வரவில்லை. வந்து சேரவில்லை.

காரணம் உங்கள் தவறல்ல; உங்களது குற்றமுமல்ல.

இந்திய நாணயம் பாங்க் மூலமோ போஸ்டாபீஸ் மூலமோ ஒரு தமிழ்ச் சஞ்சிகைக்கு இந்தியாவுக்கு வெளியே அனுப்ப முடியாத தடையுத்தரவுதான்.

அப்படியானால் எப்படித் தமிழகத்தில் கிடைக்கின்றது என நீங்கள் கேட்கலாம்.

மாற்றுப் பிரதிகள் மூலம், இலக்கிய நண்பர்களின் தனிப்பட்ட நட்பு, வேண்டுகோள்களின் மூலம், எனது நேரடியான பழைய நண்பர்களின் நட்புத் தொடர்பு மூலம்தான் பிரதிகள் அனுப்பப் படுகின்றன. நிச்சயமாகத் தொடர்ந்து இந்த நிலை நீடிக்க முடியாது.

இது ஒரு தார்மீகக் கொள்கைப் பிரச்சினை.

இங்கு தடை இருக்கக் கூடாது என விரும்பும் சகலரும் அங்கு தடை இருப்பதைத் தெளிவாக கண்டிக்க முன்வர வேண்டும்.

இல்லையெனில் பரஸ்பரம் தேசங்களிடையே ஒருமைப்பாடு என்பது வெறும் கோஷமாகத்தான் இருக்குமே தவிர, அது பயனுள்ள தத்துவமாக அமையாது. அடுத்து வரும் தகவல்கள் தான் முக்கியமானது.

நீண்ட காலமாகவே நமது நாட்டை நிரந்தரச் சந்தைக் கடை யாக வைத்திருக்கும் நோக்கத்துடன் நமது ஆரம்ப நல் முயற்சி களைக் கூட கிண்டல் தொனியில் மட்டம் தட்டி ஒழித்துக் கட்ட முனையும் உங்களது நாட்டு வர்த்தகச் சூதாட்டச் சஞ்சிகைகள் செய்யும் திருக் கைங்கரியத்தை நீங்கள் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம். நாங்கள் எப்போதோ அதைத் தெளிவாக அறிந்து வைத்திருந்த காரணத்தால்தான் அவைகளுக்கெதிராகக் கலகக் கொடி தூக்கிப் பிடிக்க ஆரம்பித்தோம்.

சென்ற 27.1.78-ல் தினமணிக் கதிர் சஞ்சிகையில் நமது

நாட்டுத் தயாரிப்பான 'பொன்மணி' பற்றி ஒரு விமர்சனம் வந்துள்ளது. அப்படத்துக்கு கதை வசனம் எழுதி, நடித்து உருவாக்குவதில் இந்த நாட்டுப் படைப்பாளிகள் பெரும் பங்கு வகித்தனர். அப்படத்தை பற்றிய தனது கணிப்பீட்டில் 'திருப்தி யில்லாதது கேரளீய சிங்களீயம்! பாதிப்படத்திற்கு மேல் உட்கார முடியவில்லை' எனக் கதிர் விமரிசனத்தை முடிக்கிறது.

இப்படி நமது ஆக்கங்களை கேவலப் படுத்திக் கொச்சைப் படுத்துவது இதுதான் முதல் தடவையல்ல. விமரிசன ரீதியாக மற்ற விவகாரங்களைத் தாக்குவதைப் பற்றி நாம் அதிருப்தி அடையவில்லை. கலை இலக்கியம் சம்பந்தப்பட்ட வரை சில அம்சங்களில் நமது குறைபாடுகள், பலவீனங்கள் நமக்குத் தெரியும். அதே சமயம் நமது நிறைகளையும் நாம் தெரிந்து வைத்துள்ளோம்.

ஆனால் நமது இலக்கியத்திலோ சினிமாவிலோ அந்தப் பாத்திரங்கள் பேசும் மொழி பாஷை எந்தச் சினிமாக்காரனோ அல்லது எழுத்தாளனோ கண்டுபிடித்த சங்கதியல்ல. அது அந்த அந்த உழைக்கும் மக்களின் பொதுச் சொத்து. அவர்களினது முகம். அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஆக்கங்களில் அவர்களினது மொழியைத்தான் அவர்கள் பேசுவார்களே தவிர, கதிர், குமுதம், விகடன் தமிழைப் பேசமாட்டார்கள் என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. நீங்களும் இதைத் தட்டிக் கேட்கத் தயாராக இல்லை.

இது நமது மொழியைக் கிண்டல் பண்ணுவதல்ல; அம்மொழியைப் பேசும் மக்களையே அவமதிப்பதாகும்.

இதில் விசித்திரமென்ன வென்றால் அந்த உழைக்கும் மக்களினது மொழியைக் கிண்டல் பண்ணிக் கொண்டே அவர்களது மார்க்கட் தேடி வணிகச் சரக்காக்குவதும், அதை ஒரு கூட்டம் வாங்கி வாசிக்க முனைப்படுவதையும் தான் நாங்கள் முற்றாக வெறுக்கிறோம்; தடுக்க வேண்டுமென இயக்கம் நடத்துகின்றோம்.

புதுமைப்பித்தன் எழுதிய திருநெல்வேலி தமிழ் எங்களுக்குப்

புரியும். 'பம்மாத்து' என்ற சொல்லை நாமே இன்று பயன் படுத்துகின்றோம். ஜானகிராமனின் தஞ்சாவூர்த் தமிழை நாங்கள் அறிந்து வைத்திருக்கின்றோம். ஷண்முகசுந்தரத்தின் கொங்கு நாட்டுத் தமிழை நாங்கள் ஆர்வத்துடன் ரஸிக்கப் பழகி விட்டோம். ஜெயகாந்தனின் மெட்ராஸ் ரிக்ஷாக்காரன் பாஷையை உணரும் தகைமை நமது கல்லூரி மாணவனுக்கு உண்டு. மாதவன் எழுதிய 'மணலும் புனலும்' நாவலில் வரும் பாத்திரப் பாஷையை சிரமத்துடன் பயிற்சிப் படுத்தக் கூடிய இலக்கிய ஞானம் எம்மிடையே இருக்கிறது. நீல. பத்மநாபனின் நாவல் களிலுள்ள நாகர்கோயில் பிரதேசத் தமிழை வேறொரு பிரதேசத் தமிழ் எனக் கொச்சைப் படுத்திக் கிண்டல் பண்ணி ஒதுக் காமல் நமது தமிழின் ஒரு கிளைப் பகுதி என எண்ணி மாந்தி மாந்தி ரஸிக்கப் பழகிவிட்டோம். கலைமகளின் அம்மாமித் தமிழும் எங்களுக்கு இன்று விளங்கும்.

இவ்வளவும் இன்று நமது நடைமுறை இலக்கியத் தமிழாகி விட்டது.

ஆனால் தமிழ் நாட்டுப் பேப்பர் வியாபாரிகளுக்குத் தான் நமது பாஷை விளங்கவில்லையாம்; கேரளீய சிங்களீயத் தமிழாம்!

நண்பர்களே! உங்களைப் பார்த்துத்தான் நேரடியாக இதைக் கேட்கின்றேன். இதே கருத்துக்கள்தான் எங்களது ஆக்கங்களைப் பற்றிய உங்களது இறுதி முடிவா? இல்லையென்றால் இனி என்ன செய்யப் போகின்றீர்கள்?

திறந்த வீட்டிற்குள் சொறி நாய் நுழைவது போல சகல சாக் கடைச் சஞ்சிகைகளும் இன்று இங்கு வரத் தொடங்கி விட்டன. இது தற்காலிக திருப்திதான். ஆனால் இது இறுதி வெற்றியாக இருக்க முடியாது என்பது மட்டும் சர்வ நிச்சயம்.

'மல்லிகை'

பெப்ரவரி, 1978.

## நாம் என்ன செய்யப் போகின்றோம்?

> கடைந்தெடுத்த பிற்போக்கு வாதிகூட இன்று, சோஷலிஸ முகமூடி போட்டுக்கொண்டுதான் மக்கள் மத்தியில் செல்வாக்குத் தேட வேண்டிய காலச் சூழ் நிலை இன்று முகிழ்ந்துள்ளது.

இன்று கலை இலக்கிய உலகில் ஒரு புதிய போக்கு முகிழ்ந்து வருவதைச் சாதாரணமாகச் சிந்திக்கத் தெரிந்தவர்கள் கண்டு கொள்ளலாம்.

முற்போக்கு கலைஞர்கள் மீது திட்டமிட்டுச் சிலர் அவதூறு பொழிவதையும், தாக்குதல் நடத்துவதையும் ஏதோ தற்செயலான காரியம் என அசட்டை செய்து விடமுடியாது.

இவருக்கு அவர் மீது கோபம்: அவருக்கு இவர் மீது பகை; இவருக்கும் அவருக்கும் இந்த விஷயத்தில் ஒத்துவராது; எனவே அவரை இவர் தாக்குகிறார்; இவர் அவர் மீது பாய்கிறார் என்று இந்த விவாதத்தை ஏதோ தனிப்பட்ட குரோதம் என்ற முறையில் பார்ப்பதால் இந்தப் பிரச்சினை ஒரு சில்லறைப் பிரச்சினை என நினைப்பதோ இப்பிரச்சினையைச் சரியாகப் புரிந்து கொண்ட தாகாது.

நீண்ட நெடுங் காலமாக இந்த நாட்டில் வேரோடிப் போயிருந்த மடமையை, அறியாமையை, சாதிக்கொடுமையை, பண்டிதப் பூசாரித்தனத்தை, கலை இலக்கியம் ஒரு குறிப்பிட்ட படித்த சமுதாயத்தின் பாரம்பரியச் சொத்து என்ற அகம்பாவத்தை, கடல் கடந்து வருவதுதான் நல்ல இலக்கியம், இவங்களுக்கு என்ன தெரியும்? என்ற பாமரத்தனத்தை எல்லாம் எதிர்த்துச் சாடி, இயக்கம் நடத்தி, 'ஊர் ஊராகச் சென்று நாவை ஆயுதமாக பாவித்து மேடை மேடையாக மக்களைத் திரட்டிக் கருத்து சொல்லி,

ஓரளவு மக்களின் சிந்தனையை வென்றெடுத்து புதிய பாதையில் இந்த மண்ணைச் சிந்திக்க வைக்கக் கடந்த கால் நூற்றாண்டு களாக முனைந்து முயன்று பாடுபட்டு உழைத்து வரும் எழுத் தாளர்கள் மீதுதான் சேறு அள்ளி வீசப்படுகின்றது.

முற்போக்கு எழுத்தாளர் எனச்சொல்லிக் கொள்பவர்கள் பலர், பலவிதமான கருத்தோட்டம் உள்ளவர்கள். தங்களுக்குள் ளேயே கருத்து வடிவங்களில் முரண்பாடு கொண்டவர்கள். அரசியல் கருத்துக்களில் கூட, பார்வை வித்தியாசம் கொண்ட வர்கள்.

இவர்களை இணைத்துப் பிணைப்பது ஒன்றே ஒன்றுதான் இவர்கள் மாக்ஸியத்தை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டவர்கள். அதற்காகத் தமது பேனாவை ஆயுதமாகப் பயன்படுத்திப் பயிற்சிப்பட்டவர்கள். கலை இலக்கியம் அத்தனையும் மனிதனுக் குத்தான்; மனிதனுக்கு அப்பால் எதற்குமே இல்லை என்ற தாரக மந்திரத்தை இலட்சிய நோக்காக் கொண்டவர்கள்.

இந்த நோக்கங் கொண்ட இவர்களில் சிலரிடம் சில தனிப் பட்ட குறைபாடுகள், பலவீனங்கள், தடுமாற்றங்கள் இருக்கலாம்; இருக்க முடியும். இது இவர்களினது தனிப்பட்ட தனி மனிதக் குறைபாடுகளே தவிர, இவர்கள் நம்பும், போராடும் அந்த மாபெரும் இலட்சியத்தின்குறைபாடுகளோ தவறுகளோ அல்ல.

காலப் போக்கில் பரஸ்பரம் விவாதித்து, தர்க்கித்து, மனந் திறந்து பேசி இக் குறைபாடுகளை, பலவீனங்களைத் திருத்தலாம்; திருத்த முடியும் என்பதே பொதுவான நம்பிக்கையாகும். இதை இந்த அணியைச் சேர்ந்த பலரும் அறிவார்கள்.

தாக்கப்படும், அவதூறு செய்யப்படும் இவர்களுக்கு ஒரு பெரிய போராட்ட வரலாறே உண்டு என்பதைப் புரிந்து கொள்ளாதவர்கள் ஏதோ தாங்கள்தான் இந்த நாட்டின் கலை இலக்கியங்களைப் புனருத்தாரணம் செய்யப் படைக்கப் பட்ட வர்கள் என்ற நோக்கில் வழியில் கிடக்கும் கல்லை எடுத்துப் போகும் வழியில் எறிந்து பழக்கப்படுத்திப் பார்க்கின்றார்கள்.

இந்த வழிக் கல்லெறி சம்பவத்தில் நம் பக்கம் கடந்த காலங்களில் காட்சி தந்த சில முகங்களும் ஒளிவு மறைவாகக் காட்சி தருவதையும் மிக நுட்பமாக அவதானிப்பவர்கள் காணக் கூடியதாக இருக்கின்றது.

இன்றைய கட்டத்தில் இனங்கண்டு கொள்வது வேறெந்தக் கட்டத்தையும் விட மிக மிக முக்கியமானதாகும்.

விரும்பியோ விரும்பாமலோ இலக்கிய உலகம் இன்று கூர்மை யடைந்து வருகின்றது.

கூர்மையடைந்து வரும் இவ்வேளையில் ஒளிவு மறைவில்லா மல் கருத்துக்கள் முன்வைக்கப் படவேண்டியதும், படைப்பாளி கள் தங்கள் தங்கள் பக்கத்தைத் தெளிவாக மக்களுக்கு இனங் காட்ட வேண்டியதும் தவிர்க்க முடியாத தேவையாகும்.

எதிர்ப்பவர்களுக்கு ஓர் அரசியல் நோக்கமுண்டு. அவர்கள் இதை மறுக்கலாம். ஆனால் உண்மை அதுதான். அவர்களினது அரசியல் நோக்கை அது அரசியல் கட்சி விசுவாசம் என்ற கணக்கில் அல்ல. வெகு சாதுரியமாக இலக்கியக் கருத்தாக வைக்கப் பார்க்கின்றனர் வெகு இலகுவாக.

இதுவும் வெகு புத்திசாலித் தனமாகவே நடை பெறுகின்றது.

தாங்களும் சோஷலிஸ்டுகள்தான் என மிக நாகரிகமாக காலத்தின் தேவையை உத்தேசித்து முகமூடி போட்டபடி கட்சி தரப் பார்க்கின்றனர்.

வெறும் உருவவாதிகளை மக்களை மறந்து தந்தக்கோபுரத்தில் நின்று கொண்டு, கனவு காணும் உன்னத அழகியல் வாதிகளை உலக முற்போக்கு இலக்கியம் பகிரங்கமாகவே நிராகரிக்கின்ற போக்கு, இயக்கம் பகிரங்கமாகவே நிராகரிக்கின்றதென்ற உண்மை ஏற்கனவே நமக்கு தெரியும் என்பது அவர்களுக்குத் தெரியாது.

எந்த விதமான அரசியல், சமூக இயக்கங்களிலும் இவர் களுக்கு நம்பிக்கை இல்லை. சுருக்கமாகச் சொன்னால் இவர்கள் தங்கள் மீதே தாங்கள் நம்பிக்கையற்றவர்கள். ஆனால் இதை

ஒப்புக் கொள்ள மறுப்பவர்கள். சொன்னால் சண்டைக்கும் வந்து விடுபவர்கள்.

இவர்களை இவர்களினது கொள்கைப் பிரகடனங்களில் அல்லாது இவர்களது ஆத்மப் படைப்புக்களில்தான் சரியாகத் தெரிந்து கொள்ள முடியும். சந்தேகப்படுபவர்கள் இவர்களுடைய படைப்புக்களை, நாடகங்களை கட்டுரைகளைப் படித்துப் பார்த்தாலே புரிந்து கொள்ளலாம்.

எனவே இதை ஏதோ தனிப்பட்ட விரோத விவகாரங்களாகப் பார்க்காமல் தத்துவார்த்த நிலையில் நின்று, இன்றைய உலக, உள்நாட்டு அரசியல், சமூக, பொருளாதார சூழ்நிலைகளை முன்வைத்துக் கணிப்பதே சரியான முடிவாக இருக்கும் என நம்பலாம்.

1960ல் இருந்த நிலை வேறு; முற்போக்கு எதிரிகளும் வேறு பட்டவர்கள். 1970ல் இருந்த நிலை இன்னொன்று; அப்போதிருந்த அரசியல் நிலையில் நண்பர் யார், எதிரிகள் யார் என இனங்கண்டு கொள்ள முடியாத நிலை. எனவே எல்லாரும் முற்போக்காகக் காட்சி தந்தார்கள். பிற்போக்கான கருத்துக்கள் தற்காலிகமாகத் தங்களைத் திரையிட்டு மறைத்துக் கொண்டன. 1980ல் நிலை புதிய வடிவமெடுத்துள்ளது.

இலக்கிய உலகில் பிரச்சினைகள் கூர்மையடைவதும், யார் யார் எந்தப் பக்கம், எவர் எவர் கருத்துக் கூட்டாளிகள் என இனங்காணப்படுவதும் வரவேற்கத் தக்க நிகழ்ச்சிகள்தான்.

கருத்து வடிவத்திலும் சித்தாந்தப் போக்கிலும் இலக்கியப் படைப்புத் துறையிலும் நேர் முரணான கருத்துக் கொண்டிருப்பவர்கள் சர்வ தேச உரைகல்லுக்கு முரணாக சர்வ தேச ரீதியாகவே எதிர் முகாமில் நிற்பவர்கள் தம்மையும் சோஷலிஸத்தின் பாதுகாவலர்கள் எனப் பம்மாத்துச் செய்யும் பொழுதுதான் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது.

சோஷலிஸம் இன்று பலராலும் எடுப்பார் கைப்பிள்ளையாகி வரும் சர்வ தேச அரசியல் சூழ்நிலையில் இந்த நிலைபாடு கூடச்

சர்வ தேசக் கோஷம்தான் என்பது நமக்குத் தெரியும். ஏனெனில் கடைந்தெடுத்த பிற்போக்கு வாதிகூட, இன்று சோஷலிஸ முகமூடி போட்டுக்கொண்டுதான் மக்கள் மத்தியில் செல்வாக்குத் தேட வேண்டிய காலச் சூழ்நிலை இன்று முகிழ்ந்துள்ளது.

எனவே இயக்கங்களில் நம்பிக்கையற்ற இவர்கள், விஞ்ஞான சோஷலிஸத் தத்துவமான வர்க்க முரண்பாடுகளில் நம்பிக்கை யற்ற இவர்கள், மக்களுக்காகவே கலையும் இலக்கியமும் என்ற கோட்பாடுகளில் நம்பிக்கையற்ற இவர்கள் கோஷ எழுத்தாளர் கள் என முற்போக்காளர்களைச் சாடத் தொடங்கியுள்ளார்கள்.

உறவுகளில் சகோதர முரண்பாடுகளும் உண்டு, அடிப்படை முரண்பாடுகளும் உண்டு. சகோதர முரண்பாடுகள் பேசித் தீர்க்கப்படக் கூடியவை. அடிப்படை முரண்பாடுகள் அப்படிப் பட்டவையல்ல. ஒன்றின் அழிவில்தான் ஒன்று வாழ முடியும்.

இதில் இவர்கள் சகோதர முரண்பாடு கொண்டவர்களா, அல்லது அடிப்படை முரண்பாடு உடையாவர்களா என்பதை இவர்களது படைப்புகளும் செயல்பாடுகளும் தான் தெளிவாக உணர்த்த முடியும். வாய் வார்த்தைகளுக்கு எந்த விதமான அர்த்தமும் இல்லை, இருக்கவும் முடியாது.

குறிப்பாகச் சமுதாய நச்சுத் தனங்களுக்கு எதிராகப் போராடுவது பற்றியோ சமூக ஒடுக்கு முறைகளுக்கு எதிராகப் பலமான தாக்குதல் தொடுப்பது பற்றியோ இவர்களுக்கு ஒரு தெளிந்த கண்ணோட்டமோ தத்துவப் பார்வையோ இல்லை என்பதுதான் சரியான கணிப்பீடாகும். இதை மறைப்பதற்காகவே கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக இந்தச் சதுப்புத் தளத்தில் நின்று போராடி, இன்று ஓரளவு வெற்றி பெற்ற போராட்டக்காரர்கள் மீது போராட்டத்தைத் துவங்கித் திசை திருப்பப் பார்க்கின்றனர்.

வரலாறு இவர்களைப் போன்ற பலரை எமக்கு ஏற்கனவே இனங் காட்டி வைத்துள்ளது. ஆகவே நமது ஆழ்ந்த மௌனத் தைக் கலைத்துக் கொண்டு மேடைக்கு வந்துதான் ஆகவேண்டும்; இது குழாயடிச் சண்டையல்ல!

'மல்லிகை' ஜூலை, 1980

## ஆனந்த விகடனும் அருள் சுப்பிரமணியமும்

ஆனந்த விகடன் நாவல் போட்டிக்கு அருள் சுப்பிரமணியம், முன்னர் பிரசுரித்த நாவலை அனுப்பி அது பரிசுக்குரியதாகத் தெரிவு செய்யப்பட்டுப் பின்னர் பரிசு வாபஸ் வாங்கப்பட்ட செய்தி ஏற்கனவே வாசகர்களுக்குத் தெரியும்.

பரிசுபெற்ற அந்த முதற் செய்தியைஅதன் பின்னணி சற்றுமே தெரியாத சூழ்நிலையில் அறிந்ததும் இயல்பாகவே யாரும் பாராட்டவே செய்வார்கள். அந்தப் பெரிய மனித இயல்பு என்னிடம் இருந்ததின் காரணமாகவே அவர் பாராட்டுக்கும் அட்டைப் படத்திற்கும் உரியவரானார்.

அது அந்த நிலையில் இப்பொழுதும் சரியான செயல் என்றே நான் கருதுகின்றேன். பின்னர் வந்த செய்திகளுக்கும் சம்பவங்களுக்கும் முன்னர் வெளியிட்ட நிகழ்ச்சிகளைக் காரணம் காட்டக் கூடாது. அது நியாயமான நிலையல்ல. அந்த அந்த மாதச் செய்திகளும் சம்பவங்களுமே அந்த அந்த மாதங்களுக்கு முக்கியமே தவிர, பின்னால் ஏது நடக்குமோ எனப் பயந்தால் பத்திரிகை நடத்துவதை விடச் சந்தைக்குச் சென்று கருவாட்டு வியாபாரம் பண்ணலாம்.

இதைக் காரணமாகக் கொண்டு சிலதுகள் கருத்துச் சொல்லுகிறோம் என்ற காரணத்தால் பொறுப்பற்ற முறையில் பிலாக்கணம் பாடுவது சிரிப்புக்கிடமான சங்கதியே தவிர வேறல்ல எனக் கருதுகின்றேன் நான். தம்மைத் தவிர, பாராட்டுக்குரியவர்கள் யாருமே இங்கு இல்லை என்ற மனப்பான்மையுடன் காரியமாற்றுபவர்களுக்கு இது ஒத்துக் கொள்ள முடியாத பாராட்டுத்தான். என்ன செய்வது? சிலரைப் பிரச்சினைப்

படுத்துவதால் மாத்திரம்தான் இவர்களால் பேனா பிடிக்க முடி கின்றது. இல்லையென்றால் இவர்களைச் சீந்துவதற்குத்தானும் இந்த மண்ணில் ஒரு நாதி கூட இல்லையே!

ஓர் எழுத்தாளன் என்கின்ற முறையில் மாத்திரமல்ல, சஞ்சிகை ஒன்றின் ஆசிரியர் என்ற ஹோதாவிலும் அது எனக்குத் தவிர்க்க முடியாத கடமையாகின்றது. பொறுப்பற்றவர்கள் எதையும் சொல்லலாம் எனவே அவர்களினது இந்தக் கூப்பாட்டை நான் சட்டை செய்யவில்லை.

இப்படியான கூப்பாட்டை நான் ஏற்கனவே பல தடவைகள் காதால் கேட்டிருக்கின்றேன். இது எனக்குப் பழக்கப்பட்டுவிட்ட பழைய ஓலம். எனவே அதுவல்ல இங்கு பிரச்சினை.

இத்தனை கணைகளையும் தாங்கி அட்டையில் பாராட்டிப் பிரசுரித்த எனது இதய நேர்மைக்கு திரு.அருள் சுப்பிரமணியம் தகுதி உள்ளவர்தானா எனக்கேள்வி கிளம்புகின்றது.

அவர் என்னதான் நியாயங்கள் கற்பித்துச் சொன்ன போதி லும் கூட, தார்மீக ரீதியாக அவர் தன்னைத் தானே தாழ்த்திக் கொண்டு விட்டார்! அவர் தமிழகத்தில் தன்னை நம்பிய ஒருவ ருக்காவது உண்மையைச் சொல்லியிருக்கலாம். அல்லது முன்னரே இங்கிருந்து ஆனந்த விகடன் ஆசிரியருக்குக் கடித மூலம் எதார்த்த நிலையை விளங்கப் படுத்தியிருக்கலாம். இவை ஒன்றை யுமே கடைசிவரை மேற்கொள்ளாமல், போட்டி விதிகளைக் கூட புறக்கணித்து, மௌனமாக இருந்து செயல்பட்டதும், தமிழகம் சென்று விழாவில் கலந்து கொண்டதும், பரிசு பெற்றதும், பின்னர் பிரச்சினைக்குட்பட்டபோது அது சம்பந்தமாகப் பூசி மெழுகி அறிக்கை விடுவதும் ஒரு நேர்மையான செயல் அல்ல என்றே நான் முழுமையாகக் கருதுகின்றேன்.

இது ஒரு தனிப்பட்ட மனிதனுக்கும் ஒரு சஞ்சிகை நிறுவனத்திற்கும் இடையேயுள்ள பிரச்சினை என்றால் இப்படி யான சர்ச்சைகள் ஏற்பட்டிருக்கவே முடியாது. இது நமது தேசத்தில் வாழும் சகல எழுத்தாளர்களினதும் பிரச்சினையாக இன்று உருவெடுத்துள்ளது. ‘அக்கரைகள் பச்சையில்லை’

என்பதைப் புரிந்துகொண்டு மனங்கசந்து நிற்கின்றேன்' என விகடன் ஆசிரியர் குறிப்பு எழுதி இந்த நாட்டுப் படைப் பாளிகள் அத்தனை பேர்களினது இலக்கிய நேர்மையின் மீதும் சந்தேகம் கொள்ளுமளவிற்கு இவரது நடத்தை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை நினைக்கும் போது இவர் திருச்செந்தூர் முருகனுக்குப் பக்தனாக இருப்பது போகட்டும்தமது எழுத்துக்கே விசுவாசமாக இருந்திருக்கிறாரா என நியாயமாகவே சந்தேகப் படுகிறேன் நான்.

இவரைப் போலவே ஏற்கனவே பலர், இங்கும் அங்கும் தமது படைப்புக்களை மாறிப் பிரசுரித்துச் சித்து விளையாட்டுச் செய்து வந்திருக்கின்றனர். இவர்களுக்கும் இந்தச் சம்பவம் ஒரு படிப்பி னையாக அமைந்தால் அதுவே இந்த மோசடியில் இருந்து நாம் பெற்ற பாடமாக இருக்கட்டும். இதைத் தவிர, இதைச் சாட்டாக வைத்துக் கொண்டு சிலர் கல்லெறிய முற்பட்டிருக்கிறார்கள். நான் எப்பொழுதுமே அவதூறுகளுக்குப் பதில் எழுதுவதில்லை. எனது செயல் எதிர்காலச் சந்ததியின் நியாயச் சந்நிதியில் வைக்கப் படத்தான் போகின்றது. எனவே சமகால வக்கரிப்புச் சண்டை யில் நான் மாட்டிக் கொள்வதற்கு விரும்புவதில்லை. இது விழல் கதைக்கும் பெண்களின் குழாயடிச் சண்டை என கருதுபவன் நான்.

இருந்தாலும் என்னை விளங்கிக் கொள்வதற்காக என்னை எந்தவிதமான எதிர்ப்புகளுமின்றி நேசிக்கும் நெஞ்சங்களுக்குச் சிலவற்றைத் திறந்து சொல்வது சரியெனப்பட்டதால் சொல்லு கின்றேன்.

பிரபல வியாபாரப் பத்திரிகைகளில் எனது பேட்டியும் கட்டுரையும் வருவதாகக் குற்றச்சாட்டு. அவற்றின் அங்கீகாரத் தைத் தேடித் தேடிக் காக்கா பிடிக்கிறோம் என்ற அவதூறுப் பிரசாரம். அந்தப் பத்திரிகைகள் என்னை அங்கீகரிக்க வேண்டும் என்பதல்ல எனது நோக்கம். சரஸ்வதி, தாமரையைத் தவிர நான் இதுவரை எந்தப் பத்திரிகைகளிலும் எழுதினவனல்ல. அடுத் தடுத்துப் பல தடவைகள் தமிழகம் சென்று திரும்பியுள்ளேன்.

எந்தப் பத்திரிகைக் காரியாலயத்திற்கும் காவடி இதுவரை தூக்கவில்லை. எனவே அங்கீகாரம் என்பது நம்மைப் புரிந்து கொண்டு நம்முடன் தொடர்பு கொள்ள வழி முறைகள் தெரியாதவர்களுடன் தொடர்பு கொள்ள இப்பத்திரிகைகளை நான் பேட்டி மேடையாகப் பாவிக்கின்றேன். அதிலும் எனது நாட்டு இலக்கியக் கருத்தோட்டங்களை பிரதிபலிக்கின்றேனே தவிர, என்னைப் பிரபலப்படுத்துவதற்கு நான் எப்பொழுதுமே முன் நிற்பவனல்ல. எனக்கு மல்லிகை ஆசிரியன் என்ற ஒரேயொரு பெயரே போதும். அதையொட்டித்தான் பலரும் என்னை மதிக்கிறார்கள்.

நான் அடிக்கடி போவதால் பல ஊர்களில் பல்வேறு கூட்டங்களில் கலந்து பலப்பல கருத்துக்களைப் பேசுகின்றேன். இது தொடர்ந்து நடைபெறுவதால் தமிழகத்தில் இளந் தலைமுறையினர் மட்டத்தில் ஒரு சலசலப்பை ஏற்படுத்துகின்றது. சர்ச்சைகளை உருவாக்குகின்றது. மல்லிகை இதே வட்டாரத்தில் ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தி வருவதைக் கட்டம் கட்டமாக உணரத் தலைப்பட்டனர். இதே வர்த்தக சஞ்சிகை வட்டத்தினர் என்னை நான் தங்கியிருக்கும் இடந்தேடி வந்து பேச வைக்கின்றனர். நான் பேசவே போவதில்லை என மௌன விரதம் அனுஷ்டித்து விட அப்படியொன்றும் அதிதீவிரப் புத்தம் புதுச் சிவப்புக் கூட்டத்தைச் சேர்ந்தவனல்ல. பேசுவது புரட்சி; இணைந்து செயல்படுவது கலை கலைக்காகவே என்று கோஷமெழுப்பும் கும்பல் மனக்கூட்டத்துடன் நான் இரட்டை வேஷதாரியல்ல. எனவே எனது கருத்துக்களை வெளியிட ஒரு தளம் தேவை. அந்தத் தளம் என்னைத் தேடி வரும்போது அதைச் சரியாகவே பயன்படுத்த முனைந்திருக்கின்றேன். நான் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக நம்பும் இலக்கியத்தை நம்பும் நெஞ்சங்கள் ஆயிரக் கணக்கானோர் தமிழகத்தில் இருக்கின்றனர். அவர்களினது ஆக்கபூர்வமான ஆலோசனைகளுடனேயே நான் தமிழகத்தில் இயங்குகின்றேன். அவர்களுடைய ஒத்துழைப்பே எனது கருத்துக்களுக்கு மேடையாக அமைகின்றது. அதேபோல நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தினர்தான் 'அனுபவ முத்திரைகள்' குமுதம் மறுபிரசுரத்தின் மூலகர்த்தாக்கள்.

காலத்திற்குக் காலம் அரசியல், கலை, இலக்கிய மட்டங்களில் கிளித்தட்டு விளையாடும் சித்து விளையாட்டுக்காரனல்ல நான். போர்த் தந்திரம் வேறு, சந்தர்ப்பவாத சறுக்குவிளையாட்டு என்பது வேறு. அது கை வந்த புதுச் சிவப்புக் கூட்டம் இன்று தமிழகத்திலும் இங்கும் தன்னைத் தானே முற்போக்காகக் காட்டி, ராமனுக்கு முன்னால் நிஜமான சீதை வேஷம் தரித்து சூர்ப்பன கைத்தனம் செய்யப் புறப்பட்டிருப்பதைக் காணும்போது நான் கடந்த காலப் பாதையைத் திரும்பிப் பார்ப்பது நல்லது என எண்ணுகின்றேன்.

சுதந்திரனில் எழுதப் பழகியவன் நான். அப்பொழுது அவர் களுக்கும் என்னைத் தெரியும். எனக்கும் அவர்களது அரசியல் நிலைபாடு புரியும். இருந்தும் தொடர்ந்து எழுதினேன். பிரேம்ஜி அப்பொழுது உதவி ஆசிரியராக அங்கு கடமை புரிந்தார். பின்னர் தினகரனில் எழுதினேன். நுஃமானும் அதில் எழுதி யுள்ளார். இளங்கீரன் தொடர் நாவல் எழுதினார். நீர்வை பொன்னையன் உட்படப் பலர் எழுதினர். கைலாசபதி தினகரன் ஆசிரியராகவே லேக் ஹவுஸில் பதவி வகித்தார்.

இந்தக் காலகட்டத்தில் லேக் ஹவுஸின் ஏகபோகத்திற்கு எதிராக, அதனது பிற்போக்கு அரசியல் சார்பு நிலைக்கு எதிராக 'லேக் ஹவுஸைத் தேசிய மயமாக்கு!' என்ற இயக்கம் தேசம் பூராவும் நடைபெற்றுக் கொண்டிருந்த அந்த நெருக்கடியான சமயத்தில்தான் தினகரனை நாம் நமது சரியான இலக்கிய இயக்கப் போராட்டத்திற்குத் தளமாகப் பயன்படுத்தினோம். இன்று ஞானோபதேசம் செய்பவர்கள் இந்தப் பழைய சம்பவங் களைத் தேவை கருதி மறந்திருக்கலாம். உயிர்த் துடிப்புள்ள இலக்கிய நண்பர்கள் இதைப் பழைய செய்தியாக மாத்திரம் கணித்துவிட மாட்டார்கள். அது மாத்திரம் சரியென்றால் எனது தேசத்தின் ஒட்டுமொத்தமான ஆத்மக் குரலை வெளிப்படுத்த தமிழக வர்த்தக சஞ்சிகை மேடைகளை நான் பயன்படுத்தியது எப்படித் தவறாகும்?

கார்ல் மாக்ஸ் அமெரிக்கப் பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார்.

மாக்ஸிம் கார்க்கி பிரபல அமெரிக்க வர்த்தகப் பத்திரிகை களுக்குப் பேட்டி கொடுத்திருக்கிறார்; எழுதியிருக்கிறார்.

இவைகள் யாவற்றையும் தெரிந்து கொண்டுதான் நான் செயல்படுகின்றேன்.

இது சிலருக்குத் தாங்க முடியாத வெப்பியாரத்தைக் கொடுக்கின்றது. அதற்கு நானென்ன செய்வது? பக்கத்து வீட்டுக்காரி ஆண் குழந்தை பெற்றுவிட்டாள் எனக் கேள்விப் பட்ட இந்த வீட்டுக்கார மலடி வாயிலும் வயிற்றிலும் ஓங்க ஓங்கி அறைந்து ஓலமிட்டால் யார் என்ன செய்ய முடியும்?

கோர ரூபிணியான முது கன்னி 'நான் எந்த ஆண்களையுமே ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. நானே கற்பாஸ்திரி!" எனத் தனது கற்புத்தனத்தை விளம்பரப் படுத்துவது போலச் சிலர் தமது இலக்கியக் கற்புத்தனத்தை நிலை நிறுத்தப் பார்க்கின்றனர். அவள் பார்ப்பது இருக்கட்டும், யாராவது ஆண் இவளைத் திரும்பிப் பார்த்திருப்பானா என்பது சந்தேகமே. இப்படியான கற்புத் தனத்தை ஒரு ரூபலாவண்யமான குமரி சொன்னால் அதற்கு அர்த்தம் இருக்கின்றது. அவளது கற்புத் தனத்திற்கு மதிப்பும் இருக்கின்றது.

முன்னவள் சொன்ன கற்புத்தனம்தான் இவர்களது கூற்றில் இருப்பதாக நான் நம்புகிறேன்.

எனவே வர்த்தக்கப் பத்திரிகைகளின் அங்கீகாரம் என்ற ஊகத்திற்கே இங்கு இடமில்லை. நான் நம்பும், போராடும் கருத்தைச் சொல்வதற்கு எந்த மேடை கிடைத்தாலும் அதைச் சரி யாகச் செவ்வையாகப் பூரணமாகப் பயன்படுத்துவதே எனது எதிர்காலத் திட்டம் எனப் பகிரங்கமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எதில் எழுதுவது பேட்டி கொடுப்பது என்பதல்ல முக்கியம்; எதைப் பற்றி எழுதுவது, பேட்டி கொடுப்பது என்பதே எனக்கு முக்கியமான தேவையாகும்.

நான் வெறும் தனி மனிதனல்ல; எழுத்தாளன் மாத்திரமல்ல;

சஞ்சிகையாளன் என்று மாத்திரம் என்னைக் கருதிக் கொண்ட வனல்ல. இந்த நாறிப்போன சமுதாயத்தை அதன் வேரோடும் வேரடி மண்ணோடும் புரட்டி எடுத்து, அதை மாற்றிப் புதிய சமுதாயத்தை உருவாக்கக் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கட்டுப்பாடான இயக்கத்தில் இணைந்து இயங்கி வருபவன். நான் வாழும் மண்ணில் நடைபெற்ற சகல மக்கள் இயக்கங்களிலும், மே-தின ஊர்வலங்களிலும், வெகுஜனப் போராட்டங்களிலும் இணைந்து பிணைந்து குரல் கொடுத்து வருபவன். தமிழகத்தின் முதிர்ச்சியும் ஆழமும் மிக்க முன்னோடி இலக்கியக் காரர்களுடன் அடிக்கடி கருத்துப் பரிமாற்றம் செய்துவருபவன்; என்னை நானே புதுப்பித்துக் கொள்பவன்; இந்த நாட்டுப் படைப்பாளிகளின் சிருஷ்டிகள் உலக மதிப்புப் பெற வேண்டும் எனக் கனவு காண்பவனாகிய நான் எதையும் பொறுப்பான முறையில் சிந்திக்கப் பழகியிருக்கிறேன்.

இவைகள் ஒன்றுமேயற்ற வெறும் வாய்ச்சவடாலை மூல தனமாகக் கொண்டுள்ள கட்டுக் கோப்பற்ற 'சுதந்திர சோஷ லிஸவாதி'களின் கருத்துக்களை நான் என்றுமே மதிப்பவனுமல்ல; கௌரவிப்பவனுமல்ல.

இங்கிருந்து தமிழகத்திற்குப் பல எழுத்தாளர்கள், படைப் பாளிகள் கடந்த காலங்களில் பலமுறை சென்று வந்திருக் கின்றனர். அவர்களைப் பற்றி இப்படியான குற்றச்சாட்டுகள் இது வரை இடம் பெற்றதில்லை. என்னால் அப்படி இருக்க முடியாது என்னை ஒதுங்கி இருக்க விடுவதில்லைத் தமிழகத்தோழர்கள்.

இங்கு கேட்கும் சில வயிற்றெரிச்சல் கூப்பாடுகள் நமது நாட்டு இலக்கிய வளர்ச்சி குறித்து, நமது எழுத்தாளர்களின் ஆக்கத் திறமை மேலுள்ள பற்றுப் பாசத்தினால் ஏற்பட்டு விடவில்லை. மாறாக, தாங்கள் இலக்கியத்தை மனதார நேசிக்கும் தமிழக மக் களிடம் பரவலாகச் சென்றடையவில்லை என்ற பொச்சரிப்பின் காரணமாகவே ஏற்பட்டுள்ளது என உறுதியாக நம்புகின்றேன்.

மக்களிடம் பரவலாகப் போய்ச் சென்றடைவது பாமரத்தன மான வளர்ச்சி என நம்புவது மக்களைச் சென்றடைவதற்குச்

சரியான மார்க்கமாகாது. மக்களிடம் நாம் சரியாகச் சென்று வேர்விடுவதற்கு நமது கருத்தில் நமக்குச் சரியான உறுதிப்பாடு இருந்தால் பயப்பட எதுவும் இருப்பதாக எனக்குத் தெரிய வில்லை.

நான் தொடர்ந்து தமிழகத்தில் நடத்திய தனிமனித இயக்கத் தின் பெறுபேறு நாளை பழமாகக் கனியத்தான் போகின்றது. இந்த நம்பிக்கை எனக்குண்டு. எனது உழைப்பின் பயனை அனுபவிக்கப் போகின்ற மனச்சாட்சி படைத்த படைப்பாளிகள் தங்களது பெருமைக்கும் புகழுக்கும் நானும் மல்லிகையும் தோன்றாத் துணையாக நின்று உதவி புரிந்தோம் என்பதை உணர்ந்தாலே போதும். அதுவே இந்த அவதூறுக்காரர்களுக்குச் சரியான பதிலாக அமைந்து விடும்.

'மல்லிகை'
டிசம்பர், 1980

## மூன்றாவது மனிதன்

மூன்றாவது மனிதன் சஞ்சிகையின் ஏப்ரல் மே இதழ் வெளிவந்துள்ளது.

பனியின் விழிநீர்த் துயரத்திரையில் பாதை மறையும் முன்னே பிணியில் தேயும் நிலவின் நிழல் நம் பின்னால் தொடரும் முன்னே....!

கவிஞன் நீலாவணனின் கவிதை வரிகளுடன் 'ஒரு வண்டிக் காரனின்' நிழல் போன்ற அட்டைப்படம் நெஞ்சை ஈர்க்கின்றது.

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவும், தருமு சிவராமும் நிழல் படங்களாக காட்சி தருகிறார்கள்.

டொமினிக் ஜீவாவுடனான நேர் காணலும், ஜெய்சங்கர், சேரன், ஆகர்ஷியா, ஆண்டி, மஜீத், றஷ்மி, தேவ அபிரா, பாறுக், கல்லூரான் ஆகியோரின் கவிதைகள் உள்ளடக்கத்தை கனதியாக்க மதுசூதனன், யமுனா ராஜேந்திரன், சுசீந்திரன், எம்.கே.எம்.ஷகீப், அம்ரிதா ஆகியோரின் கட்டுரைகளும், ஆசிரியர் கருத்து, பைத்தியக்கார உலகம். கருத்துப்பக்கம் ஆகிய அம்சங்களுடன் ஈழத்தின் சிறந்த தரமானதொரு சஞ்சிகையாக முகைவிரிக்கத் தொடங்கியுள்ளது. இளைஞர் பௌசரை ஆசிரியராகக் கொண்ட மூன்றாவது மனிதன்.

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவுடனான நேர்காணல் சஞ்சிகையின் தரத்திற்கு மகுடம் சூட்டுமாப்போல் அமைந் துள்ளது.

கடந்த 35 வருடங்களாகவே இலக்கியத்தை தனது மூச்சாகவே கொண்டு திரியும் ஒரு கர்த்தாவின் இலக்கியம் பற்றிய, உலகு

நோக்கு பற்றிய கருத்துக்கள் இன்றைய இளைஞர் சமுதாயத் திற்கு மிகவும் அவசியமானவையாகும்.

எவர் மறுத்தாலும், வெறுத்தாலும் ஈழத்து இலக்கிய வரலாற்றில் இவை பதிவுகளாகிவிடுகின்றன.

தலித் இலக்கியத்திற்கான அத்திவாரம் ஈழத்தில் 50களிலே போடப்பட்டுவிட்டது என்கிறார் ஜீவா. அதுபோலவே ஈழத்து மார்க்சிஸ எழுத்தாளர்கள், விமர்சகர்கள் குறித்தும் பல கருத்துக்கள் அவரால் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கெதிரான, முரண்பாடான கருத்துக்கள் எழக்கூடும். அது நல்லதே. விமர்சகர்கள், இலக்கிய ஆர்வலர்கள் படைப் பாளிகள் ஆகியோர் மத்தியில் நீண்டகாலமாக தேங்கிவிட்ட இக்கருத்தோட்டங்கள் மீண்டும் கிளறப்படுவது இலக்கியத்தின் வளர்ச்சிக்கு ஆரோக்கிய உரமாகும்.

மூன்றாவது மனிதனின் தரங்குறித்து குறிப்பிட இந்த நேர்காணல் ஒன்றே போதும்.

கே. விஜயன்

வீரகேசரி 23.5.97

## இருபத்தொன்பது ஆண்டுகளாக மலரும் 'மல்லிகை'

1980களில் டொமினிக் ஜீவாவை நான் முதன் முதலில் சந்தித்தேன். 'தண்ணீர் தண்ணீர்' நாடகம் பார்க்க வந்திருந்தார். அதைப் பற்றி 'மல்லிகை'யில் கேள்வி - பதில் பகுதியில் எழுதினார். அடிக்கடி சென்னை வரும்போது சந்திப்பார். ஈழம் யுத்த பூமியாக மாறியவுடன் அவரைப் பற்றிய நினைவெல்லாம் எனக்கு வந்தது. கொஞ்ச காலம் மல்லிகை படிக்கக் கிடைக்க வில்லை. இப்போது இரு இதழ்கள் பார்த்தேன். இருபத்தொன் பது ஆண்டுகளாக இப்படி ஒரு சிறந்த இலக்கியப் பத்திரிகையை எதிர்-நீச்சல் போட்டு நடத்தி வருகிறார் டொமினிக் ஜீவா என்று பார்த்த போது ஆச்சரியம் தாங்கவில்லை. அவர் அனுப்பிய சமீபத்திய இரண்டு இதழும் ரொம்ப சுவாரசியமாக இருந்தன. பழம்பெரும் எழுத்தாளர் வரதர் எழுதிய 'தீவாத்தியார்' என்ற நினைவு அலைகளை ரொம்பவும் விரும்பிப் படித்தேன். என்னைக் கவர்ந்த இன்னொரு கட்டுரை ஆ. கனகசபாபதி எழுதிய 'தகரக் கொட்டகைகளும் இசை நாடகங்களும்' என்ற கட்டுரை. சினிமா தோற்றத்துக்கு முன்னால் யாழ்ப்பாண தமிழ் நாடக மேடையில் உலவி வந்த நகைச்சுவை சக்ரவர்த்திகள் பற்றியும், ஆர்மோனியச் சக்ரவர்த்திகள் பற்றியும் சுவையாக எழுதுகிறார் பஃபூன் செல்லையா என்பவரைப் பற்றி பிரமாதமாக குறிப்பிடுகிறார். எனக்குக் குறை தமிழ் நாட்டு நாடக மேடை பற்றி, நடிகர்களைப் பற்றி எழுதுபவர்கள் யாரும் இல்லையே என்று.. தி. ஜானகி ராமன் தஞ்சை மாவட்டத்தில் பிரபலமாக இருந்த 'காக்கா முழியன்' என்ற நாடக நடிகரைப் பற்றிக் குறிப்பிடுவார். பஃபூன் செல்லையா போல கதாநாயகன் நாயகிகளை சமயோஜிதப் பேச்சால் காலை வாரிவிடும் குளத்து மணி பற்றி சகஸ்ரநாமம்

குறிப்பிடுவார். ஆனால், இது எதுவுமே எழுத்தில் பதிவாக வில்லை. ஈழநாடக மேடை பற்றி ஆ. கனகசபாபதி பதிவு செய்வது போற்ற வேண்டிய விஷயம். இந்த மல்லிகை பத்திரி கையை ஆரம்ப காலத்தில் எப்படி வளர்த்தேன் என டொமினிக் ஜீவா எழுதுகிறார். "தேசம் எங்கும் பரந்துபட்டுத் தொழில் செய்துவரும் சலூன்களின் முகவரிகளைத் தேடிப் பிடித்தேன். பணம், வந்ததோ, இல்லையோ மாசா மாசம் மல்லிகையை அந் தந்த முகவரிகளுக்கு அனுப்பி வைத்தேன். தொடர்ந்து ஓராண்டு அனுப்பிக் கொண்டிருந்தேன். மலையகம், கிழக்கு மாகாணம், கொழும்பு, அநுராதபுரம், கொக்கராவை, மாகோ, தம்புள்ள, தெல்தெனிய, காலி, மாத்தளை, கதிர்காமம், மன்னார் என எல்லா ஊர்களிலுமுள்ள சலூன் மேசைகளில் மல்லிகை காட்சி தந்தது. எல்லாவற்றையும் விட வீதி வீதியாக கொண்டு சென்று நானே விற்பனையும் செய்தேன்." என்கிறார். இலக்கியத்தை வளர்க்க டொமினிக் ஜீவா பெருந்தவம் மேற்கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது.

'சுபமங்களா' கோமல் சாமிநாதன்

அக்டோபர் '93

# "தமிழ் வாசக உலகிற்கு சிங்கள எழுத்தாளர்களை அழைத்துச் சென்ற டொமினிக் ஜீவா"

*பேட்டி : சசி குமார் ஸ்பருல்லாகான்*

*தமிழில் : எம்.வை. ஸப்ருல்லாகான்*

**(1997) ஏப்ரல் 27ந் திகதி சிங்கள ஞாயிறு வாரப் பத்திரிகையான 'லக்பிம' வில் வெளியான திரு. டொமினிக் ஜீவாவின் பேட்டிக் கட்டுரை)**

அவரைச் சந்திக்க ஏற்பாடு செய்து கொண்ட இடம் ஒரு சலூன். பாதை பிழைத்து விட்டதோ என அங்கலாய்த்தேன். தமிழ் வாசகர்களுக்கு சிங்கள கலை, இலக்கிய வாதிகளை அவர்தம் படைப்புகளை அறிமுகப்படுத்திய அவ் எழுத்தாளரின் விலாசம் ஒரு சலூனாக இருக்க முடியாது. ஆனால் அதுதான் உண்மை. சிங்கள கலை, இலக்கிய வாதிகளை சிங்கள வாசகர் மத்தியில் கொண்டு சென்ற 'மல்லிகை' சஞ்சிகையின் ஆசிரியர் இன்று வாழ்வது புறக்கோட்டை சலூன் ஒன்றின் மேல் மாடியில்.

சிங்கள கலை, இலக்கிய வாதிகளை, படைப்புகளை இந்நாட்டில் மட்டுமன்றி இந்தியாவிலும் அறிமுகப்படுத்திய டொமினிக் ஜீவாவைப் போன்று சிங்கள - தமிழ் மக்களிடையே பரஸ்பர ஒத்துழைப்பை வளர்த்த வேறொருவரை குறிப்பிடுவது கடினம். தமிழ் இனவாதத்திற்கு எதிராக துணிச்சலுடன் தனது பேனாவை ஓட்டியதால் அவர் அவர்களது கொடுமைகளுக்குக் கூட உட்பட்டார்.

1993 இல் மனிதாபிமான எழுத்தாளர் முன்னணியில் ஒழுங்கு செய்யப்பட்ட மக்கள் இலக்கிய விழாவில் இலங்கை தமிழ் படைப்பிலக்கியத் துறைக்கு ஆற்றிய மாபெரும் பங்களிப்பிற்காக அவர் கௌரவிக்கப்பட்டார். மார்க்ஸிஸத்தை தனது படைப்பு களுக்கு ஜீவனாக வரித்துக் கொண்ட அவரால் பாதுகை, வாழ்வின் தரிசனங்கள், தூண்டில், ஈழத்திலிருந்து ஓர் இலக்கிய குரல், மல்லிகை முகங்கள், தண்ணீரும் கண்ணீரும் முதலிய படைப்புகளுடன் பல படைப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. யாழ்ப்பாண யுத்த நிலவரத்தினால் கடந்த இரண்டு வருடங்களாக கொழும்பில் வாழும் அவருடன் 'லக்பிம' பத்திரிகை கலந்துரை யாடல் ஒன்றை நடாத்தியது.

தமிழ் இலக்கிய உலகிற்கு சிங்கள இலக்கியத்தை அறிமுகப் படுத்திய எழுத்தாளர் என நாம் உங்களை அறிந்து வைத்துள் ளோம். ஆனால் நீங்கள் படைப்பிலக்கியத்துறையில் நுழைந்தது எவ்வாறு உங்கள் இலக்கியப் பணிகள் என்பன பற்றி எமக்கு எதுவும் தெரியாது.

நான் 1927 இல் யாழ்ப்பாணத்தில் பிறந்தேன். பொருளாதார நெருக்கடியால் கல்வியைத் தொடர முடியவில்லை. அதனால் நான் பெற்ற முறை சார் கல்வி என்னை படைப்பிலக்கியத் துறை யில் பிரவேசிக்க காரணமாக அமைந்தது எனக் கூற முடியாது. யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப் பட்ட சமயம் நானொரு சாதாரண இளைஞன். கம்யூனிஸக் கட்சி எம் போன்ற இளைஞரிடையே பெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. திரு. பொன் கந்தையா, கார்த்திகேசன், லிங்கன் ஆகியோர் அதன் ஊக்கமிக்க தலைவர்கள். அவர்களது வழிகாட்டுதலில் நான் கம்யூனிஸக் கட்சியில் இணைந்தேன். இந்திய கம்யூனிஸக் கட்சி இக்காலத்தில்தான் தடை செய்யப் பட்டது. அதன் பிரதிபலனாக இந்திய கம்யூனிஸக் கட்சித் தலைவர் ப. ஜீவானந்தம் யாழ்ப் பாணத்திற்கு வர நேரிட்டது. அவரது ஊக்குவிப்பும் வழிகாட்டு தலினாலுமே நான் படைப்பிலக்கியத் துறைக்குள் பிரவேசித்தேன். அச்சமயம் அவர் அளித்த உபதேசம் என் நினைவில் வருகிறது. 'அடுத்தவனின் பொன் மொழிகளை ஜபம் செய்வதை விட,

உன்னுடைய பித்தளை மொழிகளே மேல்' கருத்துகள் என்பதே அது. இதனை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்.

எனது முதலாவது சிறுகதை 1948 இல் வெளிவந்தது. அதன் பின்னர் பல நூல்களை பிரசுரம் செய்தேன். 'தண்ணீரும் கண்ணீரும்' என்ற எனது நூலுக்குச் சாஹித்திய மண்டலப் பரிசு கிடைத்தது.

1966 இல் வெளியான 'மல்லிகை' இலக்கிய இதழின் தோற்றம் எனது வாழ்க்கையின் முக்கிய திருப்பமாகும். அது மக்களிடையே புதிய சித்தனையொன்றைத் தோற்றுவித்தது. விசேஷமாக மக்களை அறிவு பூர்வமாக எழுச்சி பெறச் செய்யவே மல்லிகை ஆரம்பிக்கப் பட்டது.

*மல்லிகை சஞ்சிகை விஷேசத்துவம் மிக்கது என நீங்கள் கூறுகிறீர்கள். அது எவ்வகையில்?*

இந்த நாடு நம் எல்லோருக்கும் சொந்தமானது. இலங்கையர் என்ற வகையில் நாம் அனைவரும் ஒரே இனத்தவர்கள் என்பதே மல்லிகை மூலம் நான் மக்களுக்கு வழங்கிய செய்தி. இனவாதக் கொள்கைகள், கோட்பாடுகள் என்பவற்றின் மீது வாழ்வதை விட, நாம் எல்லோரும் ஒன்றாக, ஒற்றுமையாக வாழ்வதே முக்கிய மாகும். இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தைக் கட்டி எழுப்பு வதன் மூலமே நவ இலங்கையை சிருஷ்டிக்க முடியும் என நாங்கள் நம்புகின்றோம்.

அதுமட்டுமல்ல, நாமே முதன் முதலில் சிங்களக் கலைஞர் களை தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்துகிறோம். அவர்களது படைப்புக்கள் பற்றி தமிழ் மக்கள் அறிய வைத்ததுடன் அவர்களது சித்தனைகளைத் தமிழ் மக்களிடம் எடுத்துச் செல்வதையும் எம்மால் இயன்றவரை செய்துள்ளோம். மார்டின், விக்ரமசிங்க, குணதாஸ் அமரசேகர, லெஸ்டர் பீரிஸ், ஹென்றி ஜெயசேன, உடகெர்தாவ்ல சரணங்கர தேரர், கே. ஜயதிலக, ஏ.வீ. சுரவீர ஆகியோர் அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள். எமது சஞ்சிகையில் பெரும்பாலான பக்கங்கள் சிங்கள எழுத்தாளர் களின் படைப்புக்களைப் பிரசுரிக்கவே ஒதுக்கப்பட்டன.

சஞ்சிகையின் அட்டையில் கூடச் சிங்களக் கலைஞர்களின் புகைப்படங்கள் பிரசுரிக்கப்பட்டன.

சர்வதேச மட்டத்திலும் சிங்கள சிருஷ்டிகளை மக்களுக்கு அறிமுகப்படுத்தி, சென்னையில் வெளியிடப்பட்ட 'சரித துணக்', 'வெஸக் கூடுவ' முதலிய படைப்புக்களை உதாரணமாகக் குறிப்பிட முடியும். நான் இவற்றைச் செய்வதன் நோக்கம் தேசிய ஐக்கியத்தைக் கட்டி எழுப்ப கலைப் படைப்புக்கள் மூலம் வரும் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என நான் நம்பிக்கை கொண்டிருப்பதே. தமிழ் மக்கள் சிங்கள எழுத்தாளர்களின் படைப்புகளை அறிந்து வைத்திருப்பதும் சிங்கள மக்கள் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள் பற்றி அறிந்து வைத்திருப்பதும் உண்மையான சமாதானத்திற்கு உறுதியான அத்திவாரமாகும். ஐக்கியமான கலாசாரம் ஒன்றின் மூலம் மட்டுமே சகோதரத்து வமும் சௌஜன்யமும் ஏற்படும்.

நீங்கள் இன ஐக்கியத்திற்காக ஆற்றிய இலக்கியப் பணிகளுக்கு சிங்கள கலை, இலக்கியவாதிகள் காட்டிய ஆதரவு திருப்திகரமானதா?

ஒருபோதும் இல்லை. நாம் செய்த சேவைகளுக்குச் சமமாக சிங்கள கலை, இலக்கியவாதிகள், பத்திரிகையாளர்களும் செய்ய வில்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன். சிங்கள கலை, இலக்கியவாதிகளையும் அவர்களது படைப்புகளையும் அறிமுகப் படுத்த அவர்கள் ஆர்வம் கொள்ளவில்லை. சிங்களக் கலை, இலக்கியவாதிகள் அக்கடமையிலிருந்து தவறி விட்டனர். இன ஒருமைப்பாட்டிற்கான புதிய சிந்தனையொன்றைக் கட்டி எழுப்ப நாம் முயற்சித்த பொழுது தமிழ் இனவாதிகள் எமக்குள் எதிராக, அணி திரண்டனர். அவர்களின் பாரிய விமர்சனத் திற்கு உற்பட்டோம். அவ்வாறான எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் கூட நாம் சிங்களப் படைப்புகளைச் சர்வதேச ரீதியாக பிரசித்தப் படுத்திய போதும் சிங்கள எழுத்தாளர்கள் தேசிய மட்டத்திலேனும் சிங்கள மக்களுக்கு அறிவுறுத்தவில்லை என்பதை கவலையுடன் தெரிவிக்க விரும்புகிறேன். அது மறைமுக மாக இவ் யுத்தம் பாரதூரமாவதற்கு காரணமாக அமைந்தது என்

பதில் சந்தேகமில்லை. இன்று கூட, தமிழ் எழுத்தாளர்களைப் பற்றி சிங்கள மக்கள் அறிந்து கொள்ளாத நிலையே இருக்கின்றது. பொது மக்களை ஒருபுறம் வைப்போம். குறைந்த பட்சம் சிங்களக் கலை, இலக்கிய வாதிகளும், பத்திரிகையாளர்களும் எத்தனை தமிழ் இலக்கியவாதிகளின் பெயர்களை தெரிந்து வைத்திருக்கின்றனர்?

*சிங்கள கலை, இலக்கியவாதிகள் தம் கடமையைச் செய்யாவிடினும் நீங்கள் விடவில்லை கடமையைச் செய்துள்ளீர்கள் தானே. ஆனால் அதனால் பிரதிபலன் கிட்டியுள்ளதென இன்று எண்ணுகிறீர்களா?*

உண்மையில் நீங்கள் திடீர் மாறுபாடுகளை எதிர்பார்க்கவில்லை. ஆனால் எதிர்காலத்தில் ஒருநாள் எமது குறிக்கோள் நிறைவு பெறுவது நிச்சயம்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது ஜப்பான், மீண்டும் கட்டி எழுப்பப்படமுடியாதவாறு அழிவுற்றது. அத்தகைய சோகமயமான கட்டத்திற்கும் நவீன ஜப்பான் தேசத்தைக் கட்டி எழுப்ப ஜப்பானிய மக்கள் ஐக்கியப்பட்டனர். நிகழ்காலத்தின் பிரச்சினைக்குரிய இனச் சிக்கல் சூழ்நிலையில் புதியதொரு நவ இலங்கையைக் கட்டி எழுப்பப்பட வேண்டும். முதலில் எழுத்தாளர்கள் என்ற வகையில், நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும். நாங்கள் வெளிநாட்டு மொழிகளை அறிந்து வைத்துள்ளோம். ஆனால் எமது அயலவர்கள் பேசும் மொழி எமக்குத் தெரியாது. இது வெட்கப்பட வேண்டிய விஷயம்.

*சிங்கள கலை, இலக்கிய வாதிகளுக்கும் உங்களுக்கும் இடையிலான தொடர்பு எத்தகையது?*

குணசேன விதான, கே. ஜயதிலகா, ஏ.வி. சுரவீர போன்றவர்களுடன் தொடர்பு இருந்தது. அவர்களைத் தவிர சிங்கள எழுத்தாளர்கள் பெரும்பாலானோருடன் நேரடி தொடர்புகள் இல்லை. கடிதங்கள் மூலம் தொடர்புகள் ஏற்பட்டுள்ளன. இன்றைய நவீன எழுத்தாளர்களுடன் அவ்வளவு தொடர்புகள்

இல்லை. பொதுவாக எல்லாக் கலை, இலக்கிய வாதிகளையும் ரசிகர்களையும் அறிந்து கொள்ள ஆவலாய் உள்ளேன்.

தமிழ் இலக்கியத்தில் விசேஷ சிரத்தை காட்டும் புத்த பிக்கு ஒருவர் கொரசை என்ற கிராமத்தில் வாழ்கிறார். அவரது பெயர் ரத்னவன்ஸ தேரோ. 1984 ஆம் ஆண்டு தான் உட்பட 15 தமிழ் கலை, இலக்கிய வாதிகளை அவ்வூருக்கு வரவழைத்து விழா எடுத்தார். அது முழுக்க முழுக்க ஒரு சிங்களக் கிராமம். அவ்விழாவை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. அத்தகைய மகிழ்ச்சியான விழா அது.

*அரசு சார்பற்ற தாபனங்கள் இன ஒருமைப் பாட்டிற்காக மேற்கொள்ளும் இலக்கிய முயற்சிகள் தமிழ் மக்களைச் சென்றடைகின்றனவா அது பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?*

அரசு சார்பற்ற தாபனங்களின் நடவடிக்கைகள் பெரும்பாலும் நகரை அண்மிய பகுதிகளில் நடைபெறுகிறது. அவர்களது நடவடிக்கைகள் அவ்வளவு வெற்றி பெறவில்லை. கிராமப் பகுதித் தமிழ் மக்களை அவை எட்டாமையே இதற்குக் காரணமாகும்.

நான் இவ்யுத்தத்தால் பெருமளவு பாதிப்புக்குள்ளான ஒருவன். யுத்தம் எவ்வளவு குரூரமானது என அனுபவம் மூலம் நான் அறிவேன். எனவே எமது ஒரே பிரார்த்தனை சமாதானமே. சமாதானத்தை இலக்காகக் கொண்டு பேனாமுனையை உயர்த்தும் எந்த வொருவருக்கும் தாபனத்திற்கும் எனது ஆதரவினை வழங்குவேன்.

*சிங்கள, தமிழ் கலை இலக்கிய வாதிகள் இடையே உறவுகள் அதிகரித்துள்ளதை கொழும்பிற்கு வந்த பின்னர் கண்டு கொண்டேன். இது வரவேற்கத்தக்க ஒரு திருப்பமாகும்.*

*புலிகள் இயக்கத்தின் கீழும் தற்சமயம் இராணுவ நிருவாகத்தின் கீழும் யாழ்ப்பாணத்தில் இன்றைய இலக்கியத்தைப் பற்றி ஒப்பீடு செய்தால்?*

இதற்குத் தெளிவான பதிலொன்றை வழங்க என்னால்

முடியாது. நான் கடந்த இரு வருடங்களாக கொழும்பில் வாழ்வதால் யாழ்ப்பாண நண்பர்கள், உறவினர்களுடன் எவ்வித தொடர்புகளும் இல்லை. கடிதங்கள் மூலம் தொடர்பு கொள்வதும் கடினம். விசேஷமாக யாழ்ப்பாணத்தில் வெளி யாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் இங்கு கிடைப்பதில்லை. எனவே இலக்கியம் பற்றிய செய்திகள் குறைவு.

எதிர்காலத்தில் கொழும்பிலிருந்து உங்கள் இலக்கிய பணிகளைத் தொடர எதிர்பார்க்கின்றீர்களா?

எனது ஒரே நோக்கம் திரும்பவும் எனது மண்ணுக்குச் செல்வதே யாகும். குருவி வானத்தில் உயரப் பறந்தாலும் அதன் தங்குமிடம் மரத்தின் மேலுள்ள கூடேயாகும். எனவே நிலைமை சீரடைந்ததும் என் வீட்டுக்குத் திரும்பவே உத்தேசம். அதன் பின்னர்தான் எனது எதிர்கால நீண்ட திட்டத்திற்கு என்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டுள்ளேன்.

## "தமிழ் இலக்கியத்திற்கான அத்திவாரம் ஈழத்தில் 50-60களில் போடப்பட்டு விட்டது."

தமிழ் சிறுசஞ்சிகை வரலாற்றின் சாதனை "மல்லிகை"! 1964 களில் தொடங்கிய மல்லிகை 250க்கும் மேற்பட்ட இதழ்களை தமிழ் சிறுசஞ்சிகை வரலாற்றில் பதித்திருக்கிறது. இச் சாதனையை தனது அயராத உழைப்பினூடே சாதித்தவர்தான் டொமினிக் ஜீவா.

ஈழத்து தமிழ் இலக்கியச் சூழலுக்கு இவரின் பங்களிப்பு மிகவும் குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

"தண்ணீரும் கண்ணீரும்" என்ற இவரது சிறுகதைத் தொகுதி சாகித்திய விருது பெற்றது.

சிறு சஞ்சிகை ஆசிரியராக, சிறுகதை எழுத்தாளராக, பதிப்பாசிரியராக பல்வேறு தளங்களில் 35 ஆண்டு களுக்கு மேலாக தீவிரமாகச் செயற்பட்டுவரும் டொமினிக் ஜீவாவின் "தேர்ந்தெடுக்கப்பட்ட டொமினிக் ஜீவா சிறுகதைகள்" 600 பக்கங்களுடன் இப்போது வெளிவந்திருக்கிறது.

"மல்லிகைப் பந்தல்" வெளியீடாக இவரின் முயற்சி யினால் பல நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

*சந்திப்பு : எம். பௌசர்*

*நீங்கள் இலக்கிய உலகில் பிரவேசிக்கும் போது இருந்த எழுத்துச் சூழல் கோட்பாடுகள் என்ன?*

அப்படியொரு ஆரோக்கியமான சூழல் அன்று நிலவவில்லை. வெறும் வார்த்தை ஜாலங்களும் அடுக்குச் சொற்களும் எதுகை மோனைத் தொடர்களும் கொண்ட எழுத்து நடைதான் அன்று தமிழாக நிலவியது. அண்ணா, கருணாநிதி, கண்ணதாசன் போன்றோர்களுடைய தமிழை மனப்பாடம் செய்து அதைப் பின் பற்றி எழுதுவதுதான் நவீன தமிழ் என மயங்கியிருந்த ஓர் இளைஞர் கூட்டம் அன்று இந்த மண்ணில் பல்கிப் பெருகி யிருந்தது. அந்த வழிகளில்தான் என்னைப் போன்ற இளம் எழுத்தாளர்களும் சிந்திக்கக் கற்றுக் கொண்டோம். ஓர் இலக்கிய மயக்கமான சூழல்தான் அன்று இங்கு நிலவி வந்தது. எழுத வேண்டும்; எங்களது பெயரும் பத்திரிகைகளில் அடிக்கடி இடம் பெற வேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர, கொள்கைக் கோட்பாடு என எதுவுமே அற்ற இளம் பருவத்து ஆர்வ வேட்கைதான் எம்மை ஆட்சி கொண்டிருந்த காலம் அந்தக் காலம்.

**உங்கள் எழுத்து ஆளுமை சிறுகதைத் துறையில் அதிகம் வெளிப்பட்டிருக்கிறது. என சொல்லியிருக்கிறீர்கள் உங்கள் முதல் சிறுகதை - பற்றி?**

'சுதந்திரன்' என்ற வாரப் பத்திரிகை அந்தக் காலத்தில் கொழும்பிலிருந்து வெளிவந்து கொண்டிருந்தது. அது தமிழரசுக் கட்சியின் அரசியல் பத்திரிகை. அதன் அரசியல் கோட்பாடுகளில் என்னைப் போன்றவர்களுக்கு அன்றும் நம்பிக்கை இருந்ததில்லை. இன்றும் நம்பிக்கை இல்லை. ஆனால் இளம் எழுத்தாளர்களுக்கு வளரும் படைப்பாளிகளுக்கும் 'சுதந்திரன்' பண்ணை தாராள மாகக் களம் அமைத்துத் தந்தது. அதன் ஆசிரியராக அப் பொழுது இருந்த திரு.எஸ்.ரி. சிவநாயகம் எம்மையெல்லாம் எழுத ஊக்குவித்தார். எனது மதிப்புக்குரிய அ.ந. கந்தசாமி, பிரேம்ஜி போன்றோர் சுதந்திரனில் உதவி ஆசிரியர்களாகக் கடமை புரிந்த காலத்தில் நாமும் உற்சாகமாக எழுத உந்துதல் பெற்றோம். உற் சாகமாகச் செயல்பட்டோம். எனது முதல் கதை 'எழுத்தாளன்' என்ற பெயரில் சுதந்திரனில்தான் அன்று பிரசுரமாகியது. சுருக்கமாகச் சொன்னால் திராவிடத் தாக்க எழுத்து நடையைக் கொண்ட வெறும் எழுத்துக் கூட்டம் தான் அக்கதையில் விரவி

நின்றது. கதைக்கருவுக்கு முக்கியத்துவம் கொடுத்ததை விட, அடுக்கு வசனங்கள் தான் அக்கதையில் அதிகம் இடம் பெற்றிருந்தன.

**எழுத்தையும் அரசியலையும் பிரித்துப் பார்க்காத அடிப் படையில்; அன்று நீங்கள் எழுதும் போது திராவிட சிந்தனையின் தாக்கம் உங்களில் எந்தளவு இருந்தது?**

அதைச் சிந்தனைத் தாக்கம் எனச் சொல்லிவிட இயலாது. ஒருவகை ஆர்வம்; ஆவேசம், வார்த்தைக் கூட்டங்களினால் ஒன்றுபட்ட ஈர்ப்பு சக்தி எனத்தான் இன்று சொல்லத் தோன்றுகின்றது. எவ்வளவு வேகமாக அந்த உணர்வுகளுக்கு உட்பட்டிருந்தேனோ அதே அளவு வேகத்துடன் அதிலிருந்து என்னை நானே விடுவித்துக் கொண்டு விட்டேன். இப்படித்தான் சொல்லத் தோன்றுகின்றது.

**நீங்கள் எப்படி மார்க்ஸிச சிந்தனைக்குட்பட்டீர்கள்?**

அந்தக் காலத்தில் "மாஸ்டர் காத்திகேசன்" என்றொருவர் யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்தார். அவர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார். எனது வீட்டுக்குச் சமீபமாக 'விக்டோரியா றோட்டில்தான்" அவரது வீடு இருந்தது. நான் எனது தொழிலகத்திற்கு தினசரி போகும் வழி அது. அவருடன் பழக்கம் ஏற்பட்டது. அவரை அரசியல் வாதியாக ஆரம்பத்தில் நான் இனங் காணவில்லை. எங்களைப் போன்ற மக்களது மனித உணர்வுகளைப் புரிந்து கொண்ட கல்விமான் என்றே கருதிப் பழகி வந்தேன். அவரது எளிமை ஆரம்பத்தில் என்னைக் கவர்ந்தது. போகப்போக இளைஞர்கள் பலர் அவரது வீட்டில் அவரைச் சந்தித்துச் சம்பாஷிப்போம். எங்களது உணர்வுகளைச் சரிவரப் புரிந்து கொண்ட தனிபெரும் தலைவர் அவர். எங்களை எங்களையறியாமலே நெறிப்படுத்தி வந்தார். அந்தக் காலத்தில் தமிழகத்தின் பிரபல கம்யூனிஸ்ட் தலை வரான 'தோழர் ப. ஜீவானந்தம்' தலைமறைவாகி யாழ்ப்பாணம் வந்திருந்தார். அது யுத்த பிற்காலம். ஐயம்பிள்ளை என்ற பெயரில் 'ரேஸன் காட்' பதிவு செய்து யாழ்ப்பாணத்தானாக உரு மாறி கிராமம் கிராமமாக உலா வந்து கொண்டிருந்த அந்தக்

காலம். கார்த்திகேசனது வீட்டில்தான் தங்கியிருந்தார். அவரது பிரபலம் அப்பொழுது எமக்குத் தெரியாது. அவரது அரசியல் ஆளுமை எமக்கெல்லாம் விளங்காது. ஆனால் எல்லாம் தெரிந்த ஒரு பிரமுகர் என்ற எண்ணம்தான் எம்மிடம். அடிக்கடி அவரைச் சந்திப்போம். திராவிட மாயையில் சிக்கித் திணறிப் போயிருந்த எம்மைப் போன்ற இளைஞர்களை அவர் மெல்ல மெல்ல அந்த மாயையில் இருந்து விடுவித்தார். தமிழகத்திலிருந்து வந்த ஒரு பெரிய மனுஷனே அந்தப் பாதையை ஆக்கபூர்வமாக விமர்சித்தபொழுது அதன் அவலமான பக்கங்களை நாம் சுலப மாகப் புரிந்து கொண்டோம். அத்துடன் நமது எதிர்கால இலக்கியங்கள் யாருக்காகப் படைக்கப்பட வேண்டும் என்ற ஞானத்தையும் மெல்ல மெல்லக் கற்றுத் தெளிகின்றோம்.

**இலக்கிய உணர்ச்சி மூலம் சாதியக் கொடுமைகளுக் கெதிரான போராட்டத்தை முன்னிறுத்தி, சமத்துவ மானுட அமைப்பை தோற்றுவிப்பது மட்டும்தானா உங்கள் எழுத்தின் கொள்கையாகவிருந்தது?**

யாழ்ப்பாணத்தில் நிலவிய சாதிக் கொடுமைகளுக்கு எதிராகக் கலகக் குரல் கொடுத்து வந்த எம்மைப் போன்ற இளைஞர்கள் கட்டம் கட்டமாக வளர்ந்து சமூகத்தை உணர்ச்சிப் பார்வையில் பார்ப்பதை விடுத்து, விஞ்ஞான உற்று நோக்கல் பார்வையில் பார்க்கத் தொடங்கியதின் விளைவும், தோழர் கார்த்திகேசன் போன்றவர்களின் வழி நடத்தலும் தோழமை உணர்வும் இயல் பாகவே நாம் சென்றடைய வேண்டிய மார்க்கத்துக்கு வழி அமைத்துத் தந்துதவின.

வெறும் சாதி எதிர்ப்புப் போராட்டம் மாத்திரம் எமது குறிக்கோளல்ல. ஆனால் ஆசிய நாடுகளில் குறிப்பாக இந்தியா இலங்கை போன்ற தேசங்களில் சாதிய விஷ வேர்களை முற்று முழுதாகக் களைந்தெறியாமல் வர்க்க விடுதலையை எண்ணிப் பார்க்கவே முடியாது. ஒரே தொழில், ஒரே வாழ்வு, ஒரே சூழலில் வாழ்வார்கள் பல சாதித் தொழிலாளர்கள். அதே சமயம் சுய பிரலாபம் வரும் சமயங்களில் "நான் ஆர் தெரியுமாடா? கர வெட்டியிலை சுண்டியெடுத்த வெள்ளாளனடா, நான்" எனத் தனது சுயசாதி உயர்வைச் சொல்லியே தன்னைப்

பெருமைப்படுத்திக் கொள்ளும் தொழிலாளர்களை இன்னும் நிஜ வாழ்வில் நாம் பார்க்கின்றோம். அதற்கு உதாரணம் எனது பாத்திரம் ஷோக்கெல்லோ கந்தையா அலன் 'ஞானம்' என்ற கதையில் இவர்தான் கதாபாத்திரம்.

வெறும் சாதி விடுதலை மாத்திரம் எனது நோக்கமல்ல. விடுதலை பெற்ற சாதிகளே புதிய உயர்சாதி அகம் பாவத்துடன் செயல்பட்டு விடுவதை எதார்த்த வாழ்வில் நான் பார்த்து வருகின்றேன். எனவே சாதி விடுதலை ஊடாக இறுதியில் மனுக்குல விடுதலைதான் என்னைப் போன்றவர்களின் எழுத்தின் இறுதி இலட்சியமாகும். சிலர் திட்டமிட்டே எம் இலட்சியத்தைக் கொச்சைப் படுத்துகின்றனர். எமது ஆன்மாவையே காயப் படுத்துகின்றனர். இதற்காக நமது பாதையை நாம் மாற்றப் போவதில்லை. ஏனெனில் பயணப் பாதை எமக்குத் தெளிவாகத் தெரியும்.

**நீண்ட காலமான சிங்கள ஆட்சியாளர்களின் அடக்கு முறைக்கெதிராக உங்கள் எழுத்து, அரசியலின் எதிர்க் குரல்கள்தான் என்ன?**

அன்றும் இன்றும் என்றுமே என்னைப் போன்றவர்கள் பேரினவாதிகளின் கருத்துக்களுக்கு எதிராகவே குரல் கொடுத்து வந்துள்ளனர். 30 வருட மல்லிகை வரலாற்றில் எந்த அரசாங்கம் பதவியில் இருந்தாலும் எமது போராட்டத்தில் நாம் யாருடனுமே சமரசம் செய்து கொண்டது கிடையாது. அதற்கு எனது எழுத்துக்களே சாட்சி பகரும்.

**மார்க்ஸிசம் மாஸ்கோ சார்பு - பீகிங் சார்பு அணிகளாக பிளவுபட்ட போது நீங்கள் மாஸ்கோ சார்பு நிலையிலிருந் தீர்கள். ஈழத்து எழுத்தாளர்கள் படைப்பாளிகளில் அதிக மானோர் பீகிங் சார்பு அணியிலேயே இருந்தார்கள். உங்கள் மாஸ்கோ சார்பு நிலைப்பாட்டிற்கான காரணமென்ன?**

எனக்கு எந்தச் சார்பு பற்றியும் கவலையில்லை. கட்சி மாறியும் அல்ல நான். மாஸ்கோ - பீக்கிங் சார்பு பற்றிக் கேட்கிறீர்கள். காலம் அதற்குப் பதில் சொல்லி விட்டதே. இன்று

இலங்கையில் இருக்கக் கூடிய ஒரேயொரு கட்சி இலங்கைக் கம்யூனிஸிஸ்ட் கட்சி ஒன்றுதான். அதில்தான் நான் இன்றும் இருக்கின்றேன். இப்படிச் சொல்வதில் இன்று நான் பெருமைப் படுகின்றேன். ஏனெனில் அன்று நான் சரியான தேர்வைத்தான், கட்சியைத்தான் தேர்ந்தெடுத்தேன் என்பதில் எனக்கு இன்று ஆத்ம திருப்தி உண்டு. அத்துடன் உங்களது வாதப்படி எழுத்தாளர் அத்தனை பேரும் எனக்கு எதிர் வரிசையில் இருந்தார்கள் என்ற காலத்தில்தான் நான் மல்லிகைச் சஞ்சிகையை வெற்றிகரமாக நடத்தி வந்துள்ளேன் என்பதையும் நீங்கள் கவனிக்கத் தவறக் கூடாது. இது எனது அரசியல் தீர்க்க தரிசனத்திற்குப் பெரிய வெற்றியாகும்.

**மல்லிகையின் தோற்றம் பற்றி...**

தனிமனித முயற்சி எத்தனையோ அவதூறுகள் அபவாதங்கள். இதையெல்லாம் கடந்து 1964ம் ஆண்டு தொடக்கம் மல்லிகையை நடத்தி வந்துள்ளேன். புலம் பெயர்ந்த சூழ்நிலையிலும் எனது நோக்கத்தை நான் கைவிடவில்லை. 'மல்லிகைப் பந்தல்' வேலை தொடர்கின்றது. கூடிய சீக்கிரம் மல்லிகை மலரும். அதற்காக உழைத்து வருகின்றேன்.

**காலத்தின் மீள் பரிசீலனையோடு விமர்சனக் கண் ணோட்டத்தின் அடிப்படையில் நீங்கள் கைலாசபதி, சிவத்தம்பி, இளங்கீரன், மு. தளையசிங்கம் மகாகவி, நீலா வாணன், எஸ்.பொ. நுஃமான் போன்றவர்களை இன்று எப்படிப் பார்க்கிறீர்கள்.**

கைலாசபதி அவர்கள் கடைசிவரையும் தடம் புரளாமல் நமது இலக்கியப் போராட்டத்தில் நிலைநின்று உழைத்தவர். சிவத்தம்பி அவர்களை அப்படிக் கூறிவிட இயலாது. சமீப காலங்களாக அவர் தத்துவார்த்த ரீதியில் தன்னைத் தானே குழுப்பிக் கொள்வதுடன் எம்மையும் தலை குழம்ப வைத்து விடுபவர். இருந்தும் இன்று நான் மெய்யாகவே மதிக்கும் ஓர் இலக்கிய விமர்சகர் சிவத்தம்பிதான். யாழ்ப்பாண மண் உருவாக்கித் தந்த ஒரு முஸ்லிம் படைப்பாளி இளங்கீரன். அதில் எப்போதுமே

எனக்குப் பெருமையுண்டு. தளையசிங்கத்துடன் எனக்குக் கருத்து முரண்பாடு உண்டு. அதே சமயம் மானுட நேசிப்பு மிக்கவர் அவர். எழுத்தும் வாழ்க்கையும் ஒன்றென வாழ்ந்து வந்த அவர், நல்ல நண்பரும் கூட. மகாகவி மதிக்கத்தக்க கவிஞர் தான். நாம் நடத்திய எந்தவொரு இலக்கியப் போராட்டத்திலும் கலந்து கொள்ளாமலே ஒதுங்கி நிற்கப் பழகிக் கொண்டவர். எனவே நாமும் அவரை விட்டு ஒதுங்கி நின்றோம். நீலாவாணன் நான் மதிக்கும் ஒரு கவிஞன். அவரது ஆளுமையைப் புரிந்து கொண்டதின் நிமித்தமாகத்தான் அவரது உருவத்தை மல்லிகை அட்டையில் 70களில் பிரசுரித்தேன். எஸ்.பொ. அவர்களைப் பற்றி நான் கருத்துக் கூறுவதைத் தவிர்த்து விடுகின்றேன். நுஃமான் அவர்கள் ஆரம்ப காலங்களில் எம்முடன் இணைந்து பிணைந்து வந்தவர்தான். இன்றும் எனக்கு அவரிடம் மதிப்பு உண்டு. "உனது நண்பனைப் பற்றிச் சொல்லு; உன்னைப் பற்றிச் சொல்லி விடுகின்றேன்" என்பது யேசுவின் வாக்கு. இன்று அவரது இலக்கிய நண்பர்கள் எல்லாம் இந்த நாட்டைச் சேர்ந்தவர் களல்ல. குறிப்பாக நாகர் கோயிலைச் சேர்ந்தவர்கள். நட்பைக் குறுகிய வட்டத்திற்குள் அடக்கிக் கொள்ள வேண்டும் என்பது எனது கருத்தல்ல. ஆனால் பாதத்தைச் சிக்காராக இந்த மண்ணில் மிதித்துக்கொண்டு தான் நாம் உலகத்தைப் பார்க்க வேண்டும். பாதமே இரவல் மண்ணில் பதிக்கப்பட்டு விட்டால் கருத்துக் களும் தடம் புரண்டு போய்விடும் என நியாயமாகவே பயப்படுபவன் நான். அவர் இப்பொழுதெல்லாம் எமக்காக எழுதுவதை விடுத்து, வேறு யாருக்காகவோ எழுதுகின்றாரோ என அடிக்கடி யோசிப்பதுண்டு.

***ஈழத்தில் மார்க்ஸிச எழுத்தாளர்கள் தொடர்பாய் அவர் களின் இலக்கியத்தை இலக்கியத்தின் அரசியலை நோக்கி முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் மார்க்ஸிச அணி சார்ந்த எஸ்.பொ. போன்றவர்களாலும் முன் வைக்கப் பட்டிருக்கிறது. இது குறித்து?***

நாம் வெறும் உதிரி எழுத்தாளர்களல்ல; அமைப்புச் சார்ந்தவர்கள் நீண்ட கலை இலக்கிய போராட்ட அனுபவம்

கொண்டவர்கள். அப் போராட்டங்களில் வெற்றி பெற்றவர்கள். சில பின்னடைவு கண்டவர்கள்.

இங்கல்ல, உலகம் பூராவுமே மார்க்ஸிய எழுத்தாளர்கள் பற்றிப் பல்வேறு அவதூறுகள் பரப்பப்பட்டு வந்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். இந்தக் குற்றச் சாட்டுகளுக்கு நாங்கள் நின்று பதில் சொல்லத் தேவையில்லை என்றே கருதுகின்றேன். எங்களது செயல்பாடுகள் மூலமே இக்குற்றச் சாட்டுகளுக் கெல்லாம் பதில் சொல்ல விரும்புகின்றோம். இந்தக் கேள்வி களைக் கேட்டும் சஞ்சிகை ஆசிரியர் நீங்கள் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள். உங்களது சஞ்சிகை தோற்றத்திற்கும் நாம் நமது உழைப்பால் உழுது இந்த மண்ணுக்குப் பசளை இட்டிருக்கின்றோமா, இல்லையா? குற்றஞ்சாட்டுபவர்கள் பற்றி நாம் எப்பொழுதுமே கவலைப் படுவது கிடையாது. அதே சமயம் காலத்திற்கு காலம் நாம் சுய விமரிசனம் செய்து செய்து நம்மை நாமே சீர்திருத்திக் கொள்வது வழக்கம். அதனால்தான் எம்மால் வளர்ச்சியடைய முடிகின்றது.

**தொ.மு.சி. ரகுநாதன், சிவத்தம்பி, அ. மார்க்ஸ், நிறப் பிரிகை குழுவினர் போன்றவர்கள் நாம் சோசலிஸ யதார்த்த வாதம் பேசியிருக்கக் கூடாது விமர்சன யதார்த்தவாதம் தான் பேசியிருக்க வேண்டும் என்கிறார்கள் இதுபற்றி?**

அது அவரவர் கருத்து. அவர்களுக்கு அக் கருத்தைச் சொல்ல உரிமையுண்டு. அதே சமயம் நானொரு படைப்பாளி. விமர்சகர் களின் பார்வையை என்னால் ஒத்துக் கொள்ள இயலாது. எட்ட முடியாத இலட்சியமாக நான் சோஸலிச எதார்த்தவாதப் போக்கைக் கருதவில்லை. அது நீண்ட தூர இலட்சியம். அந்த இலட்சியம் தான் என்னை வழி நடத்தி வந்திருக்கின்றது. அந்த இலட்சிய வேட்கை இல்லாது போயிருந்தால் என்னைப் போன்றவர்கள் ஒருவேளை உருவாகாமல் கூடப் போயிருக்கலாம். சோசலிஸம் தோற்றுப் போய்விட்டது எனச் சோவியத் யூனியன் வீழ்ச்சிக்குப் பின்னர் சிலர் குதூகலிப்பதைப் பார்க்கின்றோம். அது மனுக்குல விஞ்ஞான தத்துவம். வறட்டு சூத்திரமல்ல. அது தற்காலிகமாகப் பின்னடைந்திருக்கலாம். தோற்கடிக்கப்பட

முடியாத தத்துவம் அது. அது போலவே வெறும் மண் புழுக்களாக இருந்த என்னைப் போன்றவர்களை மனிதர்களாக்கிப் பேனா பிடிக்க வைத்த 'கார்க்கி" யின் நம்பிக்கை தத்துவம் அது. அந்தத் தத்துவப் படைப்பாக்கங்களை நாங்கள் இதுவரை படைக்க முடியாதவர்களாக இருக்கலாம். நாளைய படைப்பாளி அந்த நோக்கத்தை நிறைவேற்றி முடிப்பான் என்பது எனது நம்பிக்கை.

**தலித் இலக்கியம் பற்றி அதிகம் பேசப்படுகிறது தலித் இலக்கியத்தை நீங்கள் எப்படி நோக்குகிறீர்கள்?**

தலித் போராட்ட இலக்கிய அத்திவாரம் 50-60 களில் ஈழத்தில் சிக்காராகத் தளம் போடப்பட்டு விட்டது. அந்தக் காலத்திலேயே தம்மைப் படித்தவர்கள் எனச் சொல்லிக் கொண்ட மேட்டுக்குடிக் கூட்டத்தினர் எம்மைப் பார்த்து "எழியதுகள் எழுதுகின்றனர் இவை எழியதுகளுக்காக எழியதுகள் எழுதும் இழிசனர் இலக்கியம்" எனச் சொல்லி எமது ஆத்மாவையே சாகடிக்கப் பார்த்தனர். முடியவில்லை. அடிநிலை மக்களின் உணர்வுகளை அவர்களது பிரச்சினைகளை அவர்களின் புத்திரர்களாகிய நாம் எம்மவர்களது பாஷையிலேயே எழுதி வந்தோம். போர்த்துக்கீசனுக்குப் பின்னர் டச்சுக் காரனுக்கு அதன் பின்னர் வெள்ளைக் காரனுக்குப் பந்தம் பிடித்து மதம், மொழி மாறிய திருகுதாள கூட்டத்தினருள் நமது மக்கள்தான் தமது மொழியையும் பண்டைய கலாசாரத்தையும் பாதுகாத்து வந்தவர்கள். இன்றும் பாதுகாத்து வருகின்றனர்.

இந்த வரலாற்று உண்மை எமக்குத் தெளிவாகத் தெரியும். அந்த மக்களின் வாரிசுகள் தான் நாம். அழியாமல் பாதுகாத்த எம்மவர்களுக்கு எமது மொழியையும் கலாசாரத்தையும் மதத்தையும் எப்படிப் பாதுகாக்க வேண்டுமென்பது நல்லாகவே தெரியும். நமது பரம்பரையின் சகல விடுதலையும் தான் தலித்துக்களுடைய பெரு நோக்கமென்றாலும் மனுக்குல விடுதலைதான் இறுதி நோக்கம். இந்த நாட்டுத் தலித் கலைஞர்கள் இதைத் தெளிவாகவே புரிந்து வைத்துள்ளனர். அனுபவம் எமக்கு இதைத்தான் கற்றுத் தந்துள்ளது.

**தமிழ் மக்களிடையே இன்று நடைபெறும் ஆயுதப் போராட்டம் சாதிய ஒடுக்குமுறையை முற்று முழுதாக இல்லாமலாக்கிவிட்டது என்று சொல்ல முடியுமா?**

நீறுபூத்த நெருப்பாக இன்றும் கனன்று கொண்டுள்ளது. முற்றாகவே மறைந்து போய்விடவில்லை. அதே சமயம் இளந் தலைமுறையினரிடம் இது அறவே அண்டவில்லை எனத் துணிந்து சொல்லலாம். சந்தர்ப்பம் வசதியானால் திரும்பவும் தலைதூக்கும் ஆபத்தும் உண்டு.

**உங்களுக்கும் சுந்தர ராமசாமிக்குமிடையே எழுந்துள்ள கருத்து முரண்பாடுகள் குறித்து சொல்லுங்களேன் (தாமரை யில் எழுதியிருக்கிறீர்கள்)**

வர்த்தக நோக்கமற்றுப் பேனா பிடிக்கும் சகோதர எழுத் தாளன் சில அடிப்படை நோக்கங்களில் நேர்மை நிரம்பியவனாக இருக்க வேண்டும் என பெரிதும் விரும்புபவன் நான். அவரை அவதூறு செய்வது எனது நோக்கமல்ல. இவர் நேர்மைப் போலி. எழுத்து உபதேசம் செய்து தூய இலக்கியம் பேசும் சராசரித் தமிழன், தமிழனிடம் உள்ள உயர்சாதி அகம்பாவம் இவரிடம் நிறைய உண்டு எனத் தகவல் எனக்குக் கிடைத்தது. தலித் இலக்கியகாரர்களை மட்டம் தட்டுவதில் இவர் முன் நிற்பவர். இவர் எனது எதிரியல்ல. இவரது உயர்சாதி அகந்தையையும் அகம்பாவத்தையுமே நான் வெறுக்கின்றேன்.

இது தவிர, தனிப்பட்ட முறையில் எனக்கு எந்தவிதமான கோபதாபமுமில்லை. எழுத்தாளன் தனக்குத் தானே உண்மை யுள்ளவனாக விளங்க வேண்டும் என விரும்புபவன்நான்.

**மல்லிகையின் ஊடான அனுபவத்தில் இலக்கிய வளர்ச்சிக்கு சிறு சஞ்சிகைகளின் பங்களிப்பு எந்த வகையில் உள்ளது?**

புதுமைப்பித்தன் அந்தக் காலத்தில் எந்தவொரு பிரபல சஞ்சிகைகளிலும் எழுதிப் புகழ் பெற்றவரல்ல. இலக்கியச் சிற்றேடுகளில் எழுதித்தான் அவர் பல பரிசோதனைகளைச்

செய்து நிமிர்ந்தவர். உண்மையைச் சொல்லப்போனால் 'எழுத்து' 'சரஸ்வதி' சஞ்சிகைகளுக்குப் பின்னர்தான் பல தரமான எழுத்தாளர்கள் இலக்கிய உலகில் பிரபலம் பெற்றுக் கனதியான சுவைஞர்கள் நெஞ்சங்களில் இடம் பிடித்துக் கொண்டனர். துரதிர்ஷ்டம் என்னவென்றால் சிற்றேடுகளில் கால் ஊன்றி வளர்ந்தவர்கள் பின்னர் வியாபாரப் பத்திரிகைகளுக்கு விலை பேசிப் போய் விடுகின்றனர். நமது பொருளாதாரச் சூழல் அப்படி. அவர்களைக் குற்றஞ் சொல்லியும் பயனில்லை. ஆனால் இன்றும், எழுத்து, சரஸ்வதி, மறுமலர்ச்சி, மல்லிகைப் பரம்பரை எனச் சொல்லித்தான் பல எழுத்தாளர் பெயர் சொல்லி நிலைக்க வேண்டியுள்ளது. இது சிற்றிலக்கிய ஏடுகளுக்கு நிரந்தரமாகவே நின்று நிலைக்கும் பெருமையாகும்.

**இன்றைய உங்கள் அரசியல் குரல் என்ன?**

இந்த மண்ணுக்குச் சமாதானம் தேவை. யுத்தம் நிறுத்தப் பட வேண்டும். சிறுபான்மை இனங்களின் அடிப்படை உரிமைகள் வென்றெடுக்கப்பட வேண்டும். நாடு பொருளாதாரச் சீர்குலைவிலிருந்து நிமிர்ந்து வரவேண்டும். இதுவே இன்றைய நிலையில் எனது அரசியல் குரலாகும்.

**மல்லிகையின் இன்றைய நிலை?**

நான் என்றுமே மல்லிகையின் ஆசிரியர் தான். எழுத்தாளனின் வளர்ச்சி தனிமனித வளர்ச்சிதான். சஞ்சிகை ஆசிரியனின் உழைப்பு ஒரு சக்தி மிகுந்த இளந்தலைமுறையை வளர்த்தெடுக்க முனையும் முயற்சியே. தனிமரம் எத்தனை பருத்துச் செழித்தாலும் தோப்பாகி விடாது. எனவே மல்லிகையின் பெறுமதியை வேறெந்தக் காலத்தையும் விட, இன்று தெளிவாகப். புரிந்து கொண்டுள்ளேன். ஒன்றை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கட்சி பிரிந்து தோழர்கள் பிரிந்த சமயத்தில்தான் மல்லிகை தோன்றியது. ஒடுக்கப்பட்ட மக்களின் மனித உரிமைகளுக்காகப் போராடி வந்த சந்தர்ப்பத்தில் தான் மல்லிகை நடப்பட்டது. இதுகள் முறையாகப் படித்து வரவில்லை என எமது கல்வித் தராதரம் விமர்சிக்கப்பட்ட வேளையில்தான்

ஈழத்தின் பிரபலமான கல்விமான்களின் கல்வித் தராதரங்களைப் பயன்படுத்தாமல் அவர்களது நாமத்தை மாத்திரம் தாங்கி அவர்களது படைப்புக்கள், சிந்தனைகள், மல்லிகையில் பதிப் பிக்கப் பெற்று வெளிவரத் தொடங்கின. இவற்றுள் முக்கியமான ஒன்று சாதி எதிர்ப்புப் போராட்டம். சூடு பிடித்து எரிசரமாகக் கனன்ற சூழ்நிலையில்தான் ஒரு சலூனுக்குள் இருந்து, அங்கு தொழில் செய்து கொண்டிருந்த எனது பெயரை ஆசிரியராகக் கொண்டு மல்லிகை வெளிவரத் தொடங்கியது. இது பாரிஸிலோ, லண்டனிலோ நடந்த சரித்திர நிகழ்வுகளல்ல. நமது யாழ்ப் பாணத்தில் நடந்த முக்கிய நிகழ்ச்சி இது. இது வரலாற்றுச் சம்பவமில்லையா?

என்னை நானே புகழ்ந்து மார்பு தட்டுபவன் எனச் சிலர் இன்றும் குற்றஞ் சாட்டுகின்றனர். நீண்ட, அழகிய கூந்தலுள்ள சீமாட்டிதான் விதவிதமான கொண்டை போடுவாள். நான் எனது துறையில் அர்ப்பணிப்பு உணர்வுடன் இடையறாது உழைக் கின்றேன். செயல் படுகின்றேன். என்னை விட அதிகமாக உழைப்பவர்கள் என்னை விமர்சிக்கட்டும். என்னைத் துச்சமாக மதித்து எனது திறமையைக் கொச்சைப் படுத்தியவர்களுக்குத்தான் இத்தனை சவால்களையும் விடுகின்றேன். என்னைப் புரிந்து கொண்டவர்களுக்கு மனசார நேசிப்பவர்களுக்கு நான் என்றுமே நண்பன்தான். தெருக்களில் மல்லிகையைச் சுமந்து விற்றுத் திரியும் அதே ஜீவா தான்! நான் தலை கனத்தவனல்ல. தன்னம் பிக்கை நிரம்பியவன். அதுவேறு; இது வேறு இல்லாது போனால் என்னை நக்கல் பண்ணிச் சிறுமைப்படுத்திய கூட்டத்தினர் எப்போவோ என் ஆளுமையை விழுங்கி ஏப்பம் விட்டு விடுவார்கள் என்பது எனக்குத் துல்லியமாகவே தெரியும். அதற்காகப் பலர் காத்துக்கொண்டிருந்தனர்.

இன்னொரு குற்றச் சாட்டும் உண்டு. தெருத் தெருவாக இன்றும் மல்லிகையைக் கொண்டு சென்று விற்று விடுவது ஒரு பெருமையா வளர்ச்சியா? எனக் கேட்கின்றனர். இந்தியா இன்று உலக வல்லரசுகளில் ஒன்றாகத் தொழில் நுட்ப அறிவு பெற்றுத் திகழ்ந்து வருகின்றது. கண்டம் விட்டுக் கண்டம் பாயும்

ஏவு கணைகளைச் சுயாதீனமாகத் தயாரிக்கும் நிலைக்கு உயர்ந்துள்ளது. இன்று கூட அரசாங்க அமைச்சர்கள், சாதனை செய்யும் பெரியவர்கள் ராட்டியில் கைகளால் நூற்ற கதராடையை உடுத்துகின்றனர். ஐரோப்பியன் இதைப் பார்த்துக் கிண்டல் பண்ணுகின்றானா? இந்தியாவின் பலத்தைக் குறைவாக மதிப்பிடுகின்றானா? கதர் சுதந்திரத்தின் ஒரு சின்னம். குறியீடு நான் மல்லிகையைக் கொண்டு வீதியெங்கும் திரிந்து விற்று வருவது எனது இலக்கியப் போராட்டத்தின் ஒரு வடிவமே. காந்தி சுதந்திரம் பெற்ற பின்னரும் வெகு எளிமையாகவே காட்சி தந்தார். பிச்சைக்காரனும் எளிமையாகவே வலம் வருகின்றான். இரண்டு எளிமையும் ஒன்றா? ஈழத்து இலக்கிய உலகில் காந்திய எளிமையைக் கடைப்பிடித்து வருபவன் நான். இது சரித்திரத்தில் பேசப்படும் என்பது சும்மா வெறும் தற்பெருமைச் சொல்லாடல்களல்ல. இது தன்னம்பிக்கையின் ஆத்மக்குரல். காலம் இதை மெய்ப்பித்தே தீரும்.

மூன்றாவது மனிதன்

மே 1997.

## முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்குமான முரண்பாடுகள் தற்காலிகமானவை

**கேள்வி:** நமது நாட்டிலே சுமார் 30 வருடங்களுக்கு மேலாக இலக்கியப் பணிபுரிந்துவரும் மல்லிகையின் ஆசிரியராக இருக்கின்றீர்கள். உங்களது இலக்கியப் பின்னணி பற்றிக் கூறுவீர்களா?

**பதில்:** எழுத்தாளர் டானியலும், நானும் இலக்கிய உலகுக் குள்ளே நுழைந்தபோது இரண்டு விதமான எதிர்ப்புகள் எழுந்தன. படித்த பண்டிதர்களும், சாதிக் கிறுக்குத்தனம் கொண்டவர்களும் எங்களை நிராகரிக்க முற்பட்டனர். யாழ்பாண சமூக அமைப்பில் வலிமையான சக்திகளாக விளங்கிய இவர்கள், எங்களை எழுத்தாளர் என்று மாத்திரமன்றி மனிதர்களாகவே மதிக்க மறுத்தனர். பொது மேடைகளில் அவமதித்தனர்.

எங்கள் இலக்கியத்தை இழிசனர் இலக்கியம் எனத் தூற்றினர். இருந்தபோதும் தமிழிலக்கிய உலகிலே தொடர்ந்து ஓடினோம். நாங்கள் மக்கள் மத்தியில் வேர் விடும் செல்வாக்கைப் பார்த்து இந்தச் சக்திகள் சமரசத்துக்கு முன்வந்தன. எங்களைப் பெரிய மனித ராக்கி எங்களுக்கு சமூக அந்தஸ்து தந்து எங்களையும் தங்களில் ஒருவராக்கி, எங்களைத் தனிமைப் படுத்து வதுதான் அவர்களது நோக்கம். ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டக் குரலைப் பிரதிபலிப்பவர்களை தம்மவர்களாக்கி அவர்களை ஆட்கொள்வதன் மூலம் அந்த மக்களின் போராட்டத்திலிருந்தே அவர்களை திசைதிருப்புவது நீண்டகாலம் நடைபெற்று வந்த

சங்கதியாகும். எம்மை எதிர்த்தவர்களின் அங்கீகாரத்தை நாம் எப்போதுமே வேண்டி நின்றதில்லை. கடந்தகால தந்திரோபாயங்கள் நாம் கற்றுத் தேர்ந்தவை. ஒடுக்கப் பட்ட எங்கள் சமூக மக்களிடமிருந்து நம்மைப் பெரியவர்களாக்கிக் காட்டும் எண்ணம் எமக்கில்லை. 'தலித்' என்று சொல்லப்படும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைதான் நமது இறுதிக் குறிக்கோளாக இருந்தது. எம்மைப் போன்றவர்கள் இலக்கியத்தில் வளர, வளர எமது போராட்டத்தின் வேகமும் கூர்மையடைந்தது. நாம் எந்த மக்களுக்காக இலக்கியப் போராட்டம் நடத்தினோமோ அந்த மக்கள் எங்களை அங்கீகரித் தனர். தமிழ் நாட்டிலில்லாத புதுமை இது. அங்கே பல்வேறு பிரதேசங்களிலிருந்து சென்னைக்கு வரும் ஒடுக்கப்பட்ட சமூக எழுத்தாளர்கள், பட்டினத்துக்கு வந்தவுடனே தம்மைக் கரைத்துக் கொண்டு விடுகின்றனர். அல்லது எதிரிகளுடன் சமரசம் செய்து வருகின்றனர். இதன் மூலம் தமது மக்களது போராட்ட வடிவத்தையே கொச்சைப் படுத்தி வருகின்றனர். இந்த அனுபவத்திலிருந்து தான் நாம் போதனை பெற்றோம்.

நமது பிரதேசத்து மண்ணை எமது நாவினால் உழு திருக்கின்றோம். பேனாவினால் நமது மக்க்ளின் நெஞ்சத்தைப் பதப்படுத்தியிருக்கின்றோம். இன்று நாம் திரும்பிப்பார்க்கும் போது நாம் உழுது, விதைத்த விதையின் அறுவடை ஆரோக்கியமான பயனைத் தருவது எம் கண் முன்னே தெரிகின்றது. இது ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டம் மட்டுமல்ல வர்க்கப் போராட்டமாகவும் மாறியுள்ளது.

வட பிரதேசத்தில் இடதுசாரி இயக்கம் வேர் பிடித்த தன் விளைவாக பல இடது சாரித் தலைவர்கள் உயர் சமூகத்திலிருந்து வந்தனர். எங்களுடைய போராட்டத் தில் உபதேசிக்காமல் களத்தில் தோளோடு தோள் நின்று போராடினார்கள் கார்த்திகேயன், பொன்

கந்தையா, இராமசாமி ஐயர் போன்றவர்கள் இன்னும் நமது மக்களின் நெஞ்சங்களில் நீங்காத இடம் பெற்றவர்கள்.

இந்தப் பகைப்புலத்தில் தான் நான் எழுத்தாளராகி னேன். என்னையும், டானியலையும் படித்த உயர்குலக் கூட்டம் அங்கீகரிக்கவில்லை. இதுகள் எளியதுகளுக் காக எழுதும் கூட்டம் இதுகளும் எளியதுகள் என நம்மைப் பகிரங்கமாகவே ஆரம்பத்தில் இழிவு செய்து எழுதினர். எனினும் எமது செல்வாக்கு அதிகரிக்கவே செய்தது. எமது ஆக்கங்கள் சரஸ்வதி, தாமரை போன்ற முற்போக்கு சஞ்சிகைகளில் இடம்பெற்றன.

**கேள்வி:** ஒடுக்கப் பட்ட மக்களின் போராட்டத்தினை தலித் போராட்டம் என்று அழைக்கிறார்களே இதன் உள்ளார்த்தம் என்ன?

**பதில்:** தலித் என்றச் சொல் தமிழ்ச் சொல் அல்ல. இது மகாராஷ்டிரதச் சொல்லாகும். இந்தியாவிலுள்ள சகல மொழியைச் சார்ந்தவர்களும் இதனை ஒரு குறியீட்டுப் பொதுச் சொல்லாகப் பாவிக்கின்றனர். அடக்கப் பட்ட மக்களினுடையே விடுதலைக்காக தலித் போராட்டம் நடத்தப் படுகின்றது. இந்தியாவின் பிரதமர்களையே உருவாக்கும் உத்தரப் பிரதேச மாநிலத்திலே சமீபத்திலே ஒரு தலித் பெண் முதல மைச்சராக வந்தது ஒரு பெரிய அதிசயமாகக் கருதப் படுகின்றது.

**கேள்வி:** தலித் போராட்டத்திலே எந்தளவு வெற்றி கிடைத் திருப்பதாகக் கருதுகின்றீர்கள்?

**பதில்:** இந்தப் போராட்டத்தின் பின்னர் பலர் கல்வித் தரத் தில் உயர்ந்துள்ளனர். பொருளாதார ரீதியில் சிறப்புப் பெற்றுள்ளனர். ஒடுக்கப்பட்ட சமூகத்தின் முக்கியமான பலவீனங்களுள் ஒன்று அவர்களுக்கென சொந்தமான குடியிருப்புக்கள் கிடையா. இன்று அந்தத்

தளைகளிலிருந்து கட்டம் கட்டமாக விடுபட்டு வருகின்றனர். அதேவேளை இந்தச் சாதிவெறி அகம் பாவம் முற்று முழுவதாக மறைந்து விட்டது எனவும் கூறமுடியாது. உயர்குலத்திமிரை வெளியே காட்டிக் கொள்ளாத படித்த பலர் நாகரீகமாக நடந்து கொண் டாலும் அவர்களின் அடி மனதில் இந்த உணர்வு நீறுபூத்த நெருப்பாகத்தான் இருக்கின்றது. இது எமக்குத் தெளிவாக தெரியும். சமூகம் திடீரென மாறிவிடும் என்று நாம் நம்பவில்லை. அதே சமயம் நமது போராட்டமும் ஓய்ந்துவிட்டது என சம்பந்தப் பட்டவர்கள் நம்பிவிடக்கூடாது.

**கேள்வி:** முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துக்கும், உங்களுக்கும் என்ன வகையான தொடர்பு இருந்தது எனக் கூறுவீர்களா?

**பதில்:** இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செய லூக்க காலத்திலிருந்தே நான் யாழ்பாணக் கிளையின் செயலாளராகக் கடமையாற்றினேன். இந்த நாட்டில் மற்றைய பிரதேசங்களை விட வடபுலத்தில் இலக்கிய இயக்கம் நடத்துவது மிகச் சிரமமானது. அந்தக் காலக்கட்டத்தில் பல்வேறு எழுத்தாளர்களை இணைத்து, பல்வேறு கூட்டங்களை நடத்தியிருக் கின்றேன். மு.எ.ச. கம்யூனிஸ்ட் சார்பியக்கம் என்ற தவறான கருத்து நிலவுகின்றது. நாம் கம்யூனிஸ்ட்கள் என்பதை பகிரங்கமாக ஒத்துக் கொள்கின்றோம். அதே சமயம் பல்வேறு அரசியல் கருத்துக்கொண்டவர்கள் இச் சங்கத்தில் தம்மை இணைத்துக்கொண்டனர். அரசியல் சித்தாந்தத்தை போராட்டத்துடன் திணிக்க வில்லை. பல்வேறு கருத்துக்களைக்கொண்ட வரதர், நந்தி, சொக்கன், புதுமைலோலன், நாவேந்தன் போன்றோர் ஆரம்ப காலத்திலிருந்தே இதனுடன் இணைந்து உழைத்தவர்களே. ஏதேதோ இலக்கிய தாபனங்களிலிருந்து பிற்காலத்தில் வந்தவர்களெல்லாம்

தாம்தாம் மு.எ.ச. இன் தூண்கள் என இன்று பிரபல மாக அறிக்கை வெளியிடுவதைப் பார்த்து எனக்குள்ளே சிரித்துக் கொள்கின்றேன். உண்மையான இலக்கியவாதி மக்களுக்குச் சேவை செய்பவனே தவிர தன்னைப் பிர பலமாக்கிக் கொள்ள மாட்டான். அவனது ஆற்றலையும், திறமையையும் நிர்ணயிப்பவர்கள் மக்கள்தான். அவர்கள் யாரை மன விசுவாசத்துடன் நேசிக்கின்றார்களோ அவர்கள்தான் ஈழத்து இலக்கிய வரலாற்றில் இடம் பிடிப்பவர்களாக கடைசியில் தேறுவார்கள்.

**கேள்வி:** முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தீண்டாமைக்கு எதிரா கப் போராடிவருவதாகக் கூறுகின்றீர்கள். பல வெற்றி களைக் கண்டுள்ளதாகவும் பகர்கின்றீர்கள். சாதி முறையை ஆதரித்த நாவலருக்குச் சிலை நிறுவியமை, சங்கத்தின் நோக்கங்களை மாசுபடுத்திவிட்டதாக சிலர் கூறுகின்றனரே.

**பதில்:** நாவலர் வாழ்ந்த காலகட்டம் மிக முக்கியமானது. அந்நிய ஏகாதிபத்தியம் நம்மை ஆட்சி செய்த காலம். அந்தக் காலகட்டத்திலே நமது மதம், கலாசாரம், மரபு கள் அனைத்தும் சீரழிக்கப்பட்ட காலம். அந்தக் கால கட்டத்திலே இவைகளின் பாதுகாப்பே முதற் தேவை யாகவிருந்தது. நாவலர் சாதி அபிமானி என்பது தெளி வாகத் தெரிந்த விடயம்தான். எனினும் சீரழிந்து போய்க்கொண்டிருந்த மண்ணைப் பாதுகாக்க வேண் டிய ஒரு தேசியப் பொறுப்புணர்வும் அவரிடத்தில் இருந்தது. அவரை இரண்டு விதமாகப் பார்க்க வேண் டியிருக்கின்றது. விமர்சனத்துக்கும் உட்படுத்திப் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. இன்றைய ஜனநாயக வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் நாவலரைப் பார்ப்பது கூடாது. நாவலரிடத்திலே சாதி சம்பந்தமான குறை பாடுகள் இருந்தது என்பதுண்மை. அந்த விஷயத்தில் எந்தவித சமரசத்துக்கும் நாம் தயாரில்லை. அதே சமயம் அவரது ஆரோக்கியமான மற்றப் பகுதித் தன்மைகளையும் நாம் நிராகரித்து விட முடியாது.

கேள்வி: 'மல்லிகை' என்ற சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்தைக் கூறுவீர்களா?

பதில்: இலங்கையில் இலக்கியத்தளம் குறைவு. தினகரன், வீரகேசரி போன்ற ஞாயிறு இதழில்தான் இலக்கியப் பிரச்சனைகள் வெளிவந்து கொண்டிருந்தன. இலக் கியக்காரர்கள் தினசரி வளர்ந்து வருகின்றனர். இந்தச் சந்தர்ப்பத்திலேதான் மல்லிகையை ஆரம்பித்தேன். பல இலக்கிய நண்பர்கள் எனக்குத் துணைபுரிந்தனர். சுதந்திரமான கருத்துக்களை விவாதிக்கக்கூடிய தளத்தினை ஏற்படுத்திக்கொடுத்தேன். மல்லிகையை ஆரம்பித்து 30வது ஆண்டு மலர் வெளிவந்ததன் பின்னர், யாழ்ப்பாணச் சூழல் காரணமாக புலம்பெயர நேரிட்டது. தற்போது புத்தகப் பிரசுரகளமாக (மல்லி கைப் பந்தல்) செய்து கொண்டிருக்கின்றேன். வெகு விரைவில் மல்லிகை தொடர்ந்து வரும் என வாசகர் களுக்கு உறுதி கூறுகின்றேன்.

கேள்வி: மல்லிகைக்கும், முஸ்லிம்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடு நிலவிவருகின்ற உறவு, தொடர்பு பற்றிக் கொஞ்சம் கூறுவீர்களா?

பதில்: இந்த நாட்டில் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கு மிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடு தற்காலிகமானதே. ஏனெனில் இரண்டு இனங்களுமே சிறுபான்மை. ஒருவருடைய பிரச்சினையை அடுத்தவர் விளங்கிக் கொள்ளாது விட்டால் பிற்காலத்திலே இரண்டு சாராரும் பாரிய இழப்பைச் சந்திக்க நேரிடும். இலக் கியத்தைப் பொறுத்தளவில் பரஸ்பரம் புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளது. மல்லிகையில் ஏராளமான முஸ்லிம் இளைஞர்களும், பெண்களும் தமது பங்களிப்பை நல்கியுள்ளனர். வளர்ந்து வரும் முஸ்லிம் கலைஞர் களைக் கண்டு பெருமை கொள்கிறேன். தமிழ்மொழி மீது வைத்திருக்கும் பாசத்தையும், பற்றையும் கண்டு

பிரமிக்கின்றேன். முஸ்லிம் எழுத்தாளர்களை அதிகம் அதிகமாக நேசிக்கிறேன். பித்தன், திக்குவல்லை கமால், மு.பஷீர், கெக்கிராவ சஹானா போன்றவர்களின் படைப்புக்கள் மல்லிகைப் பந்தல் மூலம் வெளி வந்துள்ளன. இவர்கள் முஸ்லிம் சமூகத்தவர்களாயிருந்த போதும், இலங்கையின் நானா பிரதேசங்களையும் சார்ந்தவர்கள். இவர்களுடைய கற்பனைகள், தளங்கள், பாத்திரங்கள் வேறு வேறுபட்டவை. இருந்தபோதும் இந்த நாட்டின் முஸ்லிம் கலாச்சாரப் பின்னணியைக் கொண்டவை. இந்த நாட்டின் முஸ்லிம்களை அதிகமாக நேசிப்பது மல்லிகைதான். மல்லிகையை அதிகமாக நேசிப்பவர்கள் முஸ்லிம்கள்தான். மல்லிகையினது கணிசமான சந்தாதாரர்கள் முஸ்லிம் கலைஞர்கள் என்ற யதார்த்த உண்மையை நான் புரிந்து வைத்துள்ளேன்.

**கேள்வி:** புலம்பெயர்ந்துள்ள எழுத்தாளர்களின் எதிர்காலத் தாக்கம் என்னவென்று கூறுவீர்களா?

**பதில்:** புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள மொழிகளில் நமது கருத்துக்கள் வெளிவருவது ஈழத்து இலக்கியத்தின் ஒரு புதுமை. அத்துடன் இது ஈழத்து இலக்கியத்துக்கு ஒரு செழுமையின் சர்வதேச கொடுப்பனவு. புலம்பெயர்ந்த தமிழர்கள் வேற்றுமொழிச் சிந்தனைகளையும் தமிழாக்கம் செய்கின்றனர். இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய சாதனை ஐரோப்பிய, அவுஸ்திரேலிய நாடுளில் இன்று 40க்கும் மேற்பட்ட தமிழ் சஞ்சிகைகள் வெளிவருகின்றன. இச் சஞ்சிகைகளைக் கொண்டு நாம் அளவீடு செய்யும்போது, உலகத் தமிழ் இலக்கியத்துக்கு ஈழத்துத் தமிழன்தான் பங்களிப்புச் செய்வான் என்ற எனது எண்ணம் வலுப்பெற்று வருகின்றது.

தினகரன்
12.1.97

## ஈழத்திலிருந்து ஓர் இலக்கியக் குரல்

இந்நூலில் சொல்லியுள்ள சில கருத்துக்கள் கசப்பாக இருக்கலாம்; உண்மை. நோய்க்கான மருந்துகளும் கசப்பானவையே. சில சமயங்களில் கசப்பும் எமது ஆரோக்கியப் பாதுகாப்புக்குத் தேவைப்படுகிறது. பல போராட்டங்களுக்கு மத்தியில் அனுபவப்பூர்வமாக வந்த முடிவுகளின் பெறுபேறே இங்கு வெளியிட்டுள்ள கருத்துகளாகும்.

கருத்துக்களை உருவாக்குவது மாத்திரம் எனது வேலையாக இருந்து விடவில்லை. அந்தக் கருத்துகளுக்காகப் பல்வேறு களங்களில் நின்று போராட வேண்டிய தேவையும் ஏற்பட்டது.

மக்களோடு சம்பந்தப்பட்டவை, சம்பந்தப்படுபவை அனைத்தும் சுவை நிரம்பியவை - ரஸனை கொண்டவை.

இலக்கியப் பிரச்சினைகள் மக்களின் ஆத்மாவோடும் சிந்தனைகளோடும் நுண்ணிய உணர்வுகளோடும் வாழ்க்கை அனுபவங்களோடும் சம்பந்தப்பட்டவை. எனவே அவைகள் பல்சுவைகளாக மிளிரக் கூடும்.

டொமினிக் ஜீவா முன்னுரையிலிருந்து